REDRESS

Ending torture, seeking justice for survivors

# வாடிக்கையாகிப் போன சித்திரவதை:
## இந்தியாவில் அரச வன்முறை

2025 ஜூன்



# பொருளடக்கம்


**சுருக்கப் பெயர்கள்** 3
**நன்றிக்குறிப்பும் ஆய்வுமுறையும்** 4
**சாறச் சுருக்கமும் பரிந்துரைகளும்** 5
**அறிமுகம்** 12
**சித்திரவதை முறைகள்** 16
- காவல்துறைக் காவலில் சித்திரவதை 17
- நீதித்துறைக் காவலில் சித்திரவதை 24
- பாலியல் மற்றும் பாலினம் சார்ந்த காவல் வன்முறை 27
- நீதித்துறைசாராக் கொலைகள்: காவல்துறையின் மோதல்கள் 30

**பாதிப்புற்ற குழுக்களும் சித்திரவதைச் சூழல்களும்** 35
- கருத்து மாறுபட்டோருக்கு எதிரான சித்திரவதை 36
  - மனிதவுரிமைக் காப்பாளர்களையும் அரசியல் செயற்பாட்டாளர்களையும் செய்தியாளர்களையும் குறிவைத்தல் 37
  - போராட்டங்களில் சித்திரவதை 43
- பாகுபாடு சார்ந்த ஒடுக்குமுறைக்கான கருவியாகச் சித்திரவதை 48
  - பட்டியலினச் சாதிகள், பழங்குடிகள் மீது சித்திரவதை 49
  - சமயச் சிறுபான்மையினர் மீது சித்திரவதை 51
- குறித்த வட்டாரங்களில் சித்திரவதை 55
  - சத்திஸ்கர்: ஆதிவாசிகளுக்கு எதிரான வன்முறை 55
  - இந்தியா-வங்காளதேச எல்லை (எல்லைக் காப்புப் படை வன்முறை) 59
  - சம்மு-காசுமீரம் (ஆய்தப் படைகள் தனியதிகாரச் சட்டத் துணை கொண்டு வன்முறை) 61
  - மணிப்பூரில் அரச வன்முறை 64

**சித்திரவதையைச் சட்டப்படி நியாயப்படுத்தல்: தேசியச் சட்டவழிச் சட்டகம்** 66
- ஐநா சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தத்தை (UNCAT) ஒப்புறுதி செய்து சித்திரவதையைக் குற்றச் 67
- சட்டக் காப்புக் கூறுகளைச் செயலாக்கத் தவறியமை 71
- ஆய்தப் படைத் தலையீடுகளுக்கான சட்டம் 73
- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் 75

**சித்திரவதைக்குத் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு** 78
- உருப்படியான புலனாய்வுகள் இல்லாமை 79
  - முதல் தகவல் அறிக்கைகள் தொடர்பான தோல்விகள் 79
  - பக்கச் சார்பின்மையும், காலத் தாழ்வின்மையும், செயல்திறமும் 81
  - நலிந்த நிலையில் வெளியமை முறைப்பாட்டு அமைப்புகள் 84
- முறைப்பாட்டாளர்களுக்கு எதிரான பழிவாங்கல்கள் 86
- பொறுப்புக்கூறலுக்குப் பிறவகைத் தடைகள் 89

# சுருக்கப்பெயர்கள்

| | |
|---|---|
| **AFSPA** | ஆய்தப் படைகள் தனியதிகாரச் சட்டம் |
| **BNSS** | பாரதிய நாகரிக் சுரட்சா சன்கிதா (குற்ற நடைமுறைச் சட்டத்துக்கான மாற்றீடு) |
| **BNS** | பாரதிய நியாய சன்கிதா (தண்டனைச் சட்டத்துக்கான மாற்றீடு) |
| **BSA** | பாரதிய சாட்சிய அதிநியம் (சாட்சியச் சட்டத்துக்கான மாற்றீடு) |
| **BJP** | பாரதிய சனதா கட்சி |
| **BSF** | எல்லைக் காப்புப் படை |
| **CHRI** | பொதுநலவாய (காமன்வெல்த்) மனிதவுரிமை முன்முயற்சி |
| **CSO** | குடியியல் சமூக அமைப்பு |
| **HRCttee** | ஐநா மனிதவுரிமைக் குழு |
| **ICCPR** | ஐநா குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை |
| **MASUM** | பங்ளார் மானபதிகார் சுரட்ச மஞ்சா (வங்காள மனிதவுரிமைக் காப்புக் கழகம்) |
| **NCAT** | சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம் |
| **NCRB** | தேசியக் குற்றப் பதிவுருக்கள் பணியகம் |
| **NGO** | அரசுசாரா அமைப்பு |
| **NHRC** | தேசிய மனிதவுரிமை ஆணையம் |
| **SHRC** | மாநில மனிதவுரிமை ஆணையம் |
| **UAPA** | சட்டப்புறம்பான நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் |
| **UNCAT** | சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தம் |
| **UPR** | ஐநா உலகளாவிய காலவட்ட மீளாய்வு |
| **WGAR** | தற்போக்கான காவலடைப்பு பற்றிய ஐநா இயங்குகுழு |

# நன்றிக் குறிப்பும் ஆய்வுமுறையும்

இந்தியாவில் சித்திரவதை தொடர்பான சிக்கல்கள் குறித்த சிறப்புத் திறன் கொண்ட சட்டத்தரணிகளுடனும், குடியியல் சமூக உறுப்பினர்களுடனும் கலந்து பேசி இந்த அறிக்கையை **ரெட்ரெஸ்** அணியமாக்கிற்று. இரத்னா அப்னேந்தர், தேவிகா பிரசாத், சஜ்ஜத் ஹாசன் உள்ளிட்ட தனியாட்களுக்கும் அமைப்புகளுக்கும், பெயர் குறிப்பிடாத பல ஆலோசகர்களுக்கும் நன்றியுடையோம்.

ரெட்ரெஸ் அணி இணைய வழியிலும் திறந்த ஆராய்ச்சி வழியிலும் பெறப்பட்ட தரவுகளைத் திரட்டிப் பகுத்தாய்ந்ததுடன், நாடளவிலான அமைப்புகளிடமிருந்தும், ஐநா அமைப்புகளிடமிருந்தும், உள்நாட்டளவிலும் பன்னாட்டளவிலுமான அரசுசாரா அமைப்புகளிடமிருந்தும், ஊடக நிறுவனங்களிடமிருந்துமான வெளியீடுகளையும் உரைகளையும் அறிக்கைகளையும் பயன்படுத்திக் கொண்டது. பொதுவெளியில் கிடைக்கும் தகவலடிப்படையில் ஆய்வுக்குரிய வழக்குகள் தெரிந்தெடுக்கப்பெற்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவி பெற்று, சித்திரவதைக்கு எதிரான ஒற்றுமைக் கூட்டு முன்முயற்சி (UATC) என்ற திட்டத்தின் படி இந்த நூல் வெளியிடப்படுகிறது. இதன் உள்ளடக்கங்களுக்கு முழுப்பொறுப்பு ரெட்ரசைச் சாரும்; இவை ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துகளை எதிரொலிக்க வேண்டிய கட்டாயமில்லை.

**ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவி பெற்றது**

UNITED AGAINST TORTURE

Funded by the European Union

# சாறச் சுருக்கமும் பரிந்துரைகளும்

இந்தியாவில் சித்திரவதையும் மோசமான நடத்துமுறையும் தனித்தனியான நிகழ்வுகள் அல்ல. – அவை அமைப்புசார்ந்தவை, ஆழ ஊன்றியவை, அரசு அதிகாரியங்களால் குற்றத் தண்டனையச்சமின்றி நடத்தப்படுகின்றவை. சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தத்தில் (UNCAT) இந்தியா 1997ஆம் ஆண்டில் ஒப்பமிட்ட போதிலும் இது வரை இந்த ஒப்பந்தத்தை ஒப்புறுதி செய்யாத வெறும் 21 உலக நாடுகளில் அதுவும் ஒன்று.

இந்தியச் சட்டத்தில் சித்திரவதை குறிப்பான குற்றமாக இடம்பெறவில்லை என்பதால், பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் சித்திரவதை அல்லது மோசமான நடத்துமுறையாக அமையும்படியான செயல்கள் பற்றி விரிமுழு அதிகாரமுறைத் தரவுகள் இல்லாத நிலையே காணப்படுகிறது.

அரச வன்முறை குறித்து தேசிய மனிதவுரிமை ஆணையம் (NHRC) தொகுத்துள்ள அறிக்கைகளில் வெளிப்படும் போக்கு கவலையளிப்பதாக உள்ளது என்றாலும், அவை சிக்கலின் முழு அளவையும் தீவிரத்தையும் படம்பிடித்துக் காட்டத் தவறி விடுகின்றன. தேசிய மனிதவுரிமை ஆணையத்தின் தற்சார்பு மற்றும் செயல்திறம் தொடர்பான கவலைகளும் இதற்கொரு காரணம். இதற்கிடையில் இந்தியக் குடியியல் சமூக அமைப்புகளும் (CSOs), மனிதவுரிமைக் காப்பாளர்களும் தாங்கள் பழிவாங்கப்படும் இடரைப் பொருட்படுத்தாமல் பரவலான சித்திரவதை நடைமுறையையும் ஏனைய கடுமையான மனிதவுரிமை மீறல்களையும் தொடர்ந்து ஆவணமாக்கியும் அம்பலமாக்கியும் வரக் காணலாம்.

இந்தக் குடியியல் சமூகச் செயற்பாட்டாளர்களின் முக்கியப் பணியையும் செயல்வீரத்தையும் அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிக்கையானது இந்தியாவில் சித்திரவதை செயலளவில் வாடிக்கையாகி விட்டதை விளக்கிக் காட்டுகிறது.

காவல்துறையும் பாதுகாப்புப் படைகளும் வாடிக்கையாகவே சித்திரவதை மற்றும் மோசமான நடத்துமுறையை சட்டச் செயலாக்கக் கருவிகளாகப் பயன்படுத்தக் காண்கிறோம். உடல்வதையும் பாலியல் வன்முறையுமான நிகழ்வுகளும் ஏனைய வடிவிலான காவல் முறைகேடுகளும் மிக மிக சர்வசாதாரணமாகி விட்டன. காவல் சாவுகள் ஆண்டுக்கணக்கில் பீதியூட்டும் அளவில் பெருகி வந்துள்ள போதிலும் பெரிதும் கவனிக்கப்படாத நிலையே தொடர்கிறது. இதேபோல், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் போதும், நாட்டின் குறிப்பான வட்டாரங்களிலும் காவல்துறை 'மோதல்கள்' எனப்படும் நிகழ்வுகளில் நீதித்துறைசாராக் கொலைகளும் தொடர்கின்றன. குற்றவாளிகள் எனப்படுவோரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலமும் தகவலும் கறப்பதற்காகவோ, விளிம்புநிலைச் சமுதாயங்களைச் சேர்ந்த தனியாட்களைக் குறிவைத்தோ அதிகாரிகள் சித்திரவதையை சர்வசாதாரணமாகப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறான முறைகேடுகளைத் தடுக்கும் பொருட்டு, இந்தியாவின் சட்டவழிச் சட்டகம் சுதந்திரம் பறிக்கப்படும் தனியாட்களுக்குக் குறிப்பிட்ட சில காப்புக்கூறுகள் வழங்குகிறது. சட்ட உதவி பெறுதல், கைது செய்யப்பட்டவுடன் மருத்துவப் பரிசோதனை, 24 மணி நேரத்துக்குள் நடுவர் முன் நிறுத்தப்படுதல் ஆகியவற்றுக்கான உரிமையைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

காவல் நிலையங்களில் சிசிடிவி ஒளிப்படக் கருவிகள் பொருத்துவது உள்ளிட்ட கூடுதல் பாதுகாப்புகளுக்கும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. ஆனால், குற்றவியல் சட்டங்களில் அண்மையில் செய்யப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் காவல்துறை அதிகாரங்களை விரிவாக்கிப் பாதுகாப்புகளை நீர்க்கச் செய்திருப்பதாகக் குற்றாய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்தியாவின் சட்டவழிச் சட்டகத்துக்கும் அதன் செயலாக்கத்துக்குமான இடைவெளி – உரிய செயல்வழி குறித்தான

அமைப்புசார் அலட்சியமும் நீதித் துறை மேற்பார்வையின் நலிந்த நிலையும் சேர்ந்து – அச்சமூட்டும் அளவில் உள்ளது.

இந்தியாவில் அரச வன்முறை நிகழும் சூழல் குடிமைவெளி சுருங்கி மென்மேலும் பகைமை கொண்டதாகவும் அமைந்துள்ளது. குடியியல் சமூக அமைப்புகள் செயல்படுவதன் மீதும், பேச்சுரிமை, சங்கஞ்சேரும் உரிமை, கூட்டங்கூடும் உரிமை ஆகியவற்றின் மீதுமான கட்டுப்பாடுகளுடன் கூடவே, தற்போக்கான தளைப்படுத்தல்களையும் சித்திரவதையையும் பயன்படுத்தி மனிதவுரிமைக் காப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள், செய்தியாளர்கள் உள்ளிட்ட மாற்றுக் குரல்களுக்கு வாய்ப்பூட்டு போடும் நிலை உள்ளது. அமைதிவழி ஆர்ப்பாட்டங்களின் போது வன்முறைப் பயன்பாடு பற்றிய பன்னாட்டுத் தரநிலைகளை அதிகாரியங்கள் அறவே அலட்சியம் செய்திருக்கக் காண்கிறோம். கிளர்ச்சி செய்வோருக்கு எதிராகக் கொல்லுங்கருவிகளையும், கொல்லாக் கருவிகளையும் சகட்டுமேனிக்குப் பயன்படுத்துவதால் நூற்றுக்கணக்கில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. மாற்றுக் கருத்துக் கொண்டவர்களுக்கு எதிரான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் வழிவகைகள் தெளிவற்றும் மிகவும் பொத்தம்பொதுவாகவும் இருப்பதால், அச்சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவது சர்வசாதாரணமாகி விட்டது. சட்டப்புறம்பான நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் (UAPA) அமைப்புகளை மட்டுமல்லாமல் தனியாட்களையும் ”பயங்கரவாதிகள்” என்று வரையறை செய்யவும், இந்தியாவுக்கு எதிராக மனவருத்தம் ஏற்படச் செய்தல் போன்ற ”சட்டப் புறம்பான நடவடிக்கைகளுக்காக” அவர்களைக் குற்றவாளிவாளிகளாக்கவும் இடமளிக்கிறது. வழக்கு உசாவலுக்கு முன்னான காவலை நீட்ட இடமளிப்பதோடு, கடுமையான பிணை நிபந்தனைகள் விதித்து, விடுதலை பெறுவதைக் கடினமாக்குகிறது. இறுதியில், சட்டத்தின் கீழ் பொய்க் குற்ற வழக்குத் தொடுக்கும் செயல்வழியே பல நேரம் ஒருவகைத் தண்டனையாகி விடுகிறது. இதனை உச்ச நீதிமன்றமே அறிந்தேற்றுள்ளது.

விளிம்புநிலைச் சமுதாயங்கள், குறிப்பாகப் பட்டியலினச் சாதிகளும், பட்டியலினப் பழங்குடிகளும் (ஆதிவாசிகள்) அரச வன்முறையால் முக்கியமாகத் தாக்குறுகின்றன. அரசமைப்பின் படியும் சட்டப்படியுமான பாதுகாப்புகள் இருந்த போதிலும், இந்தக் குழுக்கள் தொடர்ந்து அமைப்புசார் பாகுபாட்டுக்கும், சித்திரவதைக்கும், பிற வடிவங்களிலான வன்முறைக்கும் ஆளாகி வருகின்றன. பாகுபாடு காட்டும் சமூக நெறிகள் அவர்களுக்கு எதிரான குடிசார் வன்முறையை உந்துகின்றன. இப்படிப்பட்ட செயல்களுக்குத் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு என்பது அவர்களை மேலும் காவல்துறை மற்றும் பாதுகாப்புப் படைகளின் முறைகேட்டுக்கு ஆளாக்குகிறது. கடுமையான அடிஉதைகள், பாலியல் வன்முறை, சாதியைச் சொல்லும் வசவு, காவலில் மோசமான பிற வகை நடத்துமுறை ஆகியவற்றை விவரமாகக் காட்டும் அறிக்கைகள் உள்ளன.

முசுலிம்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள் உள்ளிட்ட சமயச் சிறுபான்மையினர் சந்திக்கும் சித்திரவதைக்கும், நீதித் துறைக்கு அப்பாற்பட்ட உயிர்க் கொலைகளுக்கும், அரசுச் செயல்பாட்டாளர்களின் பிறவகை முறைகேடுகளுக்கும் ஆளாகும் இடர்வாய்ப்பும் கூட உயர்ந்து விட்டது. பாகுபாடும் தேசியமும் சார்ந்த வாய்வீச்சும் கொள்கைகளும் இப்படிப்பட்ட வன்முறையை மென்மேலும் ஏற்புடைத்தவை ஆக்கி விட்டன. சமயச் சிறுபான்மைப் பிரிவுகளைச் சேர்ந்த தனியாட்கள் சித்திரவதை செய்யப்படுவது பெருங்கவலைக்குரியதாகவே இருந்து வருகிறது. கிளர்ச்சிகளின் போதும், வகுப்புகளிடையிலான அமைதிக் குலைவுக்கு எதிர்வினையாகவும், சட்டச் செயலாக்க நடவடிக்கைகளிலும்,”பசுக் கடத்தலை”த் தடுப்பதன் பெயராலும் கூட அரசுச் செயற்பாட்டாளர்கள் வன்முறையில் ஈடுபட்டிருப்பதாகக் காண்கிறோம். சமயச் சிறுபான்மையினரைத் தண்டிக்கும் வகையில் வீடுகளையும் வழிபாட்டுக் கூடங்களையும் இடிப்பது போன்ற கூடுதல் நடவடிக்கைகளும் அவர்களை ஒதுக்கி விளிம்புநிலைக்குத் தள்ளுவதை ஆழமாக்குகின்றன.

வரலாற்றுக் காரணங்களாலும் அரசியல் காரணங்களாலும் இந்தியாவில் சில வட்டாரங்கள் பாதுகாப்புப் படைகளும் ஆய்தப்படைகளும் ஏவும் அமைப்புசார் வன்முறையைப் பரவலாக அனுபவித்துள்ளன. இவற்றில் சத்திஸ்கர், இந்திய-வங்காளதேச எல்லைப் பகுதி, சம்மு-காசுமீர ஒன்றியப் புலம், மணிப்பூர் மாநிலம் உள்ளிட்ட இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் பகுதி

ஆகியவையும் அடங்கும். பல நேரம் உள்நாட்டுக் கலகத்தையும் பயங்கரவாதத்தையும் எதிர்த்துப் போராடுவது என்ற போர்வையில் அதிகாரியங்கள் தொடர்ச்சியான முறையில் சித்திரவதையும், நீதித்துறைக்கு அப்பாற்பட்ட கொலைகளும், வலிந்து காணாமலாக்கும் செயல்களும் செய்து வருவதாகச் செய்திகள் வந்துள்ளன. இந்திய ஆட்சியாளர்கள் இந்த உரிமைமீறல்களை ஞாயப்படுத்த ஆய்தப் படைகள் தனி அதிகாரச் சட்டத்தையும் (AFSPA), சட்டப்புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தையும் (UAPA) நம்பியுள்ளனர். இந்தச் சட்டங்கள் நெருக்கடிநிலைக்கால வழிமுறைகளுக்குரிய இயல்புகள் கொண்டவையாக இருந்த போதிலும் முறையான நெருக்கடிநிலை அறிவிப்பில்லாமலே செயல்படுவதோடு நீண்ட நெடுங்காலங்களுக்குச் செயலில் இருந்தும் வருகின்றன. ஆஃப்ஸ்பா (AFSPA) என்பதன் ஊடாக மாநில அரசுகளும் இந்திய அரசும் குறிப்பிட்ட சில பகுதிகளைக் "கலவர"ப் பகுதிகள் என்று அறிவித்து, இந்தப் பகுதிகளில் கைது செய்யவும், சோதனையிடவும், ஆட்களுக்கு எதிராகக் கொடிய வன்முறையைப் பயன்படுத்தவும் ஆய்தப் படைகளுக்கு விரிவான, தறிகெட்ட அதிகாரங்களை வழங்குகின்றன. இவ்வாறு ஆய்தப் படைகள் பரவலாக உயிர்க் கொலைகளும், சித்திரவதைகளும் செய்ய வாய்ப்பளிப்பதோடு, தண்டித்தலில்லாக் குற்றவிலக்குடன் இவற்றைச் செய்யவும் ஆஃப்ஸ்பா இடமளிக்கிறது. ஐநா அமைப்புகளும், வல்லுநர்களும், குடியியல் சமூக அமைப்புகளும் இன்னமும் மாற்றமின்றிச் செயலில் இருக்கும் ஆஃப்ஸ்பா, ஊபா ஆகிய சட்டங்களை நீக்கமோ திருத்தமோ செய்ய வேண்டுமென திரும்பத் திரும்பக் கோரியுள்ளன.

இந்தியாவில் சித்திரவதைக்குத் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு என்பதே நெறிமுறையாக இருந்து வருகிறது. சித்திரவதை குறித்தும் ஏனைய அரச முறைகேடுகள் குறித்தும் முறைப்பாடுகள் பெறவும் புலனாய்வுகள் நடத்தவும் பொறிமுறைகள் உள்ளன என்ற போதிலும் நீதியும் பொறுப்புக்கூறலும் பாதிப்புற்றவர்களுக்கும் தப்பிப் பிழைத்தவர்களுக்கும் பெரிதும் எட்டாக் கனிகளாகவே இருந்து வருகின்றன. பலரும் முறைப்பாடுகளை அறிக்கையிட முயன்றமைக்காகத் தொல்லைக்கும், அச்சுறுத்தலுக்கும், மேற்கொண்டு வன்முறைக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. புலனாய்வுகள் நடக்க முதல் தகவல் அறிக்கைகள் பதிய வேண்டும் என்றாலும், காவல்துறை அதிகாரியங்கள் பல நேரம் இதனைக் காலந்தாழ்த்துகின்றன, அல்லது செய்ய மறுக்கின்றன. புலனாய்வுகள் நடக்கவே செய்யுமிடங்களில் பல நேரம் காலத் தாழ்வுகளும் மோசமான ஆவணப்படுத்தலும் தற்சார்பின்மையும் அவற்றைப் பாழ்படுத்துகின்றன. காவல்துறை அதிகாரிகள் பல நேரம் குறுக்கிடுகின்றனர் அல்லது தங்கள் முறைகேடுகளை மூடிமறைக்க முயல்கின்றனர். தற்சார்பானவையாக இருக்க வேண்டிய காவல் முறைப்பாட்டு அதிகாரியங்கள் போன்ற வெளியக முறைப்பாட்டு அமைப்புகள் எங்காவது செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் காவல்துறையினரே தம் கூட்டாளிகளைப் புலனாய்வு செய்வதைப் பெரிதும் சார்ந்திருக்கும் நிலைதான் தொடர்கின்றது. இதனால் ஒருதலைச்சார்பின்மை கெட்டுப் போகிறது. இதேபோல், தேசிய மனிதவுரிமை ஆணையம் பெரிதும் திறமற்றதாகவே இருந்து வருவது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. முறைப்பாடுகள் மலையெனக் குவிந்த போதிலும் ஒப்பளவில் சில நேர்வுகளில் மட்டுமே பரிந்துரைகள் விடுக்கிறது. அரிதாகவே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கோருகிறது. குற்றமிழைத்தவர்களைக் கூண்டிலேற்றி வழக்குத் தொடருமாறு பரிந்துரைக்கவில்லை. பாதிப்புற்ற சிலருக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ள போதிலும் தேசிய மனிதவுரிமை ஆணையத்தால் தன் பரிந்துரைகளைச் செயலாக்க இயலவில்லை.

பொறுப்புக்கூறலுக்குக் கூடுதல் தடைக்கற்களாக இருப்பவை அரசு அதிகாரியங்கள் மீது வழக்குத் தொடருவதற்கு முன்அனுமதி பெற வேண்டும் என்பதும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றும் ஆய்தப்படைகளுக்கும் அரசு அலுவலர்களுக்கும் பொருந்தும்படியான விரிவான சட்டக்காப்புகளும் ஆகும். இந்தியக் குற்ற நடைமுறைச் சட்டத்துக்கு மாற்றீடாகிய பாரதிய நாகரிக் சுரட்சா சன்ஹிதா (BNSS) சட்டத்தின் கீழ் மாநில அல்லது நடுவண் அரசிடமிருந்து இசைவு பெறாமல் காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்ட அரசுப் பணியாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தொடங்க முடியாது. இவ்வாறு இசைவு தரப்படுவது அரிதே என்பதால் இது பொறுப்புக்கூறலுக்குப் பெருந்தடையாகும். அதே நேரத்தில், ஆஃப்ஸ்பா, ஊபா ஆகிய சட்டங்களின் கீழ் இராணுவத்தினருக்கும் ஏனைய பாதுகாப்புப் படைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள விரிவான சட்டக்காப்புகள் தண்டித்தலில்லாக் குற்றவிலக்குடன் மனிதவுரிமை மீறல்களுக்கு இடமளிப்பவையாக உள்ளன.

இந்தியாவில் சித்திரவதை வாடிக்கையாகிப் போயிருப்பதும் சித்திரவதைக் குற்றமிழைத்தோருக்குத் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு கிடைப்பதுமான இந்தச் சூழல் ஐநா ஒப்பந்த அமைப்புகளும் வல்லுநர்களும் மென்மேலும் கவலைகொள்ளக் காரணமாகியுள்ளது. ஆனால் பன்னாட்டுச் சமுதாயத்தின் எதிர்வினை வரம்புக்குட்பட்டதாகவே இருந்துள்ளது. இந்தியாவின் 2022ஆம் ஆண்டுக்கான உலகளாவிய காலவட்ட மீளாய்வின் (UPR) போது சில அரசுகள் இந்தச் சிக்கல் குறித்துப் பரிந்துரைகள் செய்த போதே பல அரசுகள் இருதரப்பு ஏற்பாடுகளில் இந்தியாவின் மனிதவுரிமை அடைவை வெளிப்படையாகக் குறைகூறாமல் தவிர்த்து விட்டன. இந்தியாவின் மூலவுத்தி வகை, புவிசார்அரசியல் வகை அமைநிலையும் உலக வர்த்தகத்திலான அதன் முக்கியத்துவமும் அரசதந்திர அல்லது பொருளியல் அழுத்தம் கொடுக்க அரசுகளிடம் தயக்கம் ஏற்பட உதவியுள்ளன. இது முறைகேட்டு வடிவங்கள் பெரிதும் கேள்வி கேட்பாரின்றி விடாப்பிடியாகத் தொடர இடமளித்துள்ளது.

இந்தியாவில் சித்திரவதையும் மோசமான நடத்துமுறையுமான நெருக்கடியைக் கவனிப்பதற்கு இந்த அறிக்கை இந்திய அரசையும் பன்னாட்டுச் சமுதாயத்தையும் இலக்காக வைத்துத் தொகுப்பாகச் சில பரிந்துரைகளை வழங்குகிறது. சித்திரவதையைத் தடுக்கவும், நீதியை நிலைநாட்டவும், தப்பிப் பிழைத்தவர்களுக்கு இழப்பீடுகள் செய்யவும், நாட்டில் சித்திரவதைகளும் ஏனைய கொடுங்குற்றங்களும் இல்லாமற்செய்யத் தேவையான மற்றெந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளவும் இந்தப் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

## பரிந்துரைகள்

### இந்திய அரசுக்கு

பன்னாட்டு உறுதிப்பாடுகளும் சட்டச் சீர்திருத்தமும்

- சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தம் (UNCAT) ஒப்புறுதி செய்யப்படுவதற்குத் தெளிவான, காலக்கட்டுடைய ஒரு வழித்தடம் நிறுவுக.
- சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தத்துக்கான (UNCAT) விருப்பஞ்சார் வகைமுறை உடன்படிக்கையை ஒப்புறுதி செய்து, காவற்கூடங்கள் அனைத்தையும் முறையாகத் தொடர்ந்து கண்காணித்திடுக.
- சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தத்தின் (UNCAT) அடியொற்றி உள்நாட்டுச் சட்டத்தில் சித்திரவதையை ஒரு தனிக் குற்றமாகக் குற்றவகைப்படுத்துக; எடுத்துக்காட்டாக (இந்தியத் தண்டனைச் சட்டத்துக்கு மாற்றீடான) பாரதிய நியாய சன்ஹிதாவுக்கு இதற்கேற்பத் திருத்தம் செய்க.
- கூடும் கூட்டங்களை எப்போது கலைக்கலாம் என்று தெளிவாக வரையறை செய்திட (குற்ற நடைமுறைச் சட்டத்துக்கு மாற்றீடான) பாரதிய நாகரிக் சுரட்சா சன்கிதா சட்டத்தின் 148-150 பிரிவுகளைத் திருத்தம் செய்க; வலுப் பயன்பாடு ஏதும் தேவைப்பட்டால் அது சட்ட இசைவு, தேவை, தகவுப்பொருத்தம் ஆகிய கொள்கைகளுக்கு ஈடாவதை உறுதி செய்க; உயிராபத்துக் குறைவான கருவிகள் பற்றிய ஐநா வழிகாட்டுதலையும், எதிர்ப்புக் கிளர்ச்சி மேலாண்மை பற்றிய ஐநா முன்மாதிரி வகைமுறை உடன்படிக்கையையும், ஏனைய பன்னாட்டுத் தரநிலைகளையும் அடியொற்றி உயிராபத்தான வலுப்பயன்பாட்டைக் கண்டிப்பாகத் தடைசெய்க.
- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பது சட்ட உறுதியும், தேவையும், தகவுப் பொருத்தமும் உட்பட பன்னாட்டுச் சட்டத்துக்கு இணங்குவதையும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்யும் வகையில் உடனடியாகஅச்சட்டத்தைத் திருத்தம் அல்லது நீக்கம் செய்க. குறிப்பாக, சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் [ஊபா (UAPA)]. ஆய்தப் படைகள்

தனியதிகாரச் சட்டம் (AFSPA) ஆஃப்ஸ்பா, தேசப் பாதுகாப்புச் சட்டம், சம்மு-காசுமீரப் பொதுப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றை மீளாய்வு செய்து பின்வருவனவற்றை உறுதிசெய்க:

அ. அதிகாரியங்களுக்குக் கட்டற்ற அதிகாரங்கள் வழங்கி, உசாவலுக்கு முன் நீண்ட சிறைக்காவலுக்கு இடமளிக்கும் படியான வழிவகைகள் நீக்கம் செய்யப்பட வேண்டும்.

ஆ. மனிதவுரிமைக் காப்பாளர்களையும் செயல்வீரர்களையும் மாற்றுக் கருத்துக் கொண்டோர் அல்லது விளிம்புநிலைச் சமுதாயத்தினரையும் இலக்காகக் கொண்டு தவறாகப் பயன்படுத்தப்பட இடமளிக்கக் கூடிய தெளிவற்ற அல்லது மிகையான அளவுக்குப் பொதுப்படையான மொழிகொண்டவையாக இந்தச் சட்டங்கள் இருக்கலாகாது.

இ. பயங்கரவாதம் தொடர்பான குற்றங்கள் புரிந்ததாக ஐயத்திற்காளான தனியாட்களுக்குத் தற்போக்கான காவலடைப்பிலிருந்து பாதுகாப்பு, உடனுக்குடன், நடுநிலையான நீதித்துறை மீளாய்வு நாடல், நியாயமான உசாவல் உரிமைகள் உட்பட அனைத்துச் சட்டக் காப்புக் கூறுகளும் கிடைக்க வகைசெய்ய வேண்டும்.

உ. ‘கலவரப் பகுதிகளில்’ பாதுகாப்பு வழிமுறைகளைப் பயன்படுத்துவது வரம்புக்குட்பட்ட அளவிலும், தற்காலிகமாகவும், தகவுக்கேற்பவும், அவசியம் சார்ந்தும், தற்சார்பான நீதித்துறை மேற்பார்வைக்குட்பட்டும் இருத்தல் வேண்டும்.

- உரிய உள்நாட்டுச் சட்டங்கள் அனைத்திலிருந்தும் அரசு அதிகாரிகளுக்குச் சட்டவிலக்கு வழங்கும் படியான, அல்லது சித்திரவதைக் குற்றத்துக்காகவும், நீதித்துறைசாராக் கொலைகள் போன்ற ஏனைய கொடுங்குற்றங்களுக்காகவும் குற்றஞ்சாட்டப்படும் அரசு அலுவலர்கள் மீது வழக்குத் தொடர அரசின் இசைவு தேவைப்படும் படியான வழிவகைகளை நீக்கம் செய்க.
- தேசிய மனிதவுரிமை ஆணையத்தின் (NHRC) பரிந்துரைகள் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டவை ஆகிடும் வகையிலும், இவ்வமைப்பு ஆய்தப்படைகள் செய்யும் சித்திரவதை அல்லது பிறவகை முறைகேடுகள் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்ய இடமளிக்கும் வகையிலும் மனிதவுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் செய்க.
- சமயச் சிறுபான்மையினரையும், ஏனைய விளிம்புநிலைக் குழுக்களையும் சித்திரவதையிலிருந்தும் பிறவகை வன்முறையிலிருந்தும் காத்திடப் பிரிவுகளிடையிலான பாகுபாடு உட்பட நேரடி, சுற்றடிப் பாகுபாட்டைத் தடை செய்து விரிமுழு சட்டம் இயற்றுக. முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்து குற்றமிழைத்தோரைப் பொறுப்பாக்குவதை உறுதிசெய்க.

<u>சித்திரவதைக்கு எதிரான தரநிலைகளைச் செயலாக்குதல்</u>

- தற்போக்காகக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைவரையும் உடனே விடுதலை செய்க.
- தன்னுரிமை பறிக்கப்பட்ட அனைவருக்கும் அவர்கள் கைது செய்யப்பட்ட அக்கணத்திலிருந்து சட்டக் காப்புக்கூறுகள் செயலாக்கப்படுவதையும், காலந்தவறாமல் நீதித்துறையால் கண்காணிக்கப்படுவதையும் உறுதி செய்க. பன்னாட்டுத் தரநிலைகளுக்கு இணங்க இந்தக் காப்புக் கூறுகளில் உடனுக்குடன் வழக்கறிஞரை அணுகும் உரிமையும், உரிமைகள் பற்றிய தகவலும், நீதித்துறைக் கண்காணிப்பும், தற்சார்பான மருத்துவப் பரிசோதனைகளும், குடும்ப உறுப்பினர் ஒருவருக்குத் தகவல் சொல்லும் உரிமையும் இடம்பெறச் செய்க.
- காவல்துறையினருக்கும், சிறை ஊழியர்களுக்கும், வழக்குத் தொடுநர்களுக்கும், நீதித்துறை அதிகாரியங்களுக்குமான முறைசார் கல்வித் திட்டத்தில் மனிதவுரிமைகளையும் சித்திரவதைக்கு எதிரான பயிற்சியையும் இணைத்திடுக. திறமான நேர்காணல் பற்றிய மெண்டெஸ் கொள்கைகள், இஸ்தான்புல் வகைமுறை உடன்படிக்கை, மின்னசோட்டா வகைமுறை உடன்படிக்கை ஆகியன பற்றிய கல்வித்திட்டமும் இந்தப் பயிற்சியில் இடம்பெறச் செய்க.
- பன்னாட்டுத் தரநிலைகளுக்கு இணங்கக் காவலாணை விசாரணைகளின் போது சித்திரவதை அல்லது மோசமான நடத்துமுறை பற்றிய குற்றச்சாட்டுகளை நேர்வினையாக விசாரிக்கும் படியும், சித்திரவதைக்குச் சான்றாக சித்திரவதைக் குற்றம் புரிந்தவருக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் நிலை தவிர சித்திரவதைக் கறை படிந்த சாட்சியம் எதுவானாலும் எந்தச் சட்ட நடவடிக்கையிலும் தவிர்க்கும் படியும் நீதித்துறை நடுவர்களைப் பணித்திடுக.

தண்டித்தலில்லாக் குற்றவிலக்கில் கவனம் செலுத்துதல்

- சித்திரவதையை ஆவணப்படுத்துகிறவையும், சித்திரவதையில் உயிர்பிழைத்தோர்க்கு ஆதரவு வழங்குகிறவையுமான குடியியல் சமூக அமைப்புகளின் பணிக்கு உதவியும் காப்பும் தருக. இவற்றுக்கு நிதியுதவி செய்தலும், சட்டத்திலும் செயற்கொள்கையிலும் உதவும் படியான சூழல் அமையச் செய்தலும், இவ்வமைப்புகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தலும், உருட்டல்மிரட்டல், தொல்லைப்படுத்தல், பழிவாங்கல்கள் ஆகியவற்றிலிருந்து மனிதவுரிமைக் காப்பாளர்களைப் பாதுகாத்தலும் இடம்பெறச் செய்க.
- சித்திரவதையும் மோசமான நடத்துமுறையுமான குற்றச்சாட்டுகள், முனைப்பான புலனாய்வுகள், விதிக்கப்பெறும் தடைகள் ஆகியவை பற்றித் தனித் தனியான தரவுகளின் அமைப்புசார் திரட்டலையும் வெளியீட்டையும் உறுதிசெய்க.
- காவலில் இருப்பவர்கள் உட்பட சித்திரவதையால் பாதிப்புற்றவர்கள் அனைவரும் அவர்தம் குடும்பத்தினரும் தற்சார்பான அமைப்புகளிடம் ஊறின்றி முறைப்பாடுகள் செய்யவும், பழிவாங்கும் நடவடிக்கைகளிலிருந்து பாத்குகாக்கப்படவும் வாய்ப்பளித்திடுக.
- கட்டாயமான, தற்சார்பான சட்டம்சார் மருத்துவப் பரிசோதனைகள் உள்ளிட்ட வழிகளில் சித்திரவதைக் குற்றச்சாட்டுகளனைத்தும் இஸ்தான்புல் வகைமுறை உடன்படிக்கைக்கிணங்க ஆவணமாக்கப்படுவதை உறுதிசெய்க.
- சித்திரவதையும் காவல் சாவுகளும் நீதித்துறைக்கு அப்பாற்பட்ட கொலைகளும் ஏனைய மோசமான உரிமைமீறல்களுமான அனைத்துக் குற்றச்சாட்டுகள் குறித்தும் உடனுக்குடன் ஒருதலைச்சார்பற்ற, திறமான புலனாய்வுகள் நடத்துக.
- புலனாய்வுகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் முழுக்க முழுக்கத் தற்சார்பாக இருப்பதையும் சித்திரவதை, பிறவகை மோசமான உரிமைமீறல்களைப் புலனாய்வு செய்வதில் போதுமான பயிற்சியும் வல்லமையும் கொண்டிருப்பதையும் உறுதி செய்வது உள்ளிட்ட வழிகளில் தேசிய மனிதவுரிமை ஆணையம் (NHRC) தனக்கான கட்டளையைத் திறமாகவும் தற்சார்பாகவும் நிறைவேற்றத் தக்க நிலையை உறுதிசெய்க.
- மனிதவுரிமைக் காப்பாளர்கள், வழக்கறிஞர்கள், செய்தியாளர்கள், சமயச் சிறுபான்மையினர், அல்லது ஏனைய விளிம்புநிலைசமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் தொடர்பான வழக்குகள் உட்பட எல்லா வழக்குகளிலும் அதே உயர் புலனாய்வுத் தரநிலைகளை உறுதி செய்க; இந்தியாவில் பாதிப்புற்றவர்கள், உயிர்தப்பியவர்கள் அனைவருக்கும் நீதிக்கும் இழப்பீட்டுக்குமான அணுகல் கிடைக்கச் செய்க.
- சித்திரவதையை வாடிக்கையாக்குவதை எதிர்க்கவும், பொறுப்புக்கூறலையும் மனிதவுரிமைகளின்பால் மதிப்பையும் ஊக்கி வளர்க்கவும் நாடுதழுவிய மக்கள் விழிப்புணர்வு இயக்கங்கள் நடத்துக.

பன்னாட்டுச் சமுதாயத்துக்கு

- இருதரப்பு மற்றும் பலதரப்புக் கூட்டாண்மைகள், வளர்ச்சிசார் ஒத்துழைப்பு, அரசதந்திர உரையாடல்கள் உள்ளிட்ட வழிகளில் இந்தியாவுடன் உறவாடலில் சித்திரவதை மற்றும் மோசமான நடத்துமுறையை ஒழிப்பதற்கு முன்னுரிமை தருக.
- வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு தொடர்பாக இந்தியாவுடன் செய்து கொள்ளும் அனைத்து உடன்பாடுகளிலும் சித்திரவதைக்குத் தடை உட்பட மனிதவுரிமைகள் பற்றிய அளவைகளை இணைத்துக் கொள்க.
- இந்தியாவில் மாற்றுக் கருத்தை மௌனப்படுத்தவும் சமய மற்றும் ஏனைய சிறுபான்மையினரை ஒடுக்கவும் சித்திரவதையும் மோசமான நடத்துமுறையும் நீதித்துறைக்கு அப்பாற்பட்ட கொலைகளும் பயன்படுத்தப்படுவது பற்றிய கவலைகளை வெளிப்படையாகவும் தொடர்ச்சியாகவும் எழுப்புக.
- பொருத்தமென்னும் போது உலகளாவிய மேலுரிமைக் கொள்கை உள்ளிட்டவற்றின் கீழ் சித்திரவதைக் குற்றமிழைத்தவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அனைத்து வழியிலும் பொறுப்புக்கூறலை உறுதி செய்ய சித்திரவதை மற்றும் கடுமையான பிற மனிதவுரிமை மீறல்கள் பற்றிய புலனாய்வை ஊக்கப்படுத்துக.

- மனிதவுரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும், சட்ட உதவி வழங்கவும், நீதிக்கும் பொறுப்புக்கூறலுக்குமாக வழக்குரைக்கவும் பணியாற்றும் இந்தியக் குடியியல் சமூக அமைப்புகளுக்கு நிதியுதவி மற்றும் காப்புப் பொறிமுறைகள் உள்ளிட்ட வழிகளில் ஆதரவு தருக.
- சட்டமுறை மற்றும் நிறுவனச் சீர்திருத்தம் குறித்து அரசதந்திர உறவாடலும் ஒத்துழைப்பும் உள்ளிட்ட வழிகளில் சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தத்துக்கு (UNCAT) இந்தியா ஒப்புறுதி வழங்குவதற்கு ஊக்கமும் ஆதரவும் தருக.
- இந்தியாவில் சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் குறித்துத் தற்சார்பான புலனாய்வுகள் நடத்துமாறு கேட்கவும், ஐநா ஒப்பந்த அமைப்புகளிலிருந்தும் சிறப்பு நடைமுறைகளிலிருந்துமான பரிந்துரைகளைச் செயலாக்குமாறு அழுத்தம் கொடுக்கவும் ஐநா மனிதவுரிமைப் பேரவை உள்ளிட்ட அரசதந்திர மற்றும் பலதரப்பு மேடைகளைப் பயன்படுத்துக.

# அறிமுகம்

> **அச்சமூட்டும் அளவுக்குப் பெருகிப் போன மனிதத்தன்மையற்ற சித்திரவதையும், வன்தாக்குதலும், காவல்சாவும் சேர்ந்து சட்டத்தினது ஆட்சியும் குற்ற நீதியமைப்பின் நிர்வாகமும் நம்பகமானவையா என்பது தொடர்பான கவலைக்குரிய கேள்விகளை எழுப்புகின்றன. இது குறித்துச் சமுதாயம் கவலை கொள்வது சரியே. நீதிக்கான குரல் இன்னுங்கூட உரக்க ஒலிக்கிறது. அது உடனே ஈடுசெய் நடவடிக்கைகள் எடுக்கக் கோருகிறது.**
>
> – முன்ஷி சிங் கௌதம் –எதிர்- ம.பி. மாநில அரசு வழக்கில் உச்ச நீதிமன்றம்[1]

இந்தியாவில் காவலில் வைக்கப்படும் தனியாட்கள் சித்திரவதை செய்யப்படுவதும் மோசமாக நடத்தப்படுவதும் அமைப்புசார் சிக்கல்களாய் விடாப்பிடியாகத் தொடர்கின்றன.[2] 1980ஆம் ஆண்டிலேயே தேசியக் காவல்துறை ஆணையம் "குறுக்கு வழியில் விரைவான விளைவுகளை அடைவதற்காக"[3] காவல்துறை காவல் சித்திரவதையைப் பரவலாகப் பயன்படுத்துவதை ஒப்புக் கொண்டது. தேசிய மனிதவுரிமை ஆணையம் (NHRC) 2018ஆம் ஆண்டு "இந்தியாவில் காவல் வன்முறையும் சித்திரவதையும் மிகப் பரவலாகிக் கிட்டத்தட்ட வாடிக்கையாகி விட்டது"[4] என்று அறிக்கையிட்டது. இந்திய உச்ச நீதிமன்றமும் ஏனைய நாடளாவிய நீதிமன்றங்களும் கூட சட்டச் செயலாக்க அமைப்புகள் அதிகார முறைகேடு செய்வதையும் சித்திரவதைக்கும் மற்றக் கடுமையான மனிதவுரிமை மீறல்களுக்கும் பொறுப்புக் கூறல் இல்லாமையையும் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளன.[5]

இன்று வரையிலும் கூட, குடியியல் சமூக அமைப்புகளும், மனிதவுரிமைக் காப்பாளர்களும் உயிர்பிழைத்தவர்களும் பல்வேறு சூழல்களில் சட்டச் செயாக்க அமைப்புகளும் பாதுகாப்புப் படைகளும் சித்திரவதையைப் பயன்படுத்துவதைத் தொடர்ந்து அம்பலமாக்கி வருகின்றன. குற்றப்புலனாய்வுகளின் போது சித்திரவதை இடம்பெறுவது ஆவணமாக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலங்கள் கறக்கவோ தகவல் எடுக்கவோ ஆட்களைத் தண்டிக்கவோ காவல்துறை மற்றும் நீதித்துறைக்காவலில் அடியுதையும் வல்லுறவும் பிறவகை வன்முறையும் பயன்படுத்தப்படுகின்றன. 2024இல் மட்டும் காவல் சாவு பற்றி 130 முறைப்பாடுகள் பதியப்பெற்றன. இதையும் சேர்த்து தேசிய மனிதவுரிமை ஆணையத்தின்முன் நிலுவை நிற்கும் முறைப்பாடுகளின் தொகை 2,448 காவல் சாவு வழக்குகளாக உயர்ந்தது.[6]

இதே அளவு கவலைக்குரிய ஒன்று காவல்துறை 'மோதல்கள்' எனப்படுகிறவற்றில் நீதித்துறைசாராக் கொலைகள் பயன்படுத்தப்படுவதாகும். ஈண்டு கொல்வது, அல்லது கொல்லும் நோக்கத்துடனோ அல்லது ஐயத்துக்குரிய ஆட்களுக்கு நிரந்தர ஊனமுண்டாக்கும் நோக்கத்துடனோ சுடுவது பலநேரம்

1 2005 (9) SCC 631.
2 உபேந்திர பட்சி, இந்தியா: ஒரு பெருந்துரோகம்: சித்திரவதைச் செயல்களுக்கு அரசின் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு தொடர்கிறது. சட்டமியற்றுவோரும் நீதிமன்றமும் தமது கடமையை நிறைவேற்றவில்லை, 13 திசம்பர் 2017.
3 இந்தியச் சட்ட ஆணையம், அறிக்கை எண் 273, சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தத்தை (UNCAT) சட்டமியற்றிச் செயலாக்குதல், அக்டோபர் 2017, பக். 35, மேலும் பார்க்க: தேசியக் காவல் ஆணையம், நான்காம் அறிக்கை, ஜூன் 1980, பக்.8, பிரிவு 27.26
4 தேசிய மனிதவுரிமை ஆணையம் (NHRC), ஆண்டறிக்கை 2017-1018, பக். 44.
5 பிரான்சிஸ் கொராலி மல்லின் –எதிர்- நிர்வாகி, தில்லி ஒன்றியப் புலம், 1981(1) SCC 608; கௌரி சங்கர் சர்மா –எதிர்- உ.பி. மாநில அரசு 1990 SCC (SUPP) 656; மேலும் பார்க்கவும்: இந்தியச் சட்ட ஆணையம், UNCAT செயலாக்கம், அக்டோபர் 2017, பக்.
6 2014 ஜனவரிக்கும் திசம்பருக்கும் இடையில் தேசிய மனிதவுரிமை ஆணையம் (NHRC) காவல் சாவுகள் பற்றிய 2,170 அறிக்கைகளைப் பதிவு செய்தது. NHRC பதிவு/தீர்வு செய்த வழக்குகள் பற்றிய மாதாந்திர முக்கியப் புள்ளிவிவரங்கள்: மேலும் பார்க்க: மனிதவுரிமைக் கண்காணிப்பகம் (HRW), இந்தியா: 2024, 2025 நிகழ்ச்சிகள்.

ஏற்புடைத்த குற்றக் கட்டுப்பாட்டு வழிமுறையாகக் கருதப்படுகிறது.[7] அரசினால் 'கலவரப் பகுதிகள்'[8] என்று குறித்துரைக்கப்பட்ட – பயங்கரவாதமும் உள்நாட்டுக் கலகமும் பீடித்தவை எனப்படும் – வட்டாரங்களிலும் கூட சித்திரவதையும் ஏனைய முறைகேடுகளும் பரவலாக நடக்கின்றன. அங்கெல்லாம் ஆய்தப்படைகள்[9] உள்ளிட்ட பாதுகாப்புப் படைகள் ஏழை எளிய மக்களுக்கும் விளிம்புநிலைப் பிரிவினருக்கும் எதிராக வன்முறை நிகழ்த்துகின்றனர்.[10] 'கலவரப் பகுதிகளாக' வகைப்படுத்தப்படாத வட்டாரங்களிலும் கூட இதே போன்ற மீறல்கள் நடக்கின்றன.[11]

அமைதியான கூட்டங்களைக் காவல்துறை கையாளும் போது கிளர்ச்சியாளர்களை வன்முறையாகக் கலைத்து அச்சுறுத்துவதில் மிகையான வலுப் பயன்பாடு என்பது சித்திரவதை அல்லது மோசமான நடத்துமுறைக்கு நிகராவதும் ஆவணமாக்கப்பட்டுள்ளது.[12] இது மென்மேலும் பகையான சூழலில் நிகழ்கிறது; அரசியல் மாற்றுக்கருத்தாளர்களும், செய்தியாளர்களும், மனிதவுரிமைக் காப்பாளர்களும் சித்திரவதைக்கும் பிறவகை வன்முறைக்கும்; மாற்றுக்கருத்தை மௌனமாக்க விரிவானதொரு உத்தியின் பகுதியாக பயங்கர எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்படும் வழக்குகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.[13] சிறுபான்மைச் சமயத்தவர்க்கும், தலித்துகள், முசுலிம்கள் போன்ற விளிம்புநிலைச் சமுதாயங்களுக்கும் எதிரான கட்டமைப்பியல் பாகுபாடு என்பது சட்டச் செயலாக்கத்தின் கையில் வன்முறையால் இந்தக் குழுக்களை அளவுமீறிப் பாதிப்புறச் செய்கிறது.[14]

இந்த மோசமான நிலைமை ஐநா வல்லுநர்கள், ஒப்பந்த அமைப்பினர், உலகளாவிய காலவட்ட மீளாய்வு (UPR) செயற்குழுவினர் ஆகியோரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இவர்கள் திரும்பத் திரும்பக் கவலை தெரிவித்திருப்பதோடு, சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தத்தை (UNCAT) ஒப்புறுதி செய்யுமாறும், சித்திரவதை குறித்துக் கவனம் செலுத்தும் நடவடிக்கைகளைச் செயலாக்குமாறும் வலியுறுத்தியுள்ளனர்.[15] காவல் சாவுகளின் உயர்வீதங்கள், பாதிப்புற்றோர் குடும்பங்களுக்கு எதிரான பழிவாங்கல்கள், காவல் கைதிகளுக்கு – குறிப்பாக சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு - எதிரான வன்புணர்வு உள்ளிட்ட சித்திரவதைப் பயன்பாடு ஆகியவை குறித்து 2024 ஜூலையில் ஐநா மனிதவுரிமைக் குழு பேரச்சம் தெரிவித்தது.[16] மனிதவுரிமைக் குழு 'கலவரப் பகுதிகள்' எனப்படும் பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் பயன்பாட்டையும் கண்டித்தது. இந்தப் பயன்பாடு ஏற்படுத்தியுள்ள விளைவுகள் இவை:

---

7 ஃபிரண்ட்லைன், தி இந்து உடனுக்குடன் நீதி: அரசின் அத்துமீறல் குறித்து: 'அரசு வெறிக்கும்பலின் வழிமுறையைக் கைக்கொள்ளக் கூடாது', 4 ஏப்ரல் 2025.

8 ஆய்தப் படைகள் (தனியதிகாரங்கள்) சட்டம், 1958இன் படி, 'கலவரப் பகுதி' என்பது பிரிவு 3இன் கீழ் அப்போதைக்குக் கலவரப் பகுதி என்று அறிவிக்கப்படும் பகுதி ஆகும். ஒரு பகுதியைக் 'கலவர'ப் பகுதியாக அறிவிக்கும் அதிகாரம் மாநிலத்தைப் பொறுத்த வரை மாநில ஆளுநருக்கும், ஒன்றியப் புலத்தைப் பொறுத்த வரை ஒன்றியப் புல நிர்வாகி அல்லது நடுவண் அரசுக்கும் உரியதாகும்.

9 'ஆய்தப்படைகள்' என்பதில் இந்தியாவின் எல்லைப் பாதுகாப்புப் படைகள், அசாம் ரைஃபிள்ஸ், நடுவண் சேமக் காவல் படை போன்ற இராணுவ, ஒட்டு இராணுவப் படைகள் அடங்கும். பார்க்கவும்: இந்தியா டுடே, CRPF முதல் BSF வரை: இந்தியாவின் பல்வேறு பாதுகாப்புப் படைகளையும் அவற்றின் வகிபாகங்களையும் அறிக, 15 பிப்ரவரி 2019.

10 மனிதவுரிமைக் கண்காணிப்பகம் (HRW), இந்தியா: 2024, 2025 நிகழ்ச்சிகள்.

11 ஃபிரண்ட்லைன், பஸ்தாரில் சண்டைநிறுத்தம் செய்ய குடியியல் சமூகக் குழுக்கள் அறைகூவல், ஆதிவாசிகளுக்கு எதிராக விரிவாகி வரும் வன்முறைக்குக் கண்டனம். 5 ஏப்ரல் 2025.

12 பன்னாட்டுப் பொது மன்னிப்புக் கழகம் (AI), இந்தியா: போராட்டக்காரர்களுக்கு எதிரான மிகையளவான வலுப்பயன்பாடும், தற்போக்குச் சிறைக்காவலும், தண்டனை நடவடிக்கைகளும் உடனே ஒழிந்தாக வேண்டும். (இந்தியா: மிகையளவான வலுப்பயன்பாடு), 14 ஜூன் 2022; தில்லி சிறுபான்மைகள் ஆணையம், 2020 பிப்ரவரி வடகிழக்கு தில்லிக் கலவரங்கள் பற்றிய உண்மையறியும் அறிக்கை, ஜூலை 2020.

13 பிபிசி, சித்திக் கப்பன்: ஈராண்டுக்குப் பின் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட இந்தியச் சிந்தனையாளர், 2 பிப்ரவரி 2023.

14 CNN, இந்தியக் காவல்துறை நீதிக்குக் குறுக்குவழியாக வன்முறையைப் பயன்படுத்துகிறது. ஏழை எளியவர்களே இதன் வடுக்களைத் தாங்குகின்றார்கள். 3 திசம்பர் 2020; தெற்காசிய நீதிப் பரப்பியக்கம், இந்தியாவில் சித்திரவதை, தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு, சமயச் சிறுபான்மைகள், வெளியிடப்படாதது, பக். 9, வெறுப்புக்கு எதிரான குடிமக்கள், ஒவ்வொருவரும் மௌனமாக்கப்பட்டுள்ளார்: உத்தரப் பிரதேசத்தில் குடியுரிமைச் சட்டத் திருத்த எதிர்ப்புப் போராட்டக்காரர்களுக்கு எதிரான காவல்துறை அத்துமீறல்கள், மற்றும் வன்முறைக்குப் பிறகான பழிவாங்கல், 2 மார்ச்சு 2020.

15 ஐநா மனிதவுரிமைப் பேரவை (HRC), உலகளாவிய காலவட்ட மீளாய்வு பற்றிய இயங்குகுழுவின் அறிக்கை (UPR 2022), 14 திசம்பர் 2022, A/HRC/52/11.

16 ஐநா மனிதவுரிமைக் குழு (HRCttee), இந்தியாவின் நான்காம் காலவட்ட அறிக்கை மீது இறுதிப் பார்வைகள் (இறுதிப் பார்வைகள் 2024), 25 ஜூலை 2024, CCPR/C/IND/CO/4, பத்தி 33.

மிகையளவான வலுப்பயன்பாடு உள்ளிட்ட பரவலான, மோசமான மனிதவுரிமை மீறல்கள் சட்டப் புறம்பான கொலைகளுக்கும், ஆண்டுக் கணக்கில் முறைப்படியான குற்றச் சாட்டுகள் இல்லாமல் தற்போக்கான சிறைக் காவலுக்கும், ஆட்கொணர்வு விண்ணப்பங்கள் விரைந்து விசாரிக்கப்படாமல் கிடப்பதற்கும், பாலியல் வன்முறைக்கும், வலுக்கட்டாய இடப்பெயர்வுக்கும், சித்திரவதை மற்றும் மோசமான நடத்துமுறைக்கும் இட்டுச் சென்றன.[17]

இந்தியா 1997இல் சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தத்தில் (UNCAT) ஒப்பமிட்ட போதிலும் இந்த ஒப்பந்தத்தை இன்று வரை ஒப்புறுதி செய்யவில்லை.[18] அது தன் உள்நாட்டுச் சட்டச் சட்டகத்துக்குள் சித்திரவதை என்பதைத் தனியொரு குற்றமாகக் குற்றவகைப்படுத்தவும் தவறி விட்டது; 2010இல் அரசு அறிமுகம் செய்த சட்டமுன்வடிவு, 2017, 2018, 2022 ஆண்டுகளில் தனியார் சட்டமுன்வடிவுகள் ஆகியவற்றின் ஊடாக சித்திரவதைக்கு எதிரானசட்டம் இயற்றும் முயற்சிகளும் பாரிய எதிர்ப்புகளுக்கு முகங்கொடுத்துத் தடைபட்டுள்ளன.[19] 2023ஆம் ஆண்டு செய்யப்பட்ட குற்றவியல் சட்டச் சீர்திருத்தங்களும் காவல்துறை அதிகாரங்களை விரிவாக்கியும், காவல் வரம்புகளை நீட்டியும், அரசுப் பணியாளர்கள் செய்த குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிசெய்யத் தவறியும் காப்புக்கூறுகளை நலிவுறச் செய்து விட்டமைக்காகக் குற்றாய்வு செய்யப்பட்டுள்ளன.[20] சித்திரவதையைக் குற்றவகைப்படுத்தாமையானது சித்திரவதைக்கு எதிரான தரநிலைகள் மோசமாகச் செயலாக்கப் பெறுவதுடனும், சட்டமானது குறிப்பான குழுக்களைக் குறிவைத்து இலக்காக்கும் கருவியாக்கப்படுவதுடனும் சேர்ந்து, சித்திரவதையை நிரந்தரமாக்கும் சூழலைத் தோற்றுவிக்கிறது. பரவலான சித்திரவதை நடைமுறையும், சித்திரவதை வாடிக்கையாக்கப்படுவதும், அரசிடமிருந்து போதுமான எதிர் நடவடிக்கைகள் இல்லாமையும் கூட சித்திரவதைக் குற்றம் புரிந்தவர்கள் பொறுப்புக்கூறும் அச்சமில்லாமல் தொடர்ந்து இவ்வாறான மீறல்கள் செய்வதற்கு இடமளிக்கும் தண்டித்தலில்லாக் குற்றவிலக்குப் பண்பாட்டுக்குத் துணைசெய்துள்ளன.

இந்தியாவில் சித்திரவதையும் மோசமான நடத்துமுறையும் நிலவி வருவது இந்தியாவுக்கு வெளியிலிருக்கும் நீதிமன்றங்களையும் அச்சங்கொள்ளச் செய்துள்ளது. குறிப்பாகக் குற்றவாளிகளை அயல்நாட்டிடம் ஒப்படைக்கும் வழக்குகளில், செல்லுபடியாகக் கூடிய ஒப்படைப்பு ஆணைகள் இருந்தாலும், இந்திய அரசு முழுமையான உறுதிமொழிகள் வழங்கிய போதும் கூட சித்திரவதையும் மோசமான நடத்துமுறையும் நிகழும் ஆபத்துள்ளது என்ற அடிப்படையில் நீதிமன்றங்கள் இந்திய நாட்டவரை ஒப்படைக்க மறுத்தன.[21] தேசிய நீதிமன்றங்கள் இவ்வாறான முடிவுகளைக் கண்டடைந்த போதிலும், 2022 உலகளாவிய காலவட்ட மீளாய்வில் (UPR) 31 அரசுகள் இந்தியாவுக்குப் பரிந்துரைகள் வழங்கிய போதிலும்,[22] இந்தியாவில் நிலைமை மோசமடைந்து வருவதற்குப் பன்னாட்டுச் சமுதாயத்தின் எதிர்வினை வரம்புக்குட்பட்டதாகவே இருந்துள்ளது. பல

17 மனிதவுரிமைக் குழு, இறுதிப் பார்வைகள் 2024, பத்தி 27.

18 ஐநா மனிதவுரிமைகளுக்கான உயராணையர் அலுவலகம் (OHCHR), இந்தியாவுக்கான ஒப்புறுதித் தகுநிலை.

19 சட்ட முன்வடிவு 2010இல் முதலில் மக்களவையில் (இந்திய நாடாளுமன்றத்தின் கீழவை) அறிமுகம் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அது மாநிலங்களவையின் (இந்திய நாடாளுமன்றத்தின் மேலவை) பொறுக்குக் குழுவின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. பொறுக்குக் குழு பரிந்துரைகள் அனுப்பிய போதிலும் மக்களவை பொதுத் தேர்தலுக்காகக் கலைக்கப்பட்டு விட்ட நிலையில் சட்ட முன்வடிவுகாலாவதியாகி விட்டது. 2017, 2018, and 2022 ஆகிய ஆண்டுகளில், சித்திரவதையைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவுகள் தனிப்பட்ட உறுப்பினர்களின் சட்ட முன்வடிவுகளாக அறிமுகம் செய்யப்பட்ட போதிலும் வெற்றி பெறவில்லை.

20 காமன் காஸ், மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள், 2024.

21 பார்க்கவும்: பண்டாரி-எதிர்-இந்திய அரசு [2025] EWHC 449 (நிர்வாகம்). இந்த வினா குறித்து மாவட்ட நீதிபதி கண்டறிந்ததை உயர் நீதிமன்றமும் உறுதி செய்தது அல்லவா, அந்த நீதிபதி பற்பல காரணிகளையும் ஆதாரங்களையும் அடிப்படையாகக் கொண்டுதான் காவல்துறை அதிகாரிகளோ பிற புலனாய்வு அமைப்புகளோ சித்திரவதை செய்வதும் மோசமாக நடத்துவதுமான இடர் இருப்பது நன்கு நிறுவப்பட்டிருப்பதாக முடிவுக்கு வந்தார். இந்தக் காரணிகளில் சித்திரவதைக்கு எதிரான ஐநா ஒப்பந்தத்தை இந்தியா ஒப்புறுதி செய்யாமலிருப்பதும், டி.கே. பாசு –எதிர்- மேற்கு வங்காள மாநிலம் 1997 1 SCC 416 முதலாகப் பல வழக்குகளிலும் இந்திய உச்ச நீதிமன்றம் சித்திரவதை இருப்பதை ஒப்புக்கொண்டிருப்பதும், இந்தியச் சட்ட ஆணையமும் தேசிய மனிதவுரிமை ஆணையமும் தந்துள்ள அறிக்கைகளும், வல்லுநர் கருத்தும் அடங்கும். மேலும் பார்க்கவும்: இந்திய ஒன்றிய அரசு –எதிர்- விர்க்கரன் அவஸ்தி, 11 ஏப்ரல் 2025, ஆசிய மனிதவுரிமை மையம், சித்திரவதை இற்றைச் செய்தி, இந்தியா, திசம்பர் 2018.


22 ஐநா மனிதவுரிமை ஆணையம், உலகளாவிய காலவட்ட மீளாய்வு 2022, பத்தி 151-152.

அரசுகள் இந்தியாவுடன் தமது இருதரப்பு உறவாடலில் இந்தியாவின் மனிதவுரிமை அடைவைக் குற்றாய்வு செய்யத் தயங்குகின்றன.[23] சரக்கு சேவைகளின் உலக வர்த்தகத்தில் இந்தியா முக்கியத்துவம் வாய்ந்த நாடாகும்.[24] இந்தியாவின் இந்த முக்கியத்துவத்துடன் புவிசார் அரசியல் முக்கியத்துவமும் சேர்ந்து கொண்டு, மனிதவுரிமைச் சிக்கல்களைக் கவனிப்பதற்கு அரசுகள் பொருளியல், அரசதந்திரவியல் அழுத்தம் செலுத்தத் தயங்குவதில் போய் முடிகிறது.

இந்த அறிக்கை இந்தியாவில் தொடரும் பரவலான சித்திரவதை, மோசமான நடத்துமுறை, மற்றும் பிறவகை வன்முறை மீது ஒளிபாய்ச்சுகிறது; இவை அவசரமாய்க் கவனம் கோருவன ஆகும். காவல் வல்லுறவு, காவல்துறை மற்றும் நீதித்துறைக் காவலில் பிறவகை வன்முறை, காவல்துறை 'மோதல்களில்' நீதிசாராக் கொலைகள் உள்ளிட்ட சித்திரவதை முறைகளை இது ஆவணமாக்குகிறது (பகுதி I). சித்திரவதை எவ்வாறு அரசியல் அடக்குமுறைக் கருவியாக மட்டுமல்லாமல், அரசியல் மாற்றுக் கருத்துடையோர், சமய மற்றும் இனச் சிறுபான்மைகள் போன்ற குழுக்களையும், மோதலும் கலகமும் நிறைந்த வட்டாரங்களில் தனியாட்களையும் பாதிக்கும்படியான பாகுபாட்டுத் தன்மையிலான ஒடுக்குமுறைக் கருவியாகவும் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் இந்த அறிக்கை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது (பகுதி II). மேலும், இந்தியாவின் தேசியச் சட்டச் சட்டகத்தில் இவ்வாறான முறைகேடுகளைத் தடுக்கவோ கவனிக்கவோ தவறும் முக்கியக் குறைகளையும் இடைவெளிகளையும் இந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது (பகுதி III). சித்திரவதைக் குற்றம் புரிந்தவர்கள் பொறுப்புக்கூறல் பற்றிய அச்சமில்லாமல் செயல்பட இடமளிக்கும் தண்டித்தலில்லாக் குற்றவிலக்குப் பண்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது (பகுதி IV). முடிவில், சித்திரவதை மற்றும் மோசமான நடத்துமுறையைத் தடுப்பதும், புலனாய்வு செய்வதும், வழக்குத் தொடுப்பதும் நோக்கி இந்த அறிக்கை இந்தியாவுக்கும் சித்திரவதையை அறுதியாகவும் இறுதியாகவும் தடைசெய்வதைப் போற்றக் கடமைப்பட்ட மற்ற அரசுகளுக்கும் குறிப்பான பரிந்துரைகள் செய்கிறது.

23 சந்தீப் குமார், இந்தியாவின் புவிசார் அரசியல் உயர்வு: வட்டார விளைவுகள், 22 மே 2023.
24 சௌத்திக் பிஸ்வாஸ், இந்தியா: வெகுவிரைவாக வளரும் பெரும் பொருளியல் வேகமிழக்கிறதா? 10 திசம்பர் 2024.

# சித்திரவதை முறைகள்




© Reuters/Mansi Thapliyal

**காவலர் ஒருவர் புதுதில்லியில் இருக்கும் திகார் சிறைக்குள் நுழைகிறார். இந்தியச் சிறைகளில் சித்திரவதை பரவலாக இருந்து வருகிறது. மனிதத் தன்மையற்ற அடியுதைகளும் காவல் சாவுகளுமான வழக்குகள் ஆவணமாக்கப்பட்டுள்ளன.**

இந்தியாவில் சித்திரவதைக் குற்றம் பல்வேறு சூழல்களில் செய்யப்படுகிறது. அது - தற்போக்கான கைதுகளைத் தொடர்ந்து அல்லது சட்டப் புறம்பான காவலடைப்பின் போது -[25] காவல்துறை மற்றும் நீதித்துறைக் காவலில் அடியுதை, பாலியல் வன்முறை, காவல்துறை 'மோதல்கள்' எனப்படும் நீதிசாராக் கொலைகள் போன்ற பற்பல வடிவங்கள் எடுக்கிறது. சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தத்தில் (UNCAT) கண்டுள்ளபடி சித்திரவதை என்பதற்கான இலக்கணத்தில் நான்கு கூறுகள் அடங்கும்: (i) உடல்வகையிலானாலும் உள்ளவகையிலானாலும் கடும் வலி அல்லது துன்பம்; (ii) உள்நோக்கத்துடன் ஏற்படுத்தப்படுவது; (iii) ஒப்புதல் வாக்குமூலம் கறப்பது, தண்டிப்பது, அச்சுறுத்துவது. கட்டாயப்படுத்துவது போன்ற குறிப்பான நோக்கத்துக்காக, அல்லது எந்த வகையிலும் பாகுபாடு எனும் அடிப்படையில் எந்தக் காரணத்துக்காகவும் இப்படிச் செய்வது; (iv) அரசு

25 இந்தியாவில் சட்ட அடிப்படையோ செயல்வழியோ இல்லாமலும் முறைப்படியான காவலிடங்களுக்கு வெளியிலும் தனியாட்களை அடைத்து வைப்பது சிலநேரம் 'முறைசாராக் காவல்' எனப்படுகிறது. பார்க்கவும்: ராஜ் குமார் சிங், நீதியை உறுதிசெய்தல்: இந்தியாவில் காவல்துறை அதிகாரத்தின் சட்ட மற்றும் அரசமைப்புசார் எல்லைகள், 2024.

அலுவலரின் அல்லது அதிகாரமுறைப் பொறுப்பில் செயல்படும் வேறு ஒருவரின் தூண்டுதலால் அல்லது தூண்டுதல்பேரில் அல்லது இசைவு அல்லது உடந்தையுடன் இப்படிச் செய்வது.[26] சித்திரவதை என்றால் என்ன என்பதற்கான இலக்கண வரையறையின் அடிப்படையில், அறிக்கையின் இந்தப் பிரிவானது இந்தியாவில் அரசுச் செயற்பாட்டாளர்கள் நடைமுறைப்படுத்தும் மிகப் பரவலான சித்திரவதை முறைகளை ஆராய்கிறது. ஆவணமாக்கப்பட்ட வழக்குகளை எடுத்துக்காட்டி, எப்படிச் சித்திரவதை பன்னாட்டுச் சட்டத் தடைகளை மீறி கட்டுப்பாட்டையும் அச்சுறுத்தலையும் வலுவாக்கி சட்டச் செயலாக்கத்துக்கும் புலனாய்வுக்கும் அமைப்புசார் கருவியாகவே இருந்து வருவதை விளக்கிக் காட்டுகிறது.

## காவல்துறைக் காவலில் சித்திரவதை

> **மனிதவுரிமைகளுக்கும் உடல்சார் ஓர்மைக்குமான அச்சுறுத்தல் காவல் நிலையங்களில் உச்சம் கண்டுள்ளது.**
>
> – நுதலபதி இரமணா, இந்திய முன்னாள் தலைமை நீதியர், 2021.[27]

சித்திரவதை இந்திய நாட்டின் சட்டச் செயலாக்க நடைமுறைகளில் நெடுங்காலமாகவே ஊன்றி நிற்கிறது. இது காலனியாதிக்கக் காலத்திலேயே தொடங்கி விட்ட மரபாகும்.[28] இந்நாள் வரைக்கும் அது முகன்மைக் கவலைக்குரிய ஒன்றாகவும், புலனாய்வு செய்நுட்பங்களின் பிரிக்கவொண்ணாப் பகுதியாகப் பயன்படுத்தப்படுவது உட்பட பரவலாகப் பயன்படுத்தப்படும் நடைமுறையாகவும் இருந்து வருகிறது.[29]

சித்திரவதை என்பதற்கு இந்தியச் சட்டத்தில் இலக்கண வரையறை ஏதும் இல்லை ஆதலால், தேசியக் குற்றப் பதிவுருக்கள் கழகம் (NCRB), காவல்துறை ஆராய்ச்சி, வளர்ச்சி அலுவலகம் போன்ற அதிகாரமுறை அரசாங்க முகாமைகள் வழியாக சித்திரவதை வழக்குகள் தொடர்பாகப் புள்ளிவிவரங்கள் திரட்டுவது கடினமாய் உள்ளது. தேசியக் குற்றப் பதிவுருக்கள் அலுவலகம் 2017க்கும் 2022க்கும் இடையில் காவல்துறைக்கு எதிராகப் பதிவான பல சித்திரவதை வழக்குகளைப் பதிவு செய்தது[30] என்றாலும், இந்த எண்ணிக்கை தேசிய மனிதவுரிமை ஆணையமும் (NHRC) இந்தியக் குடியியல் சமூகமும் (CSO) பதிவு செய்த – இந்த அறிக்கையிலும் மேற்கொண்டு முன்வைக்கப்படுகிற - உரிய தரவுகளுடன் ஒப்பிடுங்கால் மிகக்குறைவாக உள்ளது, குடியியல் சமூக அமைப்புகளின் அறிக்கைகள் தவிர, தேசிய மனிதவுரிமை ஆணையம் தொகுத்துள்ள தரவுகள் சித்திரவதை நிகழ்வுகளுடன் தொடர்புடைய சான்றியம் வழங்குகின்றன. தேசிய மனிதவுரிமை ஆணையம் ஒவ்வோராண்டும் தனக்கு அறிக்கையிடப்படும் மனிதவுரிமை மீறல் வழக்குகளை விவரமாகக் காணச் செய்கிறது. அதிகாரியங்கள் நடத்தும் காவல் சித்திரவதை நாடெங்கும் வாடிக்கையாகி விட்டதை அது தொடர்ந்து தெளிவாகக் காட்டியுள்ளது.[31] ஆயின், தேசிய மனிதவுரிமை ஆணையத்தின் புள்ளிவிவரங்கள் காவல் சாவு வழக்குகளோடு நிற்கின்றன, எல்லாச் சித்திரவதை வழக்குகளையும் அவை சேர்க்கவில்லை.[32] குறைத்து அறிக்கையிடலும் ஒரு சிக்கல்தான். ஏனென்றால்

26 சித்திரவதைக்கும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கும் எதிரான ஐநா ஒப்பந்தம் (1984 திசம்பர் 10ஆம் நாள் இயற்றப்பெற்று, 1987 ஜூன் 26ஆம் நாள் செயலுக்கு வந்தது) 1465 UNTS 85 (UNCAT), உறுப்பு 1.

27 அம்ரித் தில்லான், இந்தியாவின் காவல் நிலையங்கள் மனிதவுரிமைகளுக்கு அச்சுறுத்தல் ஆகும் என்கிறார் தலைமை நீதிபதி, 10 ஆகஸ்டு 2021.

28 காதீர் ஆலம், இந்தியத் துணைக்கண்டத்தில் சித்திரவதை மற்றும் தண்டனைகள் பற்றிய வரலற்றுப் பார்வை, 2018.

29 பண்டாரி –எதிர்- இந்திய அரசு [2025] EWHC 449 (Admin) தீர்ப்பில் முனைவர் ஆலன் மிட்செல்லின் வல்லுநர் கருத்து, பத்தி 117,

30 தேசியக் குற்றப் பதிவுருக்கள் கழகம் (NCRB), 2017, 2018, 2019, 2020, 2021, 2022 ஆண்டுகளுக்கு மனிதவுரிமை மீறலுக்காகப் பதிவு செய்த வழக்குகள்.

31 தேசிய மனிதவுரிமை ஆணையம் (NHRC), ஆண்டறிக்கை 2021-22; ஆண்டறிக்கை 2019-20; ஆண்டறிக்கை 2018-19; ஆண்டறிக்கை 2017-18; ஆண்டறிக்கை 2016-17; ஆண்டறிக்கை 2015-16; ஆண்டறிக்கை 2014-15; ஆண்டறிக்கை 2013-14; ஆண்டறிக்கை 2012-13.

32 எடுத்துக்காட்டாக, தேசிய மனிதவுரிமை ஆணையப் புள்ளிவிவரங்களில் சித்திரவதை நிகழ்வுகளுக்கான வகையினம் இல்லாமலிருக்கக் காணலாம். தேசிய மனிதவுரிமை ஆணையம் மனிதவுரிமை வழக்குப் புள்ளிவிவரங்கள் – 2024 திசம்பர், 2024; தேசிய மனிதவுரிமை ஆணையம், காவல் சாவுகள்/வன்புணர்வுகள் பற்றிய வழிகாட்டுநெறிகள்., திசம்பர், 1993

பெரும்பாலான வழக்குகளில் பாதிப்புற்றவரின் வழக்கறிஞர், குடியியல் சமூக அமைப்புகள், அல்லது மனிதவுரிமைக் காப்பாளர்களே சித்திரவதை நிகழ்ச்சிகளை தேசிய மனிதவுரிமை ஆணையத்துக்கு அறிக்கையிடுகின்றனர். காவலில் இருக்கும் தனியாட்கள் பலருக்கும் சட்டப் பெயராண்மையையோ, குடியியல் சமூக வழக்காண்மையையோ அணுக வாய்ப்பில்லை.

சித்திரவதை நடைமுறை மிகப் பரவலாகவும் சர்வசாதாரணமாகவும் இருப்பதால் பொதுவாக இந்த நடைமுறையைக் காவல்துறை ஏற்றுக் கொள்வதாகத் தெரிகிறது.[33] இந்தியாவில் 2019இல் சற்றொப்ப 12,000 காவல்துறையினரிடம் நாடுதழுவிய கணக்கெடுப்பு நடத்திய போது, காவல்துறை அதிகாரிகளில் கிட்டத்தட்ட 37% பேர் சிறு குற்றங்கள் (சாட்டப்படும் போது) தங்கள் வேலை அவர்களைத் தண்டிப்பது எனக் கருதினர். 75% பேர் ஐயத்துக்குரிய குற்றவாளிகளிடம் வன்முறைப் பயன்பாடு நியாயமே எனக் கருதினர்; சற்றொப்ப 80% பேர் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக ஐயத்துக்குரிய குற்றவாளிகளை அடிப்பது ஏற்புடையதே என்று எண்ணினர்.[34]

இந்தியாவில் காவல் சித்திரவதை – மற்றச் சூழல்களில் போலவே – ஒருவர் கைது செய்யப்பட்ட பின் முதல் 24 மணி நேரத்துக்குள், அவர் ஒரு நடுவரின்முன் நிறுத்தப்படுமுன், நிகழ்வதே மிகவும் வாடிக்கையாக உள்ளது.[35] காவல் வைக்கப்படுகிறவர் 15 நாள் அல்லது அதற்கு மேல் காவல்துறைக் காவலில் வைக்கப்படுவதற்கு நடுவர் ஆணையிடும் போது காவலில் சித்திரவதை நிகழும் ஆபத்து கூடுதலாகிறது.[36] புலனாய்வர்கள் வினாக்கள் கேட்டு விசாரிக்கும் போது குற்றச்சாட்டுகளுக்கு ஒப்புதல் வாக்குமூலங்கள் கறப்பதற்கோ தனியாட்களைத் தண்டிப்பதற்கோ சித்திரவதை பயன்படுத்தப்படுகிறது.[37] 2025ஆம் ஆண்டு இந்தியச் செய்தித் தளம் நியூஸ் மினிட் கொடுத்த செய்தியறிக்கை, சிறைக்காவலில் தனியாட்களுக்குக் காவல்துறையினர் எலும்பு முறிவு ஏற்படச் செய்யும் (கைகால் உடைப்பு) முறை கூடுதலாகியிருக்கும் போக்கை வெளிப்படுத்தியது.[38] தமிழ்நாடு மாநிலத்தில் 2024 ஜனவரி 1க்கும் அக்டோபர் 7க்கும் இடையில் காவலாணைப்படி சென்னை நடுவண் சிறைகளுக்கு அனுப்பப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்ட குறைந்தது 304 பேர் காவல்துறையால் எலும்புமுறிவுக் காயத்துக்கு ஆளானார்கள் என்பதை இந்த அறிக்கை வெளிப்படுத்தியது.[39]

2024 ஜூலையில் சுனிதா என்ற தலித் பெண்மணி திருட்டுக் குற்றச்சாட்டு தொடர்பாக தெலங்கானா மாநிலம் ஐதராபாதில் சத்நகர் காவல் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காகச் சித்திரவதை செய்யப்பட்டார் என்று ஊடகச் செய்திகள் வாயிலாகத் தெரிகிறது. சுனிதா கூறினார், “தோல் வார் கொண்டு கடுமையாகக் காலில் அடித்தார்கள், காவலர்கள் என் கையை ஏறி மிதித்தார்கள், விலா எலும்பில் உதைத்தார்கள். என் மேல் உருகிய மெழுகைக் கொட்ட முயன்றார்கள்.” அவர் உணர்விழக்கும் நிலையில்தான் அவரை விடுவித்தார்கள்.[40] 2024இல் வேறொரு வழக்கில் கொலைக் குற்ற ஐயப்பாட்டுக்குரிய இரு காவல் கைதிகளைக் காவல்துறை அதிகாரிகள் இரும்புக் குழாய்களால் (கூட்டத்தைக் கட்டுப்படுத்த மூங்கில் தடிகளைப் பயன்படுத்துவது வழக்கம்) அடித்ததாகத் தெரிகிறது. அந்த இருவரும் ”அடியுதை தாங்காமல்

33 நித்யா இராமகிருஷ்ணன், காவலில்: தெற்காசியாவில் சட்டம், தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு, சிறையாளர் உரிமைமீறல், 2013 மே, பக்கம் 3-4.

34 காமன் காஸ் மற்றும் லோக்நிதி – வளர்பருவச் சமூகங்களைப் பயில்வதற்கான மையம், இந்தியாவில் காவல்பணியின் தகுநிலை அறிக்கை; காவல்துறையின் போதுநிறைவும் வேலை நிலைமைகளும், 2019, பக்கம்131.

35 ராஜா பக்கா, காவல்துறைக் காவலில் 60%க்கும் மேற்பட்ட சாவுகள் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் நிகழ்கின்றன, 26 அக்டோபர் 2020. மேலும் காண்க, சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம், இந்தியா: சித்திரவதை குறித்த ஆண்டறிக்கை 2019, 26 ஜூன் 2020, பக். 11.

36 தி இந்தியன் எக்ஸ்பிரஸ், அதிகபட்சக் காவல் தண்டனை இன்னும் 15 நாட்களாகவே உள்ளது, இது இரண்டு மாதங்களுக்கு நீட்டிக்கப்படலாம்: அமித் ஷா, 2 ஜூலை 2024.

37 சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம், இந்தியா: சித்திரவதை குறித்த ஆண்டறிக்கை 2020, 18 மார்ச் 2021, பக்கங்கள் 17, 66.

38 தி நியூஸ் மினிட், தமிழகக் காவல்துறையின் ‘வழுக்கும்’ கழிப்பறைகள்: காவலில் உள்ள 300-க்கும் மேற்பட்ட சந்தேக நபர்களுக்கு கை, கால்கள் முறிந்ததாக தரவுகள் காட்டுகின்றன, 20 மே 2025.

39 தி நியூஸ் மினிட், தமிழகக் காவல்துறையின் ‘வழுக்கும்’ கழிப்பறைகள்: காவலில் உள்ள 300-க்கும் மேற்பட்ட சந்தேக நபர்களுக்கு கை, கால்கள் முறிந்ததாக தரவுகள் காட்டுகின்றன, 20 மே 2025.

40 நியூஸ் நைன், ஐதராபாத்: காவலில் தலித் பெண்ணை சித்திரவதை செய்ததற்காக ஷாத்நகர் காவல் ஆய்வாளர், ஐந்து காவலர்கள் இடைநீக்கம், 5 ஆகஸ்டு 2024; தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, காவல் நிலையத்தில் திருட்டு வழக்கில் தலித் பெண் நிர்வாணமாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார், 5 ஆகஸ்டு 2024.

கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக”[41] ஊடகச் செய்திகள் கூறின. பாதிப்புக்கு ஆளான இருவரும் மருத்துவமனையில் சேர்க்கபட்டனர், அவர்களுக்குத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்க வேண்டியதாயிற்று, இருவரில் ஒருவருக்கு ஏற்பட்டிருந்த உடற்காயங்கள்” மிகக் கடுமையான காவல் சித்திரவதையைக் காட்டின” என்று தமிழ்நாட்டில் ஒரு மனிதவுரிமைக் குழு கூறிற்று.[42]

## வழக்கு ஆய்வு: ஒப்புதல் வாக்குமூலத்துக்கான காவல் சித்திரவதை சாவில் போய் முடிதல்

### தமிர் ஜெஃப்ரி

2023 ஜூலை 31ஆம் நாள் (கேரளம்) மலப்புரம் வாசியான 30 வயது தமிர் ஜெஃப்ரி போதை மருந்து வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கேரள காவல்துறையின் மாவட்ட போதைப் பொருள் ஒழிப்புத் தனிக் காவல் படையால் தளைப்படுத்தப்பட்டார்.[43] அவர் கைது செய்யப்பட்டு வேறு சில இளம் வயதினரோடு கூட தானூர் காவல் நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்டார். போதைப் பொருள் வைத்திருந்ததாக ஒப்புதல் வாக்குமூலங்கள் கறப்பதற்காக தமிரையும் குறைந்தது மற்ற நால்வரையும் காவல்துறையினர் சித்திரவதை செய்தனராம்.[44] கைது செய்யப்பட்ட மறுநாள் தமிர் காவலில் மயங்கி விழுந்து இறந்து போனார். போதை மருந்து மிகையாக உட்கொண்டதால் அவர் இறந்து போனதாகக் காவல்துறை சொல்லிக் கொண்டது. ஆனால் இது அவரது சாவுக்கான உண்மைக் காரணம் இல்லை என்று அவர் குடும்பத்தினர் ஐயம் தெரிவித்தனர்.

தடயவியல் மருத்துவர் ஒருவர் நடத்திய சடலக் கூறாய்வில் தமிரின் உடம்பில் 21 காயங்கள் இருப்பது தெரிந்தது. இதிலிருந்து அவர் காவல் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டிருக்கக் கூடும் எனத் தோன்றியது.[45] சடலக் கூறாய்வு அறிக்கையில் கண்டுள்ளபடி, காயங்களுக்குக் காரணம் “கைவிலங்குடன் வன் இடிப்பும்” “மொன்னையான, உருளை போன்ற ஆய்தத்தால் வலிந்து அடிக்கப்பட்டதும்” ஆகும்.[46] பற்பல வன்முறைக் காயங்களும், ஒரு போதைப் பொருள் உட்கொண்டதும், அடிப்படையான தமனிக் குருதிக் குழாய் நோயும் சேர்ந்து ஏற்படுத்திய விளைவுகளால் தமிர் உயிரிழந்ததாக அறிக்கை கூறியது. தமிரின் காவல் சித்திரவதையையும் சாவையும் எதிர்த்துப் பொதுமக்கள் குரல் கொடுத்தனர்.[47] வழக்கு நடுவண் புலனாய்வுக் கழகத்திடம் கையளிக்கப்பட்டது. அது 2024 மே மாதம் நான்கு காவல்துறை அதிகாரிகளைக் கைது செய்தது. தமிர் கேரளக் காவல்துறையினரின் காவல் சித்திரவதையால் உயிரிழந்ததை தில்லியில் உள்ள மருத்துவ அறிவியல் கழகம் 2024 ஜூலையில் உறுதி செய்தது.[48]

41 தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், காஞ்சிபுரத்தில் முன்னாள் காவலர் கொலை வழக்கை சிபி-சிஐடி விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது, 8 நவம்பர் 2024

42 தி நியூஸ் மினிட், காஞ்சிபுரத்தில் இரண்டு கொலைச் சந்தேக நபர்களை சித்திரவதை செய்ததாக போலீசார் மீது குற்றச்சாட்டு, மாநில மனிதவுரிமைகள் ஆணையம் விசாரணை தொடங்கியது, 30 செப்டெம்பர் 2024.

43 தி நியூஸ் மினிட், கேரளக் காவல்துறையினரின் காவல் சித்திரவதையால் தமீர் ஜிஃப்ரி உயிரிழந்ததை எய்ம்ஸ் உறுதி செய்தது, 9 ஜூலை 2024; மெட்ரோ வார்த்தா, போதைப்பொருள் வழக்குக் குற்றவாளியின் காவல் சாவு: நான்கு கேரள காவல்துறையினரை சிபிஐ கைது செய்தது, 4 மே 2024.

44 மெட்ரோ வர்தா, தனுர் கஸ்டடி சாவு வழக்கு: நான்கு கேரள காவல்துறையினரை சிபிஐ கைது செய்தது, 4 மே 2024.

45 நியூஸ் மினிட், கேரளக் காவல்துறையினரின் காவல் சித்திரவதையால் தமீர் ஜிஃப்ரி உயிரிழந்ததை எய்ம்ஸ் உறுதி செய்தது, 9 ஜூலை 2024.

46 ஒன்மனோரமா, தனூர் காவல் சாவு: கேரள காவல்துறை இந்தியாவிலேயே சிறந்தது என்கிறார் பினராயி, சதீசன் பதிலடி, 10 ஆகஸ்டு 2023.

47 நியூஸ் மினிட், கேரளக் காவல்துறையினரின் காவல் சித்திரவதையால் தமீர் ஜிஃப்ரி உயிரிழந்ததை எய்ம்ஸ் உறுதி செய்தது, 9 ஜூலை 2024.

48 நியூஸ் மினிட், கேரளக் காவல்துறையினரின் காவல் சித்திரவதையால் தமீர் ஜிஃப்ரி உயிரிழந்ததை எய்ம்ஸ் உறுதி செய்தது, 9 ஜூலை 2024.

ஒப்புதல் வாக்குமூலங்கள் கறப்பது தவிர, தனியாட்களை அச்சுறுத்தவோ தண்டிக்கவோ கூட காவல்துறைக் காவலில் சித்திரவதை பயன்படுத்தப்படுகிறது.[49] எடுத்துக்காட்டாக 2024 செப்டெம்பரில் பெண்கள் இருவர் மேற்கு வங்கம் கொல்கத்தாவில் ஒரு மருத்துவர் வன்புணர்வு செய்து கொலை செய்யப்பட்டதற்கு எதிரான போராட்டங்களில் தாங்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து காவல்துறைக் காவலில் சித்திரவதை செய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டினர். சித்திரவதைக் குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்ய 2024 நவம்பரில் உச்ச நீதிமன்றம் ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவிற்கு ஆணையிட்டது.[50] சில வழக்குகளில் காவல்துறையினர் ஒரு நீதித்துறைசாராத் தண்டனை வடிவமாகக் காவல் சித்திரவதையைப் பயன்படுத்தக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, மே 2024இல், குற்றத்தைக் 'கட்டுப்படுத்தும்' முயற்சியாக கொலை வழக்கில் ஐயத்துக்காளான நால்வரின் கைகளைக் காவல் அதிகாரிகள் உடைத்து விட்டனர் என்று முன்னணி மனிதவுரிமை அரசுசாரா அமைப்பாகிய மக்கள் கண்காணிப்பகம் அறிக்கையிட்டது. ஆட்கள் காவல்துறையால் துரத்திச் செல்லபப்ட்ட போது சாலை நடுத் தடுப்பில் மோதிக் காயங்கள் அடைந்தனர் என்று காவல்துறை கூறிக்கொண்டது. அரசுசாரா அமைப்பினர் இந்த நடைமுறையைக் கண்டித்ததுடன், மாநில மனிதவுரிமை ஆணையம் (SHRC) தலையிட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இவ்வாறான அதிகார முறைகேடு "ஒரு குற்றத் தடுப்புக் காரணியாக வாடிக்கையாக்கப்பட்டுள்ளது" என்று வாதுரைத்தனர்.[51]

2019ஆம் ஆண்டு பொதுநலவாய (காமன்வெல்த்) மனிதவுரிமை முன்முயற்சி (CHRI) அமைப்பினர் அரியானாவில் 475 கைதிகள் அளித்த நேர்காணல்களின் அடிப்படையில் வெளியிட்ட அறிக்கை, சற்றொப்ப சரிபாதியினர் (227 பேர்) காவல்துறைக் காவலின் போது இழிவான, மனிதத் தன்மையற்ற நடத்துமுறை அல்லது சித்திரவதை அனுபவித்ததாகத் தெரிவித்தனர் எனக் கண்டது. பாலியல் சித்திரவதை, மின் அதிர்ச்சி, வல்லுறவு மிரட்டல்கள், தடியாலடித்தல் ஆகியன இதிலடங்கும். தலைகீழாகக் கட்டித் தொங்க விடுதல், நீரில் முக்குதல் உள்ளங்காலில் அடித்தல் போன்ற – பிற்பாடு சித்திரவதைக் குற்றச்சாட்டுகளை மெய்ப்பிப்பதற்குக் கண்ணுக்குத் தெரியும் படியான குறிகளை விட்டுவைக்காத – முறைகளும் இதிலடங்கும்.[52]

மேலே விளக்கியது போல், இந்தியாவில் காவல்துறை மற்றும் நீதித்துறைக் காவலில் அனைத்து சித்திரவதை வழக்குகள் குறித்தும் அதிகாரமுறைப் பதிவுருக்களோ பிறவகைப் புள்ளிவிவரங்களோ இல்லை. இதனால் இச்சிக்கலின் முழு வீச்சையும் தீர்மானிப்பது கடினமாகிறது. எவ்வாறாயினும், பல நேர்வுகளில் காவல்துறைக் காவலில் சித்திரவதை சாவில் முடிகிறது; இந்தச் சாவுகள் பெருந்தொகையான வழக்குகளில் பதிவு செய்யப்படுகின்றன. காவல் சாவுகளின் அச்சமூட்டும் கணக்கு காவல் சித்திரவதையின் கடுமையையும் பரவலான தன்மையையும் காட்டுகிறது.[53] 2014 ஏப்ரலுக்கும் 2024 திசம்பருக்கும் இடையில், காவல்துறைக் காவலில் 1,538 சாவுகள் நிகழ்ந்ததாக தேசிய மனிதவுரிமை ஆணையத்துக்கு அறிக்கையிடப்பட்டது. 2021-2022இல் 175 வழக்குகளும், 2022-2023இல் 166 வழக்குகளும் 2023-2024இல் 158 வழக்குகளும் அறிக்கையிடப்பட்டன. 2014-2015

49 பன்னாட்டுச் சட்டவாளர் ஆணையம், போராட்டத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்கள்: கோவிட்-19 காலகட்டத்தில் மனிதவுரிமைப் பாதுகாவலர்களுக்கு எதிரான மீறல்கள், நவம்பர் 2022.

50 தி எகனாமிக் டைம்ஸ், ஆர்.ஜி. கர் போராட்டங்கள்: காவலில் சித்திரவதை வழக்கு குறித்து சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு, உயர் நீதிமன்றத்தில் வாராந்தர அறிக்கைகள், 25 நவம்பர் 2024; என்.டி.டி.வி, ஆர். ஜி. கர் போராட்டக்காரர்கள் மீதான சித்திரவதைக் குற்றச்சாட்டு குறித்து சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு, 25 நவம்பர் 2024.

51 தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், தமிழ்நாடு: குற்றங்களைக் "கட்டுப்படுத்த" கொலைக் குற்றவாளியின் கைகளை போலீசார் முறித்ததாகக் குற்றச்சாட்டு, 17 மே 2024. மாநில மனிதவுரிமைகள் ஆணையங்கள் (SHRCs) என்பவை, தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தையும் (NHRC) நிர்வகிக்கும் 1993 ஆம் ஆண்டு மனிதவுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சுதந்திரமான அமைப்புகளாகும். மாநில மனிதவுரிமைகள் ஆணையங்கள், தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தைப் போன்றே செயல்படுகின்றன, ஆனால் அவை தேசிய அளவில் செயல்படுவதற்குப் பதிலாக மாநில அளவில் இயங்குகின்றன.

52 காமன்வெல்த் மனிதவுரிமைகள் முன்முயற்சி (CHRI), அரியானாவின் சிறைகளுக்குள், 2019, பக். 94-105.

53 ஐநா மனிதவுரிமைகளுக்கான உயராணையர் அலுவலகம் (OHCHR), சட்டப் புறம்பான சாவு தொடர்பான விசாரணைக்கான மினசோட்டா வகைமுறை (மினசோட்டா வகைமுறை), (2016) HR/PUB/17/4, பத்தி 17.

இல் 133 சாவுகள் அறிக்கையிடப்பட்ட பின் இதுவே மிகப் பெரிய எண்ணிக்கையாகும்.[54] எத்தனைச் சாவுகளுக்கு நேரடிக் காவல்துறை வன்முறையைக் காரணமாகக் காட்ட முடியும் என்பதை அதிகாரமுறைப் புள்ளிவிவரங்கள் குறிப்பாகச் சொல்லவில்லை என்னும் போதே. தேசிய சித்திரவதை எதிர்ப்பு இயக்கத்தின் (NCAT) 2019 அறிக்கை ஒன்று அதனால் ஆவணமாக்கப்பட்ட காவல் சாவுகளில் சற்றொப்ப 76% ஆனவை சித்திரவதையால் ஏற்பட்டவை எனக் கண்டது.[55]

மாறாக, தேசியக்குற்றப் பதிவுருக் கழகம் (NCRB) 2014க்கும் 2022க்கும் இடையில் 328 காவல்துறைக் காவல் சாவுகளை மட்டுமே பதிவு செய்தது. காவல்துறைக் காவல் சாவுகளுக்கான நிகழ்வாய்ப்புள்ள காரணங்கள் என்று புள்ளிவிவரங்களில் பட்டியலிடப்பட்டுள்ள காரணங்களில் “காவல்துறைக் காவலில் காவல்துறையினரின் உடல்சார் தாக்குதலால் ஏற்பட்ட காய்ங்களும்” அடங்கும் என்னும் போதே, பெரும்பாலான வழக்குகளுக்குப் பதிவு செய்யப்பட்ட காரணங்களில் “காவல்துறைக் காவலுக்கு முன் ஏற்பட்ட காயங்கள்”, “வெறிக்கும்பல் தாக்குதல் / கலகங்கள்”, “மற்றக் குற்றவாளிகளின் தாக்குதல்”, “தற்கொலை”, ”காவல்துறைக் காவலிலிருந்து தப்பிச் செல்லுதல்”, ”உடல்நலிவு”, ”இயற்கைச் சாவுகள்” ஆகியனவும் அடங்கும்;[56] இந்த வழக்குகள் எதிலும் எந்த அதிகாரிக்கும் குற்றத்தீர்ப்பு தரப்படவில்லை என்று NCRB தரவுகள் காட்டும்.[57] பாதிப்புற்றவர்களும் அவர்தம்குடும்பத்தினரும் காவல்துறையின் பதிலடிக்கு அச்சப்பட்டு உண்மையைத் தெரிவிக்காமல் இருந்து விடுகிறார்கள் என்பதால் மேற்கண்ட புள்ளிவிவரங்கள் இந்த வழக்குகள் காவல்துறைக் காவல் சாவுகளின் முழு அளவைக் குறைத்து மதிப்பிடுவதாகவே இருக்கக் கூடும். (பார்க்கவும்: ‘முறைப்பாடுகளுக்கு எதிரான பழிவாங்கல்கள்’ – கீழே வரும் பிரிவு).[58] காவல் சாவுகள் பற்றிய அதிகாரமுறைப் புள்ளிவிவரங்கள் ஒரு “மோசமான குறைமதிப்பீட்டை”க் குறிப்பதாக இருக்கக் கூடும் என்று சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம் (NCAT) விளக்கியுள்ளது.[59]

54 இந்தப் புள்ளிவிவரங்கள், பின்வரும் ஆதாரங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளபடி, ஒவ்வொரு ஏப்ரல்-மார்ச் மாத அறிக்கையிடல் ஆண்டிலும், “காவல் சாவு (காவல்துறை) (குறியீடு 807 உட்பட)” என்ற வகைப்பாட்டின் கீழ் தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தால் (NHRC) பதிவுசெய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டவை: ஆண்டறிக்கை 2021-22; ஆண்டறிக்கை 2019-20; ஆண்டறிக்கை 2018-19; ஆண்டறிக்கை 2017-18; ஆண்டறிக்கை 2016-17; ஆண்டறிக்கை 2015-16; ஆண்டறிக்கை 2014-15; ஆண்டறிக்கை 2013-14; ஏப்ரல் 2022 முதல் திசம்பர் 2024 வரையிலான மாதாந்தரப் புள்ளிவிவரங்கள்.

55 சிஎன்என், இந்தியக் காவல்துறை நீதியைப் பெறுவதற்கான குறுக்கு வழியாக வன்முறையைப் பயன்படுத்துகிறது. அதன் வடுக்களை ஏழைகளே சுமக்கின்றனர், 3 திசம்பர் 2020. மேலும் காண்க: சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம், இந்தியா: சித்திரவதை குறித்த ஆண்டறிக்கை 2019, 26 ஜூன் 2020, பக். 19.

56 NCRB, இந்த எண்ணிக்கை 2014, 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கான ‘இந்தியாவில் குற்றம்’ ஆண்டு அறிக்கைகளில் உள்ள ‘காவல் சாவுங்களுக்கான காரணங்கள்’ என்ற அட்டவணையிலிருந்து பெறப்பட்டது (மே 2025 நிலவரப்படி, 2023 அல்லது 2024-ஆம் ஆண்டுகளுக்கான ‘இந்தியாவில் குற்றம்’ ஆண்டு அறிக்கைகள் பொதுவெளியில் கிடைக்கவில்லை என்பதைக் கவனிக்கவும்).

57 NCRB, 2017, 2018, 2019, 2020, 2021, மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் மனிதவுரிமை மீறல்களுக்காக மாநில காவல்துறைப் பணியாளர்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (குறிப்பு: 2014, 2015, மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் மனிதவுரிமை மீறல்களுக்காக காவல்துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் குறித்த பொதுத் தரவுகள் NCRBஇடம் இல்லை).

58 லைவ்லா: காவலில் சித்திரவதை மற்றும் சாவுகள்: இந்திய காவல்துறையின் இருண்ட பக்கம், 17 ஜூலை 2020. காமன் காஸ் மற்றும் வளரும் சமூகங்களுக்கான ஆய்வு மையம், இந்தியாவில் காவல்துறையின் நிலை குறித்த அறிக்கை 2019, 2019, பக். 14-15. காவல்துறை வன்முறை குறித்து முறைப்பாடு அளித்ததற்காகப் பாதிக்கப்பட்டவர்களை காவல்துறை அதிகாரிகள் தண்டிப்பது மற்றும்/அல்லது முறைப்பாடுகளைத் திரும்பப் பெறுமாறு அவர்களை அச்சுறுத்துவது போன்ற பொதுவான போக்குகளுக்கான எடுத்துக்காட்டுகளுக்கு, பங்களார் மனபாதிகார் சுரட்சா மஞ்சா (MASUM), மாதாந்தர அறிக்கை, 2024 செப்டெம்பர், பக். 3; MASUM, மாதாந்தர அறிக்கை 2024 ஜூன், பக். 3–4; மக்கள் கண்காணிப்பகம், தூத்துக்குடியில் ஆட்டோ ஓட்டுநர் ஹபீப் மீது கொடூரமான சித்திரவதை, 2024 பிப்ரவரி 24. சித்திரவதைக்கு எதிரான உலக அமைப்பு (OMCT), இந்தியா: பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவரின் குடும்பம் தண்டிக்கப்பட்டு மௌனமாக்கப்படுகிறது, 15 நவம்பர் 2023.

59 சிஎன்என், இந்தியக் காவல்துறை நீதியைப் பெறுவதற்கான குறுக்கு வழியாக வன்முறையைப் பயன்படுத்துகிறது. அதன் வடுக்களை ஏழைகளே சுமக்கிறார்கள், 3 திசம்பர் 2020.

# வழக்கு ஆய்வுகள்: சாவில் முடிந்த காவல் சித்திரவதை

## விக்னேஷ்

2022 ஏப்ரல் 18ஆம் நாள், அகவை இருபது கடந்த விக்னேஷ் என்ற இளைஞர் ஒரு நாள் பின்னிரவு ஊர்திச் சோதனையின் போது சென்னைக் காவல்துறையால் கைது செய்யப்பட்டுக் காவல் வைக்கப்பட்டார். சுரேஷ் என்னும் இன்னொருவரோடு கூட அவர் காவலில் அடைக்கப்பட்டு கடுமையான உடல்சார் முறைகேட்டுக்கு ஆளாக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவரைக் காவல்துறையினர் விசாரித்த போது தடிகளாலும் மற்றவற்றாலும் அடித்தார்களாம். கொடுங்காயங்கள் அடைந்த போதிலும் அவசர மருத்துவக் கவனிப்பு மறுக்கப்பட்டு அவர் 2022 ஏப்ரல் 19ஆம் நாள் காவலில் சாவடைந்தார். பிற்பாடு காவல்துறையினர் அவருக்கு வந்த வலிப்புதான் சாவுக்குக் காரணம் என்றனர். ஆனால், அவரது உடலில் தெரிந்த காயங்கள் காவல் சித்திரவதையே சாவுக்குக் காரணம் என்பதைக் காட்டின. அவரது சாவைத் தொடர்ந்து அவசரம் அவசரமாக அடக்கம் செய்தும், குடும்பத்தினருக்கு அழுத்தம் கொடுத்து மௌனம் காக்கச் செய்தும் நிகழ்ச்சியை மூடி மறைக்கக் காவல்துறை முயன்றது.[60]

## மொகமது அடில்

2024 மே 24ஆம் நாள் கர்நாடகத்தில் தாவணகேரே மாவட்டம் சன்னகிரியைச் சேர்ந்த 33 வயதுத் தச்சுத் தொழிலாளியான மொகமது அடில் ஒரு சூதாட்ட வழக்குத் தொடர்பில் விசாரணைக்காக உள்ளூர்க் காவல் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அவர் இரண்டு நிமிட விசாரணையில் மயங்கி விழுந்ததாகக் காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார். அதிகாரிகள் அவருக்கு வலிப்பு வந்திருக்கலாம் என்று ஐயுற்று முதல் உதவி செய்து உள்ளூர் மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அங்கு அவர் இறந்து விட்டதாக அறிவித்தனர்.[61] ஆனால் அடிலின் குடும்பத்தினர் காவல்துறையினரின் காவல் சித்திரவதையால்தான் அவர் உயிரிழந்தார் என்றனர்.[62] கர்நாடகா குடியியல் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம் (PUCL) என்ற குடியியல் உரிமைக் குழு வெளியிட்ட உண்மையறியும் அறிக்கை அடிலின் மனைவி அவர் கைது செய்யப்படுமுன் அவருக்குச் சொல்லும்படியான உடல்நலச் சிக்கல்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்ததை எடுத்துக்காட்டியது. "சமுதாய உறுப்பினர்களும் குடும்பத்தினருமான பலர் அடிலின் உடலில் இருந்த குறிகளையும் காயங்களையும் கண்டார்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.[63] அடில் இறந்த செய்தி பரவிக் காவல் நிலையத்துக்கு வெளியே போராட்டங்கள் வெடித்து, சற்றொப்ப 47 பேர் கைது செய்யப்பட்டனர்.[64] 2024 மே 25ஆம் நாள் பெங்களூரு குற்றப் புலனாய்வுத் துறையினர் அடிலின் காவல் சாவு பற்றிய புலனாய்வைக் கையிலெடுத்துக் கொண்டனர்.[65] 2025 ஜனவரி 20 நிலவரப்படி, புலனாய்வு இன்னும் நிறைவு பெறவில்லை. கர்நாடக மாநில மனிதவுரிமை ஆணையத்திடம் அடில் குடும்பத்தினர் முறைப்பாடு தாக்கல் செய்ததைத் தொடர்ந்து அரசிடமிருந்து அடிலின் மனைவியானஹீனா பானுக்கு இழப்பீடு ஏதும் வரப்பெறவும் இல்லை.[66]

60 காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் – தமிழ்நாடு, திரு. விக்னேஷ் காவல் நிலையத்தில் சாவு, ஜி-5 காவல் நிலையம், சென்னை, 4 மே 2022; மக்கள் கண்காணிப்பகம் , சென்னையில் காவல் நிலையத்தில் சாவு – விக்னேஷ், 24 பிப்ரவரி 2024.

61 தி நியூஸ் மினிட், சன்னகிரி காவல் சாவு: வன்முறை வெடித்ததை அடுத்து சிஐடி விசாரணையைத் தொடங்கியது, 27 மே 2024; கர்நாடக மக்கள் சிவில் உரிமைக் கழகம், சன்னகிரியில் காவல் சாவு – ஒரு உண்மை கண்டறியும் அறிக்கை, 30 ஆகஸ்டு 2024, பக். 7-8.

62 தி நியூஸ் மினிட், சன்னகிரி காவல் சாவு: வன்முறை வெடித்ததை அடுத்து சிஐடி விசாரணையைத் தொடங்கியது, 27 மே 2024

63 PUCL, சன்னகிரியில் காவல் சாவு – ஒரு உண்மை கண்டறியும் அறிக்கை, 30 ஆகஸ்டு 2024, பக். 2.

64 PUCL, சன்னகிரியில் காவல் சாவு – ஒரு உண்மை கண்டறியும் அறிக்கை, 30 ஆகஸ்டு 2024, பக். 2.

65 ஆர்டிகிள் 14, கர்நாடக காவல்துறை காவலில் முசுலிம் தச்சரின் சாவுத்திற்கான பொறுப்புக்கூறல் இல்லாமை, பரவலான தேசிய தோல்விகளைச் சுட்டிக்காட்டுகிறது, 20 ஜனவரி 2025; தி நியூஸ் மினிட், 'சன்னகிரி காவல் சாவு: வன்முறை வெடித்ததை அடுத்து சிஐடி விசாரணையைத் தொடங்கியது', 27 மே 2024.

66 ஆர்டிகிள் 14, கர்நாடக காவல்துறை காவலில் முசுலிம் தச்சரின் சாவுத்திற்கான பொறுப்புக்கூறல் இல்லாமை, பரவலான தேசிய தோல்விகளைச் சுட்டிக்காட்டுகிறது, 20 ஜனவரி 2025;

கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் காவல்துறை பெருந்தொற்று தொடர்பான முடக்கக் கட்டுப்பாடுகளைச் செயலாக்கிய போது காவல் சாவு வழக்குகள் பலவும் அறிக்கையிடப்பட்டன.[67] 2020 மார்ச்சு மாதம் முடக்கத்தின் முதல் வாரத்தில் அடியுதைகளும் கொலைகளும் உட்பட காவல்துறையின் மிருகத்தனம் பற்றிப் பல செய்திகள் வந்தன.[68]

## வழக்கு ஆய்வுகள்: கொவிட்19- பெருந்தொற்றுக் காலத்தில் காவல் சித்திரவதை

### லால் சுவாமி, பி. ஜெயராஜ், ஜெ. பெனிக்ஸ், ஹபீப் மொகமது, முருகானந்தம்

2020 மார்ச்சு மாதம் முடக்கத்தின் முதல்நாளில் மேற்கு வங்காளத்தில் லால் சுவாமி என்பவர் பால் வாங்க வெளியே சென்ற போது காவல்துறையால் அடித்துக் கொல்லபப்ட்டார். காவல்துறை தடிகொண்டு தாக்கிய ஒரு கூட்டத்தில் அவரும் இருந்ததாக அவருடைய மனைவி கூறினார்.[69]

பரவலாகச் செய்தியில் அடிபட்ட இன்னொரு நிகழ்வில், தமிழ்நாட்டில் பி. ஜெயராஜும் அவர் மகன் ஜெ. பெனிக்ஸும் கொவிட்19- ஊரடங்குச் சட்டங்களை மீறியதாகச் சொல்லிக் கைது செய்யப்பட்டனர். காவல்துறைக் காவலில் இருந்த போது அவர்களைச் சித்திரவதை செய்து சாகடித்து விட்டதாகத் தெரிகிறது. காவல்துறை இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்தது. பாதிப்புற்றவர்கள் ”சாலையில் படுத்து உருண்டதால்தான் காயங்கள் ஏற்பட்டனவாம்.[70] வேறொரு நிகழ்வில், 33 வயதான ஹபீப் மொகமது என்பவரைக் காவல்துறையினர் கடுமையாக அடித்ததில் அவருடைய சிறுநீரகங்களில் ஒன்று சேதமுற்று, டயலிசிஸ் தேவைப்படுமளவுக்குப் போய் விட்டது என்று அரசுசாரா அமைப்புகள் தெரிவித்தன.[71]

பேய்க்குளம் கிராமத்தைச் சேர்ந்த முருகானந்தம் என்பவரும் 2020 ஜூனில் காவல்துறையால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.[72]

67 ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2020 இறுதி வரை, காவல் துறை காவலில் 114 சாவு நிகழ்வுகளையும், நீதிமன்றக் காவலில் 1586 சாவு நிகழ்வுகளையும் தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC) பதிவு செய்துள்ளது. NHRC, ஆண்டறிக்கை 2019-20, பக். 249. ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை இது முறையே 175 மற்றும் 2367 நிகழ்வுகளாகக் கணிசமாக அதிகரித்துள்ளது. NHRC, ஆண்டறிக்கை2021-22, பக். 22.

68 சித்திரவதை, காவல்துறை வன்முறை மற்றும் தேவையற்ற சாவுங்களுக்கு எதிரான தேசிய இயக்கம் இந்தியாவின் கோவிட்-19 ஊரடங்கைப் பாதிக்கிறது, 1 ஏப்ரல் 2020; மேலும் காண்க: டாய்ச்வெல், ஊரடங்கை அமல்படுத்த இந்தியக் காவல்துறை வன்முறையைப் பயன்படுத்துகிறது, 28 மார்ச் 2020.

69 இந்தியா டுடே, காவல்துறை தாக்குதலால் உயிரிழந்ததாக வங்காள இளைஞர் குடும்பத்தினர் கூறுகின்றனர், அவருக்கு இதய நோய் இருந்ததாகக் காவல்துறை கூறுகிறது, 26 மார்ச் 2020; சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம், காவல்துறையின் கொடூரமும் தேவையற்ற சாவுங்களும் இந்தியாவின் கோவிட்-19 ஊரடங்கைப் பாதிக்கின்றன, 1 ஏப்ரல் 2020.

70 டைம்ஸ் ஆஃப் இந்தியா, தூத்துக்குடி காவல் சாவுங்கள்: நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்தும், 30 ஜூன் 2020.

71 டைம்ஸ் ஆஃப் இந்தியா, தமிழகக் காவல் சாவுங்கள்: மேலும் பல காவல்துறை சித்திரவதை வழக்குகள் வெளியாகியுள்ளன, 27 ஜூன் 2020.

72 டைம்ஸ் ஆஃப் இந்தியா, தமிழகக் காவல் சாவுங்கள்: மேலும் பல காவல்துறை சித்திரவதை வழக்குகள் வெளியாகியுள்ளன, 27 ஜூன் 2020.

## நீதித்துறைக் காவலில் சித்திரவதை

> **காவல் வன்முறையும் சித்திரவதையும் இந்த நாட்டில் மிகப் பரவலாக நிகழ்கின்றன; இயல்பான வாழ்க்கை முறையில் இது பொதிந்து போய் விட்டதைக் காணலாம்.**
>
> – தேசிய மனிதவுரிமை ஆணையம், 2019.[73]

இந்தியாவில் சித்திரவதை என்பது காவல்துறைக் காவலோடு முடிந்து போய் விடவில்லை. தொடக்கத்தில் சிறிது காலம் காவல்துறைக் காவலடைப்பில் இருந்த பின் காவல் கைதிகள் நீதித்துறைக்காவலுக்கு மாற்றப்படும்போது அங்கேயும் சித்திரவதை வாடிக்கையாக்கப்பட்டுள்ளது.[74] காவல்கைதிகள் அனைவருமே சித்திரவதைக்கும் பிறவகை மோசமான நடத்துமுறைக்கும் ஆளாக்கப்படும் ஆபத்துகள் இருக்கும் போதே, குறிப்பாக விசாரணைக் கைதிகள் – உசாவலுக்காகக் காத்திருக்கும் போது அல்லது உசாவல் நடந்து கொண்டிருக்கும் போது[75] – நீடித்த சிறைக்காவலாலும் அமைப்புசார் அலட்சியத்தாலும் பாகுபாடானநடத்துமுறையாலும் இருக்கின்றார்கள்.[76] விசாரணைக் கைதிகள் பலரும் ஆண்டுக் கணக்கில் நீதிதுறைக் காவலில் இருந்து வருவதற்கு "நீதிமன்ற அமைப்பில் வழக்குகள் தேக்கம், சட்டப் பெயராண்மை போதாமை, பிணை விடுதலை பெறுவதைக் கடினமாக்கும் ஏழ்மை, உரிமைப் பறிப்பு" உள்ளிட்ட பல காரணிகள் உள்ளன.[77] இதனால் சிறையில் கூட்டம் பெருத்து, சிறைப்பட்டவர்கள் சித்திரவதைக்கும் மோசமான நடத்துமுறைக்கும் ஆளாகும் இடர் உயர்கிறது.[78] 2017இல் காமன்வெல்த் மனிதவுரிமை முன்முயற்சி வெளியிட்டுள்ள தரவுகளின் படி, இந்தியாவில் 2017இல் 149 சிறைகளில் மிகைநெரிசல் 100%க்கு மேலும், 14 சிறைகளில் 300%க்கு மேலும் இருந்தது.[79]

2025 நிலவரப்படி, இந்தியாவில் அனைத்துக் கைதிகளிலும் சற்றொப்ப 76% விசாரணைக் கைதிகள் ஆவர் என்று குடியியல் சமூக முன்முயற்சியாகிய இந்தியா நீதி எனும் அமைப்பின் அறிக்கை சொல்கிறது.[80] இந்தத் தொகையில் சமயச் சிறுபான்மையினரும், வரலாற்றுவழியில் விளிம்புநிலை குழுக்களைச் சேர்ந்தவர்களும் அளவுக்கதிகமாக உள்ளனர்.[81] தேசிய மனிதவுரிமை ஆணையம்

---

73 தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், ஆண்டறிக்கை 2018–19, பக். 34.

74 லா டைம்ஸ் ஜர்னல், நீதித்துறைக் காவலுக்கும் காவல்துறைக் காவலுக்கும் என்ன வேறுபாடு?, 6 திசம்பர் 2020.

75 விசாரணைக் கைதி என்பவர், விசாரணை அல்லது வழக்கு நிலுவையில் இருக்கும் போது நீதித்துறைக் காவலில் ஒப்படைக்கப்பட்ட ஒரு நபர் ஆவார். பார்க்கவும்: தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், கைதிகளின் பாகுபாடான நடத்துமுறையாலும் நலிவுற்று சித்திரவதைக்கு எளிதில் ஆளாகும் நிலையில் உரிமைகள், 2021. மேலும் பார்க்கவும்: உள்துறை அமைச்சகம், மாதிரிச் சிறைக் கையேடு 2016, 2016, பக்கம் 21. தனியாட்கள் காவல் நிலையத்தில் 15 நாட்கள் மட்டுமே தடுத்து வைக்கப்படலாம், அதன் பிறகு அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது விசாரணைக்காக ஒரு நீதிபதியால் 60 நாட்கள் அல்லது 90 நாட்கள் வரை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிடப்பட வேண்டும். பாரதிய நாகரிக் சுரட்சா சன்கிதா 2023, பிரிவு 187.

76 சினார் கார்க் மற்றும் சுக்மணி சிங், சிறைக்கம்பிகளுக்குப் பின்னாலிருந்து வரும் குரல்கள்: இந்திய நீதி அமைப்பில் விசாரணைக் கைதிகளின் கதை, 2023; தீபக், இந்தியாவில் காவலில் சித்திரவதை மற்றும் விசாரணைக் கைதிகளின் உரிமைகள்: ஒரு சீர்திருத்த அணுகுமுறை, 2023; ஏ.ஐ, விசாரணையின் கீழ் நீதி: இந்தியாவில் விசாரணைக்கு முந்தைய தடுப்புக்காவல் பற்றிய ஒரு ஆய்வு (விசாரணையின் கீழ் நீதி), 2017, பக். 6.

77 சினார் கார்க் மற்றும் சுக்மணி சிங், சிறைக்கம்பிகளுக்குப் பின்னாலிருந்து வரும் குரல்கள்: இந்திய நீதி அமைப்பில் விசாரணைக் கைதிகளின் கதையாடல், 29 மே 2023, பக். 3.

78 காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணியகம், சிறைகளில் நெரிசல், 23 ஜனவரி 2024. மேலும் பார்க்கவும்: பன்னாட்டுப் பொதுமன்னிப்புக் கழகம் (AI), விசாரணையின் கீழ் நீதி, 2017; சினார் கார்க் மற்றும் சுக்மணி சிங், சிறைக்குப் பின்னாலிருந்து வரும் குரல்கள்: இந்திய நீதியமைப்பில் விசாரணைக் கைதிகளின் கதை, 29 மே 2023; கவுண்டர்கரண்ட்ஸ், இந்தியச் சிறையமைப்பு: அதிகரித்து வரும் நெரிசலும் நீதிக்கான காத்திருப்பும், 2024 நவம்பர் 22; டிக்னிட்டி – சித்திரவதைக்கு எதிரான டேனிஷ் நிறுவனம், சிறை நெரிசல்: உண்மைத் தகவல் தாள், அக்டோபர் 2022; தீபக், இந்தியாவில் காவல் சித்திரவதை மற்றும் விசாரணைக் கைதிகளின் உரிமைகள்: ஒரு சீர்திருத்த அணுகுமுறை, 2023.

79 ராஜா பாக்கா, நெரிசலான செல்கள் ஜாம் இந்திய சிறைகள், [நாள் குறிக்கவில்லை].

80 இந்திய நீதி அறிக்கை, காவல்துறை, நீதித்துறை, சிறைகள் மற்றும் சட்ட உதவி ஆகியவற்றின் திறன் அடிப்படையில் மாநிலங்களின் தரவரிசை, ஏப்ரல் 2025, பக். 7; இந்திய உச்ச நீதிமன்றம், ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் மையம், இந்தியாவில் உள்ள சிறைகள் குறித்த அறிக்கை: சிறைக் கையேடுகள் மற்றும் சீர்திருத்தம் மற்றும் நெரிசலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை வரைபடமாக்குதல், அக்டோபர் 2024, பக். 132.

81 தேவாங்கனா கலிதா, மதம், சாதி மற்றும் விளிம்புநிலை: இந்திய குற்றவியல் நீதி மற்றும் சிறை அமைப்பு குறித்த சிந்தனைகள், 19 செப்டெம்பர் 2023; ஸ்ரீஹரி பாலியாத், இந்தியாவின் சிறைவாசிகள் அமைப்புரீதியான விளிம்புநிலையாக்கத்தைப் பிரதிபலிக்கின்றனர், 26 அக்டோபர் 2020.

(NHRC) வழங்கிய தரவுகளைப் பயன்படுத்தி தேசியச் சித்திரவதை எதிர்ப்பு இயக்கம் (NCAT) நடத்திய பகுத்தாய்வு இந்தியாவில் காவல் சாவுகளில் 70%க்கு மேற்பட்டவற்றில் பாதிப்புற்றவர்கள் குறைவருமானப் பிரிவுகள் மற்றும்/அல்லது விளிம்புநிலைப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்பதைக் காட்டும்.[82]

இந்தியச் சிறைகளில் சித்திரவதை என்பது "பரவலாகவும், நிறுவனமயப்பட்டும், நீதி பரிபாலனத்துக்கு மையமாகவும் இருந்து வருகிறது.[83] ஆவணமாக்கப்பட்டுள்ள ஏராளமான வழக்குகள் நீதித்துறைக் காவலில் காவல்கைதிகளுக்கு எதிராக அதிகாரியங்கள் நிகழ்த்தும் திட்டமுறைசார் சித்திரவதையை வெளிப்படுத்துகின்றன. மனிதத்தன்மையற்று அடித்து நொறுக்குவது பல நேரம் சாவில் முடிவதைக் காண முடிகிறது.[84] சித்திரவதையால் நிகழும் இவ்வாறான காவல் சாவுகளுக்கு மருத்துவச் சிக்கல்களோ தற்கொலையோ காரணமென்று காட்டி அவற்றை மூடிமறைக்கச் சிறை  அதிகாரியங்கள் முயல்வதாகத் தெரிகிறது. ஆனால், பல வழக்குகளில் பாதிப்புற்றவர்கள் காவல் வைக்கப்பட்ட நேரத்தில் நல்ல உடல்நிலையில் இருந்தார்கள் என்ற சான்றியம் இந்த விளக்கங்களைக் குலைத்து விடும்.[85] 2014 ஏப்ரலுக்கும் 2024 திசம்பருக்கும் இடையே, தேசிய மனிதவுரிமை ஆணையம் நீதித்துறைக் காவலில் நிகழ்ந்த 20,158 சாவுகளை ஆவணமாக்கியது. ஆண்டுவாரிப் புள்ளிவிவரங்கள், 2021 ஏப்ரலுக்கும் 2022 மார்ச்சுக்கும் இடையே 2,367ஆக உச்சம் தொட்டதையும், 2022 ஏப்ரலுக்கும் 2023 மார்ச்சுக்கும் இடையே 2,354 ஆகவும், 2023 ஏப்ரலுக்கும் 2024 மார்ச்சுக்கும் இடையே 2,183 ஆகவும் இருந்ததைக் காட்டுகின்றன.[86] உயர் வீதத்தில் காவல் சாவுகள் நிகழ்வதும், சிறை நலம் பேணுகையில் அமைப்புசார் தோல்விகளும்[87]  மோசமான நடத்துமுறையும், மருத்துவப் புறக்கணிப்பும், சித்திரவதையும் இந்தச் சாவுகளைத் தீர்மானிப்பதில் முகன்மைக் காரணிகள் என்பதைக் காட்டுகின்றன.[88]

மோசமான சிறைக் காவல் நிலைமைகளும், போதிய மருத்துவப் பேணுகை இல்லாமையும், மோசமான நடத்துமுறையும் நீதித் துறைக் காவலில் சாவுகளுக்கு இட்டுச்செல்லும் பல வழக்குகள் காவல் சித்திரவதை பொதுவாக நிகழும் சூழல்களைக் காட்டும்.

82 தேவாங்கனா கலிதா, மதம், சாதி மற்றும் விளிம்புநிலை: இந்திய குற்றவியல் நீதி மற்றும் சிறை அமைப்பு குறித்த சிந்தனைகள், 19 செப்டெம்பர் 2023; ஸ்ரீஹரி பாலியாத், இந்தியாவின் சிறைவாசிகள் அமைப்புரீதியான விளிம்புநிலையாக்கத்தைப் பிரதிபலிக்கின்றனர், 26  அக்டோபர் 2020.

83 ஆசிய மனிதவுரிமைகள் மையம், இந்தியா: திருப்பி அனுப்பப்படுதலின் நிலை, 2018, பக். 329.

84 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியாவில் சித்திரவதையிலிருந்து தப்பித்தல், 20 ஆகஸ்டு 2017

85 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியாவில் சித்திரவதையிலிருந்து தப்பித்தல், 20 ஆகஸ்டு 2017

86 இந்த எண்ணிக்கை, 2014 மற்றும் 2022-க்கு இடைப்பட்ட NHRC-யின் ஆண்டு அறிக்கைகளில் உள்ள 'காவல் சாவுங்கள் (நீதித்துறை)' என்ற பத்தியின் செல்களின் கூட்டுத்தொகையிலிருந்தும், அத்துடன் ஏப்ரல் 2022 மற்றும் திசம்பர் 2024-க்கு இடைப்பட்ட மாதாந்திர புள்ளிவிவரங்களிலிருந்தும் எடுக்கப்பட்டது. NHRC, ஆண்டறிக்கை 2021-22; ஆண்டறிக்கை 2019-20; ஆண்டு அறிக்கை 2018-19; ஆண்டறிக்கை 2017-2018; ஆண்டறிக்கை 2016-2017; ஆண்டறிக்கை 2015-2016; ஆண்டறிக்கை 2014-2015; ஆண்டறிக்கை 2013-2014 ஆகியவற்றைப் பார்க்கவும்.

87 அவினாஷ் கிருஷ்ண கோஸ்வாமி மற்றும் ரிது கௌதம், 'உத்தரப் பிரதேசம், அரியானா மற்றும் தில்லி மாநிலங்களிடையே கைதிகளின் மருத்துவ சுகாதார நிலை மற்றும் வசதிகளில் உள்ள வேறுபாடு', 2022. மைத்ரேயி மிஸ்ரா, ஒரு இந்தியச் சிறையில் கவனிப்புக்கும் கவனிப்பின் நெறிமுறைகளுக்கும் இடையிலான மெல்லிய நீலக் கோடு, 4 பிப்ரவரி 2025.

88 ஐநா மனிதவுரிமைகளுக்கான உயராணையர் அலுவலகம் (OHCHR), மினசோட்டா வகைமுறை, 2016.

# வழக்கு ஆய்வு: நீதித்துறைக் காவலில் சித்திரவதை

## ஷர்வான் சோனி

2024 பிப்ரவரி 19ஆம் நாள் இராஜஸ்தானத்தில் அஜ்மீர் நடுவண் சிறையில் சிறை ஊழியர்களுடன் நடந்த சண்டையில் 45 வயதான ஷர்வான் சோனி என்பவர் எட்டு முதல் பத்து சிறை அதிகாரிகளால் இரும்புத் தடிகள் மற்றும் கழிகள் கொண்டு அடிக்கப்பட்டாராம்; இதில் அவர் செத்துப் போனார். ஷர்வான் உடலில் அடித்த குறிகள் இருந்ததாக அவர் சகோதரர் சொல்கிறார். ஷர்வானின் மகன் முறையீடு செய்த பிறகும் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். ஷர்வான் எச்ஐவி பாசிட்டிவ் நிலையில் இருந்தபடியால் பாகுபாடாக நடத்தப்பட்டார் என்றும், பல நேரம் காவலில் தனக்கு எச்ஐவி எதிர் மருந்துகள் கிடைப்பதற்காகக் கையூட்டு தர வேண்டியிருந்தது என்றும் ஷர்வானின் சகோதரர் கூறினார். இறப்புக்கு முன் தொலைபேசி உரையாடல்களில் ஷர்வான் தன்னைச் "சிறை நிர்வாகம் தொடர்ச்சியாக மனத்தளவிலும் உடலளவிலும் துன்புறுத்துவதாக"க் கூறினார் என்று அவர் மகன் தெரிவித்தார்.[89]

காவல் சாவு வழக்கு என்பதால், சிறை அதிகாரியங்கள் 24 மணி நேரத்துக்குள் தேசிய மனிதவுரிமை ஆணையத்துக்கு அறிக்கையிடுவது சட்டக் கடப்பாடு ஆகும். இதன் தொடர் நடவடிக்கையாக தேசிய மனிதவுரிமை ஆணையம் புலனாய்வு அல்லது நீதிநடுவர் விசாரணைக்கு ஆணையிட வேண்டும். எப்படியானாலும் 2024 பிப்ரவரி 20ஆம் நாள் ஊடகங்களில் செய்தி வந்து விட்டதால் தேசிய மனிதவுரிமை ஆணையம் செயல்பட்டது; சோனி இறந்த நிலைமைகள் பற்றி ஆறு வாரத்துக்குள் அறிக்கையிடுமாறு சிறை இயக்குநரகத்தைக் கேட்டு அறிவிக்கை அனுப்பிற்று. இந்த நாள் வரை தேசிய மனிதவுரிமை ஆணையத்துக்கு எவ்விதத் தகவலும் தரப்படவில்லை. இப்பொருண்மை குறித்துக் கடைசியாக 2024 மே மாதம் விசாரணை நடைபெற்றது. காவல் சாவுகளைப் புலனாய்வு செய்வதற்கு இப்போதுள்ள பொறிமுறைகள் எவ்வளவு குறைவானவை, பாதிப்புற்றவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கும் நீதியும் பொறுப்புக்கூறலும் கிடைக்கச் செய்திடப் போதாக்குறையானவை என்பதை இந்த வழக்கு காட்டும்.[90]

2024 செப்டெம்பரில் தில்லி உயர் நீதிமன்றம் விசாரித்த வேறொரு வழக்கில் மணிஷ் குமார் ஜா என்பவர் திகார் சிறையில் சிறை அதிகாரிகள் தன்னிடம் பணம் கறப்பதற்காகச் சித்திரவதை செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டினார்.[91] இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து முதற்கட்ட விசாரணை நடத்துமாறும், "ஏதாவது கவனக்குறைவு காணப்பட்டால்" மணிஷ் குமார் ஜாவை வேறு சிறைக்கு மாற்றுமாறும் தில்லி உயர் நீதிமன்றம் சிறைக் கண்காணிப்பாளருக்கு ஆணையிட்டது.[92] ஆனால், சித்திரவதைக்குக் காரணமான அதிகாரிகளை அதற்குப் பொறுப்பாக்குவது பற்றி நீதிமன்றம் எதுவும் சொல்லவில்லை.[93]

89 தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், வழக்கு எண் 228/20/1/2024-JCD, நடவடிக்கை எண் 3, 14 மே 2024.
90 தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், வழக்கு எண் 228/20/1/2024-JCD, நடவடிக்கை எண் 3, 14 மே 2024; மேலும் காண்க டைம்ஸ் ஆஃப் இந்தியா, எச்.ஐ.வி தொற்று இருந்ததால் சகோதரனால் சிறை ஊழியர் சித்திரவதை செய்யப்பட்டார் என்கிறார் சகோதரர், 22 பிப்ரவரி 2024.
91 மணீஷ் குமார் ஜா எதிர் மாநிலம் (தில்லி தேசிய தலைநகரப் பகுதி) ரிட் மனு (குற்றவியல் நடைமுறை) 2921/2024.
92 மணீஷ் குமார் ஜா எதிர் மாநிலம் (தில்லி தேசிய தலைநகரப் பகுதி) ரிட் மனு (குற்றவியல் நடைமுறை) 2921/2024., பத்தி. 9.
93 மணீஷ் குமார் ஜா எதிர் மாநிலம் (தில்லி தேசிய தலைநகரப் பகுதி) ரிட் மனு (குற்றவியல் நடைமுறை) 2921/2024.

## வழக்கு ஆய்வுகள்: நீதித்துறைக் காவலில் சித்திரவதை

### இப்ராகிம்

2022 பிப்ரவரி 7ஆம் நாள், உத்தரப் பிரதேசம் சோன்பத்ரா மாவட்டத்தில் டெம்போ ஓட்டுநர் இப்ராகிம் என்பவர் 25 கிராம் ஹெராயின் போதைப் பொருள் வைத்திருந்ததாகக் காவல்துறையால்சிறைப்படுத்தப்பட்டார்.அவரைவிடுதலைசெய்வதற்குக்காவல்துறையினர் 10,000 ரூபாய் (கிட்டத்தட்ட 120 அமெரிக்க டாலர்) கையூட்டுக் கேட்டார்களாம். பணம் தராவிட்டால் அவர் கொல்லப்படுவார் என்று அவர் மனைவி ஷகிபா பானுவிடம் கூறினார்களாம். இப்ராகிம் நீதித்துறைக் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஐந்தே நாள் கழித்து, இப்ராகிம் சிறையில் தற்கொலை செய்து கொண்டதாக ஷகிபாவுக்குத் தொலைபேசியில் செய்தி வந்தது. ஆனால், இப்ராகிமின் சடலம் அடக்கத்துக்காகத் தரப்பட்ட போது, இடுப்பிலும் கால்களிலும் கழுத்திலும் கன்றிய காயங்கள் உட்பட கடுமையாக அடித்த காயங்களின் அடையாளக்குறிகள் அதில் காணப்பட்டதாக ஷகிபா தெரிவித்தார்.[94]

## காவலில் பாலியல் மற்றும் பாலினம் சார்ந்த வன்முறை

காவல் கட்டமைப்புகளில் இந்திய அதிகாரியங்கள் நிகழ்த்தும் மிகவும் சர்வசாதாரண வன்முறை வடிவங்களில் பாலியல் முறைகேடு, குறிப்பாக வல்லுறவும் ஒன்று. பன்னாட்டு மனிதவுரிமைச் சட்டத்தின் கீழ் வல்லுறவு என்பது சித்திரவதைக்கு நிகரான பாலினம் சார்ந்த வன்முறை வடிவமாக அறிந்தேற்கப்படுகிறது.[95]

2014க்கும் 2022க்கும் இடையே குறைந்தது 557 காவல் வல்லுறவு வழக்குகள் தேசியக் குற்றப் பதிவுகள் அலுவலகத்துக்கு (NCRB) அதிகாரமுறைப்படி அறிக்கையிடப்பட்டன.[96] எப்படியாயினும் இந்த எண்ணிக்கை அநேகமாக இச்சிக்கலின் முழு வீச்சைக் குறிக்காது. தப்பிப் பிழைத்தவர்கள் பாலியல் வன்முறையில் தொடர்புடைய களங்கம் காரணமாய், சமூகப் புறக்கணிப்புக்கோ பதிலடிக்கோ ஆளாவது போன்ற அச்சத்தால் முன்னுக்கு வர மறுப்பதுவாடிக்கைதான்.[97] குறிப்பாக இந்தியாவில் பாலியல் வன்முறை போன்ற உரிமை மீறல்களைக் காவல்துறை அதிகாரிகள் செய்யும்

94 நீதிக்கான குரல்கள், சில ரூபாய்களுக்காக: இப்ராஹிமின் துயர சாவு மற்றும் காவல் சித்திரவதைக்கு எதிரான உலகளாவிய போராட்டம், 14 பிப்ரவரி 2025; பாரபட்சமற்ற செய்திகள்!, இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் காவலில் ஆண்கள் இறக்கும் வேளையில் பெண்கள் போராடுகின்றனர், 14 ஜூன் 2023.

95 ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை, பெண்களுக்கு எதிரான வன்முறை, அதன் காரணங்கள் மற்றும் விளைவுகள் குறித்த சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை, 19 ஏப்ரல் 2021, A/HRC/47/26; சித்திரவதைக்கு எதிரான குழு (**பூனை**), பொதுக் கருத்து எண் 2, 24 ஜனவரி 2008, CAT/C/GC/2; மனிதவுரிமைகள் ஆணையம், பொதுக் கருத்து எண் 28, 29 மார்ச் 2000, CCPR/C/21/Rev.1/Add/10.

96 NCRB தரவுகளின் படி, இந்த புள்ளிவிவரம் 2014, 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021, மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கான ‘இந்தியாவில் குற்றம்’ ஆண்டு அறிக்கைகளில் உள்ள ‘பெண்களுக்கு எதிரான குற்றங்களின் நிகழ்வு (I), பாதிக்கப்பட்டவர்கள் (V) மற்றும் விகிதம் (R)’ அல்லது ‘பெண்களுக்கு எதிரான குற்றங்கள் (குற்றப் பிரிவு வாரியாக & மாநிலங்கள்/ஒன்றியப் புலம் வாரியாக)’ அல்லது ‘பாலியல் வன்கொடுமையின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்’ (ஆண்டைப் பொறுத்து) ஆகிய அட்டவணைகளிலிருந்து பெறப்படுகிறது. 2022-க்குப் பிறகான ஆண்டுகளுக்கான அறிக்கைகள் கிடைக்கவில்லை. புள்ளிவிவரங்கள் தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்திடமிருந்து (NHRC) பெறப்பட்டவை இங்கு சேர்க்கப்படவில்லை, ஏனெனில் NHRC தனது ஆண்டு அறிக்கைகளில் காவலில் நிகழும் சாவு மற்றும் காவலில் நிகழும் பாலியல் வன்கொடுமை ஆகியவற்றுக்கான புள்ளிவிவரங்களை ஒன்றாகத் தொகுக்கிறது. இதன் பொருள், இந்தப் புள்ளிவிவரங்களைக் கொண்டு ஆண்டுதோறும் நிகழும் காவலில் நிகழும் பாலியல் வன்கொடுமைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட முடியாது என்பதாகும். ஆண்டு அறிக்கைகளில் சில இடங்களில், காவலில் நிகழும் சாவு/பாலியல் வன்கொடுமைக்கான மொத்த எண்ணிக்கை, காவலில் நிகழும் சாவுங்களுக்கான மொத்த எண்ணிக்கை என்று குறிப்பிடப்படுகிறது என்பதைக் கவனிக்கவும். இது காவலில் நிகழும் மொத்தச் சாவுகளின் எண்ணிக்கையைப் பிரதிபலிக்கிறது. இருப்பினும், தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC) ‘காவலில் சாவு/பாலியல் வன்கொடுமை’ என்பதை எவ்வாறு வரையறுக்கிறது என்பதும், இதன் பொருள் ஒரு பாதிக்கப்பட்டவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு இறந்தாரா, அல்லது ‘காவலில் சாவு/பாலியல் வன்கொடுமை’ என்பதற்கான மொத்த எண்ணிக்கையில், பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு இறக்காத சில பாதிக்கப்பட்டவர்களும் அடங்குவார்களா என்பதும் தெளிவாக இல்லை. தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் தனது அறிக்கைகளில் காவலில் சாவு மற்றும் காவலில் நிகழும் பாலியல் வன்கொடுமை ஆகியவற்றை ஒன்றாகக் குழுவாக்குவதும் (மற்றும் அதன் வருடாந்திர அறிக்கைகளில் இந்த வழிமுறைத் தேர்வை விளக்கத் தவறுவதும்), காவலில் நிகழும் பாலியல் வன்கொடுமையின் உண்மையான பரவலைப் புரிந்துகொள்வதற்கு ஒரு விரும்பத்தகாத தடையாக அமைகிறது.

97 அமெரிக்க வெளியுறவுத் துறை, 2023 ஆம் ஆண்டுக்கான மனிதவுரிமைகள் நடைமுறைகள் குறித்த நாட்டு அறிக்கை (**நாட்டு அறிக்கைகள்** 2023), 2023, பக். 8.

போது அவற்றைக் குறைத்து அறிக்கையிடுவது பாரிய அளவில் நடக்கிறது.[98] அதிகாரியங்கள் வல்லுறவு வழக்குகளைப் பதிவு செய்ய மறுப்பதாக அறிக்கைகள் வந்துள்ளன.[99]

காவல் வன்புணர்வு வழக்குகளாக அறிக்கையிடப்படுகிறவை தனித்த நிகழ்வுகள் அல்ல; சொல்லப் போனால், காவல் வல்லுறவு பரவலாக நிகழ்வதும், அதில் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் காவல்துறை அதிகாரிகளுக்குள்ள தொடர்பும்[100] இந்த வழக்குகள் இன்னுங்கூட விரிந்தகன்ற அமைப்புசார் சிக்கல்களைக் காட்டுவதற்குரிய அறிகுறியே ஆகும்.[101] காவல் வல்லுறவு தொடர்ந்து நாடெங்கும் நிகழும் அதே போது, குறிப்பாக உத்தரப் பிரதேச மாநிலத்தில் பாரிய அளவில் தலைவிரித்தாடுகிறது. உத்தரப் பிரதேசம் இந்தியாவின் மக்கள்தொகையில் சற்றொப்ப 16% ஆகும். ஆனால் கடந்த பத்தாண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 65% பாலியல் வல்லுறவு வழக்குகள் அங்கிருந்தே அறிக்கையிடப்பட்டுள்ளன.[102]

2020ஆம் ஆண்டு, தேசியச் சித்திரவதை எதிர்ப்பு இயக்கம் (NCAT) ஒன்பது காவல் வல்லுறவு வழக்குகளை ஆவணமாக்கிற்று. அரசுத் தொடர்வண்டிக் காவல்துறையினர் குற்றப் புலனாய்வுகளின் போது தொடர்வண்டி நிலையங்களில் செய்தவையும் இதிலடங்கும். சில வழக்குகளில் பாதிப்புற்றவர்கள் வல்லுறவு என்று முறைப்பாடு செய்ததும் கூட உண்டு.[103]

2020 ஜூலையில் கொவிட்-19 முடக்கத்தின் போது கவிதா என்ற பெண்மணி தன் 17 வயது மகளும், 20 வயது மருமகளும் சண்டிகரில் காவலில் இருந்த போது கும்பல் வல்லுறவுக்கு ஆளானது குறித்து பஞ்சாப்-அரியானா உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.[104] அவர்கள் காவல்துறை அதிகாரிகளைக் கொலை செய்ததில் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்கள். 10 – 12 அதிகாரிகள் செய்த வல்லுறவு, உடலுக்குள் கண்ணாடிப் போத்தல்களை நுழைப்பது உள்ளிட்ட சித்திரவதையைத் தன் மகள் தாங்கிக் கொண்டதாகவும், இதனால் ஏற்பட்ட கடுங்காயங்களுக்கு சிகிச்சை மறுக்கப்பட்டதாகவும் கவிதா கூறினார். தொடக்கக் கால முறைப்பாடுகள் அலட்சியம் செய்யப்பட்ட போதிலும் பொதுமக்களின் கூக்குரலால் அரியானா காவல்துறை புலனாய்வு தொடங்க வேண்டியதாயிற்று. அதிகாரியங்கள் குற்றச்சாட்டுகளை மறுத்தன. 2021 ஜனவரி நிலவரப்படி, இரு பெண்களும் நீதித்துறைக் காவலில் இருந்து வந்தனர்.[105] இந்நாள் வரை நமக்குத் தெரிந்த அளவில், குற்றச்சாட்டுக்கு ஆளானவர்களுக்கு எதிராக எவ்வித வழக்கும் தொடுக்கப்பட்டதாகச் செய்தி இல்லை.

கடந்த சில ஆண்டுகளில் வந்துள்ள வழக்குகளும் இதேபோன்ற போக்குகளைக் காட்டுகின்றன: நீதியமைப்புடன் ஊடாடும் பெண்கள் குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டித்தலில்லாக் குற்றவிலக்குடன் வல்லுறவுக்கும் பிறவகை பாலியல் வன்முறைக்கும் முகங்கொடுக்கும் நிலை

98 அமெரிக்க வெளியுறவுத் துறை, நாட்டு அறிக்கைகள் 2023, பக். 8.

99 மனிதவுரிமைகள் ஆணையம், முடிவுரை 2024, பத்தி 33; அமெரிக்க வெளியுறவுத் துறை, நாட்டு அறிக்கைகள் 2023

100 2014, 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021, மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கான 'இந்தியாவில் குற்றம்' ஆண்டு அறிக்கைகளிலிருந்து, தேசிய குற்றப் பதிவுப் பணியகத்தின் (NCRB) 'பெண்களுக்கு எதிரான குற்றங்களின் நிகழ்வு (I), பாதிக்கப்பட்டவர்கள் (V) மற்றும் விகிதம் (R)' அல்லது 'பெண்களுக்கு எதிரான குற்றங்கள் (குற்றப் பிரிவு வாரியாக & மாநிலங்கள்/யூனியன் பிரதேச வாரியாக)' அல்லது 'பாலியல் வன்கொடுமையின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்' அட்டவணைகளை (ஆண்டைப் பொறுத்து) பார்க்கவும். மேலும், தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தின் (NHRC) ஆண்டறிக்கை 2021-22; ஆண்டறிக்கை 2019-20; ஆண்டு அறிக்கை 2018-19; ஆண்டறிக்கை 2017-2018; ஆண்டறிக்கை 2016-2017; ஆண்டறிக்கை 2015-2016; ஆண்டறிக்கை 2014-2015; ஆண்டறிக்கை 2013-2014. காவலில் உள்ள பாலியல் வன்முறையின் மிகச் சமீபத்திய வழக்குகள் குறித்து இந்தப் பிரிவில் வழங்கப்பட்டுள்ள சான்றுகளுக்குக் கூடுதலாக, காவலில் நிகழும் பாலியல் வன்கொடுமை, காவல்துறை அதிகாரிகளால் நிகழ்த்தப்படும் கூட்டுப் பாலியல் வன்கொடுமை, சிறார்களுக்கும் இளம் வயதினருக்கும் எதிரான பாலியல் முறைகேடு மற்றும் பல பழைய உதாரணங்களையும் காட்டாக, 2015 - 2016 ஆம் ஆண்டுகளில் ரெட்ரஸ் (REDRESS) ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது.

101 பிரச்சினையாகும். இந்திய நாடாளுமன்றத்தில் பெண்கள் அதிகாரமளித்தல் தொடர்பான குழு, திசம்பர் 2017-ல் 'தடுப்புக்காவலில் உள்ள பெண்கள் மற்றும் நீதிக்கான அணுகல்' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதில், உத்தரப் பிரதேசத்தில் காவலில் நிகழும் பாலியல் வன்கொடுமைகள் பரவலாக இருப்பதைச் சுட்டிக்காட்டி, முறையான பயிற்சி மற்றும் மேம்பட்ட கண்காணிப்புக்கு அது அழைப்பு விடுத்தது. பார்க்கவும்: இந்திய நாடாளுமன்றம், மக்களவை, பெண்களை அதிகாரப்படுத்தல் குழு, சிறைக்காவலில் இருக்கும் பெண்களும் நீதிக்கான அணுகலும்.

102 2014-2022 காலகட்டத்தில் பதிவான 577 காவல்வழி பாலியல் வன்புணர்வு நிகழ்ச்சிகளில், 375 நிகழ்ச்சிகள் உத்தரப் பிரதேசத்தில் பதிவாகியுள்ளன என தேசியக் குற்றப் பதிவுருக் கழகம் (NCRB) பதிவு செய்துள்ளது.

103 சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம், இந்தியா: சித்திரவதை குறித்த ஆண்டறிக்கை 2020, 18 மார்ச் 2021, பக். 73-78.

104 கவிதா -எதிர்- அரியானா மாநிலம் மற்றும் பிறர், குற்றவியல் வழக்கு எண் M-35684/2020 (O&M).

105 சஹத் ராணா, அரியானா காவல்துறை மீது காவலில் வைத்து பாலியல் வன்கொடுமை செய்ததாகக் குற்றம் சாட்டிய சிறுமி ஏன் இன்னும் அரசு காவலில் வைக்கப்பட்டுள்ளார், 15 ஜனவரி 2021.

உள்ளது. எடுத்துக்காட்டாக 2021இல் தேசிய மனிதவுரிமை ஆணையம் (NHRC) பதிவு செய்த ஒரு வழக்கில் பிரேம் சிங் என்பவர் தன் மகள் காவல்துறைக் காவலில் காவல்நிலையப் பொறுப்பதிகாரியால் வல்லுறவுக்கும் சித்திரவதைக்கும் பாலியல் முறைகேட்டுக்கும் ஆளாக்கப்பட்டதாகத் தெரிவித்தார். அவர் தன் மகளை நிலையப் பொறுப்பதிகாரி பல முறை வல்லுறவு செய்ததாகவும், "அவருடைய அந்தரங்க உறுப்புகளில் வெளிப் பொருட்களைச் செருகியதாகவும், மருத்துவரிடம் சமாளித்துப் பொய்யான மருத்துவ அறிக்கை கொடுக்கச் செய்ததாகவும்" தெரிவித்தார்.[106]

பல நேரம் இந்நிகழ்வுகள், குறிப்பாக விளிம்புநிலைக் குழுக்களுக்கு எதிராக அமைப்புசார் பாகுபாட்டு வன்முறைப் போக்குகளைக் காட்டுகின்றன. இந்த அறிக்கையில் கீழே 'பாகுபாட்டுத் தன்மையுள்ள ஒடுக்குமுறைக்கான கருவியாகச் சித்திரவதை' என்ற பிரிவில் விளக்கியிருப்பது போல், தலித்துகள் போன்ற விளிம்புநிலைக் குழுக்கள் சித்திரவதையும் பாலியல் வன்முறையும் உட்படக் காவல்துறையும் பாதுகாப்புப் படைகளும் அளவுக்கு மேல் நிகழ்த்தும் வன்முறைக்கு இலக்காகின்றன. 2022 தொடக்கத்தில் உத்தரப் பிரதேசம் லலித்பூர் மாவட்டத்தில் ஒரு 13 வயது தலித் பெண் நான்கு பேர் தன்னைக் கூட்டு வல்லுறவுக்கு ஆளக்கியதாகச் சொல்லி ஒரு காவல்துறை அதிகாரியிடம் உதவி கேட்கப் போய் அந்த அதிகாரியால் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்த நிகழ்ச்சி "இந்தியாவில் அனைவரையும் சீற்றமுறச் செய்து, காவல்துறை அமைப்புசார் பாலியல் வன்முறைப் பண்பாட்டை நிலைக்கச் செய்யத் துணை புரிவதாகப் பலரும் குற்றஞ்சாட்டக் காரணமாயிற்று."[107] 2023 ஜூன் மாதம் இராஜஸ்தானத்தில் பிகானேர் மாவட்டத்தில் இரு காவல்துறை அதிகாரிகள் உட்பட மூவர் ஓர் 21 வயது தலித்துப் பெண்ணைக் கூட்டு வல்லுறவுக்கு ஆளாக்கிக் கொலை செய்த குற்றச்சாட்டுகள் தேசிய மனிதவுரிமை ஆணையத்துக்கு வந்து சேர்ந்தன.[108]

## வழக்கு ஆய்வு: காவல் சித்திரவதை, பாலியல் வன்முறை உட்பட

### சூரஜ் சந்தோலா, தனுஜா சந்தோலா

2023 ஆகஸ்டு 11ஆம் நாள் (இமாசலப் பிரதேசம் சோலன் மாவட்டம்) நலகார் எனும் ஊரில் மணமான சூரஜ், தனுஜா சந்தோலா இணையரின் இல்லத்தில் காவல்துறை அதிகாரிகள் நுழைந்து, அவர்களின் உடைமைகளைச் சேதப்படுத்தியதோடு, எந்தப் புலனாய்வுக்கும் தொடர்பில்லாத பொருட்களை எடுத்துப் போய் விட்டார்களாம். சூரஜ், தனுஜா இருவரையும் ஒரு தனியார் ஊர்தியில் நலகார் காவல் நிலையத்துக்குக் கொண்டுசென்றார்களாம். காவல்துறை அதிகாரிகள் சாராயம் குடித்து விட்டு அந்த இணையரை அடித்தார்களாம். காவல் நிலையத்தில் அடைத்து வைத்திருந்த போது சூரஜ், தனுஜா இருவரையும் நாள்தோறும் அடித்து, தொடர்ச்சியாக மூன்று இரவுகள் தூங்க விடவில்லையாம். மனைவியின் எதிரிலேயே சூரஜை ஆடை களையச் செய்து "அசிங்க"ப்படுத்தினார்களாம். காவல்துறை அதிகாரிகளில் ஒருவர் சூரஜின் முகத்தில் சிறுநீர் கழித்தாராம். அதே அதிகாரி சாராய மயக்கத்தில் தனுஜாவின் ஆடைகளை அகற்றி "அந்தரங்க உறுப்புகளைத் தொட்டாராம்". இந்த வழக்கில், காவல்துறை அதிகாரிகள் தங்கள் குற்றங்களை மூடி மறைக்கப் பொய்யான மருத்துவ அறிக்கைகள் தயாரிக்கச் சதி செய்வது, கண்காணிப்புக் கருவிகளின் படக் காட்சிகளை நீக்குவது உட்பட நடவடிக்கைகள் மேற்கொண்டார்களாம்.[109]

106 தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், ஆண்டறிக்கை 2021-22, பக். 165.
107 என்என், '13 வயது சிறுமி ஒருவர் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளானதாக காவல்துறையிடம் தெரிவித்தார். பின்னர், ஒரு காவல்துறை அதிகாரி அவரைப் பாலியல் வன்புணர்வு செய்ததாகக் கூறப்படுகிறது', 6 மே 2022; மேலும் காண்க திட்ரிப்யூன், 'லலித்பூர் கூட்டுப் பாலியல் வன்புணர்வு: குற்றம் சாட்டப்பட்ட காவல் நிலைய அதிகாரி நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்; பாலி காவல் நிலையத்தில் புதிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்', 6 மே 2022
108 தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், பிகானேர் மாவட்டத்தில் தலித் பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் இரண்டு காவல்துறை அதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவது தொடர்பாக ராஜஸ்தான் அரசுக்கு தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC) அனுப்பிய நோட்டீஸ், 27 ஜூன் 2023; தலித் பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டது தொடர்பாக தலைமைச் செயலாளர் மற்றும் டிஜிபிக்கு தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் அனுப்பிய நோட்டீஸ், 28 ஜூன் 2023.
109 லாக்பீர் சிங் எதிர் ஹிமாச்சல் பிரதேஷ் அரசு, குற்றவியல் மனு (நடத்தை) எண்: 2987/2024, 3 ஜனவரி, 2025.

# வழக்கு ஆய்வு: காவல்துறையால் மூன்று உறவினர்கள் வல்லுறவு

### தேவ பார்தியும் குடும்பமும்

2024 ஜூலை 13ஆம் நாள் 24 வயதான தேவ பார்தி திருமணத்துக்கு முன் நடக்கக் கூடிய ஹல்தி சடங்குகளில் கலந்து கொண்டிருந்த போது காவல்துறை அதிகாரிகள் அந்தக் கொண்டாட்டத்தில் குறுக்கிட்டார்கள். மத்தியப் பிரதேசத்தில் குணா மாவட்டத்தில் மிகவும் விளிம்புநிலைப்பட்ட பார்தி சாதியைச் சேர்ந்த தேவா தன் மாமா கங்காராம் பார்தியுடன் கூட காவல் வைக்கப்பட்டார். அவர்கள் முதலில் ஜாகர் புறக்காவல் சாவடியில் (சௌக்கி) அடைத்து வைக்கப்பட்டனர். பிறகு சற்றைக்கெல்லாம் கிட்டத்தட்ட 40 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஆளில்லாத மையனா புறக்காவல் சாவடிக்கு மாற்றப்பட்டனர். அங்கே, "தேவா, கங்காராம் இருவரையும் கட்டித் தொங்கி விட்டு, அவர்களின் முகத்தைக் கறுப்புத் துணியால் இறுக்காமாய் மூடி ஈவிரக்கமின்றி அடித்தனர். காவல்துறையினர் அவர்களின் முகத்தில் வெந்நீர் வீசியடித்துத் தொடர்ந்து அடித்து நொறுக்கினர் [...]. ஆசன வாயில் இரும்புத் தடியை நுழைத்து, பெட்ரோல் என்று ஐயுறப்படும் ஏதோ திரவமும் ஊற்றினர்." அன்றைக்கே தேவா உயிரிழந்தார். கங்காராமின் கைகால்களிலும் தலையிலும் கடுங்காயம் ஏற்பட்டது.[110]

அதே நாளில் கொண்டாட்டத்தின் போது குடும்பத்தினர் காவல்துறையிடமிருந்து ஓடிய போதே தேவாவின் உறவினர்களில் ஒருவர் அவருக்குத் தெரிந்த ஒரு காவலரால் வன்புணர்வு செய்யப்பட்டாராம். அவர் முன்பே பல தருணங்களில் தனக்குத் தொல்லை கொடுத்தவர் என்றும் கூறினாராம்.[111]

இந்த அறிக்கையில் கீழே 'குறித்த வட்டாரங்களில் சித்திரவதை' என்ற பிரிவில் விளக்கியிருப்பது போல், இந்தியாவில் சில வட்டாரங்கள் பாதுகாப்புப் படைகளின் பெருங்குவிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்பதால், காவலும் காவல் அல்லாததுமான இரு நிலைகளிலும் பாலியல் வன்முறை உட்பட கடுமையடைந்த வன்முறையால் அமைப்பு சார்ந்து அல்லலுறுகின்றன.

## நீதித்துறைசாராக் கொலைகள்: காவல்துறை மோதல்கள்

நீதித்துறைசாராக் கொலைகள் என்பவை இந்தியச் சட்டச் செயலாக்கமும் பாதுகாப்புப் படைகளும் சர்வசாதாரணமாக ஈடுபடுத்தும் இன்னொரு முறைகேட்டுப் போக்கைக் குறிக்கின்றன. எல்லா நீதிசாராக் கொலைகளிலும் சித்திரவதைக்கு இடமிருக்க வேண்டியதில்லை என்னும் போதே, சித்திரவதைக்கு எதிரான ஐநா குழு இந்தக் கொலைகளை சித்திரவதைக்கு எதிரான ஐநா ஒப்பந்தத்தின் (UNCAT) மோசமான மீறல்களில் சேர்த்துக் கொள்கிறது.[112] இந்தியாவில், இவை பல நேரம் குற்றத்தை முறியடிக்கும் தருணங்களில், காவல்துறையுடனான மோதல்களில் நிகழ்வதாகச் சொல்லப்படுகிறது.[113] இந்த 'மோதல்கள்' கைது, புலனாய்வு, அல்லது உசாவல்-விசாரணை இல்லாமல் ஐயத்துக்குரிய ஆட்களைச் சுடுவதைக் குறிப்பிடுகிறது. நீதிசாராக் கொலைகள் 'பொய் மோதல்கள்' அல்லது நாடக 'மோதல்களில்' நிகழ்கின்றன; இவை "சட்டப்புறம்பாகக் காவலில் அடைப்பதும், நீதித்துறைசாராமல் தனியாளுக்குக் கொலைத் தண்டனை நிறைவேற்றுவதும், பிறகு

110 சுகன்யா சாந்தா, கொலை, தாக்குதல்கள், அங்கவீனப்படுத்துதல் மற்றும் பாலியல் வன்கொடுமை: மத்தியப் பிரதேச காவல்துறையினரால் பர்த்தி சமூகத்தினர் அனுபவிக்கும் கொடூரமான சித்திரவதை, 11 செப்டெம்பர் 2024.

111 சுகன்யா சாந்தா, கொலை, தாக்குதல்கள், அங்கவீனப்படுத்துதல் மற்றும் பாலியல் வன்கொடுமை: மத்தியப் பிரதேச காவல்துறையினரால் பர்த்தி சமூகத்தினர் அனுபவிக்கும் கொடூரமான சித்திரவதை, 11 செப்டெம்பர் 2024.

112 ஜானா மார்டின்கோவா, சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் குறித்த சித்திரவதைக்கு எதிரான குழுவின் அணுகுமுறை, 7 ஆகஸ்டு 2018.

113 மனோஜ் ஜோஷி, மணிப்பூரில் 10 குகி-ஜோ நபர்கள் என்கவுண்டரில் கொல்லப்பட்டது பாஜக அரசின் நிலையை மோசமாகக் காட்டுகிறது, திசம்பர் 2024.

காவல்துறையுடன் துப்பாக்கிச் சண்டை தொடங்கிய பின் பாதிப்புற்றவர் உயிரிழந்து விட்டதாகக் கூறிக் கொள்வதுமான நடைமுறை" என்று வண்ணிக்கப்படுகின்றன.[114]

காவல் சித்திரவதை போலவே, நீதித்துறைசாராக் கொலைகளும் இந்தியாவில் பரவலாக நடந்துள்ளன. 2014 ஏப்ரல் முதல் 2024 திசம்பர் வரைக்கும் தேசிய மனிதவுரிமை ஆணையம் '[காவல்துறை] மோதல் சாவுகள்' என்று 1,575 முறைப்பாடுகள் பதிவு செய்தது.[115] 2024 மார்ச்சிலிருந்து 2024 திசம்பர் வரை தேசிய மனிதவுரிமை ஆணையம் நீதித்துறைசாராக் கொலைகள் என்று 90 நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.[116] மேலும் தேசியக் குற்றப் பதிவுருக் கழகத்திடமிலிருந்து (NCRB) பெறப்படும் தரவுகள் 2014க்கும் 2022க்கும் இடையில் மிகையான வலுப் பயன்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.[117] காவல்துறை மோதல்களாலும், சூட்டுக் கருவிகளின் பயன்பாட்டாலும், தடிகளாலும் 387 சாவுகளும்[118] பொதுமக்களுக்கு 3,017 காயங்களும்[119] ஏற்பட்டுள்ளன.

காவல்துறை மோதல்களில் நிகழ்த்தப்படும் நீதித்துறைசாராக் கொலைகளும் கூட ஏற்புடைத்த குற்றக் கட்டுப்பாட்டு வழிமுறையாக சட்டச் செயலாக்கத் துறையில் பலராலும் கருதப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 2019ஆம் ஆண்டு நடந்த கணக்கெடுப்பில் ஐந்து காவல்துறை ஆட்களில் ஒருவர் சட்டப்படி வழக்கு நடத்துவதைக் காட்டிலும் "ஆபத்தான குற்றவாளிகளை"க் கொலை செய்வதே மேல் என்று அவர்கள் நம்புவதை வெளிப்படுத்திற்று.[120] நீதிசாராக் கொலைகளில் ஈடுபடும் காவல்துறை அதிகாரிகள் பல நேரம் கவர்ச்சி மிக்கவர்களாகக் காட்டப்படுகின்றனர், பொதுவெளியில் அவர்களுக்கு விருதளிக்கப்படுகிறது;[121] மிகப் பெருமளவில் இப்படிச் செய்கிறவர்கள் 'மோதல் வல்லுநர்கள்' எனக் குறிப்பிடப்படுகின்றார்கள்.[122] இவ்வாறான ஓர் அதிகாரி மும்பை குற்றப்பிரிவைச் சேர்ந்த தயா நாயக் என்பவர் 87க்கு மேற்பட்டவர்களைக் கொலை செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.[123] 2018இல் செய்தியாளர்கள் நேராக ஒரு மோதலைக் காணவே கூட "அழைக்கப்பட்டார்கள்"; அந்த மோதலில் காவல்துறை அதிகாரிகள் இருவரைக் கொன்றார்கள்; அவர்கள் இருவரும் ஆய்தம் வைத்திருந்தார்கள் என்றும், பாழடைந்த கட்டடத்தில் ஒளிந்திருந்தார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.[124]

---

114 HRW, சீர்கெட்ட அமைப்பு: இந்தியக் காவல்துறையில் செயலிழப்பு, முறைகேடு, தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு, 2009 ஆகஸ்டு 4; ஜஸ்டின் ரெளலட், இந்தியாவின் 'பொய் மோதல்கள்' ஏன் அதிர்ச்சியளிக்கும் வகையில் சாதாரணமாக உள்ளன, 13 ஏப்ரல் 2015; JKCCS, 'போலி என்கவுன்டர்' எனக் கூறப்படும் சம்பவத்தில் 3 ராஜௌரி இளைஞர்கள் காணாமல் போனதும் கொல்லப்பட்டதும் காஷ்மீரில் அரசின் வன்முறையின் பொறுப்பற்ற தன்மையின் தொடர்ச்சி: JKCCS மற்றும் APDP, 12 ஆகஸ்டு 2020.

115 இந்த எண்ணிக்கை, 2022 ஏப்ரலுக்கும் 2024 திசம்பருக்கும் இடைப்பட்ட மாதப் புள்ளிவிவரங்களுடன் கூடுதலாக, 2014க்கும் 2022க்கும் இடைப்பட்ட தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தின் (NHRC) ஆண்டறிக்கைகளில் உள்ள 'மோதல் சாவுகள்' எனும் பத்திக் கட்டங்களின் கூட்டுத்தொகையிலிருந்து எடுக்கப்பெற்றது. பார்க்கவும்: தேசிய மனிதவுரிமை ஆணையம் (NHRC), ஆண்டறிக்கை 2021-22; ஆண்டறிக்கை 2019-20; ஆண்டறிக்கை 2018-19; ஆண்டறிக்கை 2017-18; ஆண்டறிக்கை 2016-17; ஆண்டறிக்கை 2015-16; ஆண்டறிக்கை 2014-15; ஆண்டறிக்கை 2013-14; ஆண்டறிக்கை 2012-13.. காவல்துறை மோதல் என்பது காவல்துறைத் துப்பாக்கிச் சூடுகளை விவரிக்க ஆளப்படும் சொல் ஆகும். காவல்துறை மோதல்கள் பல நேர்வுகளில் அரங்கேற்றப்படுகின்றன. காட்டாகப் பார்க்கவும்: பிபிசி, இந்தியாவின் காவல்துறைக் கொலைகள்: ஒரு குற்ற ஒடுக்குமுறையின் பின்னணிக் கதை, 5 அக்டோபர் 2017-ஐப் பார்க்கவும்.

116 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் (HRW): இந்தியா குறித்த ஐ.நா. மனிதவுரிமைகள் குழுவின் ஆய்வுக்குக் கையளித்த பார்வைகள், 2024 ஜூன்; மேலும் காண்க: தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், மனிதவுரிமை வழக்குகளின் புள்ளிவிவரங்கள், 6 மே 2024.

117 2022க்குப் பிறகான தரவுகள் தற்போது தேசியக் குற்றப் பதிவுருக் கழகத்திடம் (NCRB) இல்லாததால், 2014 முதல் 2022 வரையிலான காலகட்டம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

118 NCRB தரவுகளின் படி, இந்த புள்ளிவிவரம் 2014, 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021, மற்றும் 2022 ஆண்டுகளுக்கான 'இந்தியாவில் குற்றம்' ஆண்டறிக்கைகளிலிருந்து எடுக்கப்பட்ட, 'காவல்துறை நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட பொதுமக்கள்' என்ற அட்டவணை.

119 NCRB தரவுகளின் படி, இந்த புள்ளிவிவரம் 2014, 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021, மற்றும் 2022 ஆண்டுகளுக்கான 'இந்தியாவில் குற்றம்' ஆண்டறிக்கைகளிலிருந்து எடுக்கப்பட்ட, 'காவல்துறை நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட பொதுமக்கள்' என்ற அட்டவணை.

120 காமன் காஸ், இந்தியாவில் காவல் பணியின் தகுநிலை குறித்த அறிக்கை 2019, பக். 131.

121 தி 420, தல்ஜித் சிங் சௌத்ரி, இகாப அவர்களைச் சந்தியுங்கள்: 'மோதல் வல்லுநர்' ('என்கவுன்டர் ஸ்பெஷலிஸ்ட்') இப்போது இந்தியாவின் எல்லைகளைப் பாதுகாக்கிறார், 2024 ஆகஸ்டு, பக்.4.

122 ஹிந்துஸ்தான் டைம்ஸ், நீங்கள் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டிய மும்பை காவல்துறையின் 5 என்கவுண்டர் நிபுணர்கள் | மும்பை செய்திகள் – ஹிந்துஸ்தான் டைம்ஸ், 12 ஜனவரி 2016.

123 பத்திரிகா, 'பாபா சித்திக் வழக்கின் என்கவுன்டர் நிபுணரான தயா நாயக் யார்? | சமீபத்திய செய்திகள் | பத்திரிகா நியூஸ்', 13 அக்டோபர் 2024.

124 மனிதவுரிமைகளுக்கான இளைஞர்கள் ஆவணப்படுத்தல், சட்டத்தையும் வாழ்க்கையையும் அழித்தல், அக்டோபர் 2021, பக். 27.

காவல்துறை மோதல்கள் இந்தியாவில், குறிப்பாகச் சில வட்டாரங்களில், குறிப்பாக உத்தரப் பிரதேசத்தில் பாரிய அளவில் நிகழ்கின்றன. 2017க்கும் 2021க்கும் இடையில் அம்மாநிலத்தில் 8,472க்கு மேல் இவ்வாறான நிகழ்ச்சிகள் நடைபெற்றனவாம். இந்த மோதல்களில் குற்றச் செயலில் ஈடுபட்டதாகச் சொல்லப்பட்ட 3,302 ஆட்களைச் சுட்டுக் காயப்படுத்தி, 146 பேரைச் சாகடித்தார்களாம். இந்த நடவடிக்கைகள் 'லங்டா நடவடிக்கை' எனப்பட்ட அதிகாரமுறையற்ற குற்ற ஒடுக்கல் முயற்சியின் ஒரு பகுதியாக அமைந்தது.[125] 2017 மார்ச்சில் உத்தரப் பிரதேச முதலமைச்சரான யோகி ஆதித்யநாத் தனது ஆட்சியின் சட்டம் ஒழுங்குத் திட்ட நிரலின் பகுதியாக காவல்துறை மோதல் பண்பாட்டை ஊக்கப்படுத்தினாராம். "குற்றம் செய்தால் அடித்து வீழ்த்தப்படுவீர்கள்"[126] என்பது போல் அவர் பேசிய பேச்சுகள் பரவலாகக் குற்றாய்வு செய்யப்பட்டுள்ளன.[127]

2019இல் நான்கு ஐநா சிறப்பு அறிக்கையாளர்கள் உத்தரப் பிரதேசத்தில் மோதல் கொலைகள் எனும் நடைமுறையைக் கண்டித்தனர். கொலைகளைத் தூண்டுவதாக, நியாயப்படுத்துவதாக, அல்லது அனுமதிப்பதாகத் தோன்றும் அரசு உயர் அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் வெளியிட்ட அறிக்கைகள் குறித்துக் கவலை தெரிவித்தனர்.[128] கொலைகளையும் காயங்களையும் மாநில அரசின் சாதனைகளாகப் பட்டியலிட்டு அந்த ஆண்டு ஓர் அதிகாரமுறை அரசு மடல் அனைத்து மாவட்ட நடுவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாக குடியியல் சமூக அமைப்புகளும் அறிக்கையிட்டன.[129] 2021 அறிக்கை ஒன்றில் குடியியல் சமூக அமைப்புகள் உத்தரப் பிரதேசத்தில் நடக்கும் மோதல் கொலைகள் பற்றிய புலனாய்வு நடைமுறைகளை குடியியல் சமூக அமைப்புகள் குற்றாய்வு செய்ததோடு, நீதித்துறைசாராக் கொலைகள் எனப்பட்ட 17 வழக்குகளை வெளிச்சமிட்டுக் காட்டின. தேசிய மனிதவுரிமை ஆணையத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் காவல்துறை அதிகாரிகள் எவரும் பொறுப்பாக்கப்படவில்லை.[130]

காவல்துறை மோதல் சாவுகள் பாரிய அளவில் நடைபெறும் மற்றொரு மாநிலம் அசாம்.[131] செய்தியறிக்கைகள் 2017இல் மோதல் கொலைகளின் எண்ணிக்கை உயர்ந்திருப்பதைக் காட்டும். அப்போது பிஸ்வா சர்மா அமைச்சராக இருந்தார்.[132] 2021இல் அவர் முதலமைச்சரான பிறகு இந்த எண்ணிக்கை மேலும் உயர்ந்தது.[133] அந்த ஆண்டு, காவலில் சிக்காமல் தப்பியோடுகிறவர்களைக் காலில் சுட வேண்டும் என்று சர்மா வெளிப்படையாகத் தெரிவித்தார்.[134] 2024 அக்டோபர் 22ஆம் நாள், அசாமில் 2021 மே திங்கள் முதல் மோதல் கொலைகள் கூடுதலாகியிருப்பதை உச்ச நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொண்டு, "சிக்கல் மிகக் கடுமையானது என்று விவரித்தது."[135]

125 'லங்டா' என்ற சொல் நொண்டி நடக்கும் ஒருவரைக் குறிக்கிறது; அவனீஷ் மிஸ்ரா, ஆபரேஷன் லங்டா: உத்தரப் பிரதேச மோதல்களில் 3,300 'குற்றவாளிகள்' சுடப்பட்டனர், 13 ஆகஸ்டு 2021.

126 நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், உத்தரப் பிரதேசத்தில் யோகி ஏன் 'மோதல் வீரர்' ஆக இருக்கிறார்?, 22 ஜூலை 2019.

127 நேஷனல் ஹெரால்டு இந்தியா, யோகியின் என்கவுன்டர் கொள்கை உத்தரப் பிரதேசத்தின் துப்பாக்கிச் சூடு நடத்தத் தயங்காத காவலர்களை ஊக்குவிக்கிறது, 9 அக்டோபர் 2019.

128 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம், இந்தியா: உத்தரப் பிரதேசத்தில் நடந்ததாகக் கூறப்படும் காவல்துறைக் கொலைகளால் ஐ.நா. வல்லுநர்கள் கவலை, 11 ஜனவரி 2019.

129 மனிதவுரிமைகளுக்கான இளைஞர்கள் ஆவணப்படுத்தல், சட்டத்தையும் வாழ்க்கையையும் அழித்தல், அக்டோபர் 2021, பக். 26.

130 மனிதவுரிமைகளுக்கான இளைஞர்கள் ஆவணப்படுத்தல், சட்டத்தையும் வாழ்க்கையையும் அழித்தல், அக்டோபர் 2021, பக். 18-19.

131 ஹிந்துஸ்தான் டைம்ஸ், இக்கட்டான நிலை: ஒற்றைக் கொம்பு காண்டாமிருகத்தைக் காப்பாற்றும் போராட்டத்தில் வெற்றிகளைக் காட்ட முயலும் கசிரங்காவின் வனத்துறை அதிகாரிகள், அப்பாவி கிராமவாசிகளைக் கொல்லக்கூடும்', [நாள் குறிப்பிடவில்லை].

132 ஃபிரன்ட்லைன், 2017 முதல் என்கவுன்டர் சாவுங்கள் அதிகரித்ததை அடுத்து, அசாம் மாநிலம் கண்காணிப்பில் உள்ளது – ஃபிரன்ட்லைன், 4 மே 2023.

133 சட்டப்பிரிவு 14, கால்நடை கடத்தல்காரர்கள், போதைப்பொருள் விற்பனையாளர்கள், கிளர்ச்சியாளர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் மீதான துப்பாக்கிச்சூடுகள்: அசாமில் என்கவுன்டர் கொலைகள் 20 மடங்கு அதிகரித்ததன் பின்னணி, 5 ஏப்ரல் 2024.

134 ஃபிரன்ட்லைன், 2017 முதல் என்கவுன்டர் சாவுங்கள் அதிகரித்ததை அடுத்து, அசாம் மாநிலம் கண்காணிப்பில் உள்ளது – ஃபிரன்ட்லைன், 4 மே 2023.

135 நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், ''171 சம்பவங்கள் கவலையளிக்கின்றன': காவல்துறை மோதல்கள் குறித்து அசாமிற்கு உச்ச நீதிமன்றம், விவரங்களைக் கோரியது', 22 அக்டோபர் 2024.

# வழக்கு ஆய்வுகள்: தப்பியோட முயன்றதாகச் சொல்லி நடந்த கொலைகள்

## மொகம்மது அரீஃப், ஜொள்ளு சிவா, ஜொள்ளு நவீன், சின் – தகுண்டா சென்னகேசவுலு

2019இல், தெலங்கானாவில், வன்புணர்வு மற்றும் கொலை வழக்கில் குற்றவாளிகள் என்ற ஐயத்துக்கு ஆளான மொகம்மது அரீஃப், ஜொள்ளு சிவா, ஜொள்ளு நவீன், சின் – தகுண்டா சென்னகேசவுலு ஆகிய நான்கு இளைஞர்களைக் காவல்துறை கொன்று போட்டது. குற்றம் நடந்த இடத்திலேயே இந்தக் கொலைகள் நடந்தன. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தப்ப முயன்றதாகக் காவல்துறை கூறிக் கொண்டது.[136] ஆயின், இந்தக் கொலைகள் நீதித்துறைசாராக் கொலைகள் என்று உச்ச நீதிமன்றம் அமர்த்திய விசாரணை ஆணையம் பிற்பாடு கண்டறிந்து, கொலைக் குற்றச்சாட்டுகளின் மீது உசாவல் நடத்துவதற்காக மாநில நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பி வைத்தது.[137] 2024 மே 3ஆம் நாள் நீதிமன்றம் தொடர்புடைய காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொண்டு தண்டனை நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கும் வகையில் இடைக்கால ஆணைகள் பிறப்பித்தது. பாதிப்புற்றவர்களின் குடும்பத்தினர் இப்போது இந்த முடிவுக்கு எதிராக முறையீடு செய்துள்ளனர்.[138]

## விகாஸ் துபே

வேறொரு வழக்கில், ஒரு கும்பலின் தலைவர் என்று ஐயுறப்பட்ட விகாஸ் துபே 2020ஆம் ஆண்டு காவல்துறைக் காவலுக்குச் சரணடைந்த பின் காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் தப்ப முயன்றதாகக் காவல்துறையினர் கூறிக் கொண்டனர். அவர் ஒரு காவல்துறை அதிகாரியின் துப்பாக்கியைத் திருடிக் காவல்துறை அதிகாரிகளை நோக்கிச் சுட்டார் என்றனர். ஆனால் இந்தக் கதை சமூக ஊடகங்களிலும் செய்தியேடுகளிலும் கருத்தாளர்களால் பரவலாகக் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. ”ஐயத்துக்குரிய ஒரு குற்றவாளி காவல்துறையிடம் சரணடைந்ததாகச் சொல்லப்படுகிறது, பிறகு அவர் ஏன் தப்பியோட முயல்வார்? அவரால் எப்படி ஓர் அதிகாரியின் துப்பாக்கியைத் திருட முடியும்?” என்று கேட்டார்கள்.[139] குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், கொல்லப்பட்ட அதே நாளில் விகாஸ் துபே காவல்துறை ‘மோதலி’லிருந்து பாதுகாப்பு வேண்டி உச்ச நீதிமன்றத்தில் விண்ணப்பித்திருந்தார்.[140]

---

136 இந்தியா டுடே, ‘ஐதராபாத் கால்நடை மருத்துவர் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 4 பேரும் காவல்துறை துரத்தலில் சுட்டுக் கொல்லப்பட்டனர்’, 6 திசம்பர் 2019.

137 தி இந்து, 2019ஆம் ஆண்டு நடந்த கொலைகள் தொடர்பாக தெலங்கானா காவல்துறை மீது உச்ச நீதிமன்றக் குழு குற்றஞ்சாட்டியுள்ளது, 21 மே 2022.

138 ஹிந்துஸ்தான் டைம்ஸ், தெலங்கானா என்கவுன்டர் கொலைகள்: குழு அறிக்கையின் இடைநீக்கத்தை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மேல்முறையீடு, 3 மே 2024.

139 பிபிசி: விகாஸ் துபே: கொலைச் சந்தேக நபர் கைது செய்யப்பட்ட பின்னர் இந்திய காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார், 10 ஜூலை 2020; இந்தியா டுடே, ‘விகாஸ் துபே போலி என்கவுண்டரில் கொல்லப்பட்டாரா, ஊடக வாகனங்கள் ஏன் தடுத்து நிறுத்தப்பட்டன: சாவு பல கேள்விகளை எழுப்புகிறது’, 10 ஜூலை 2020.

140 மனிதவுரிமைகளுக்கான இளைஞர்கள் ஆவணப்படுத்தல், சட்டத்தையும் வாழ்க்கையையும் அழித்தல், அக்டோபர் 2021, பக். 27.

## அக்ஷய் ஷிண்டே

2024 ஆகஸ்ட் மாதத்தில், மகாராஷ்டிர மாநிலத்தின் பத்லாபூர் பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் உதவியாளராக பணியாற்றிய அக்ஷய் ஷிண்டே, பள்ளி வளாகத்திலேயே இரண்டு சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்ததாகக் கூறப்பட்டதால் கைது செய்யப்பட்டார். 2024 செப்டம்பர் 23ஆம் தேதி, சிறைக்கும் காவல் நிலையத்துக்கும் இடையே காவல்துறை வண்டியில் கொண்டுசெல்லப்படுகையில் அவர் கொல்லப்பட்டார். அவர் அதிகாரி ஒருவரின் துப்பாக்கியைப் பறித்துச் சுட்டதாகவும், காவல்துறையினர் தற்காப்பின் பொருட்டு அவரை சுட நேரிட்டதாகவும் காவல்துறையினர் கூறிக் கொண்டனர். அக்சையின் தகப்பனார் அந்த மாதம் தாக்கல் செய்த குற்றவியல் நீதிப்பேராணை விண்ணப்பத்தைத் தொடர்ந்து மும்பை உயர் நீதிமன்றம் உயிருக்கு ஆபத்தான வலுப்பயன்பாட்டின் தேவை குறித்துக் கேள்வி எழுப்பிற்று. அதிலும் குறிப்பாக, வண்டியில் ஐந்து அதிகாரிகள் இருந்தனர், அக்சை அவ்வளவாக உடல் வலிமை உடையவரும் அல்லர் என்பதைச் சுட்டிக்காட்டிற்று.[141] 2025 ஜனவரியில் நீதிமன்றத்தில் தரப்பட்ட நடுவர் விசாரணை அறிக்கை காவல்துறை அதிகாரிகளின் வலுப்பயன்பாட்டை நியாயப்படுத்துவதற்கில்லை என்று முடிவுரைத்தது.[142] அக்ஷய் பறித்துக் கொண்டதாகச் சொல்லப்பட்ட துப்பாக்கியில் அவரது விரல்ரேகைகள் காணப்படவில்லை என்று அறிக்கை தெரிவித்தது.[143]

141 சப்ரங் இந்தியா, படலாபூர் பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் சாவுக்குக் காரணமான 5 காவலர்கள் மீது முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்ய பம்பாய் உயர் நீதிமன்றம் ஆணை, 22 ஜனவரி 2025.

142 தி இந்து, படலாபூர் பாலியல் வன்கொடுமை வழக்கு: காவலில் இருந்தபோது குற்றம் சாட்டப்பட்டவரின் சாவுத்திற்கு காரணமான ஐந்து காவலர்கள் மீதான விசாரணை நிறைவு, 20 ஜனவரி 2025.

143 சப்ரங் இந்தியா, படலாபூர் பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் சாவுக்குக் காரணமான 5 காவலர்கள் மீது முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்ய பம்பாய் உயர் நீதிமன்றம் ஆணை, 22 ஜனவரி 2025.

# பாதிப்புறும் குழுக்களும் சித்திரவதைச் சூழல்களும்




© Reuters/Adnan Abidi

**2021ஆம் ஆண்டு காவல்துறைக்கும் வேளாண் சட்டங்களை எதிர்த்துப் போராடும் உழவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலுக்குப் பின் தில்லி செங்கோட்டையின் முன்னால் கலகத் தடுப்பு அணியத்துடன் காவல் நிற்கும் காவல்துறையினர். இந்தியாவில் நடைபெற்ற பெருந்திரள் உழவர் போராட்டங்களில் காவல்துறை மனிதத் தன்மையின்றி நடந்து கொண்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.**

இந்தியாவில் பல்வேறு சூழல்களின் ஊடாக நடக்கும் சித்திரவதை பலதரப்பட்ட குழுக்களையும் பாதிப்புறச் செய்கிறது. அறிக்கையின் இந்தப் பிரிவு மாற்றுக் கருத்தை ஊமையாக்கவும், மனிதவுரிமைக் காப்பாளர்களையும் செயற்பாட்டாளர்களையும் செய்தியாளர்களையும் அலைக்கழிக்கவும், சமயச் சிறுபான்மையினரையும், ஏனைய விளிம்புநிலைச் சமுதாயங்களையும் ஒடுக்கவும் பரவலான முறையில் சித்திரவதை ஒரு கருவியாகப் பயன்படுவதை அலசி ஆராய்கிறது. இந்தியாவின் சில வட்டாரங்களை அரசு 'கலவரப் பகுதிகள்' என்று அறிவித்திருப்பதாலோ அல்லது குறிப்பான உள்ளூர் மற்றும் அரசியல் சூழல் காரணமாகவோ எவ்வாறு சித்திரவதையும் ஏனைய முறைகேடுகளும் குறிப்பான கடுமையுடன் வெளிப்படுகின்றன என்பதையும் அலசி ஆராய்கிறது.

# மாற்றுக் கருத்துடையோருக்கு எதிரான சித்திரவதை

தலைமையமைச்சர் நரேந்திர மோதியின் தலைமையில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது முதல், இந்தியா மனிதவுரிமைத் துறையில் கடுமையான சரிவு கண்டிருப்பதோடு, குடிமை வெளியும் விரைவாக அடைபட்டு வருகிறது.[144] இந்தியக் குடியியல் சமூகத்தின் கழுத்தை நெரிக்கும் முயற்சிகள் நீண்ட காலமாய் வெவ்வேறு அரசுகளின் கீழ் காணப்பட்டுள்ள போதிலும் கருத்து வெளியிடும் விடுமை மீதும் மனிதவுரிமைக் காப்பாளர்கள் மீதுமான தாக்குதல்கள் பாஜக ஆட்சியில் பாரிய அளவில் பெருத்துள்ளன. ஒருவகை இந்துத் தேசியத்தை (இந்துத்துவத்தை) ஊக்கி வளர்த்துக் கொண்டே எவ்வகை மாறுபட்ட குரல்களையும் ஊமையாக்க பாஜக உறுதி கொண்டுள்ளது.[145]

2014க்கும் 2024க்கும் இடையில், எல்லைகள் இல்லாத செய்தியாளர்கள் உலக ஏட்டுரிமை மதிப்புக் குறியீட்டில் இந்தியா 19 இடங்கள் நழுவி, 140இலிருந்து 159க்குத் தாழ்ந்துள்ளது. இது உருசியாவுக்கு மேலே மூன்று இடங்கள் மட்டுமே.[146] 2024இல், ஃபிரீடம் அவுஸ் இந்தியாவை "பகுதியளவே சுதந்திரம்" என்ற படிநிலைக்குத் தாழ்த்தி விட்டது. செய்தியாளர்களும் அரசுசாரா அமைப்புகளும் அரசுக் கொள்கையைக் குறைகூறும் மற்றவர்களும் தொல்லைப்படுத்தப் பட்டதே காரணம்.[147] 2023 ஜனவரியில், விடுமைக்கான கட்டுத்தளைகளுக்கு ஒரு தெளிவான எடுத்துக்காட்டாக, அரசு 2002இல் முசுலிம்களுக்கு எதிரான குசராத்துக் கலகங்களை அலசும் பிபிசி ஆவணப்படத்தைத் தடை செய்தது. விடுமைக்கான கட்டுத்தளைகளுக்கு ஒரு தெளிவான எடுத்துக்காட்டாக, அரசு 2002இல் முசுலிம்களுக்கு எதிரான குசராத்துக் கலகங்களை அலசும் பிபிசி ஆவணப்படத்தைத் தடை செய்தது.[148] இதைத் தொடர்ந்து பிபிசி அலுவலகங்கள் மீது தேடுதல்வேட்டைகள் நடைபெற்றன.[149] நாட்டின் தகவல் தொழில்நுட்ப விதிகளின் கீழான நெருக்கடிக் கால அதிகாரங்களைப் பயன்படுத்தி அதிகாரியங்கள் டுவிட்டர், யூ டியூப் போன்ற தளங்களுக்கு அந்த ஆவணப்படத்துக்கான இணைப்புகளை அகற்றும்படிக் கட்டளையிட்டன.[150]

உண்மையில், பாஜக ஆட்சிக்கு வந்த பின் குடியியல் சமூகத்தின் மீதான இணைய வழித் தணிக்கை பாஜக ஆட்சிக்கு வந்த பின் மேலும் கடுமையாகியுள்ளது. பொதுவாகச் சமூக ஊடகத் தளங்கள் இணையவழிக் குரல்களைத் தணிக்கை செய்வதற்கான அரசு வேண்டுகோள்களை ஏற்றுக் கொண்டுள்ளன.[151] 2022இல் மட்டும் இந்தியா இணையத்தை 84 தடவைக்கு மேல் மூடியுள்ளது; இது வேறு எந்த நாட்டை விடவும் கூடுதலாகும்.[152]

கூடுதலாக, பெகாசுஸ் திட்டப்பணி என்னும் பன்னாட்டுப் புல்னாய்வு இதழியல் முன்முயற்சி 2017க்கும்2023க்கும் இடையே பெகாசுஸ் வேவு மென்பொருளை அரசு பயன்படுத்தி இந்தியக் குடிமக்களை சட்டப்புறம்பாகக் கண்காணித்ததை வெளிப்படுத்தியதாம். இது ஐநா அமைப்புகளைக் கவலை கொள்ளச் செய்தது.[153] மனிதவுரிமைக் காப்பாளர்களுக்கும், செய்தியாளர்களுக்கும்,

144 நீதி மற்றும் அமைதிக்கான குடிமக்கள், இந்தியாவில் முற்றுகையிடப்பட்ட குடிமைச் சமூகம், 12 ஜனவரி 2024.

145 ஃபாரின் அஃபேர்ஸ், இந்துத் தேசியவாதத்தின் தடுத்து நிறுத்த முடியாத எழுச்சி | ஃபாரின் அஃபேர்ஸ், 13 ஏப்ரல் 2022; மேலும் காண்க சிவிக்கஸ், இந்தியா: பிரதமர் மோதியின் இரண்டாவது பதவிக்காலத்தில் குடிமைச் சுதந்திரங்கள் மீதான அச்சமூட்டும் தாக்குதல், 17 ஏப்ரல் 2024.

146 எல்லைகள் இல்லாத செய்தியாளர்கள், இந்தியத் தகவல் தொகுப்பு, [நாள் குறிக்கவில்லை].

147 ஃப்ரீடம் ஹவுஸ், இந்தியா: உலகில் சுதந்திரம் 2024 நாட்டு அறிக்கை, 2024; மேலும் காண்க வி-டெம் நிறுவனம், கடுங்கோன்மையாதல் பரவலாகிறது: ஜனநாயக அறிக்கை 2021, மார்ச் 2021, பக். 20.

148 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: சிறுபான்மையினருக்கு எதிரான அத்துமீறல்கள் அதிகரிப்பு, விமர்சகர்கள் (சிறுபான்மையினருக்கு எதிரான அத்துமீறல்கள்)', 11 ஜனவரி 2024; மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், பிபிசி ஆவணப்படத்தை இந்தியா முடக்கியது ஒரு பரந்த ஒடுக்குமுறையைப் பிரதிபலிக்கிறது, 23 ஜனவரி 2023.

149 ஜார்ஜ் ரைட், பிபிசி இந்தியா - வருமான வரி அதிகாரிகளால் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டன, 14 பிப்ரவரி 2023.

150 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: சிறுபான்மையினருக்கு எதிரான அத்துமீறல்கள் அதிகரிப்பு, விமர்சகர்கள் (சிறுபான்மையினருக்கு எதிரான அத்துமீறல்கள்)', 11 ஜனவரி 2024; மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், பிபிசி ஆவணப்படத்தை இந்தியா முடக்கியது ஒரு பரந்த ஒடுக்குமுறையைப் பிரதிபலிக்கிறது, 23 ஜனவரி 2023.

151 தி வாஷிங்டன் போஸ்ட், இந்தியா ட்விட்டரை அடக்கி, இணையத் தணிக்கைக்கு உலகளாவிய தரத்தை அமைத்தது எப்படி, 2023.

152 அக்சஸ் நவ், தொடர்ச்சியாக ஐந்தாண்டுகள்: 2022-ஆம் ஆண்டில் இணையச் சேவைகளை அதிகம் முடக்கிய நாடு இந்தியா, 28 பிப்ரவரி 2023.

153 AI, இந்தியா 2021, 2021; மனிதவுரிமைகள் ஆணையம், முடிவுரை அவதானங்கள் 2024, பத்தி 43

வழக்கறிஞர்களுக்கும், எதிர்க்கட்சி அரசியலார்க்கும் சொந்தமான குறைந்தது 300 தொலைபேசி எண்கள் இதனால் பாதிப்புற்றன என்பதைப் புலனாய்வு வெளிப்படுத்திற்று.[154]

அரசுசாரா அமைப்புகளும் பிற குடியியல் சமூக அமைப்புகளும் இலக்காக்கப்பட்டன. நெருக்கடிநிலைக் காலத்துச் சட்டமாகிய அயற் கொடை ஒழுங்குமுறைச் சட்டம் ஏற்கெனவே 2010இல் தொல்லைதரும் திருத்தங்களுக்கு உள்ளான பிறகு 2020இல் மேலும் திருத்தப்பட்டு, இதனால் அரசுசாரா அமைப்புகளின் உரிமங்களை இந்திய அரசு நீக்கவோ நிறுத்தி வைக்கவோ செய்ய இடமளிக்கப்பட்டது.[155] காட்டாக, 2016இல் அரசுசாரா அமைப்பாகிய மக்கள் கண்காணிப்பகத்தின் உரிமப் புதிப்பித்தலை மறுதலித்து விட்டது.[156] இந்த முடிவை எதிர்த்து தில்லி உயர் நீதிமன்றத்தில் மக்கள் கண்காணிப்பகம் தொடுத்த உரிமையியல் வழக்கில், இந்தக் குழு அயல் நிதியுதவியைப் பயன்படுத்தி ஐநா சிறப்பு அறிக்கையாளர்களுடன் பகிரும் தகவல் "இந்தியாவின் புகழுக்குக் கேடாக இந்தியாவின் உள்துறை அமைச்சகம் வாதிட்டது.[157] 2022 ஏப்ரலில், காவல் சித்திரவதை மற்றும் பிற மனிதவுரிமை அடைவை எதிர்மறை ஒளியில் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது" என்று மனிதவுரிமை மீறல்களை ஆவணமாக்கும் இன்னொரு முன்னணி மனிதவுரிமை அமைப்பாகிய பொதுநலவாய (காமன்வெல்த்) மனிதவுரிமை முன்முயற்சி (CHRI) என்பதன் உரிமமும் நீக்கம் செய்யப்பட்டது.[158] கிட்டத்தட்ட அதே நேரத்தில் சூழலியல் வினாக்கள், காலநிலை மாற்றம், குழந்தையுழைப்பு ஆகிய துறைகளில் இயங்கி வரும் 10 பன்னாட்டு அரசுசாரா அமைப்புகளின் உரிமங்களை அரசு நீக்கம் செய்தது.[159] கூடுதலாக, 80க்கு மேற்பட்ட ஒப்புரவு மற்றும் மனிதவுரிமை அமைப்புகள் "முன்கூட்டியே பார்வைக்குரிய வகையில்" வைக்கப்பட்டு, அவை அயலக நிதியாக்கம் ஏதும் பெறக் கூடுமானல் உள்துறை அமைச்சகத்திடமிருந்து ஒப்புதல் பெற வேண்டுமென விதிக்கப்பட்டது.[160]

## மனிதவுரிமைக் காப்பாளர்களையும், அரசியல் செயற்பாட்டாளர்களையும், செய்தியாளர்களையும் குறி வைத்தல்

குடிமைவெளி சுருங்கி வருவதற்கிடையில் மனிதவுரிமைக் காப்பாளர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் வழக்கறிஞர்களும் மற்ற குடியியல் சமூக உறுப்பினர்களும் சித்திரவதைக்கும் பிறவகை மனிதவுரிமை மீறல்களுக்கும் எளிதில் ஆளாகும் இடர் உள்ளது. அரசு அதிகாரியங்கள் பல நேரம் இந்தக் குழுக்களுக்கு எதிராகக் கையாளும் வழிகளாகத் தற்போக்கான கைதுகளும், உசாவலுக்கு முன் நீடித்த காவலடைப்பும், சித்திரவதை மற்றும் மோசமான நடத்துமுறையும், ஏனைய வன்முறை வடிவங்களும் உள்ளன.[161] "மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்களையும், செய்தியாளர்களையும், மாணவர்களையும், அரசைக் குற்றங்குறை சொல்வோரையும், அமைதிவழியில் போராடுவோரையும் வழக்குகளுக்கும் தொல்லைக்கும் ஆளாக்கக் கொடுங்கோலான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களையும் தேசியப் பாதுகாப்புச் சட்டங்களையும்" பயன்படுத்துவது அரசுசாரா அமைப்புகளால் நன்கு ஆவணமாக்கப்பட்டு, மனிதவுரிமைக் குழுவில் கவலைகளைத் தூண்டியுள்ளது.[162] குறிப்பாகச் சொன்னால், 2024அறிக்கையின் முடிவுரைக் கருத்துகளில் மனிதவுரிமைக் குழு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான பின்வரும் சிக்கல்களை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது:

154 AI, இந்தியா 2021, 2021; மனிதவுரிமைகள் ஆணையம், முடிவுரை அவதானங்கள் 2024, பத்தி 43

155 முதல் பதிவு, வெளிநாட்டு நன்கொடைகள் தொடர்பாகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மீது சிபிஐயின் நடவடிக்கை: இந்திரா காந்தியால் நிறைவேற்றப்பட்ட அயல் செலாவணி ஒழுங்காற்றுச் சட்டம் (FCRA) பல ஆண்டுகளாக எவ்வாறு திருத்தப்பட்டுள்ளது, 11 மே 2022.

156 ஓஎம்சிடி, இந்தியா: அரசு மனிதவுரிமை அமைப்புகளைத் துன்புறுத்துவதை நிறுத்த வேண்டும், 18 ஜனவரி 2021.

157 ஓஎம்சிடி, இந்தியா: அரசு மனிதவுரிமை அமைப்புகளைத் துன்புறுத்துவதை நிறுத்த வேண்டும், 18 ஜனவரி 2021.

158 ஹிந்துஸ்தான் டைம்ஸ், காமன்வெல்த் மனிதவுரிமைகள் முன்னெடுப்பின் வெளிநாட்டு நிதிக்கான உரிமம் ரத்து செய்யப்பட்டது, 26 ஏப்ரல் 2022.

159 தி இந்து, பருவநிலை மாற்றம் மற்றும் குழந்தை தொழிலாளர் விவகாரங்களில் ஈடுபட்டுள்ள 10 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கான நிதியுதவியை அரசு கட்டுப்படுத்தியுள்ளது, 14 செப்டெம்பர் 2021.

160 தி இந்து, பருவநிலை மாற்றம் மற்றும் குழந்தை தொழிலாளர் விவகாரங்களில் ஈடுபட்டுள்ள 10 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கான நிதியுதவியை அரசு கட்டுப்படுத்தியுள்ளது, 14 செப்டெம்பர் 2021.

161 OMCT, இந்தியா: பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் கீழ் 18 மனிதவுரிமைப் பாதுகாவலர்கள் தொடர்ந்து குறிவைக்கப்படுதல், 26 ஜனவரி 2022; HRW, இந்தியா: அரசின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை விமர்சகர்களைக் குறிவைத்து நடத்தப்படும் கைதுகளும் சோதனைகளும், 13 அக்டோபர் 2023.

162 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: ஐ.நா. மனிதவுரிமைகள் ஆய்வில் கடுமையான கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன, 18 நவம்பர் 2022.

அ. உயிர்பறிக்கும் வன்முறையைப் பயன்படுத்தும் விரிவான அதிகாரங்கள்;

ஆ. விதிவிலக்கான நீண்ட நெடிய காலங்களுக்குக் குறச்சாட்டோ நீதித்துறை மீளாய்வோ இல்லாமல் தடுப்புக் காவல்;

இ. "அச்சுறுத்தக் கூடிய" அல்லது "மக்களிடம் திகில் ஏற்படுத்தக் கூடிய" செயல்களுக்குப் பொறுப்பான தனியாட்களை முத்திரையிடுதல் உட்படப் பொதுப்படையான, தெளிவின்றி வரையறுக்கப்பட்ட சொற்களின் கீழ் செயலாட்சி அமைப்புகளுக்கு விரிவான அதிகாரம், குற்றமற்ற நிலை என்னும் அனுமானத்தை மீறக் கூடியதும், கருத்து மாறுபட்டவர்களுக்கும் செயற்பட்டாளர்களுக்கும் எதிராய்த் தவறாகப் பயன்படுத்தக் கூடியதுமான அதிகாரம்.[163]

இந்தியாவில் மனிதவுரிமைக் காப்பாளர்கள் துன்புறுத்தப்படுவதற்குப் பேரடையாளமான ஒரு வழக்கு 84 வயதான சேசு அவைப் பாதிரியாரும் மனிதவுரிமைக் காப்பாளரும் தலித்துகள், ஆதிவாசிகள் போன்ற நலிந்த குழுவினரின் உரிமைகளுக்காக நீண்ட நெடுங்காலமாய்க் குரல்கொடுத்து வருகிறவருமான அருள்தந்தை ஸ்டான் சுவாமியின் வழக்காகும். அவர் 2020 அக்டோபர் 8ஆம் நாள் பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளைச் சொல்லி தேசியப் புலனாய்வு முகமையால் கைது செய்யப்பட்டார்.[164] நெரிசலான தலோஜா நடுவண் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போது அவர் மோசமாக நடத்தப்பட்டார். அவரது உடல்நிலை விரைந்து மோசமாகிக் கொண்டிருந்த போதிலும் ஒன்பது மாதக் காலம் அவருக்கு மருத்துவப் பேணுகையும் பிணையும் மறுக்கப்பட்டன. முடிவில் 2021 ஜூலை 5ஆம் நாள் அவர் காவலில் இறந்து போனார். அருள்தந்தை சுவாமி இறப்பதற்கு முன் காவலில் வைக்கப்பட்டிருந்த மாதங்களில் இந்திய அரசிடம் பல முறை கவலை தெரிவித்த ஐநா மனிதவுரிமைக் காப்பாளர்கள் பற்றிய சிறப்பு அறிக்கையாளர் வெளியிட்ட அறிக்கையில் "அருள்தந்தை சுவாமியின் இறப்பு என்றென்றும் இந்தியாவின் மனிதவுரிமைப் பதிவில் ஒரு கறையாகவே இருந்து வரும்" என்று குறிப்பிட்டார்.[165]

செயற்பாட்டாளர்களுக்கு எதிராகத் தற்போக்கான கைதுகளும் சித்திரவதையும் உசாவலுக்கு முன்பான நீடித்த காவலடைப்பும் பயன்படுத்தப்படுவதைக் காட்டும் மற்றொரு வழக்கு பிரித்தானிய மனிதவுரிமைக் காப்பாளரும் வலைப்பூ எழுத்தாளருமான ஜக்தர் சிங் ஜோகல் வழக்காகும்.[166]

## வழக்கு ஆய்வு: மனிதவுரிமைக் காப்பாளர்கள் குறி வைக்கப்படுதல்

### ஜக்தார் சிங் ஜோகல்

ஜக்தார் சிங் ஜோகல்... சித்திரவதை செய்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கொலைத் தண்டனை விதிக்கத்தக்க அரசியல் குற்றச்சாட்டுகளின் பேரில் 2017 தொடக்கம் இந்தியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள பிரித்தானிய நாட்டவர் ஆவார். ஜக்தார் சீக்கிய சமயச் செயற்பாட்டாளராகவும் வலைப்பூ எழுதுகிறவராகவும் சிங் ஜோகல் சீக்கியர்களுக்கு எதிராக இந்திய அரசு செய்யும் மனிதவுரிமை மீறல்களைக் கண்டித்து வந்துள்ளார்.[167]

163 மனிதவுரிமைக் குழு, முடிவுரை அவதானங்கள் 2024, 25 ஜூலை 2024, பத்தி 27.

164 மனிதவுரிமைப் பாதுகாவலர்கள் நினைவகம், மனிதவுரிமைப் பாதுகாவலர் தந்தை ஸ்டான் சுவாமி அவர்களின் மறைவு குறித்த அறிக்கை, 6 ஜூலை 2021.

165 ஐ.நா. செய்திகள், ஆர்வலர் பாதிரியார் காவலில் சாவு, இந்தியாவின் மனிதவுரிமைப் பதிவில் ஒரு கறை: ஐ.நா. வல்லுநர், 15 ஜூலை 2021.

166 WGAD, கிறிஸ்டியன் ஜேம்ஸ் மைக்கேல் (ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இந்தியா) தொடர்பான ஐ.நா. தற்போக்கான தடுப்புக்காவல் மீதான செயற்குழு (WGAD), கருத்து எண் 88/2020, 4 மார்ச் 2021, A/HRC/WGAD/2020/88.

167 ரெட்ரஸ்: ஜக்தார் சிங் ஜோகல்; ரெப்ரீவ், ஜக்தார் சிங் ஜோகல்;

2017 அக்டோபரில் அவர் திருமணம் செய்து கொள்வதற்காக இந்தியாவுக்குப் பயணம் செய்தார். திருமணத்துக்குப் பின் மூன்று வாரம் கழித்து பஞ்சாபில் ஜலந்தர் நகரத்தில் ஒரு தெருவிலிருந்து சாதாரண உடையணிந்த காவல்துறை அதிகாரிகள் அவரைக் கடத்திச் சென்றனர். அவர்கள் தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளவும் இல்லை, ஜக்தாரைத் தளைப்படுத்துவதற்கு ஒரு கைதாணை காட்டவும் இல்லை. 2017 நவம்பர் 5ஆம் நாள் ஜக்தார் காவல்துறைக் காவலில் சிறை வைக்கப்பட்டார். 10 நாள் அவரை யாருக்கும் தெரியாமல் இடத்தைச் சொல்லாமல் அடைத்து வைத்திருந்தனர். சித்திரவதை செய்து பொய் “ஒப்புதல் வாக்குமூலம்” கொடுக்கச் செய்து அவருக்கு எதிரான பல வழக்குகளில் அதனைப் பயன்படுத்திக் கொண்டனர்.[168]

வழக்கறிஞரையோ குடும்பத்தினரையோ பிரித்தானிய உயராணையப் பெயராளரையோ அவர் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படவில்லை. ஜக்தாரைக் குற்ற வழக்குகளில் அவருக்கு எதிராக 2018இல் தாக்கல் செய்யப்பட்ட குற்ற மடல்களில் கொலை செய்வதற்கான சதி, பயங்கரவாத நடவடிக்கைகள், ஆய்தங்கள் பயன்பாடு ஆகிய குற்றங்களும் அடங்கும். “பயங்கரவாதம்” பற்றிய குறிப்புகள் சேர்க்கப்பட்டிருப்பது பெரிதும் கவலைக்குரியது. ஏனென்றால், இந்த அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டிருப்பது போல், இந்தியாவில் பயங்கரவாதக் குற்றச்சாட்டுகள் சேர்க்கப்படும் வழக்குகளில் சித்திரவதைக்கான ஆபத்து உயர்கிறது. மேலும், குறிப்பிட்ட சில பயங்கரவாதக் குற்றங்களுக்கு இந்தியச் சட்டம் கொலைத் தண்டனைக்கு வகைசெய்கிறது. அண்மைய ஆண்டுகளில் இவ்வாறான கொலைத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டும் உள்ளன.

2022 மே மாதத்தில் சட்டப்புறம்பான தன்னுரிமைப் பறிப்பு பற்றிய முதன்மையான பன்னாட்டு அதிகாரியமாகிய தற்போக்கான காவலடைப்பு பற்றிய ஐநா செயற்குழு (WGAD) ஜக்தாரின் சிறைக் காவல் பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் தற்போக்கானது எனக் கண்டது. அதற்குச் சட்ட அடிப்படை ஏதுமில்லை என்றும், அவரது நியாய உசாவல் உரிமைகள் மோசமாக மீறப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டது.[169]

2022 ஆகஸ்டில் ஐக்கிய இராச்சியத்தின் (பிரித்தானியாவின்) நுண்ணறிவுக் கண்காணிப்புக் குழுவாகிய புலனாய்வு அலுவலகத்தின் அறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து பிரித்தானிய நுண்ணறிவு முகமைகளான எம்15, எம்16 ஆகியவை இந்திய அதிகாரியங்களுடன் உளவு நுண்ணறிவைப் பகிர்ந்து கொண்டதன் மூலம் ஜக்தார் காவல் வைக்கப்படுவதற்கும் துணைசெய்தன.[170] ஜக்தாரின் சட்ட அணி ரெப்ரீவ், ரெட்ரஸ் ஆகியவற்றின் ஆதரவோடு லே டே-இல் தாக்கல் செய்த ஒரு சட்டக் கோரிக்கை ஐக்கிய அரசாட்சியின் (UK) நீதிமன்றங்களில் தீர்வாகாமல் நிலுவையில் உள்ளது.[171]

168 ரெட்ரஸ் மற்றும் ரெப்ரீவ், ஜக்தார் சிங் ஜோகல்: தற்போக்காகக் கைது செய்யப்பட்டுக் கொலைத் தண்டனையை எதிர்நோக்கும் பிரித்தானிய வலைப்பதிவர், 2023.
169 WGAD, கருத்து எண். 80/2021 ஜக்தர் சிங் ஜோகல் (இந்தியா), 4 மே 2022, A/HRC/WGAD/2021/80, பத்தி 119.
170 பிபிசி நியூஸ், ஜக்தார் சிங் ஜோகல் வழக்கு: சித்திரவதைக்கு வழிவகுத்த தகவலை அளித்ததாக இங்கிலாந்து உளவு நிறுவனங்கள் மீது குற்றச்சாட்டு, 22 ஆகஸ்டு 2022.
171 ரெட்ரஸ்: ஜக்தார் சிங் ஜோகல்;

2024 செப்டெம்பரில் தில்லி உயர் நீதிமன்றம் ஜக்பாரின் உசாவல்கள் கடுமையாகக் காலந்தாழ்ந்தவை என்று ஏற்றுக்கொண்ட போதிலும் அவருக்குப் பிணை மறுத்து விட்டது.[172] 2025 மார்ச்சில் அவர் மீதான வழக்குத் தொடுப்பு ஒன்று அவரைப் பயங்கரவாத சதித்திட்டத்துடன் தொடர்புபடுத்தும் படியான நம்பத்தக்க சான்றியம் வழங்கத் தவறிவிட்டது என்று ஒரு நீதிமன்றம் கண்டறிந்த பின் அவர் தனக்கெதிரான குற்ற வழக்கு ஒன்றில் அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கில் விடுவிக்கப்பட்ட போதிலும் ஜக்தார் காவலடைப்பிலேயே இருந்து வருவதோடு, இன்று வரையிலும் கூட இந்தியத் தேசியப் புலனாய்வு முகமை தாக்கல் செய்த எட்டு கூடுதல் வழக்குகளுக்கு முகங்கொடுக்கும் நிலையில்தான் உள்ளார். இந்த வழக்குகள் எல்லாம் சித்திரவதை செய்து வாங்கப்பட்ட அதே "ஒப்புதல்" வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டவைதாம்.

தளைப்படுத்தலுக்கும் வதைப்படுத்தலுக்கும் ஆளாக்கப்பட்டு 7 ஆண்டுக்கு மேற்பட்ட காலத்தில் ஐநா அதிகாரியங்கள் உட்பட பலரும் அவரை உடனே விடுதலை செய்யுமாறு வேண்டிக் கொண்ட போதிலும், ஜக்தார் தற்போக்கான முறையில் காவலில் அடைத்து வைக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகிறார்.

இந்தியாவில் மாற்றுக் கருத்துக்கு வாய்ப்பூட்டுப் போடுவதற்காக நடந்தேறும் பரவலான வன்முறையை மனிதவுரிமைக் குழு கண்டித்துள்ளது. 2018 முதற்கொண்டு செயல்வீரர்களும், உண்மை விளம்பிகளும், மனிதவுரிமைக் காப்பாளர்களும், ஊழலுக்கு எதிராக செய்தி தரும் செய்தியாலர்களுமான 60க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக அக்குழு குறிப்பிட்டது. இணைய வழியிலோ நேராகவோ தாக்குதல்களும் தொல்லைப்படுத்தலும் நடப்பதாக வந்த செய்திகளையும் எடுத்துக்காட்டியது.[173] மனிதவுரிமைக் குழு பின்வருவது குறித்தும் கவலை தெரிவித்தது:

> 2006க்குப் பின் 59 செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்; மனிதவுரிமைக் காப்பாளர்கள் இந்தியாவை விட்டு வெளியே சென்று ஐக்கிய நாட்டு அமைப்புகளுடன் ஊடாடுவது தடுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, காசுமீரத்து மனிதவுரிமைக் காப்பாளர் குர்ரம் பர்வேஸ் மனிதவுரிமைப் பேரவையில் கலந்து கொள்வதற்காக ஜெனிவா செல்ல விடாமல் தடுக்கப்பட்டார். அவர் 2021க்குப் பின் தற்போக்கான முறையில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.[174]

மேலும் பிப்ரவரி 2021 இல், சுரண்டல் மற்றும் பாகுபாடு நடைமுறைகளுக்கு எதிராக வாதிடும் மஸ்தூர் அதிகார் சங்கதன் என்ற அமைப்பின் தலைவரும், தொழிலாளர் உரிமை ஆர்வலருமான சிவ குமார் கடத்தப்பட்டது, தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டது மற்றும் சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பாக ஹியூமன் ரைட்ஸ் டிஃபென்டர்ஸ் அலர்ட்-இந்தியா மற்றும் மூன்று முன்னணி மனிதவுரிமை அமைப்புகளிடமிருந்து தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC) ஒரு அவசர வேண்டுகோளை விடுத்தது.[175] ஜனவரி 2021 இல், அவரது சக ஊழியரும் தலித் தொழிலாளர் உரிமை ஆர்வலருமான நொதீப் கவுர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவரது கைது நிகழ்ந்தது; நொதீப் கவுரும் காவல்துறையினரால் தாக்கப்பட்டார். தடுப்புக்காவலில் இருந்தபோது, சோனிபட்டில் உள்ள சிஐஏ (குற்றப் புலனாய்வு அமைப்பு) உறுப்பினர்களாலும், அரியானாவின் சோனிபட்டில் உள்ள குண்ட்லி காவல் நிலையக் காவல்துறையினராலும் குமார் உடல் மற்றும் மன சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. குறைந்தது ஐந்து மருத்துவப்

172 தி கார்டியன், விசாரணையின்றி இந்தியச் சிறையில் பல ஆண்டுகள் இருந்த பிரித்தானிய ஆர்வலருக்குப் பிணை மறுப்பு, 19 செப்டெம்பர் 2024.

173 மனிதவுரிமைகள் குழு, முடிவுரைப் பார்வைகள் 2024, 25 ஜூலை 2024, பத்தி 11.

174 மனிதவுரிமைகள் குழு, முடிவுரைப் பார்வைகள் 2024, 25 ஜூலை 2024, பத்தி 11.

175 சி.எச்.ஆர்.ஐ, நடவடிக்கைக்கான அவசர வேண்டுகோள் – அரியானா: சோனிபட்டில் அரியானா காவல்துறையினரால் மனிதவள மேம்பாட்டு இயக்குநர் திரு சிவகுமார் கடத்தப்படுதல், சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்படுதல், தற்போக்காகக் கைது செய்யப்படுதல், காவலில் சித்திரவதை செய்யப்படுதல் (அவசர வேண்டுகோள் – அரியானா), 27 பிப்ரவரி 2021.

பரிசோதனைகளில் துன்புறுத்தலுக்கான எந்த ஆதாரமும் கண்டறியப்படாத போதிலும், பிற்கால மருத்துவப் பரிசோதனையில் அவர் பாதங்களின் அடிப்பகுதியில் தாக்கப்பட்டதும், அவர் மீது சுடுநீர் ஊற்றப்பட்டதும், இரு பாதங்களிலும் கைகளிலும் எலும்பு முறிவுகள் ஏற்பட்டதும், அவருக்குத் தூக்கம் மறுக்கப்பட்டதும் தெரியவந்தது.[176] இறுதியில் பஞ்சாப்-அரியானா உயர் நீதிமன்றம் குமார் சித்திரவதை செய்யப்பட்டதை உறுதிசெய்தது, அரசு மருத்துவர்கள் “காவல்துறை அதிகாரிகளின் விருப்பத்திற்கு இணங்கி நடந்ததாகவும்” கூறியது.[177]

அரசியல் மற்றும் மனிதவுரிமைச் செயல்பாடுகளை ஒடுக்குவதற்கு இந்திய அதிகாரிகள் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு, பிகே-16 என்று அழைக்கப்படும் 16 செயற்பாட்டாளர்களின் வழக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.[178] தலித்துகள், பழங்குடியினர் போன்ற விளிம்புநிலைக் குழுக்களின் உரிமைகளுக்காகப் பரிந்து போராடி அறியப்பட்ட இந்தச் செயற்பாட்டாளர்கள், 2018 ஜூனுக்கும் 2020 அக்டோபருக்கும் இடையே பல்வேறு நேரங்களில் கைது செய்யப்பட்டு, “இந்திய அரசாங்கத்திற்கு எதிராகப் போர் தொடுத்தது” உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காகச் சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் (UAPA [ஊபா]) கீழ் குற்றஞ்சாட்டப்பெற்றனர்.[179] இந்த 16 செயற்பாட்டாளர்களில் ஒருவரும், மேற்சொன்ன வழக்கில் சேர்க்கப்பட்டவருமான அருள்தந்தை ஸ்டான் சுவாமி காவலில் இருந்த போது இறந்தார், மற்றவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டது, மேலும் பலர் இந்த அடக்குமுறைச் சட்டத்தின் கீழ் சிறையில் உள்ளனர்.[180]

இந்திய அரசு தன் எல்லைகளுக்கு அப்பால் உள்ள செயற்பாட்டாளர்களையும் குறிவைப்பதாகக் கூறப்படுவது குறித்தும் கவலைகள் பெருகியுள்ளன. மனிதவுரிமைகள் குழு 2024ஆம் ஆண்டில் இந்தியா குறித்த தனது ஆய்வில், “அரசியல் பகைவர்கள் மீதும் மனிதவுரிமைக் காப்பாளர்கள் மீதும் நாடுகடந்த அடக்குமுறை” குறித்துக் கவலை தெரிவித்தது.[181] அமெரிக்காவின் நியூயார்க்கில் சீக்கிய பிரிவினைவாதத் தலைவர் நிகில் குப்தாவும், கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் சீக்கியச் செயற்பாட்டாளர் அர்தீப் சிங் நிஜ்ஜாரும் அண்மையில் கொலை செய்யப்பட்ட நிகழ்வுகளால் இது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இந்தக் கொலைகளில் இந்திய அரசுக்குத் தொடர்பிருக்கும் வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.[182]

இந்தியாவில் செய்தியாளர்கள் மீதான தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன, செய்தி வெளியீடுகள் இந்தியாவை “செய்தியாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடுகளில் ஒன்று” என்று முத்திரை குத்தியுள்ளன.[183] ஊடக நிறுவனங்கள் அடிக்கடி சோதனைகளையும் கைதுகளையும் எதிர்கொள்கின்றன, பிப்ரவரி 2023 இல் பிபிசியின் புது தில்லி மற்றும் மும்பை அலுவலகங்கள் இரண்டும் சோதனை செய்யப்பட்டன,[184] அதே ஆண்டில் நியூஸ்கிளிக் அலுவலகம் மற்றும் நியூஸ்கிளிக் பத்திரிகையாளர்களின் வீடுகள் சோதனை செய்யப்பட்டன.[185] 2024ஆம் ஆண்டில், 226

176 CHRI, அவசர வேண்டுகோள் – அரியானா, 27 பிப்ரவரி 2021.

177 தி பிரிண்ட், அரியானா போலீசார் தொழிலாளர் ஆர்வலர் சிவகுமாரை சித்திரவதை செய்தனர், மருத்துவர்கள் கடமையாற்றவில்லை என்கிறது விசாரணை அறிக்கை, 23 திசம்பர் 2022.

178 அவுட்லுக் இந்தியா, தி பீமா கோரேகான் 16: ‘இந்திய அரசுக்கு எதிராகப் போர் தொடுத்ததற்காக’ எந்த ஆர்வலர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்? (தி பீமா கோரேகான் 16), 18 ஜனவரி 2024.

179 AI, பிகே16-ஐ வெளியிடக் கோரி இப்போதே செயல்படுங்கள், 12 திசம்பர் 2022.

180 அவுட்லுக் இந்தியா, பீமா கோரேகான் 16.

181 மனிதவுரிமைகள் குழு, முடிவுரைப் பார்வைகள் 2024 ஜூலை 25, பத்தி. 51

182 டைம்: இந்தியா ஏன் உள்நாட்டிலும் உலகெங்கிலும் சீக்கியர்களைக் குறிவைக்கிறது, 5 திசம்பர் 2023; அமெரிக்க நீதித்துறை, பொது விவகார அலுவலகம் | நியூயார்க் நகரில் அமெரிக்கக் குடிமகனைக் கொலை செய்யும் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டது தொடர்பாகக் நீதித்துறை குற்றச்சாட்டுகள் அறிவிக்கிறது | அமெரிக்க நீதித்துறை, 29 நவம்பர் 2023; அசோசியேட்டட் பிரஸ், ஹர்தீப் சிங் நிஜ்ஜார்: எந்தச் சீக்கியச் ச்செயற்பாட்டாளரின் கொலை கனடாவையும் இந்தியாவையும் பிரித்துள்ளது? | ஏபி நியூஸ், 20 செப்டெம்பர் 2023. மேலும் காண்க: அசோசியேட்டட் பிரஸ், கனடாவில் சீக்கியர்களை இந்தியா குறிவைப்பதாக ஆஸ்திரேலிய அயலுறவு அமைச்சர் எழுப்பும் குற்றச்சாட்டுகள், 5 நவம்பர் 2024.

183 தி நேஷன், மோதியின் இந்தியா “பத்திரிகையாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடுகளில் ஒன்று” | தி நேஷன், 8 நவம்பர் 2021.

184 ஏபி நியூஸ், சோதனைகளுக்குப் பிறகு பிபிசி மீது வரி ஏய்ப்பு செய்ததாக இந்திய அதிகாரிகள் குற்றச்சாட்டு, 17 பிப்ரவரி 2023.

185 அசோசியேட்டட் பிரஸ், நியூஸ்கிளிக்: சுயாதீன செய்தி இணையதளத்தின் ஆசிரியர் மற்றும் நிர்வாகியை இந்திய காவல்துறை கைது செய்தது | ஏபி நியூஸ், 5 அக்டோபர் 2023.

பத்திரிகையாளர்கள் குறிவைக்கப்பட்டனர், முந்தைய ஆண்டில் 194 பேர் குறிவைக்கப்பட்டனர்.[186] பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழுவின் கூற்றுப்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் 11 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர்.[187]

செய்தியாளர்களுக்கு எதிராக பயங்கரவாத எதிர்ப்பு ஊபா (UAPA) சட்டத்தைப்பயன்படுத்துவதும் ஆவணமாக்கப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டில், சிறையில் அடைக்கப்பட்ட ஏழு செய்தியாளர்களில் ஆறு பேர் ஊபா சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டனர் அல்லது குற்றஞ்சாட்டப்பெற்றனர் என்று செய்தி. இது ஒரு சாதனை அளவாகும்.[188] இந்த ஏழு பேரில் மூவர் ஓர் ஆண்டுக்கும் மேலாகச் சிறையில் இருந்து வந்தனர். இந்த ஏழு செய்தியாளர்களில் ஒருவராகிய ஆசிஃப் சுல்தான் தொடக்கத்தில் ஊபா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிணை பெற்றார்; ஆனால் விரைவில் சம்மு-காசுமீரப் பொதுக் காப்புச் சட்டத்தின் கீழ் மீண்டும் கைது செய்யப்பட்டார். இந்தச் சட்டத்தின் கீழ் தனியாட்களை முறைசார் குற்றச்சாட்டு அல்லது உசாவல் இல்லாமலே ஈராண்டு வரை சிறைவைக்க முடியும். பிணை விண்ணப்பிக்கவோ சட்டப் பெயராண்மை பெறவோ மிகக் குறுகிய அளவிலேயே வாய்ப்புண்டு.[189]

## வழக்கு ஆய்வு: செய்தியாளர்களைக் குறிவைத்தல்

### சித்திக் கப்பன்

சித்திக் கப்பன் இந்தியாவில் சமய, சாதிச் சிறுபான்மையினர் சந்தித்து வரும் மனிதவுரிமை மீறல்கள் பற்றி செய்தியளிக்கும் செய்தியாளரும் மனிதவுரிமைக் காப்பாளரும் ஆவார். 2020 அக்டோபர் 5ஆம் நாள், அவர் ஹத்ராஸ் கிராமத்தில் 19 வயது தலித்துப் பெண் கூட்டு வன்புணர்ச்சியும் கொலையும் செய்யப்பட்டது பற்றிப் புலனாய்வு செய்வதற்காகச் சென்று கொண்டிருந்த வழியில் உத்தரப் பிரதேசத்தில் மேலும் மூவருடன் கூட கைது செய்யப்பட்டார்.[190] சித்திக்கிற்கு பாப்புலர் ஃபிரண்ட் ஆஃப் இந்தியாவுடன் தொடர்புகள் இருப்பதாகக் குற்றஞ்சாட்டிய இந்திய அதிகாரிகள் அவரைக் கடுமையாக அடித்து நொறுக்கினார்கள். காவலில் வைக்கப்பட்டிருந்த போது அவருக்குச் சரிவர மருத்துவ சிகிச்சை கிடைக்கவில்லை. அவர் கொவிட்-19 நோயுற்றுப் படுத்து விட்டார்.[191] இந்தியத் தண்டனைச் சட்டம், ஊபா, பணப் பரிமாற்றத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சித்திக் கப்பான் கடுங்குற்றங்கள் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.[192] 2022 செப்டெம்பரில் பிணை வழங்கப்பட்ட பிறகும் 2023 பிப்ரவரி வரை சித்திக் சிறைவைக்கப்பட்டே இருந்தார்.

முகமது சுபேரின் வழக்கும் கூட மாற்றுக் கருத்தை மௌனமாக்கத் தற்போக்கான கைதுகளின் பயன்பாடு பெருகி வருவதற்குச் சான்றாக உள்ளது.[193] செய்தியாளரும் ஆல்ட் நியூஸ் கூட்டு நிறுவுநர்களில் ஒருவருமான சுபைர் 2018இல் பதிந்த கீச்சு (ட்வீட்) மத உணர்வுகளைப் புண்படுத்தி

186 இந்தியக் கருத்துச் சுதந்திர முன்னெடுப்பு, ஐ.நா. மனிதவுரிமைக் குழுவிற்கு இந்தியா சமர்ப்பித்த நான்காவது காலவட்ட அறிக்கையின் நிழல் அறிக்கை, [நாள் குறிக்கவில்லை]; மனிதவுரிமைகள் குழு, முடிவுரைப் பார்வைகள், ஜூலை 25 2024, பத்தி 51.

187 செய்தியாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு, 2020க்கும் 2025க்கும் இடையே இந்தியாவில் தாக்குதலுக்கு ஆளான செய்தியாளர்கள், (நாள் குறிக்கவில்லை).

188 தி வயர், சிறையில் அடைக்கப்பட்ட செய்தியாளர்களின் எண்ணிக்கை புதிய உலக சாதனை, இந்தியாவில் ஏழு பேர் சிறையில், 14 திசம்பர் 2022.

189 தி வயர், சிறையில் அடைக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை புதிய உலக சாதனை%3B இந்தியாவில் ஏழு பேர் சிறையில்,14 திசம்பர் 2022; தி வயர், 'பொது சேவை அறிவிப்பின் தவறான பயன்பாடு': காஷ்மீர் பத்திரிகையாளர் ஆசிப் சுல்தானின் மறுகைதுக்கு பத்திரிகை அமைப்புகள் கண்டனம், 13 ஏப்ரல் 2022.

190 தி வயர், 'என் போராட்டத்தைத் தொடர்வேன்': இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான சிறைவாசத்திற்குப் பிறகு சித்திக் கப்பன் விடுதலை, 2 பிப்ரவரி 2023.

191 தி வயர், பயங்கரவாதக் குழுக்களுடனான தொடர்புகளை ஒப்புக்கொள்ள காவல்துறை தன்னை 'சித்திரவதை' செய்ததாக சித்திக் கப்பன் கூறுகிறார், 4 பிப்ரவரி 2023.

192 முன்னணிப் பாதுகாவலர்கள் அமைப்பின் மனிதவுரிமைப் பாதுகாவலரும் பத்திரிகையாளருமான சித்திக் கப்பன், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 7 பிப்ரவரி 2023 அன்று சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

193 ஓஎம்சிடி, இந்தியா: பத்திரிகையாளர் மற்றும் மனிதவுரிமைப் பாதுகாவலர் முகமது சுபைர் தன்னிச்சையாகக் கைது செய்யப்பட்ட சம்பவம், 12 ஜூலை 2022.

விட்டதாக அதிகாரியங்கள் கூறிக் கொண்டதால் 2022 ஜூன் 27ஆம் நாள் அவர் கைது செய்யப்பட்டார். குறிப்பாக சமயச் சிறுபான்மையினர்க்கு எதிராக வெறுப்புப் பேச்சும் தவறான தகவலும் என்பது குறித்து ஆல்ட் நியூஸ் செய்திகள் வெளியிட்டுக் கொண்டிருந்தமைக்கு நடுவில் அவரது சிறையடைப்பு நிகழ்ந்தது. அவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு மாநிலங்களிலும் அவர்குக்கு எதிராகப் பற்பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்தியத் தண்டனைச் சட்டம், அயலக நிதிசேர்ப்பு விதிமுறைகள் உட்பட பல்வேறு சட்டங்களின் கீழ் அவர் மீது குற்றஞ்சாற்றப்பட்டது. இது தற்சார்பான இதழியலை ஒடுக்கும் முயற்சி என்று பரவலாகப் பார்க்கப்பட்டது. சட்டத் தொல்லைப்படுத்தலுக்கும் அரசியல் உள்நோக்கமுடைய குற்றச்ச்சாட்டுகளுக்கும் முகங்கொடுத்துக் கிட்டத்தட்ட ஒரு மாதக் காலம் காவலில் அடைபட்டிருந்த பின் இந்திய உச்ச நீதிமன்றம் 2022 ஜூலை 20ஆம் நாள் அவருக்குப் பிணை வழங்கியதோடு, அவர் மீதான குற்றச்சாட்டுகள் அதீதமானவை என்று சொல்லித் தள்ளுபடியும் செய்து விட்டது.[194] சம்மு-காசுமீரத்திலிருந்து செய்தி அறிக்கையிடும் செய்தியாளர்களுக்கு எதிராகவும் இதே போன்ற மீறல்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, செய்தியாளரும் மனிதவுரிமைக் காப்பாளருமான சஜத் குல் சிறிநகரில் துப்பாக்கிச் சண்டையின் போது உறவினர் கொல்லப்பட்டதற்கு ஒரு குடும்பம் எதிர்ப்புத் தெரிவிக்கும் காணொளி பதிவிட்டமைக்காக 2022 ஜனவரியில் கைது செய்யப்பட்டார். அதே மாதத்தில் பிணை வழங்கப்பட்ட போதிலும் உடனடியாகவே சம்மு காசுமீரப் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மீண்டும் கைது செய்யப்பட்டு, ஈராண்டுக்கு மேல் காவலில் இருந்த பிறகு 2024 ஜூலை 8ஆம் நாள்தான் விடுவிக்கப்பட்டார்.[195] வேறொரு வழக்கில், தற்சார்பான செய்தி நிறுவனமான காசுமீர் வல்லாவின் உரிமையாளரும் ஆசிரியருமான ஃபகத் ஷா 2022 பிப்ரவரியில் கைது செய்யப்பட்டு, 600 நாள் காவலில் கழித்தார்.[196] பிணை வழங்கப்பட்டு,தனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பையப் பைய நீக்கம் செய்யப்படக் கண்ட போதிலும், ஷா 2023 திசம்பர் வரை சிறைப்பட்டே இருந்து வந்தார்.[197] காவலில் இருந்த போது குறைந்தது 20 நாள் தனிமைச் சிறைக்கு ஆளாக்கப்பட்டார்.[198]

## போராட்டங்களில் சித்திரவதை

இந்திய ஆட்சியாளர்கள் வன்முறைவழி அடக்குமுறை நடவடிக்கைகளில் மாற்றுக் கருத்தை மௌனமாக்கியுள்ளனர். நாடெங்கும் கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்த அல்லது கலைத்து விரட்டத் தடியடிகளும்,[199] வேட்டுக் குழல்களும்,[200] குண்டுக் குருணைகளும்,[201] கண்ணீர்ப்புகைக் குப்பிகளும்[202] பிறவகை உயிராபத்துக் குறைவான ஆய்தங்களும் வன்முறை வடிவங்களும் பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CrPC) – இப்போது பாரதிய நகரிக் சுரட்சா சன்கிதா (BNSS) இத்தகைய அமைப்புசார் மிகை வன்முறைப் பயன்பாட்டுக்கு உதவும் வகையில் அதன் தெளிவற்ற

194 முன்னணிப் பாதுகாவலர்கள், முன்னணிப் பாதுகாவலர்கள் அமைப்பின் மனிதவுரிமைப் பாதுகாவலர் முகமது சுபைர், 20 ஜூலை 2022 அன்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

195 முன்னணிப் பாதுகாவலர்கள், மனிதவுரிமைப் பாதுகாவலர் மற்றும் பத்திரிகையாளர் சஜாத் குல் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார், 15 அக்டோபர் 2024; தி வயர், சிறையில் அடைக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை புதிய உலக சாதனை, இந்தியாவில் ஏழு பேர் சிறையில், 14 திசம்பர் 2022.

196 அல் ஜசீரா, காஷ்மீர் பத்திரிகையாளர் ஃபஹத் ஷா 600 நாட்களுக்குப் பிறகு சிறையிலிருந்து வெளியேறினார், 23 நவம்பர் 2023; தி வயர், சிறையில் உள்ள பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை புதிய உலக சாதனை, இந்தியாவில் ஏழு பேர் சிறையில், 14 திசம்பர் 2022.

197 தி கார்டியன், 'சிறை உங்களை மெதுவாக நசுக்குகிறது': சிறைத் துன்பம் குறித்து காஷ்மீர் பத்திரிகையாளர் நினைவுகூர்கிறார், 5 திசம்பர் 2023.

198 தி கார்டியன், 'சிறை உங்களை மெதுவாக நசுக்குகிறது': சிறைத் துன்பம் குறித்து காஷ்மீர் பத்திரிகையாளர் நினைவுகூர்கிறார், 5 திசம்பர் 2023.

199 தி வயர், இந்தியக் காவல்துறையினரால் 'தடி வன்முறை'யின் தவறான பயன்பாடு, 18 மே 2018.

200 மக்கள் கண்காணிப்பகம், தூத்துக்குடியை உலுக்கிய கோடைக்காலம்: ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டங்களும் காவல்துறை துப்பாக்கிச் சூடுகளும், 2018.

201 அல்ஜசீரா, காஷ்மீர் குழந்தைகள் மீது பெல்லட் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதை இந்தியா முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என ஐ.நா. தலைவர் வேண்டுகோள், 30 ஜூன் 2021.

202 ராய்ட்டர்ஸ், கொல்கத்தா மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானோர் மீது இந்திய காவல்துறை கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியது, 27 ஆகஸ்டு 2024.

மொழி அமைந்துள்ளது; அது செயலளவில் கூட்டங்களைக் கட்டுப்படுத்தவும் கிளர்ச்சிகளைக் கலைக்கவும் வலுப்பயன்பாட்டுக்கு இடமளிக்கிறது. எடுத்துக்காட்டாக BNSS-2023 பிரிவு 148 ஆனது நீதிநடுவர் அல்லது காவல்நிலையப் பொறுப்பதிகாரியின் ஒப்புதலோடு "பொது அமைதியைக் குலைக்கக் கூடிய விதத்தில்" சட்டப் புறம்பாகக் கூடியிருப்பவர்கள் கலைந்து செல்லும்படி வாய்மொழி எச்சரிக்கையை மதித்து நடக்கா விட்டால் அவர்களுக்கு எதிராகக் காவல்துறையினர் வன்முறைப் பயன்பாட்டைச் செய்ய அனுமதிக்கிறது.[203] ஆனால் எவ்வகையான சட்டப் புறம்பான கூடுகைகளைக் கலைக்க வன்முறையைக் கையாள வாய்ப்புள்ளது என்று BNSS குறித்துரைக்கத் தவறுகிறது. "சட்டப் புறம்பான கூடுகைகளை"க் கலைக்க எது ஏற்புடைத்த வன்முறைப் பயன்பாடு என்பது குறித்து அதில் தெளிவும் இல்லை. ஏனென்றால் இது தகவுப் பொருத்தம், தேவை, பன்னாட்டுச் சட்டமும் தரநிலைகளும் உயிராபத்தான வன்முறைக்கு விதித்துள்ள தடை ஆகியவற்றுக்கும் தொடர்புடையதாகும்.

போராட்டங்கள் நடக்கும் சூழல்களில் வன்முறைப் பயன்பாட்டைக் கண்டிப்பாக ஒழுங்கியக்கும் பன்னாட்டு மனிதவுரிமைத் தரநிலைகள் உள்ளன. அமைதியாகக் கூட்டங்கூடுவதற்கான உரிமை பற்றிய பொதுக் கருத்துரை 37 என்பது கூட்டத்தைக் கலைப்பது அல்லது ஒரு குற்றத்தைத் தடுப்பது போன்ற முறையான குறிக்கோள்களுக்கு ஏற்ற தகவுக்கு மேல் சட்டச் செயலாக்கம் வலுப்பயன்பாடு செய்யக் கூடாது என்பதைத் தெளிவாக்குகிறது.[204] இதேபோல், "கண்டிப்பாகத் தேவை" என்னும் போதும் "அவர்களின் கடமையை ஆற்ற வேண்டிய அளவுக்கும்" மட்டுமே வலுப்பயன்பாடு இருக்க வேண்டும், ஒருபோதும் தகவு மீறி இருக்கக் கூடாது என்று சட்டச் செயலாக்க அலுவலர்களுக்கான ஐநா நடத்தைநெறி சொல்கிறது.[205] மேலும் சட்டச் செயலாக்க அலுவலர்களின் வலுப்பயன்பாடு மற்றும் சூட்டுக்கருவிகளின் பயன்பாடு பற்றிய ஐநா அடிப்படைக் கொள்கைகள் தரும் எச்சரிக்கை: தொடர்பற்ற ஆட்களுக்கு ஊறு நிகழ்வதைக் குறைந்தபட்சமாக்கும் பொருட்டு உயிராபத்தில்லாத ஆய்தங்களின் பயன்பாட்டைக் கவனமாகக் கட்டுக்குள்ளாக்க வேண்டும்.[206]

அறிக்கையின் இந்தப் பிரிவில் விளக்கிக் காட்டியிருப்பது போல், இந்திய அதிகாரியங்கள் போராட்டங்களின் போது காவல் பணி செய்வதில் பலநேரம் இந்தப் பன்னாட்டுத் தரநிலைகளை மதிப்பதில்லை. 2024இல் கொல்கத்தாவில் ஒரு மருத்துவமனையில் பெண் மருத்துவர் ஒருவர் வன்புணர்ச்சியும் கொலையும் செய்யப்பட்டது குறித்து நாடுதழுவிய ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து என்ன நடந்தது என்பது இதற்குத் தெளிவான எடுத்துக்காட்டு ஆகும்.[207] எதிர்வினையாக கொல்கத்தா காவல்துறையும் மேற்கு வங்காளக் காவல்துறையும் கண்ணீர்ப் புகையும் நீர்ப் பீரங்கிகளும் பயன்படுத்தின. பெருந்திரளானோர் தற்போக்காகத் தளைப்படுத்தப்பட்டனர், குறைந்தது 100 போராட்டக்காரர்கள் சிறைப்படுத்தப்பட்டனர்.[208] சிறைப்படுத்தப்பட்டவர்கள் காவலில் இருந்த போது சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டதாகப் பிறகு செய்தியறிக்கைகள் வந்தன.[209]

ஆண்டுக்கணக்கில் சம்மு-காசுமீர வட்டாரத்தில் செயல்படும் காவல் படைகளும் பாதுகாப்புப் படைகளும் குருணைத் தோட்டாக்கள் பயன்படுத்திக் கண்பார்வைச் சேதம், மற்றும் நெடுநாளைய ஊனங்கள் உட்படக் கடுங்காயங்கள் ஏற்படுத்தி வருகின்றன.[210] இவ்வட்டாரத்தில் 2016இல் ஏற்பட்ட

---

203 இந்திய அரசு, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS), 2023, s148, பக். 45. இது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (CrCP) 129, 1973

204 மனிதவுரிமைக் குழு, பொதுக் கருத்து எண் 37, 17 செப்டெம்பர் 2020, CCPR/C/GC/37, பத்தி 79; OHCHR, சட்ட அமலாக்க அதிகாரிகளால் படைபலம் மற்றும் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதற்கான அடிப்படைக் கோட்பாடுகள், 7 செப்டெம்பர் 1990, கோட்பாடுகள் 3 மற்றும் 5(b).

205 ஐ.நா. பொதுச் சபை, சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கான நடத்தை விதிகள், 17 திசம்பர் 1979 தேதியிட்ட பொதுச் சபை தீர்மானம் 34/169 (ஐ.நா. நடத்தை விதிகள்).

206 ஐ.நா. அடிப்படைக் கோட்பாடுகள், கோட்பாடு 3 மற்றும் 5(b).

207 பிபிசி, இந்தியாவில் மருத்துவமனையில் மருத்துவர் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை செய்யப்பட்டதை அடுத்து போராட்டங்கள் வெடித்தன, 14 ஆகஸ்டு 2024.

208 பிபிசி, இந்திய மருத்துவர் கொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை குண்டு வீசப்பட்டது, 27 ஆகஸ்டு 2024.

209 தி டெலிகிராஃப் இந்தியா, ஆர்.ஜி. கர் போராட்டங்கள் | பாலியல் வன்கொடுமைக்கு எதிரான போராட்டக்காரர் காவலில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பான சிபிஐ விசாரணை உத்தரவுக்கு கல்கத்தா உயர் நீதிமன்றம் தடை விதித்தது, புதிய சிறப்புப் புலனாய்வுக் குழு மறுஆய்வுக்கு உத்தரவு – டெலிகிராஃப் இ, 11 நவம்பர் 2024

210 AI, காஷ்மீரில் பார்வை மங்குதல்: பெல்லட்-சுடும் ஷாட்கன்களின் தாக்கம், 13 செப்டெம்பர் 2017

எழுச்சியின் போது குருணைத் தோட்டாக்களால் 1,100க்கு மேற்பட்டோர் பார்வை இழந்தனர்.[211] 2021இல் ஐநா பொதுச் செயலர் அந்தோணியோ குத்தரஸ் சம்மு-காசுமீரத்தில் போராடும் இளம்படியினருக்கு எதிராகக் குருணைத் தோட்டாக்கள் பயன்பாடு குறித்துக் கவலை தெரிவித்தார்.[212]

பல நேர்வுகளில், சூட்டுக் கருவிகள், குருணைத் தோட்டாக்கள் பயன்பாடு உட்பட இந்திய அதிகாரியங்கள் பயன்படுத்தும் வன்முறையின் அளவு அநேகமாய்ப் பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் சித்திரவதைக்கும் மோசமான நடத்துமுறைக்கும் ஒப்பாகும்.[213] பாதுகாப்புப் படைகள் நடத்தும் தடியடிப் பயன்பாடு அனுமதிக்கத்தக்க வன்முறையை விஞ்சி மீண்டும் மீண்டும் தலைதூக்கும் நடைமுறையாக உள்ளது. சித்திரவதை குறித்த ஐநா சிறப்பு அறிக்கையாளர் கூறுவது போல், "தடிகள் என்பவை மற்றத் தீமைக்குறைவான கருவிகளின் பயன்பாடு வழியாக அடைய முடியாத நியாயமான சட்டச் செயலாக்க நோக்கம் எதையும் நிறைவேற்றித் தருவதில்லை."[214]

இந்தியாவில் போராட்டங்கள் பரவலாகவும் வன்முறையாகவும் அடக்கப்படுவதற்குச் சான்றாக 2020இல் கொண்டுவரப்பட்ட மூன்று புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து ஓராண்டுக் காலம் நடந்த உழவர் போராட்டங்களுக்கான அரசின் எதிர்வினையை எடுத்துக்காட்டலாம்.[215]

## வழக்கு ஆய்வு: போராட்டக்காரர்கள் சித்திரவதை

### உழவர் போராட்டங்கள்

2020இல், நாடெங்கும் வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. இவற்றில் ஆயிரக்கணக்கான மக்கள் தெருவில் இறங்கிப் போராடினார்கள். ஓராண்டுக் காலம் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற போது சட்டச் செயலாக்கம் வன்முறை கொண்டு விடையிறுத்தது. கூட்டங்களைக் கலைக்க கண்ணீர்ப்புகையும் தடிகளும் பயன்படுத்தியது.[216] இதனால் 700க்கு மேற்பட்ட உழவர்கள் உயிரிழந்தார்கள்.[217] இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து மனிதவுரிமைகளுக்கான உயராணையர் வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவில் அதிகாரியங்களும் போராட்டக்காரர்களும் "அதிகபட்ச நிதானம் கடைப்பிடிக்கும் படியும், அமைதியாகக் கூட்டங்கூடும் உரிமையைப் பாதுகாக்கும் படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது.[218] போராட்டங்களை வன்முறை கொண்டு அடக்கியொடுக்குவது அடுத்து வந்த ஆண்டுகளிலும் தொடர்ந்துள்ளது. 2021இல் நடந்த உழவர் போராட்டங்களையொட்டி அரசு வழங்கிய உறுதிமொழிகளுக்குப் பொறுப்பேற்கக் கோரித் தொழிலாளர் சங்கங்களும் மற்றவர்களும் 2024 பிப்ரவரியில் ஒழுங்கு செய்த ஆர்ப்பாட்டத்தின் போது காவல்துறை ஏற்படுத்திய கடுங்காயங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளன.[219]

211 அல்-ஜசீரா, காஷ்மீர் குழந்தைகள் மீது பெல்லட் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதை இந்தியா நிறுத்த வேண்டும் என ஐ.நா தலைவர் அல்-ஜசீராவிடம் கேட்டுக்கொண்டார் | குழந்தைகள் உரிமைகள் செய்திகள் | அல்-ஜசீரா, 30 ஜூன் 2021

212 அல்-ஜசீரா, காஷ்மீர் குழந்தைகள் மீது பெல்லட் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதை இந்தியா நிறுத்த வேண்டும் என ஐ.நா தலைவர் அல்-ஜசீராவிடம் கேட்டுக்கொண்டார் | குழந்தைகள் உரிமைகள் செய்திகள் | அல்-ஜசீரா, 30 ஜூன் 2021

213 ஐ.நா. மனிதவுரிமைகள் மன்றம், அமைதியான முறையில் கூடுவதற்கும் சங்கம் அமைப்பதற்குமான உரிமைகள் மீதான சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ட் நயலெட்சோசி வூல் அவர்களின் அறிக்கை, அமைதியான போராட்டங்களின் சூழலில் மனிதவுரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சட்டச் செயலாக்க, 2024 ஜனவரி 31, A/HRC/55/60.

214 ஒமேகா ஆராய்ச்சி அறக்கட்டளை, போராட்டக்காரர்களுக்கு எதிரான அரசின் வன்முறை: உயிரிழப்பை ஏற்படுத்தாத ஆயுதங்களின் பயன்பாடு குறித்த கண்ணோட்டங்களும் போக்குகளும், 2024, பக். 26.

215 ஐக்கிய அரசாட்சி நாடாளுமன்ற நூலகம், இந்தியாவில் விவசாயிகள் போராட்டங்களும் வேளாண் சீர்திருத்தங்களும், 13 திசம்பர் 2021.

216 பிபிசி, இந்தியப் போராட்டம்: மாபெரும் டிராக்டர் பேரணியில் விவசாயிகள் தில்லியின் செங்கோட்டையை உடைத்தனர், 26 ஜனவரி 2021.

217 பிபிசி, இந்திய விவசாயிகள் போராட்டங்கள்: பஞ்சாப் குடும்பங்கள் தங்கள் இறந்தவர்களுக்காக துக்கம் அனுசரிக்கின்றன, 8 திசம்பர் 2021. போராட்டங்களில் நடந்த வன்முறைக்கான பிற எடுத்துக்காட்டுகளில் நியூஸ்கிளிக், காவல்துறை தடியடி நடத்தியதால், உத்தரப் பிரதேசத்தில் தலித் போராட்டங்கள் வன்முறையாக மாறின | நியூஸ்கிளிக், 2 ஏப்ரல் 2018 மற்றும் ஸ்க்ரோல்.இன், பீமா கொரேகான் வன்முறையைத் தூண்டியதாகக் கூறப்படும் நபரைக் கைது செய்யக் கோரி மும்பையில் ஆயிரக்கணக்கானோர் பேரணி, 26 மார்ச் 2018 ஆகியவை அடங்கும்.

218 ஐ.நா செய்திகள், இந்தியா: தொடர் போராட்டங்களில் 'அதிகபட்ச நிதானத்தைக்' கடைப்பிடிக்குமாறு ஐ.நா மனிதவுரிமைகள் அலுவலகம் வலியுறுத்துகிறது, 7 பிப்ரவரி 2021.

219 AI, இந்தியா: போராட்டத்தின் விலை சாவாக இருக்கக்கூடாது, 22 பிப்ரவரி 2024

2021இலும் 2024 பிப்ரவரியிலும் நடைபெற்ற போராட்டங்களை அடக்கியொடுக்கக் கையாளப்பட்ட உத்திகளில் மிகையான வலுப்பயன்பாடும், இணைய முடக்கங்களும், போராட்டக்காரர்களின் கடவுச்சிட்டைகளையும் நுழைவிசைவுகளையும் நீக்கம் செய்வதாக மிரட்டல்களும், ஊர்வலம் செல்ல விடாமல் தடுக்க முள்கம்பி வேலியாலும் ஆணிகளாலும் கட்டப்பட்ட கனத்த தடைவேலிகளும் அடங்கும்.[220] ரப்பர் தோட்டாக்கள், காது கேட்கும் திறனில் பழுதுகள் ஏற்படுத்தவல்ல நெடுந்தொலைவு ஒலிப் பொறிகள், பறக்கும் பொறிசார் கண்ணீர்ப் புகை ஏவிகள் உட்பட உயிராபத்துக் குறைவான ஆய்தங்களின் பயன்பாடும் ஆவணமாக்கபப்பட்டது.[221] பறக்கும் பொறிசார் கண்ணீர்ப்புகை ஏவிகள் முதலில் பன்னாட்டு எல்லைகளின் பாதுகாவலுக்கு வடிவமைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது என்றாலும் போராட்டங்களைக் அடக்குவதற்கு மென்மேலும் பயன்படுத்தப்படுகிறது.[222]

பாதுகாப்புப் படைகள் இரும்புக் குருணைத் தோட்டாக்களைப் பயனபடுத்தியதில் மோசமான விழிக் காயங்கள் ஏற்பட்டுள்ள செய்திகளும் மேற்கொண்டு வந்துள்ளன.[223] 2024 பிப்ரவரி ஆர்ப்பாட்டங்களின் போது ஏற்பட்ட காயங்களால் குறைந்தது நான்கு போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.[224] காவலில் இருந்த போது காவல்துறை மிருகத்தனமாக நடந்து கொண்டது பற்றிய குற்றச்சாட்டுகளும் வந்தன; காட்டாக, காவலில் அடைபட்டிருந்த ஒரு போராட்டக்காரரைக் கழுத்தைச் சுற்றிக் கயிறு கட்டி இழுத்ததில் தலைக்காயமும் கூட்டு எலும்புமுறிவுகளும் ஏற்பட்டனவாம்.[225]

அமைதியான ஆர்ப்பாட்டங்கள் நடக்கும் சூழலில் மிகையளவான வலுப்பயன்பாடும் சித்திரவதையும் இடம்பெறுவதற்கு இன்னொரு முக்கிய எடுத்துக்காட்டு சர்ச்சைக்குரிய குடியுரிமைச் சட்டத் திருத்தத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு ஆட்சியாளர்கள் ஆற்றிய எதிர்வினை ஆகும்.

220 AI, இந்தியா: அரசு விவசாயிகளின் போராட்டங்களை நசுக்குவதையும், எதிர்ப்பாளர்களை அரக்கர்களாகச் சித்தரிப்பதையும் நிறுத்த வேண்டும், 09 பிப்ரவரி 2021; ஹெச்.ஆர்.டபிள்யூ, இந்தியா: அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் விவசாயிகளின் உரிமையைப் பாதுகாப்போம், 29 பிப்ரவரி 2024; ஹிந்துஸ்தான் டைம்ஸ், போராட்டத்தின் போது வன்முறையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு எதிராக அரியானா காவல்துறையின் பெரிய நடவடிக்கை, 29 பிப்ரவரி 2024; நிக்கெய் ஆசியா, இந்தியாவின் மாபெரும் விவசாயப் போராட்டங்கள் காவல்துறையின் கொடூரம் குறித்த குற்றச்சாட்டுகளைத் தூண்டுகின்றன, 28 பிப்ரவரி 2024.

221 PUCL, எங்கள் விவசாயிகளுக்கு எதிரான போரை நிறுத்துங்கள் – மக்கள் உரிமைக் கழகம், 15 பிப்ரவரி 2024; தி வயர், பெல்லட் துப்பாக்கிகளின் பயன்பாட்டை உச்ச நீதிமன்றம் அவசரமாக ரத்து செய்ய வேண்டும் என்பதை விவசாயிகளின் போராட்டம் காட்டியுள்ளது, 2 மார்ச் 2024; யூரோநியூஸ், இந்திய விவசாயிகள் போராட்டத்தில் ட்ரோன்கள் மூலம் காவல்துறை கண்ணீர்ப் புகையை வீசியது, 13 பிப்ரவரி 2024; ஸ்கை நியூஸ், புது தில்லியை நோக்கிப் பேரணியாகச் சென்ற விவசாயிகள் மீது ட்ரோன்கள் மூலம் கண்ணீர்ப் புகை வீசப்பட்டது, 13 பிப்ரவரி 2024; பிபிசி நியூஸ், போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது இந்திய காவல்துறை கண்ணீர்ப் புகையை வீசுவதைக் காணுங்கள், 13 பிப்ரவரி 2024.

222 ஹிந்துஸ்தான் டைம்ஸ், பாகிஸ்தான் எல்லையில் போராடும் விவசாயிகள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசப் பயன்படுத்தப்படும் ட்ரோன்களை அரியானா எவ்வாறு பயன்படுத்துகிறது, 14 பிப்ரவரி 2024.

223 அல் ஜசீரா, “எங்களுக்குக் கண்ணியம் வேண்டும்”: புதிய ஒப்பந்தத்தைக் கோரி, மரத்தூள் உருண்டைகளையும் ட்ரோன்களையும் மீறிப் போராட்டம் நடத்தும் இந்திய விவசாயிகள், 21 பிப்ரவரி 2023; மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் விவசாயிகளின் உரிமையைப் பாதுகாப்போம், 29 பிப்ரவரி 2024.

224 இண்டிபெண்டன்ட், காவல்துறை வன்முறையில் ஒருவர் பலி; இந்திய விவசாயிகள் தில்லியை நோக்கி பேரணியைத் தொடர்ந்தனர், 21 பிப்ரவரி 2024. மேலும் காண்க சப்ரங்இந்தியா, விவசாயிகள் போராட்டம்: போராட்டத்தில் ஈடுபட்ட மேலும் மூன்று விவசாயிகள் மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்தனர்; மொத்த பலி எண்ணிக்கை 10 ஆக உயர்ந்தது, 19 மார்ச் 2024.

225 ஏபிபி லைவ், தலையில் காயம், எலும்பு முறிவுகள், கழுத்தில் கயிறு கட்டுதல்: கைது செய்யப்பட்ட போராட்டக்காரர் காவலில் ‘சித்திரவதை’ செய்யப்பட்டதாக விவசாயத் தலைவர் குற்றச்சாட்டு, 2024 பிப்ரவரி 25; ஏன்ஐ, கைது செய்யப்பட்ட போராட்டக்காரர் காவலில் சித்திரவதை செய்யப்பட்டதாக விவசாயத் தலைவர் குற்றச்சாட்டு, 25 பிப்ரவரி 2024.

# வழக்கு ஆய்வு: போராட்டக்காரர்கள் சித்திரவதை

## குடியுரிமைச் சட்ட எதிர்ப்புப் போராட்டங்கள்

குடியுரிமைத் திருத்தச் சட்டம் பாகிஸ்தான், வங்காள தேசம், ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளிலிருந்து 2015க்கு முன் இந்தியாவில் நுழைந்த வந்த சமயச் சிறுபான்மையினருக்குக் குடியுரிமை வழங்குவதை முடுக்கி விரைவுபடுத்துகிறது. ஆனால் முசுலிம்களை விலக்கி விடுகிறது.[226] விலக்கி ஒதுக்கும் தன்மையதும், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள சமயச் சார்பின்மைக் கொள்கைகளுக்குக் குழிபறிப்பதும் ஆகும் என்று அதன் எதிராளிகள் வாதிடுகின்றனர். 2019 திசம்பரில் இச்சட்டம் இயற்றப்பட்டதற்கு எதிராக நாடுதழுவிய போராட்டங்கள் மூண்டன. பத்தாயிரக்கணக்கானோர் தெருவில் இறங்கிப் போராடினார்கள். இந்தியாவின் பல பகுதிகளில் பத்தாயிரக்கணக்கான கூடுகைகள் தடை செய்யப்பட்டன.[227]

இந்தப் போராட்டங்களைத் தொடர்ந்து வெளிவந்த ஏராளமான செய்தியறிக்கைகள் சித்திரவதையையும், கூட்டங்களுக்கும் போராட்டக்காரர்களுக்கும் ஒதுங்கி ஓரமாக நிற்பவர்களுக்கும் எதிராகக் கண்மூடித்தனமாக உயிர்த் தோட்டாக்கள் சுடுவது உள்ளிட்ட மிகையளவான வலுப் பயன்பாட்டையும் ஆவணமாக்குகின்றன.[228] இந்தஅடக்குமுறையின் போது நாடெங்கும் குழந்தைகள் உட்படக் குறைந்தது 31 பேர் உயிரிழந்தனர். உத்தரப் பிரதேசத்தில் 14 போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டதாக அல்லது சூட்டுக் கருவிக் காயங்களால் உயிரிழந்ததாகத் தெரிகிறது.[229] 2020 ஜனவரியில் நடைபெற்ற உண்மையறியும் புலனாய்வு வெளிப்படுத்தியிருக்கும் செய்தி என்னவென்றால், போராட்டங்களில் பங்கேற்றதற்காகக் கிட்டத்தட்ட 41 குழந்தைகள் சிறை வைக்கப்பட்டுக் காவல் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். வயதுவந்தோருடன் கூட சிறாரும் காவலில் வைக்கப்பட்டு அவர்கள் சித்திரவதை செய்யப்படுவதைக் காணும்படிச் செய்யப்பட்டனராம்.[230] உயிர்பிழைத்தவர்களின் வாக்குமூலங்கள்…காவல்துறையினர் குண்டாந்தடிகளால் கடுமையாக அடித்ததும், உறங்க விடாமல் செய்தது, மிரட்டியது, குடிநீர் கொடுக்க மறுத்தது உள்ளிட்ட பிறவகைகளில் முறைகேடுகளுக்கு ஆளாக்கியதும் எப்படி என்று விவரிக்கின்றன.[231]

226 பிபிசி நியூஸ், சிஏஏ: இந்தியாவின் புதிய குடியுரிமைச் சட்டம் விளக்கம், 12 மார்ச் 2024

227 பிபிசி நியூஸ், குடியுரிமைச் சட்டப் போராட்டங்கள்: இந்தியாவில் மூவர் உயிரிழப்பு, ஆயிரக்கணக்கானோர் கைது, 19 திசம்பர் 2019.

228 தி வயர், பிஜ்னோரில் குடியுரிமை திருத்தச் சட்டப் போராட்டத்திற்குப் பிறகு உ.பி. காவல்துறையினரால் தாக்கப்பட்ட குழந்தைகள், நெஞ்சை உலுக்கும் சம்பவங்களை விவரிக்கின்றனர், 25 திசம்பர் 2019; ஓஎம்சிடி, உத்தரப் பிரதேசத்தில் மனிதவுரிமை மீறல்கள் மற்றும் காவல்துறையின் கொடூரம் - எஸ்ஓஎஸ்-டார்ச்சர் ஏசியா வழக்குரைஞர்கள் குழுவின் அறிக்கை, 1 ஜனவரி 2020; தி கார்டியன், “நான் உன் குடும்பத்தை அழிப்பேன்”: பொய்யான கைது மற்றும் காவலில் சித்திரவதை செய்யப்பட்டது குறித்து இந்திய ஆர்வலர்கள் கூறுகின்றனர், 1 பிப்ரவரி 2020; தி வயர், ராம்பூரில் குடியுரிமை திருத்தச் சட்டப் போராட்டத்தின் மீதான காவல்துறையின் அடக்குமுறையின் போது சுடப்பட்ட வழிப்போக்கருக்கு மருத்துவ உதவி மறுக்கப்பட்டது, 29 திசம்பர் 2019.

229 ஸ்க்ரோல்.இன், குடியுரிமைச் சட்டப் போராட்டங்கள்: உத்தரப் பிரதேசத்தில் நிகழ்ந்த 17 சாவுங்களில் 14 ‘துப்பாக்கிக் காயங்களால்’ ஏற்பட்டவை, 23 திசம்பர் 2019; பன்னாட்டுநீதிபதிகள் ஆணையம், குடியுரிமைத் திருத்தச் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களை அடக்குவதற்காக உத்தரப் பிரதேச காவல்துறையால் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்ட வன்முறை குறித்த விளக்க அறிக்கை, [நாள் குறிக்கவில்லை].

230 குவில் அறக்கட்டளை, வெறுப்புக்கு எதிரான குடிமக்கள், HAQ: குழந்தைகள் உரிமைகளுக்கான மையம், அப்பாவித்தனத்தை மிருகத்தனமாக்குதல்: குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களை அடக்குவதற்காக உத்தரப் பிரதேச காவல்துறையால் சிறார்களைத் தடுத்து வைத்து சித்திரவதை செய்தல் மற்றும் குற்றவாளிகளாக ஆக்குதல், 2020 ஜனவரி. தி வைர் (The Wire), “CAA எதிர்ப்பு போராட்டங்களை ஒடுக்கிய நடவடிக்கைகளின் போது உத்தரப் பிரதேச காவல்துறை சிறார்களை கொடூரமாக தாக்கியது: உண்மை கண்டறியும் குழு,” 14 பிப்ரவரி 2020.

231 குவில் அறக்கட்டளை, வெறுப்புக்கு எதிரான குடிமக்கள், HAQ: குழந்தைகள் உரிமைகளுக்கான மையம், அப்பாவித்தனத்தை மிருகத்தனமாக்குதல்: குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களை அடக்குவதற்காக உத்தரப் பிரதேச காவல்துறையால் சிறார்களைத் தடுத்து வைத்து சித்திரவதை செய்தல் மற்றும் குற்றவாளிகளாக ஆக்குதல், 2020 ஜனவரி, பக். 3-7; தி கார்டியன், “நான் உன் குடும்பத்தை அழிப்பேன்”: பொய்யான கைது மற்றும் காவலில் சித்திரவதை குறித்து இந்திய ஆர்வலர்கள் கூறுகின்றனர், 1 பிப்ரவரி 2020; தி இந்தியன் எக்ஸ்பிரஸ், உத்தரப் பிரதேசம்: சித்திரவதை குற்றச்சாட்டுடன் ஆர்வலர் தீபக் கபீர் விடுதலை, 10 ஜனவரி 2020.

இது போதாதென்று, உத்தரப் பிரதேசக் காவல்துறை வெளியிட்டுப் பரப்பிய சுவரொட்டிகளில்... போராட்டங்களில் கலந்து கொண்டதாகச் "சொல்ல"ப்படுவோரின் படங்களும் அவர்களின் பெயர் முகவரிகளும் இடம்பெற்றன. நீதிமன்றச் செயல்வழி ஏதும் இடம்பெறுவதற்கு முன்பே அவர்கள் "குற்றவாளிகள்" என்று முத்திரையிடப்பட்டார்கள்.[232] ஆட்களை மட்டுமல்லாமல் அவர்கள் சார்ந்த சமுதாயங்களையும் அச்சுறுத்திப் பணிய வைப்பதற்கு இந்த உத்தி பயன்படுத்தப்பட்டது.[233]

பன்னாட்டுச் சட்டவாளர் ஆணையம்... போராட்டங்களைச் சமாளிக்கக் காவல்துறையும் இந்திய அரசும் நடந்து கொள்ளும் விதம் "சித்திரவதையிலிருந்தும் கொடிய, மனிதத்தன்மையற்ற, இழிவான நடத்துமுறையிலிருந்தும் உயிர்வாழும் உரிமையையும் விடுமையையும் பாதுகாக்க ஏற்றுக் கொண்ட கடப்பாடுகளை மீறுவதற்கு" ஒப்பானது என்ற முடிவுக்கு வருகிறது.[234] சாவுகள் குறித்தும் சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் குறித்தும் முழுமையாக உடனுக்குடன் பக்கச்சார்பின்றி புலனாய்வு செய்ய அழைப்புகள் விடுத்த போதிலும் தேசிய மனிதவுரிமை ஒரு கள விசாரணை நடத்த ஈராண்டுக் காலமாயிற்று.[235] இடைப்பட்ட காலத்தில் பாதிப்புற்றவர்களின் குடும்பத்தினர் காவல்துறையினரும் அரசு அதிகாரிகளும் தம்மை அச்சுறுத்தியதாகத் தெரிவித்தன. சடலக் கூறாய்வு அறிக்கைகளைக் காண அனுமதி மறுக்கப்பட்டதாம், அவர்கள் பல வகையிலும் மிரட்டப்பட்டார்களாம்.[236] விசாரணையின் முடிவு இன்னும் வெளிவரவில்லை. எமக்குத் தெரிந்த வரை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கு அரசு அதிகாரியம் எதுவும் பொறுப்பாக்கப்படவில்லை.[237]

## பாகுபாடுவழி ஒடுக்குமுறைக்கு ஒரு கருவியாகச் சித்திரவதை

இந்த அறிக்கை இதுகாறும் வெளிப்படுத்தியிருப்பது போல், இந்திய அதிகாரியங்கள் வாடிக்கையாகப் பயன்படுத்தி வரும் வன்முறை சட்டச் செயலாக்கத்திலும் காவற்சூழல்களிலும் சித்திரவதைக்கும் மோசமான நடத்துமுறைக்கும் ஒப்பானதாகும். இந்தியாவில் இன, மதச் சிறுபான்மைகளைச் சேர்ந்த ஆட்களே இப்படிப்பட்ட வன்முறையின் ஆகப் பெருஞ்சுமையைத் தாங்கியுள்ளனர். இந்தியாவில் காவல் சாவுகளில் இறந்தவர்கள் சற்றொப்ப 71% வறிய அல்லது விளிம்புநிலைபின்புலங்களிலிருந்து வரக்கூடிய ஆட்கள் என்பது 1996 முதல் 2018 வரைக்குமான தேசிய மனிதவுரிமை ஆணைய (NHRC) ஆண்டறிக்கைகளிலிருந்து தெரிவதாக தேசிய சித்திரவதை எதிர்ப்புக் குழு (NCAT) தன் 2020 அறிக்கையில் எடுத்துக்காட்டிற்று. இந்தக் குழுக்களில் அட்டவணைச் சாதிகள் (தலித்துகள்), அட்டவணைப் பழங்குடிகள் (ஆதிவாசிகள்) ஆகிய சமுதாயங்கள் மட்டுமல்லாமல், மதச் சிறுபான்மைக் குழுக்களும், முதன்மையாக முசுலிம்களும் அடங்குவர்.[238]

232 இந்தியா டுடே, யோகியின் பெயரையும் அவமானத்தையும் பறைசாற்றும் ராஜ்ஜியம்: குடியுரிமை திருத்தச் சட்டப் போராட்டக்காரர்களின் புகைப்படங்கள், தனிப்பட்ட விவரங்கள் அடங்கிய பதாகைகள் லக்னோவில் வைக்கப்பட்டன, 7 மார்ச் 2020.

233 குவில் அறக்கட்டளை, வெறுப்புக்கு எதிரான குடிமக்கள், HAQ: குழந்தைகள் உரிமைகளுக்கான மையம், அப்பாவித்தனத்தை மிருகத்தனமாக்குதல்: குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களை அடக்குவதற்காக உத்தரப் பிரதேச காவல்துறையால் சிறார்களைத் தடுத்து வைத்து சித்திரவதை செய்தல் மற்றும் குற்றவாளிகளாக ஆக்குதல், ஜனவரி 2020.

234 பன்னாட்டு நீதிபதிகள் ஆணையம், குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களை அடக்குவதற்கு உத்தரப் பிரதேச காவல்துறையால் சட்டவிரோதமாகப் படைபலத்தைப் பயன்படுத்தியது குறித்த விளக்க அறிக்கை, [நாள் குறிக்கவில்லை].

235 தி வயர், உத்தரப் பிரதேசத்தில் குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆன நிலையில், தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் கள விசாரணை நடத்தியது, 29 திசம்பர் 2021.

236 தி கார்டியன், "நான் உங்கள் குடும்பத்தை அழிப்பேன்": பொய்யான கைது மற்றும் காவலில் சித்திரவதை குறித்து இந்திய ஆர்வலர்கள் கூறுகின்றனர், 1 பிப்ரவரி 2020; தி வயர், உத்தரப் பிரதேசத்தில் குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆன நிலையில், தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் நேரடி விசாரணை நடத்துகிறது, 29 திசம்பர் 2021.

237 தி வயர், உத்தரப் பிரதேசத்தில் குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆன நிலையில், தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் கள விசாரணை நடத்தியது, 29 திசம்பர் 2021; தி இந்தியன் எக்ஸ்பிரஸ், கலவரம் தொடர்பான முதல் தகவல் அறிக்கையில் விவரங்கள், காலவரிசை உள்ளன, காவல்துறைக்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளது; கொலை மீதான முதல் தகவல் அறிக்கை ஒரு பத்தி மட்டுமே, 2 ஜனவரி 2020.

238 சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம், திருட்டுப் பழக்கத்திற்கு இடமில்லை: இந்தியாவில் வறுமை, பாரபட்சங்கள் மற்றும் சித்திரவதை, 10 திசம்பர் 2020.

## அட்டவணைச் சாதிகள், பழங்குடிகள் சித்திரவதை

இந்திய நாட்டில் அரசினரும் சரி, தனிப்பட்டவர்களும் சரி, அட்டவணைச் சாதிகளையும் பழங்குடிகளையும் இலக்காகக் கொண்டு பாகுபாடு காட்டும் நெடுங்காலப் போக்கு காணப்படுகிறது. பல பத்தாண்டுகளாகவே அட்டவணைச் சாதிகளுக்கு எதிராக சித்திரவதை உள்ளிட்ட குற்றங்கள் தண்டனையச்சமே இல்லாமல் பாரிய அளவில் நடைபெற்று வருகின்றன.[239] பாகுபாட்டு நெறிகள் உயிர்வாழ்வுக்கும், உடல் நலத்துக்கும், கல்விக்கும், வேலைவாய்ப்புக்கும், சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுவதற்குமான அட்டவணைச் சாதி மக்களின் உரிமைகளைக் கேடுறுத்தியுள்ளன. இதனால்தான் 2006இல் முன்னாள் தலைமையமைச்சர் மன்மோகன் சிங் இந்தப் பாகுபாடு இன ஒதுக்கல் குற்றத்தைப் போன்றது என்று ஏற்றுக்கொண்டார்.[240]

பல்லாண்டுக் காலமாகவே இந்திய நாடாளுமன்றம் அட்டவணைச் சாதிகளுக்கும் பழங்குடிகளுக்கும் எதிரான அமைப்புசார் பாகுபாடும் வன்முறையும் ஆகிய சிக்கலுக்குச் சட்டச் சீர்திருத்தத்தின் ஊடாகத் தீர்வுகாண முயன்றுள்ளது. 1989ஆம் ஆண்டின் அட்டவனைச் சாதிகள் அட்டவணைப் பழங்குடிகள் (வன்கொடுமை தடுப்பு) சட்டமும், கூடுதல் பாதுகாப்புக்கு வழிவகை செய்வதை நோக்கமாகக் கொண்டு 2016ஆம் ஆண்டு அச்சட்டத்துக்குச் செய்யப்பட்ட திருத்தமும் இதிலடங்கும். ஆனால், அரசமைப்பும் சட்டமும் பாதுகாப்பு வழங்கியிருப்பினும் நடைமுறையில் பாகுபாடும் பரவலான வன்முறையும் தண்டனையச்சமின்றி விடாப்பிடியாகத் தொடர்கின்றன.[241] இந்த வன்முறையில் முக்கியப் பகுதியைச் செய்யும் குடிமக்கள் மீது வழக்குத் தொடுப்பது அரிதே. இதனால் தண்டித்தலில்லாக் குற்றவிலக்குப் பண்பாடு வளர்க்கப்படுகிறது, இந்த வன்செயல்கள் வாடிக்கையாக்கப்படுகின்றன. 2023இல், அட்டவணைச் சாதிகளைச் சேர்ந்த தனியாட்களுக்கு எதிராக 50,000க்கு மேற்பட்ட குற்றங்கள் அறிக்கையிடப்பட்டன.[242] இந்தக் குற்றங்களுக்கு வழக்குத் தொடுத்தது பற்றிய அதிகாரமுறைத் தரவுகள் கிடைக்கவில்லை எனும் போதே, அட்டவணைச் சாதிகளுக்கும் பழங்குடிகளுக்கும் எதிரான குற்றங்களுக்காகக் குற்றத்தீர்ப்பு வழங்கிய வீதம் குறைவாகவே இருந்துள்ளது – 2022இல் 32%தான்.[243]

அட்டவணைச் சாதிகளுக்கும் பழங்குடிகளுக்கும் எதிரான பாகுபாடு இயல்பாக்கப்பட்ட இந்தச் சூழல் காவல்துறையும் பாதுகாப்புப் படைகளும் சித்திரவதை உட்பட மனிதவுரிமை மீறல்களுக்கு எளிதில் இலக்காகும் நிலையை உயர்த்துகிறது. தலித்துகள் பல நேரம் பொய்க் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு வன்முறையான தேடுதல்களுக்கும் வேட்டைகளுக்கும் அதே போல் சித்திரவதைக்கும் ஆளாக்கப்படுகின்றார்கள் என்று 2019இல் தேசிய தலித் நீதி இயக்கம் மனிதவுரிமைக் குழுவுக்கு அறிக்கையளித்தது.[244] காவலில் வன்செயலுக்கும் மோசமான சிறை நிலைமைகளுக்கும், பிறவகை சித்திரவதைக்கும் மோசமான நடத்துமுறைக்கும் முகங்கொடுப்பதாகவும், சில நேர்வுகளில் இது உயிரிழப்புக்கும் இட்டுச் செல்வதுண்டு என்றும் தேசிய தலித்து நீதி இயக்கம் குறிப்பிட்டது.[245]

239 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், "தலித்துகளுக்கு எதிரான பாகுபாட்டின் 'மறைக்கப்பட்ட இன ஒதுக்கல்': சாதி அடிப்படையிலான பிரிவினையையும் தாக்குதல்களையும் முடிவுக்குக் கொண்டுவர அரசு தவறியது,' 13 பிப்ரவரி 2007.

240 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், "தலித்துகளுக்கு எதிரான பாகுபாட்டின் 'மறைக்கப்பட்ட இன ஒதுக்கல்': சாதி அடிப்படையிலான பிரிவினையையும் தாக்குதல்களையும் முடிவுக்குக் கொண்டுவர அரசு தவறியது,' 13 பிப்ரவரி 2007.

241 தேசிய தலித் நீதிக்கான இயக்கம், நீதிக்கான தேடல், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 மற்றும் விதிகள் 1995-ஐ நடைமுறைப்படுத்துவது குறித்த நிலை அறிக்கை, 2020

242 டைம்ஸ் ஆஃப் இந்தியா, பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள்: 2022-ல் பட்டியல் சாதியினருக்கு எதிரான குற்றங்கள் 13% அதிகரித்துள்ளன, பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள் 14.3% அதிகரித்துள்ளன: தேசிய குற்றப் பதிவுப் பணியகம் (NCRB), 6 திசம்பர் 2023.

243 நீதி மற்றும் அமைதிக்கான குடிமக்கள், தலித்துகளுக்கு எதிரான அட்டூழிய வழக்குகளில் உத்தரப் பிரதேசம் முன்னிலை வகிக்கிறது, பழங்குடியினருக்கு எதிராகப் பதிவான அதிகபட்ச குற்றங்களில் மத்தியப் பிரதேசம் முதலிடம் வகிக்கிறது, 24 செப்டெம்பர் 2024.

244 தேசிய தலித் நீதிக்கான இயக்கம் மற்றும் பன்னாட்டு தலித் தோழமை வலையமைப்பு, ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் குழுவிடம் சமர்ப்பித்த கூட்டறிக்கை, சிக்கல்களின் பட்டியலை ஏற்றுக்கொள்வது, 26 ஜூலை 2019.

245 தேசிய தலித் நீதிக்கான இயக்கம் மற்றும் பன்னாட்டுதலித் தோழமை வலையமைப்பு, ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் குழுவிடம் சமர்ப்பித்த கூட்டறிக்கை, சிக்கல்களின் பட்டியலை ஏற்றுக்கொள்வது, 26 ஜூலை 2019. மேலும் காண்க: காமன் காஸ், இந்தியாவில் காவல்துறையின் தகுநிலை குறித்த அறிக்கை 2025, காவல்துறைச் சித்திரவதை மற்றும் (பொறுப்புக்கூறல்) இன்மை, பக். 28.

கர்நாடகத்தில் 2021இல் தலித்து ஆண் ஒருவர் “கிராமத்தில் ஓர் இணையரிடையே பிணக்குண்டாக்கி விட்டதாகச் சொல்லி” கோணிவீடு காவல் நிலையக் காவலில் காவல் அதிகாரிகள் அவரை மூத்திரம் குடிக்கும்படிக் கட்டாயபப்டுத்தினார்களாம்.[246] பாதிப்புற்றவர் தன்னை ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கச் செய்யும் முயற்சியில் மணிக்கணக்கில் அடித்து இழிவுபடுத்தியதாகச் சொன்னார்.[247] கர்நாடக மாநிலம் சிக்மகளூரு மாவட்டத்தில் காவல்துறை

உதவி ஆய்வாளருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை – முறைசார் முறைப்பாட்டை முதலில் பதிவு செய்தல் –[248] பதியப்பெற்றது. 2021 செப்டெம்பரில் அந்தக் காவல் உதவி ஆய்வாளர் உள்ளூர் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டு நீதித் துறைக் காவலுக்கு அனுப்பப்பட்டார்.[249]

உள்ளூர் செய்தித்தாள் ஒன்று 2020-2022 காலத்தில் காவல்துறை செய்த சித்திரவதை தொடர்பான 33 வழக்குகளைப் புலனாய்வு செய்து செய்தி கொடுத்தது. இவற்றில் பெரும்பாலானவை அட்டவணைப் பழங்குடியினரான தனியாட்களுக்கு எதிராகச் செய்யப்பட்டவை.[250] காவல்துறையினர் கடுமையாக அடித்து நொறுக்கிய நிகழ்வுகளும், காவல்கைதிகளிடையே கட்டாய வல்லுறவும், சித்திரவதையால் காவலில் உயிரிழந்த பத்து நேர்வுகளும் இவற்றிலடங்கும்.

## வழக்கு ஆய்வு: அட்டவணைச் சாதிகள், பழங்குடிகள் சித்திரவதை

### பர்பானியில் தலித்து மக்கள் கைதுகளும் சித்திரவதையும்

2024 திசம்பரில் அரசமைப்புச் சட்டத்தின் மாதிரியுரு இழிவு செய்யப்பட்டது குறித்து பர்பானியில் கலவரம் மூண்டது. திசம்பர் 11ஆம் நாள் உள்ளூர் தலித்து அமைப்புகள் வேலைநிறுத்தம் செய்ய அழைப்பு விடுத்தமைக்கு எதிர்வினையாகக் காவல்துறை தலித்துகள் வாழும் பகுதிகளில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டு, குறைந்தது 40 ஆட்களைக் கைது செய்தது. காவல் வைக்கப்பட்டவர்கள் கடுமையாக அடிக்கப்பட்டார்கள், பெண்கள் பாலியலாகத் தாக்கப்பட்டார்கள். செய்தியாளர்கள், வழக்கறிஞர்கள், செயற்பாட்டாளர்கள் கொண்ட உண்மையறியும் குழு இதனை ஆவணமாக்கியுள்ளது.[251] காவல் கைதிகளில் ஒருவரான சோம்நாத் சூர்யவன்சி மனிதத் தன்மையின்றி அடித்து நொறுக்கப்பட்டு, 2024 திசம்பர் 15ஆம் நாள் நீதித் துறைக் காவலில் செத்துப் போனார். சோம்நாத்தின் சாவுக்கு “பற்பல காயங்களால் ஏற்பட்ட அதிர்ச்சி” காரணம் என்று சடலக் கூறாய்வு நிர்ணயித்த போதிலும், அவரது சாவுக்கு மாரடைப்பே காரணம் என்று காவல்துறை சொல்லிக் கொண்டது. 2025 ஜனவரி 15ஆம் நாள், சோம்நாத்தின் தாயார் அவரது சாவுக்கு இழப்பீடு பெற மறுத்து, பொறுப்புக்கூறல் கோரிய பின்னர், காவல் சாவு பற்றியும் பர்பானியில் தலித்து மக்கள் மீது காவல்துறை எடுத்த நடவடிக்கை பற்றியும் புலனாய்வு செய்ய நீதித்துறை ஆணையம் அமர்த்தப்பட்டது.

246 இந்தியன் எக்ஸ்பிரஸ், ‘மிகவும் கொடூரமான செயல்’: தலித் நபரை சிறுநீர் குடிக்க வற்புறுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட காவலருக்கு முன்பிணை வழங்க கர்நாடக நீதிமன்றம் மறுப்பு, 04 ஜூன் 2021.

247 இந்தியன் எக்ஸ்பிரஸ், ‘மிகவும் கொடூரமான செயல்’: தலித் நபரை சிறுநீர் குடிக்க வற்புறுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட காவலருக்கு முன்பிணை வழங்க கர்நாடக நீதிமன்றம் மறுப்பு, 04 ஜூன் 2021.

248 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS), 2023, s 173, முன்பு இந்தியாவின் CrPC, 1973, s 154

249 இந்தியா டுடே, கர்நாடகா: காவல் நிலையத்திற்குள் போலீசார் தன்னைத் தாக்கி, சிறுநீரை நக்க வைத்ததாக தலித் இளைஞர் குற்றச்சாட்டு – பெங்களூரு செய்திகள், 22 மே 2021.

250 தி பிரிண்ட், காவல் சாவுங்கள், சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் — ஜார்க்கண்டில் பழங்குடியினர் ‘காவல்துறை அடக்குமுறையால்’ எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர், 27 மார்ச் 2022

251 சப்ரங் இந்தியா, பர்பானி காவல்துறை விசாரணைக்கு உள்ளாகியுள்ளது: கொடூரம், சட்டவிரோதம் மற்றும் அரசியலமைப்பு மீறல் குற்றச்சாட்டுகளை உண்மை கண்டறியும் அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது, 23 ஜனவரி 2025.

**சமயச் சிறுபான்மையினர் சித்திரவதை**

இந்தியாவில் சமயச் சிறுபான்மையினர் சித்திரவதைக்கும் நீதித்துறைசாராக் கொலைகளுக்கும் பிறவகை வன்முறைக்கும் ஆளாக்கபப்ட்டுள்ளனர்.[252] பல சமயக் குழுக்கள் பாகுபாட்டுத் தனமான வன்முறைக்கு ஆளாக்கப்படும் போதே, முசுலிம்களும் கிறித்தவர்களும் சீக்கியர்களும் அளவு கடந்து பாதிக்கப்படுகின்றனர்.[253] இந்த முறைகேடுகளுக்குத் தோதாக, கடந்த பத்தாண்டுக் காலத்தில் பாஜக ஆட்சியினால் அமைப்புசார் பாகுபாடும் தேசியவெறி வாய்வீச்சும் மும்முரமாகியுள்ளன. இதனால்தான் 2024 தேர்தலை நோக்கிய ஓட்டத்தில் சமயச் சிறுபான்மையினருக்கும் பிற வகைச் சிறுபான்மையினருக்கும் எதிராக மனிதத்தன்மையைக் குலைக்கும் வகையில் பேசுவது குறித்தும் தூண்டி விடுவது குறித்தும் ஐநா வல்லுநர்கள் கவலை தெரிவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.[254] எடுத்துக்காட்டாக, 2024ஆம் ஆண்டு ஜார்க்கண்டு மாநிலத் தேர்தலில் பாஜக முசுலிம்களை இழிவாகவும், அவர்களின் மனிதத் தன்மையைக் குலைக்கும் வகையிலும் காட்டும் படியான பரப்புரைச் செய்திகளை வெளியிட்டது; இது முசுலிம் எதிர்ப்பு உணர்ச்சியை மேலும் இயல்பாக்கக் கூடியதாகும்.[255]

## வழக்கு ஆய்வு: சமயச் சிறுபான்மையினர் சித்திரவதை

### மேற்கு வங்காளத்தில் முசுலிம் சிறுவன் கொலை

மேற்கு வங்காள மாநிலத்தில் இடம்பெற்றுள்ள அரசுசாரா மனிதவுரிமை அமைப்பாகிய பங்ளார் மானவதிகார் சுரட்சா மஞ்ச் (வங்காள மனிதவுரிமைப் பாதுகாப்புக் கழகம் [MASUM]) தன் 2020 ஆகஸ்டு அறிக்கையில்,சாகினூர் ஹக் எனும் முசுலிம் சிறுவன் நீதித்துறைசாராக் கொலை செய்யப்பட்டதை அறியத்தந்தது. சாகினூர் வீட்டுக்கு வெளியே தன் இரு சகோதரர்களுடனும் கைப்பேசியில் விளையாடிக் கொண்டிருந்த போது எல்லைக் காவலர்களால் சுடப்பட்டதில் அவரது கையில் காயங்கள் ஏற்பட்டன. பிறகு அந்தக் காவலர்கள் சாகினூரை நெருங்கிக் கடுமையாக அடித்து நொறுக்கினார்கள். இறுதியில் காவல் படைத் தளபதி மிக அருகிலிருந்து அவரை இரு முறை சுட்டதில் அவர் உடனே உயிரிழந்தார். சாகினூரின் மாமா உள்ளூர்க் காவல் நிலையத்தில் முறைப்பாடு கொடுத்தார். ஆனால் அது முதல் தகவல் அறிக்கையாகப் பதிவு செய்யப்படாமல், வழக்கு நாட்குறிப்பாக (ஒரு காவல் அறிக்கையாக) மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 'மாசும்' (MASUM) தேசிய மனிதவுரிமை ஆணையத்திடம் ஒரு முறைப்பாடு தாக்கல் செய்த போதிலும், வழக்கு பற்றி இற்றைத் தகவல்கள் ஏதும் அறிக்கையிடப்படவில்லை.[256]

அண்மைய ஆண்டுகளில் வகுப்புவாத வன்முறையில் தொடர்பிருப்பதாகச் சொல்லப்பட்ட அல்லது பாகுபாடான சட்டங்களையும் கொள்கைகளையும் எதிர்த்துப் போராடும் சிறுபான்மையினரைக் குறிவைத்துத் தாக்கும் தண்டனை நடவடிக்கைகள் கலக்கந்தரும் போக்காக வெளிப்பட்டுள்ளன.[257]

252 AI, தில்லி கலவரம் நடந்து ஆறு மாதங்கள் ஆகியும், மனிதவுரிமை மீறல்கள் நடந்தபோதிலும் தில்லி காவல்துறை தொடர்ந்து தண்டனையிலிருந்து தப்பித்து வருகிறது, 27 ஆகஸ்டு 2020.

253 மனிதவுரிமைக் குழு, முடிவுரை 2024, 25 ஜூலை 2024, பத்தி 13

254 ஐநா மனிதவுரிமைகளுக்கான உயராணையர் அலுவலகம் (OHCHR), இந்தியா: தேர்தலுக்கு முன்னதாக மனிதவுரிமைகளைப் பாதுகாக்கவும், சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவரவும் சீர்திருத்த நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர், 2024 மார்ச்சு 07. மேலும் காண்க: வெளிநாட்டுக் காவல்துறை, மோதியின் தேர்தல் பிரச்சாரப் பேச்சு ஆபத்தானது, 28 மே 2024.

255 தி நியூஸ் மினிட், பாஜக விளம்பரங்கள் மீண்டும் முசுலிம்களைக் குறிவைக்கின்றன, இம்முறை ஜார்க்கண்ட் தேர்தலை முன்னிட்டு, 17 நவம்பர் 2024.

256 MASUM, மாத அறிக்கை, ஆகஸ்டு 2020.

257 AI, இந்தியா: "நீங்கள் குரல் கொடுத்தால், உங்கள் வீடு இடிக்கப்படும்": இந்தியாவில் புல்டோசரால் நிகழும் அநீதி, 7 பிப்ரவரி 2024.

இந்த நடவடிக்கைகளில் ஒன்று வீடுகளையும் தொழில்வணிக நிறுவனங்களையும் வழிபாட்டுக்கூடங்களையும் இடிப்பதாகும்.[258]

இந்த நிகழ்ச்சிகள் இன்னுங்கூட பரந்த அளவில் முறைகேடும் வன்முறையும் நிறைந்த ஒரு சூழலில் நடைபெறுகின்றன. இவற்றில் சமயச் சிறுபான்மையினர் நடத்தும் போராட்டங்களும் அடங்கும். காட்டாக, 2022 ஜூன் மாதம் அரசு அதிகாரிகளின் புண்படுத்தும் அறிக்கைகளுக்கு எதிராக முசுலிம் மக்கள் நடத்திய போராட்டங்கள் காவல்துறையினரால் வன்முறை வழியில் அடக்கியொடுக்கப்பட்டதாகவும், அதன் விளைவாக இருவர் உயிரிழந்ததோடு, பாரிய அளவில் வீடுகள் இடிக்கப்பட்டதாகவும் பன்னாட்டுப் பொதுமன்னிப்புக் கழகம் (Amnesty Internatiopnal - AI) அறிக்கை வெளியிட்டது.[259]

வகுப்புகளுக்கு இடையிலான மோதல்களுக்கு எதிர்வினையாகவும் சிறுபான்மையினருக்கு எதிரான அரசு வன்முறை ஏவப்படுகிறது. 2022 அக்டோபரில், சட்டத்தை மீறியதாகச் சொல்லி முசுலிம்களுக்கு எதிரான தண்டனை நடவடிக்கைகள் பெருகி வருவது குறித்த ஓர் அறிக்கையில், மனிதவுரிமைக் கண்காணிப்பகம் ஒரு சம்பவத்தை விவரித்தது. அந்தச் சம்பவத்தில், ஒரு இந்துப் பண்டிகையின் போது கல் எறிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட முசுலிம் ஆண்கள், காவல்துறையினரால் ஒரு தெருவிளக்குக் கம்பத்தில் சாய்த்து வைக்கப்பட்டு, பொதுவெளியில் தடிகளால் அடிக்கப்பட்டனர்.[260]

முசுலிம்களும் ஏனைய சமயச் சிறுபான்மையினரும் காவல்துறைக் காவலில் இருக்கும் போது பாகுபாட்டுடன் கூடிய சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. 2019ஆம் ஆண்டில், காவல்துறைக் காவலில் உயிரிழந்தவர்களில் 60% பேர் முசுலிம்கள், தலித்துகள் அல்லது பழங்குடியினர் என்று NCAT அறிக்கை வெளியிட்டுள்ளது.[261] 2022ஆம் ஆண்டு சிறைச்சாலைப் புள்ளிவிவரங்களின்படி, இந்தியாவில் உள்ள 573,220 கைதிகளில் 19.3% பேர் முசுலிம்கள் ஆவர். அதே சமயம், இந்தியாவின் முசுலிம் மக்கள்தொகை மொத்த மக்கள்தொகையில் 14.2% ஆக உள்ளது.[262] தனிப்பட்ட மாநிலங்களில் ஆய்வு செய்யும் போது, முசுலிம்களின் மக்கள்தொகையுடன் ஒப்பிடுகையில் காவலில் வைக்கப்பட்டுள்ள முசுலிம்களின் எண்ணிக்கையில் உள்ள தகவுப் பொருந்தாமை இன்னுங்கூடத் தெளிவாகிறது. உதாரணமாக, மக்கள்தொகையில் சற்றொப்ப 12.68% முசுலிம்களைக் கொண்ட தெலங்கானாமாநிலத்தில், 2020இல் காவலில் வைக்கப்பட்டவர்களில் 49.5% பேர் முசுலிம்களாக இருந்தனர்.[263]

கீழே 'முறைப்பாட்டாளர்களுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகள்' பிரிவில் விளக்கப்பட்டுள்ள யூனுஸ் ஷா வழக்கு, முசுலிம்களுக்கு எதிரான சித்திரவதைகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த வழக்கில், ஷா சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட அவரது தடுப்புக்காவல், அவர் ஒரு மதச் சிறுபான்மையினர் (முசுலிம்) என்ற பாகுபாட்டுக்காரணங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது என்று தற்போக்ககான காவலடைப்பு பற்றிய ஐநா செயற்குழு (WGAD) கண்டறிந்தது.[264] 2022 ஜூன்

258 2022 ஜனவரிக்கும் 2023 திசம்பருக்கும் இடையில், தண்டனைவகை இடிப்புகளால் இந்தியாவில் சுமார் 740,000 மக்கள் இடம்பெயர்ந்தனர். இது, முறையான சட்ட நடைமுறைகள் இல்லாததைக் கண்டித்து, இடிப்புகள் நிகழ்வதற்கு முன்பு சட்டப் பாதுகாப்புகளை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதல்களை வழங்கிய நவம்பர் 2024 உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு வழிவகுத்தது. போதுமான வீட்டுவசதிக்கான சிறப்பு அறிக்கையாளர்; சிறுபான்மையினர் பிரச்சினைகளுக்கான சிறப்பு அறிக்கையாளர் மற்றும் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்திற்கான சிறப்பு அறிக்கையாளர், 2022 ஜூன் 9; பருல் ரகுவன்ஷி, ஆக்ஸ்போர்டு மனிதவுரிமைகள் மையம், புல்டோசர் நீதி அநீதியை உருவாக்கும்போது: இந்திய உச்ச நீதிமன்றம் தன்னிச்சையான இடிப்புகளைக் கட்டுப்படுத்துகிறது, 24 ஏப்ரல் 2025; பிபிசி, இந்தியாவின் உச்ச நீதிமன்றம் 'புல்டோசர் நீதியை' தண்டனையாகத் தடை செய்கிறது, 13 நவம்பர் 2024. இந்திய உச்ச நீதிமன்றம், கட்டமைப்புகளை இடிப்பது தொடர்பான வழிகாட்டுதல்கள் குறித்த மனுக்கள் மீதான தீர்ப்பு, 13 நவம்பர் 2024 ஆகியவற்றைக் காண்க.

259 AI, இந்தியா: வரம்பு மீறிய படைப் பிரயோகம், 14 ஜூன் 2022

260 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: முசுலிம்களுக்கு எதிரான உடனடித் தண்டனைகள் அதிகரிப்பு | மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், 7 அக்டோபர் 2022

261 CNN: இந்தியக் காவல்துறை நீதியைப் பெறுவதற்கான குறுக்கு வழியாக வன்முறையைப் பயன்படுத்துகிறது. அதன் வடுக்களை ஏழைகளே சுமக்கிறார்கள், 3 திசம்பர் 2020

262 பிரிவு 14, கர்நாடக காவல்துறை காவலில் முசுலிம் தச்சரின் சாவு குறித்த பொறுப்புக்கூறல் இல்லாமை, பரவலான தேசிய தோல்விகளைச் சுட்டிக்காட்டுகிறது, 20 ஜனவரி 2025.

263 கட்டுரை 14, இந்தியாவில் உள்ள சிறைகளில் முசுலிம் கைதிகளின் சதவீதம் அவர்களின் மக்கள்தொகைக்கு ஏன் விகிதாசாரமற்றதாக உள்ளது, 15 மார்ச் 2022

264 யூனுஸ் ஷா (இந்தியா) தொடர்பான ஐ.நா. தன்னிச்சையான தடுப்புக்காவல் மீதான பணிக்குழுவின் கருத்து எண் 45/2024, 10 அக்டோபர் 2024, A/HRC/WGAD/2024/45.

மாதம் இந்தியக் காவல்துறையினர் காவலில் உள்ள முசுலிம்களைக் கடுமையாகத் தாக்குவதைக் காட்டும் காணொலி ஒன்று இணையத்தில் பரவியது; அதனைப் பகிர்ந்த பாஜக உறுப்பினர் ஒருவர், அந்தத் துன்புறுத்தலை அந்த ஆண்களுக்குக் கிடைத்த ஒரு “பரிசு” என்று குறிப்பிட்டார்.[265]

தெற்காசிய நீதி இயக்கம், ‘இந்தியாவில் சித்திரவதை, தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு மற்றும் சமயச் சிறுபான்மையினர்’ என்ற தனது அறிக்கையில், உத்தரப் பிரதேசம், இராஜஸ்தானம், அரியானா, தில்லி ஆகிய மாநிலங்களில் அரசுப் படைகளால் சமயச் சிறுபான்மையினருக்கு எதிராக இழைக்கப்பட்ட சித்திரவதைகள் குறித்த மேலும் சில வழக்கு ஆய்வுகளை முன்வைத்தது. அறிக்கையிடப்பட்ட சித்திரவதை முறைகளில், பொய்யான பசுவதைக் குற்றச்சாட்டுகள் சுமத்துதல், இந்து மந்திரங்களை மீண்டும் மீண்டும் சொல்லும்படி கட்டாயப்படுத்துதல், சாகும் வரை அடித்துத் துன்புறுத்துதல் ஆகியவை அடங்கும்.[266]

## வழக்கு ஆய்வு: சமயச் சிறுபான்மையினருக்கு எதிரான சித்திரவதை

### சித்திரவதையால் சாவடைந்த தாவூத் சேக்

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த முசுலிம் நாட்கூலித் தொழிலாளி தாவூத் ஷேக் இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தை. அவரை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவிக்காமலே 2024 ஏப்ரல் 7ஆம் நாள் கைது செய்தனர். காவலில் இருந்த போது, அவர் கடுமையாக விசாரிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இருப்பினும், 2024 ஏப்ரல் 13ஆம் நாள் அவர் தற்கொலை செய்து கொண்டதாக அவரது குடும்பத்தினரிடம் கூறப்பட்டது. அவரது உடலைப் பார்க்க குடும்பத்தினர் அனுமதிக்கப்பட்ட போது, அவரது உடலில் பல காயங்களைக் கண்டனர். இது அவரது சாவுக்கான காரணம் வேறொன்றாக இருக்கலாம் என்பதைச் காட்டியது.[267] காவல்துறையினர் கூறுவது போல், தாவூதின் கழுத்தில் இருந்த காயங்கள் தற்கொலைக்குத் தொடர்பில்லாத இயற்கைக்கு மாறான சாவைக் குறிப்பதாக மருத்துவமனை மருத்துவர் ஒருவர் அவரது குடும்பத்தினரிடம் கூறியதாகத் தெரிகிறது. 2024 ஏப்ரல் 15ஆம் நாள் தாவூதின் மனைவி சம்ஷேர்கஞ்ச் காவல் நிலையத்தில் முறைப்பாடு அளிக்க முயன்றார், ஆனால் அதிகாரிகள் அதைப் பதிவு செய்ய மறுத்து விட்டனர்.[268] குடியியல் சமூகத்தின் கோரிக்கைகளைத் தொடர்ந்து, தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் 2024 செப்டெம்பர் 6ஆம் நாள் காவல் சாவு தொடர்பான ஒரு வழக்குப் பதிவு செய்தது.[269] தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC) சார்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

மேலும், இந்தியாவில், குறிப்பாக சீக்கியர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பஞ்சாப் மாநிலத்தில், சீக்கிய சமூகத்தினர் நீண்ட நெடுங்காலமாகப் பாகுபாட்டு வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.[270] மேலே குறிப்பிடப்பட்ட ஜக்தார் சிங் ஜோஹல் வழக்கில் விளக்கப்பட்டுள்ளபடி, சீக்கியர்களுக்கு எதிரான மனிதவுரிமை மீறல்களில், பயங்கரவாதம் தொடர்பான குற்றச்சாட்டுகளின் கீழ் நிகழ்த்தப்படும் வலிந்து காணாமலாக்குதல், நீதித்துறைசாராக் கொலைகள், தற்போக்கான தடுப்புக்காவல், சித்திரவதைகள் ஆகியவை அடங்கும். இதேபோல், பல சீக்கியர்கள் பங்கேற்ற 2021 ஆம் ஆண்டு உழவர் போராட்டங்களின் போது, அரசு அதிகாரிகள், சீக்கியப் போராட்டக்காரர்களைப் பயங்கரவாதிகள் என்று குறிப்பிட்டு அவமதித்ததாகக் கூறப்படுகிறது.[271]

265 பிபிசி, நூபுர் ஷர்மாவின் போராட்டம்: இந்தியாவை உலுக்கிய காவல்துறை வன்முறைக் காணொளி, 17 ஜூன் 2022.
266 தெற்காசிய நீதி இயக்கம், இந்தியாவில் சித்திரவதையும் தண்டனையின்மையும்: முசுலிம்களுக்கு எதிரான காவலில் நிகழும் சித்திரவதைகள் குறித்த வழக்கு ஆய்வுகள், மே 2025.
267 OMCT, இந்தியா: காவல் துறை காவலில் தாவூத் ஷேக்கின் சாவு, காவல்துறைச் சித்திரவதையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது, 31 மே 2024.
268 கவுண்டர் வியூ, மேற்கு வங்கத்தில் 27 வயது இளைஞரின் காவல் சாவு தற்கொலை எனக் ‘கருதப்படுகிறது’, 17 மே 2024
269 தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், வழக்கு எண் 76/25/13/2025-AD, நடவடிக்கை எண் 1, நாள் 24 மார்ச் 2025
270 சீக்கியக் கூட்டமைப்பு, அமெரிக்கப் பன்னாட்டுச் சமயச் சுதந்திர ஆணையத்தின் முன்பான விசாரணைக்கான அறிக்கை, 25 ஜனவரி 2025.
271 ஐக்கிய ராச்சிய பொதுச்சபை நூலகம், ஜக்தார் சிங் ஜோஹலின் சிறைவாசம், 18 ஜனவரி 2023.

கிறித்தவர்கள் போன்ற பிற சமயச் சிறுபான்மையினரும் இந்தியாவில் குறிப்பிடத்தக்க அளவிலான வன்முறைக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.[272] 2024ஆம் ஆண்டில் மட்டும், கிறித்தவ சமுதாயத்தை இலக்காகக் கொண்ட 834 நிகழ்ச்சிகள் பதிவாகியுள்ளன. 2015இல் 179 வழக்குகளும், அதைத் தொடர்ந்து 2020இல் 327 வழக்குகளும், 2023இல் 734 வழக்குகளும் ஆவணப்படுத்தப்பட்டதிலிருந்து ஏற்பட்ட ஒரு சீரான உயர்வை இதிலிருந்து அறியலாம்.[273] காவல்துறையினர் பெரும்பாலும் முறைப்பாடு அளிப்பதை ஊக்கப்படுத்தாததாலும், குற்றவாளிகளால் பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற அபாயத்தைக் குறிப்பிடுவதாலும், பாகுபாடு காட்டப்படுமோ என்ற அச்சத்தின் காரணமாகப் பல பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கத் தயக்கம் காட்டியதாக இந்தியக் குடியியல் சமூக அமைப்புகள் தெரிவித்துள்ளன.[274] மேலும், பல இந்திய மாநிலங்களில் இயற்றப்பட்டு, மதமாற்றத்தைத் தடைசெய்து, மதச் சிறுபான்மையினரையும் வெவ்வேறு மதத்தினரிடையேயான உறவுகளையும் குறிவைக்கப் பயன்படுத்தப்பட்டு வரும் மதமாற்றத் தடுப்புச் சட்டங்களின் கீழ், கிறிஸ்தவ சமூக உறுப்பினர்கள் குற்றவியல் வழக்கு விசாரணையை எதிர்கொள்கின்றனர்.[275] 2024 ஜூன் மாதத்தில், உத்தரப் பிரதேசத்தில் மதமாற்றத் தடைச் சட்டங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளின் பேரில் 13 கிறித்தவர்கள் கைது செய்யப்பட்டனர்.[276]

2022ஆம் ஆண்டில், சத்திஸ்கர் மாநிலத்தில் சுமார் 1,000 பழங்குடி கிறித்தவர்கள் தங்கள் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்ததாகக் கூறப்படுகிறது. இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் ஒரு நாளைக்குச் சராசரியாக இரண்டு தாக்குதல்களை எதிர்கொள்கின்றனர் என்று 2023-ஆம் ஆண்டில் ஐக்கிய கிறித்தவ மன்றம் அறிக்கை வெளியிட்டது.[277]

மணிப்பூரில், 2023ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரம், கிறித்தவ குக்கி சமூகத்தினரை அளவுக்கு அதிகமாகப் பாதித்துள்ளது. இதன் விளைவாக, சுமார் 160 பேர் உயிரிழந்தனர், 300-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர், மேலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். கூட்டுப் பாலியல் வன்புணர்வு உள்ளிட்ட பாலியல் வன்முறைகளை உள்ளடக்கிய மணிப்பூரில் நடந்த இந்த மீறல்கள், ஐ.நா. நிபுணர்களைக் கடுமையான கவலையை வெளிப்படுத்தும் அறிக்கையை வெளியிடத் தூண்டியது.[278] மேலும், ஜூலை 2024-ல், மனிதவுரிமைகள் ஆணையக் குழு, “மே 2023 முதல் மணிப்பூரில் நடந்த சம்பவங்கள் மற்றும் 2002-ல் குசராத்தில் நடந்த கலவரங்கள் போன்ற, மத சிறுபான்மையினருக்கு எதிரான மிக அதிக அளவிலான வன்முறைகள் குறித்தும், அதன் விளைவாக சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் உள்ளிட்ட மனிதவுரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறல் இல்லாதது குறித்தும்” தனது கவலையைத் தெரிவித்தது.[279]

272 மனிதவுரிமைகள் பேரவை, ஐரோப்பிய சட்டம் மற்றும் நீதி மையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துப்பூர்வ அறிக்கை*, 28 பிப்ரவரி 2024.

273 தி வயர், 2024-ல் இந்தியாவில் கிறித்தவர்கள் மீதான 834 தாக்குதல்கள், 2023-ஐ விட 100 அதிகம்: உரிமைக் குழு, 10 ஜனவரி 2025

274 தி வயர், 2024-ல் இந்தியாவில் கிறிஸ்தவர்கள் மீதான 834 தாக்குதல்கள், 2023-ஐ விட 100 அதிகம்: உரிமைக் குழு, 10 ஜனவரி 2025.

275 பன்னாட்டுமத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம், இந்தியாவில் சமயச் சிறுபான்மையினருக்கு எதிராகப் பெருகிவரும் முறைகேடுகள், அக்டோபர் 2024.

276 கத்தோலிக்க ஆசிய செய்தி ஒன்றியம், வட இந்திய மாநிலத்தில் 13 கிறிஸ்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர், 26 ஜூன் 2024.

277 EFE, ‘ஒரு நாளைக்கு இரண்டு தாக்குதல்கள்’: கிறிஸ்தவர்களுக்கு இந்தியா ஏன் மிகவும் ஆபத்தான இடங்களில் ஒன்றாக உள்ளது, 14 திசம்பர் 2023.

278 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையரின் அலுவலகம் (OHCHR), இந்தியா: மணிப்பூரில் தொடரும் அத்துமீறல்கள் குறித்து ஐ.நா. வல்லுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.(**ஐ.நா. நிபுணர்கள்: மணிப்பூர்**), 04 செப்டெம்பர் 2023

279 மனிதவுரிமைகள் குழு, முடிவுரைப் பார்வைகள், 2024, 25 ஜூலை 2024, பத்தி 45.

# குறிப்பான வட்டாரங்களில் சித்திரவதை

அண்மைய ஆண்டுகளில், வரலாற்றியல், அரசியல் காரணங்களால், இந்தியாவின் சில வட்டாரங்கள் கலகத்தையும் பயங்கரவாதத்தையும் எதிர்த்துப் போராடுவதென்னும் போர்வையில் பாதுகாப்புப் படைகளும் ஆய்தப் படைகளும் நடத்தும் திட்டமிட்ட, பரவலான வன்முறையால் பெரிதும் பீடிக்கப்பட்டுள்ளன. சித்திரவதை, வலிந்து காணாமலாக்குதல், சட்டப்புறம்பான கொலைகள் உள்ளிட்ட இத்தகைய மீறல்களை நியாயப்படுத்துவதற்கு இந்திய அதிகாரியங்கள் பொதுவாக ஆய்தப் படைகள் தனி அதிகாரச் சட்டம் (AFSPA), சட்டப் புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (ஊபா - UAPA) ஆகியவற்றை நம்பியுள்ளன. இவை நெருக்கடிநிலைக் கால நடவடிக்கைகளாகக் கருதப்பட்டாலும், அதிகாரமுறைப்படியான நெருக்கடிநிலை அறிவிப்பு இல்லாமலே செயலாக்கப்பட்டு, நீண்ட காலத்திற்கு நீடிக்கின்றன. இந்தியாவின் சில வட்டாரங்கள், AFSPA சட்டகத்தைப் பயன்படுத்தி மாநில ஆளுநரால் "கலவரப் பகுதிகள்" என அறிவிக்கப்படுகின்றன. இதனைப் பன்னாட்டுச் சட்ட மீறலாகக் கருதி, மனிதவுரிமைகள் குழு (HRCttee) கவலை தெரிவித்துள்ளது.[280] 'கலவரப் பகுதிகள்' எனப்படுபவை, வடகிழக்கு மாநிலங்களான அசாம், நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் சம்மு-காசுமீர வட்டாரம் உள்ளிட்ட பரந்த அளவிலான மாநிலங்களை உள்ளடக்கியுள்ளன. இந்தப் பிரிவு, இந்தியப் பாதுகாப்பு மற்றும் ஆய்தப் படைகளால் தீவிரப்படுத்தப்பட்ட வன்முறையால், குறிப்பாக சித்திரவதை, சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மற்றும் கொடுமைகளால் பாதிக்கப்படும் பிராந்தியங்களின் எடுத்துக்காட்டுகளை ஆராய்கிறது.

### சத்திஸ்கர்: பழங்குடியினருக்கு எதிரான வன்முறை

முந்தைய பகுதியில் விளக்கியபடி, பட்டியல் பழங்குடியினர் (ஆதிவாசிகள்) பாகுபாட்டினால் சமமற்ற விகிதத்தில் பாதிக்கப்படுகின்றனர். சத்திஸ்கர் மாநிலம், இயற்கை வளங்களை அகழ்ந்தெடுத்தல் மற்றும் தொழில்மயமாக்கலால் ஏற்படும் நில அபகரிப்பு மற்றும் இடப்பெயர்வுக்கு எதிராக ஆதிவாசிகள் நீண்ட காலமாக எதிர்ப்பு தெரிவித்து வரும் ஒரு மாநிலமாகும். இந்தச் சூழல், பொதுவாக "மாவோயிஸ்டுகள்" என்று குறிப்பிடப்படும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மாவோயித்) ஆயுதமேந்திய கிளர்ச்சி உட்பட, பல பத்தாண்டுகால அமைதியின்மைக்கு வித்திட்டுள்ளது.[281] இந்தச் சூழலில், சத்தீஸ்கரில் உள்ள பழங்குடி மக்கள், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், கூட்டுப் பாலியல் வன்புணர்வு, தீவைப்பு மற்றும்பெருமளவிலான இடப்பெயர்வு உள்ளிட்ட திட்டமிட்ட வன்முறைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.[282]

2025ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், இந்தியப் பாதுகாப்புப் படையினரால் 140 பேர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.[283] 2023 ஏப்ரலில், சத்திஸ்கர் மாநிலத்தின் பஸ்தர் பகுதியில் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் மூலம் நடத்தப்பட்ட வான்வழி குண்டுவீச்சுகளைத் தொடர்ந்து, இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனிதவுரிமை அமைப்புகள் மற்றும் கல்வியாளர்கள், பல ஆண்டுகளாக இந்திய அரசாங்கத்தால் பஸ்தரின் பழங்குடி மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டனர்.[284]

இதே போல் 2024ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மட்டும் கலக எதிர்ப்பு நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினரால் 150 பேர் கொல்லப்பட்டனர் என்பது செய்தியறிக்கைகள் தரும் கணக்கு.

280 மனிதவுரிமைகள் குழு, முடிவுரை அவதானங்கள் 2024, 25 ஜூலை 2024, பத்தி 27.

281 இந்தியா ஜஸ்டிஸ் ப்ராஜெக்ட் மற்றும் ECCHR, சத்தீஸ்கரில் வளர்ச்சி என்ற பெயரில், பழங்குடியினர் உரிமை மீறல்கள் மற்றும் சுருங்கிவரும் வெளி, 14 அக்டோபர் 2022.

282 போலிஸ் திட்டம், "வளர்ச்சி" என்ற பெயரில் பல ஆண்டுகால ஒடுக்குமுறை: பஸ்தாரில் தொடரும் மனிதவுரிமை மீறல்களின் ஒரு கதை, 2 செப்டெம்பர் 2021; இந்திய நீதித் திட்டம் மற்றும் ஐரோப்பிய மனிதவுரிமைகள் நீதிமன்றம், வளர்ச்சி என்ற பெயரில், சத்தீஸ்கரில் பழங்குடியினர் உரிமை மீறல்கள் மற்றும் சுருங்கிவரும் வெளி, 14 அக்டோபர் 2022.

283 ஃபிரன்ட்லைன், பஸ்தார்: எங்கள் கைகளில் இரத்தம், 09 ஏப்ரல் 2025.

284 இந்தியாவின் சத்தீஸ்கரில் நடந்த ட்ரோன் குண்டுத் தாக்குதல்களுக்கு எதிரான அறிக்கை, 17 ஏப்ரல் 2023. மேலும் காண்க, முன்னணிப் பாதுகாவலர்கள், பெருநிறுவனமயமாக்கல் மற்றும் இராணுவமயமாக்கலுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் சத்திஸ்கர் மாநிலத்தின் பஸ்தர் மாவட்டத்தில் மனிதவுரிமைப் பாதுகாவலர்கள் மீதான கைது மற்றும் ஒடுக்குமுறை, 15 மே 2024.

கொல்லப்பட்ட அனைவரும் "ஆய்தமேந்திய மாவோயிஸ்டுகள்" என்று ஆட்சியாளர்கள் சொல்லிக் கொண்ட போதிலும் மக்கள் குடியியல் உரிமைகள் ஒன்றியம் (PUCL) என்னும் மனிதவுரிமைக் குழுவும் தற்சார்புச் செய்தியாளர்களும் அதிகாரமுறைக் கூற்றை மறுத்து, பலியான பலரும் இளம்படியர் உள்ளிட்ட ஆய்தமற்ற குடிமக்களே என அறிக்கையிட்டனர்.[285]

சத்திஸ்கரில் உள்ள மக்கள், "மாவோயிஸ்டுகள்" என்றோ அல்லது "மாவோயிஸ்டுகள்" மீது சுமத்தப்பட்ட குற்றங்களைச் செய்தார்கள் என்றோ புனையப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அடிக்கடி தன்னிச்சையான கைதுகளை எதிர்கொள்கின்றனர். 2017-ஆம் ஆண்டில், சுக்மா மாவட்டத்தில் நடந்த ஒரு "மாவோயிஸ்ட்" தாக்குதல் தொடர்பாக சற்றொப்ப 121 பழங்குடியினர் கைது செய்யப்பட்டு, ஐந்து ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டனர். 2022-ஆம் ஆண்டில், காவல்துறையினரால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் அவர்களுக்குச் சொந்தமானவை என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லாதது உட்பட, போதிய ஆதாரங்கள் இல்லாததால் அந்த 121 பேரும் விடுவிக்கப்பட்டனர்.[286]

சத்திஸ்கரில் பாதுகாப்புப் படையினரால் நிகழ்த்தப்படும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையும் நீண்ட காலமாக ஒரு முக்கிய துஷ்பிரயோக முறையாக இருந்து வருகிறது. அக்டோபர் 2015 முதல் பிப்ரவரி 2016 வரையிலான காலகட்டத்தில், பஸ்தர் பிராந்தியத்தில் 20 கூட்டுப் பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் உட்பட, 50-க்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.[287] பாஜக ஆட்சியில் சத்தீஸ்கரில் நில அபகரிப்பு அதிகரித்துள்ளதாகவும், அதனுடன் தொடர்புடைய பழங்குடிப் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையும் உயர்ந்துள்ளதாகவும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் அறிக்கைகள் காட்டுகின்றன.[288] 2019 பிப்ரவரியில், கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றின்போது, பாதுகாப்புப் படையினர் ஐந்து பெண்களைக் கால்களில் சுட்டு, அவர்களைப் பாலியல் வன்புணர்வு செய்து, பின்னர் கொன்றதாகக் கூறப்படுகிறது. பின்னர், அவர்களது பிறப்புறுப்புகள் உட்பட, சிதைக்கப்பட்ட நிலையில் அவர்களது உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.[289] இந்த வன்முறையை அம்பலப்படுத்திய சோனி சோரி மற்றும் ஹித்மே மக்ரம் போன்ற பெண் மனிதவுரிமைப் பாதுகாவலர்களும் தன்னிச்சையான கைதுக்கும் பொய்க் குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். சோனி சோரி தடுப்புக் காவலில் பாலியல் வன்முறைக்கும் ஆளாக்கப்பட்டார்.[290]

285 பஸ்தாரில் எதிர்நீரோட்டங்கள், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், பொய்க் கைதுகள் மற்றும் கட்டாய சரணடைதல்கள்: கட்டுக்கடங்காத மனிதவுரிமை மீறல், 29 ஜூன் 2024.

286 நியூஸ்லாண்ட்ரி, பொய் வழக்குகள்: செய்யாத குற்றத்திற்காக 121 பழங்குடியினருக்கு சத்திஸ்கர் எப்படி 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது, 21 ஜூலை 2022.

287 இந்தியா ஜஸ்டிஸ் ப்ராஜெக்ட் மற்றும் ECCHR, சத்தீஸ்கரில் வளர்ச்சி என்ற பெயரில், பழங்குடியினர் உரிமை மீறல்கள் மற்றும் சுருங்கிவரும் வெளி, 14 அக்டோபர் 2022.

288 சர்வைவல் இன்டர்நேஷனல், எதிர்ப்பிற்காகக் கொடூரமாக்கப்பட்டவர்கள்: மோதியின் இந்தியாவில் பழங்குடிப் பெண்கள் மீதான தாக்குதல், 2022.

289 கிரவுண்ட்ஸீரோ, சோனி சோரியுடனான ஒரு நேர்காணல்: பஸ்தாரில் தேசிய அரசியலும் 'மாற்றமும்', 25 மார்ச் 2019.

290 ஃபிரன்ட்லைன் டிஃபெண்டர்ஸ், சோனி சோரி, [நாள்குறிக்கவில்லை]; ஃபிரன்ட்லைன் டிஃபெண்டர்ஸ், ஹித்மே மக்ரம், [நாள்குறிக்கவில்லை]; சர்வைவல் இன்டர்நேஷனல், எதிர்ப்பிற்காகக் கொடூரமாக்கப்பட்டவர்கள்: மோதியின் இந்தியாவில் பழங்குடிப் பெண்கள் மீதான தாக்குதல், 2022.

## வழக்கு ஆய்வு: குறித்த வட்டாரங்களில் சித்திரவதை

### சத்திஸ்கரில் ஒரு பெண் சித்திரவதைக்கு ஆளாகி உயிரிழத்தல்

2021 பிப்ரவரி 18 அன்று, சத்திஸ்கரில் உள்ள குட்சே கிராமத்தைச் சேர்ந்த 20 வயதான பாண்டே கவாசி என்ற பெண் அவளுடைய தோழியுடன் கூட சத்திஸ்கர் காவல் துறையின் மாவட்ட சேமக் காவல் படையால் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாற்றுகள் ஏதும் சுமத்தப்படவில்லை என்றாலும், காவல்துறை அவரை "சரணடைந்த மாவோயிஸ்ட்" என்று விவரித்தது. பிப்ரவரி 20 அன்று மட்டுமே அவர் தனது குடும்பத்தினரைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டார். அவரது தொடைகள் மற்றும் முதுகில் பெரிய நீல நிறத் தழும்புகள் உட்பட, அவரது உடலில் கடுமையான காயங்களைக் கண்டதாக அவர்கள் தெரிவித்தனர். தானும் தனது தோழியும் முதலில் அருகிலுள்ள ஒரு காட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பல மணி நேரம் ஒரு மரத்தில் கட்டப்பட்டதாகவும். பாண்டே மீது எந்த குற்றவியல் குற்றச்சாட்டுகளும் "சரணடையவில்லை" என்றால் சாவு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும், அதன் பிறகு தந்தேவாடா காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பாண்டே தனது குடும்பத்தினரிடம் கூறினார். பிப்ரவரி 23 அன்று பாண்டேயின் குடும்பத்தினர் காவல் நிலையத்திற்குத் திரும்பிய போது, பாண்டே தற்கொலை செய்து கொண்டதாக அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பாண்டேயின் உடலில் உடல் மற்றும் பாலியல் வன்முறையின் தெளிவான அறிகுறிகள் இருந்ததாக அவரது தாய் செய்தியாளர்களிடம் கூறினார். காவல்துறையினர் அவரைப் பாலியல் ரீதியாகத் தாக்கி கொலை செய்ததாக பாண்டேயின் குடும்பத்தினர் நம்புகின்றனர்.[291]

சத்திஸ்கரில் ஆதிவாசி மக்களுக்கு எதிரான திட்டமிட்ட முறைகேடுகளை ஆவணமாக்கும் மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்களும் தற்போக்கான கைதுகளுக்கும் பொய்யான குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள் - இது அவர்களை மௌனிக்கச் செய்யும் ஒரு வழியாகக் கையாளப்படுகிறது. 2017ஆம் ஆண்டில், சத்தீஸ்கரின் பஸ்தார் பகுதியில் நடக்கும் வன்முறைகள், குறிப்பாக பாலியல் வன்முறைகள் குறித்துச் செய்தி சேகரிப்பவர்கள் குறி வைக்கப்படுவதை குடியியல் சமூகக் குழுக்கள் வெளிச்சம் போட்டுக் காட்டின.[292] மனிதவுரிமைக் காப்பாளர்கள் ஊபா (UAPA), தேசியப் பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் சிறைவைக்கப்படுகிறார்கள். அவர்கள் சித்திரவதைக்கும் கொடுமைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள்; சில நேரம், நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், கைதிகளை வெளி உலகத்திலிருந்து தனிமைப்படுத்தவும், புலன் தூண்டுதல்களை மறுக்கவும் வடிவமைக்கப்பட்ட சிறிய, மூடப்பட்ட அறைகளான "அண்டா அறைகள்" போன்ற கொடூரமான தனிமைச் சிறை போன்ற வடிவங்களிலும் அவர்கள் உள்ளாக்கப்படுகிறார்கள்.[293] செய்தியாளர் பிரசாந்த் ரஹி[294] மற்றும் குடிமை உரிமை ஆர்வலர் கௌதம் நவ்லகா உள்ளிட்ட சிலர்,

291 இந்தியாவில் பழங்குடி மக்களின் குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் மீறப்படுதல், இராணுவமயமாக்கல் மற்றும் பெருநிறுவனமயமாக்கலுக்கு எதிரான மன்றம் மற்றும் பிறரால், இந்தியாவின் ICCPR மறுஆய்வுக்கான மனிதவுரிமைகள் ஆணையக் குழுவிற்கு (2024) ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் சமர்ப்பித்த அறிக்கை, 2024, பக். 26-27.

292 தி வயர், 'பஸ்தாரில் சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுங்கள்,' என கல்வியாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கோரிக்கை, 31 ஜனவரி 2017.

293 ஜோதி புன்வானி, ரெடிஃப், அண்டா சிறையில் நான் கழித்த 7 ஆண்டுகள், தனிமைச் சிறையின் மிகவும் மனிதாபிமானமற்ற வடிவமாக இருந்தது, 18 மார்ச் 2024.

294 தி இந்தியன் எக்ஸ்பிரஸ், 'எல்லாக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் நான் விடுவிக்கப்படுவேன் என்று உறுதியாக இருந்தேன்': பத்தாண்டு சிறைவாசத்திற்குப் பிறகு விடுதலையான முன்னாள் பத்திரிகையாளர் எதிர்காலம் குறித்து சிந்திக்கிறார், 28 ஏப்ரல் 2024; ரெடிஃப்.காம், ஆண்டா செல்லில் நான் கழித்த ஏழு ஆண்டுகள், மனிதாபிமானமற்ற தனிமைச் சிறைவாசத்தின் மிகக் கொடூரமான வடிவமாக இருந்தது, 18 March 2024.

இதுபோன்ற சூழ்நிலைகளில் பல ஆண்டுகள் கழித்துள்ளனர்.[295] கூடுதலாக, மருத்துவ சிகிச்சையை வேண்டுமென்றே மறுப்பது சிறை அதிகாரிகளால் ஒரு தண்டனை முறையாக வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது.

## வழக்கு ஆய்வு: குறிப்பான வட்டாரங்களில் சித்திரவதை

2014ஆம் ஆண்டு மே 9 ஆம் நாள், இந்தியாவில் ஆதிவாசி மற்றும் தலித் சமூகங்களுக்காகக் குரல் கொடுப்பதில் பெயர் பெற்ற, தில்லி பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரும் மனிதவுரிமை ஆர்வலருமான டாக்டர் ஜி.என். சாய்பாபா[296] காவல்துறையினரால் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டார். அவர் தனது சக்கர நாற்காலியில் இருந்து அகற்றப்பட்டு ஒரு காவல் வாகனத்தில் தூக்கி வீசப்பட்டார், இதன் விளைவாக அவருக்குக் காயங்கள் ஏற்பட்டன.[297] பேராசிரியர் சாய்பாபா மேலும் ஐந்து பேருடன் ஊபா (UAPA) சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்,[298] மேலும் “தடைசெய்யப்பட்ட மாவோயிஸ்ட் கிளர்ச்சிக் குழுவுடன் ஒத்துழைத்ததாக” மற்ற குற்றச்சாட்டுகளுடன் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.[299] பத்து ஆண்டுகளுக்கும் மேலான சிறைவாசத்தின் போது, அவர் “அண்டா செல்”[300] எனப்படும் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டது உட்பட கொடுமைகளுக்கு ஆளானதாகக் கூறப்படுகிறது, இது பன்னாட்டுசட்டத்தின் கீழ் சித்திரவதைக்கு சமமாக இருக்கலாம்.[301] இடுப்புக்குக் கீழே பக்கவாதம் ஏற்பட்டிருந்த போதிலும் மற்றும் பல உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், அவருக்கு சக்கர நாற்காலி மற்றும் போதுமான மருத்துவ சிகிச்சை மறுக்கப்பட்டது, இது அவரது உடல்நிலையில் கடுமையான சரிவுக்கு வழிவகுத்தது.[302] 2021 ஆம் ஆண்டில், WGAD அவரது தடுப்புக்காவல் தன்னிச்சையானது என்று கண்டறிந்ததுடன், “இந்தியாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் நோக்கம்” போன்ற அவர் மீதான குற்றச்சாட்டுகள் பொதுப்படையானவை ஆகவும் தெளிவற்றவை ஆகவும் இருந்தன என்றும் குறிப்பிட்டது.[303] குற்றச்சாட்டுகளை நியாயப்படுத்தவோ அல்லது விசாரணைக்கான தேவையை மெய்ப்பிக்கவோ “திடமான ஆதாரம் எதுவும் இல்லை” என்று ஓர் இந்திய நீதிமன்றம் கண்டறிந்த பின்னர், பேராசிரியர் சாய்பாபா முடிவில் 2024 மார்ச் 5ஆம் நாள் விடுவிக்கப்பட்டார். அவர் 2024 அக்டோபர் 12ஆம் நாள் உயிரிழந்தார்.[304]

295 தி இந்தியன் எக்ஸ்பிரஸ், உச்ச நீதிமன்ற நிவாரணத்தைத் தொடர்ந்து விரைவில் வீட்டுக் காவலில் வைக்கப்படவுள்ள கௌதம் நவ்லகா யார்?, 21 நவம்பர் 2022; தி இந்தியன் எக்ஸ்பிரஸ், சிறைக் கைதிகளை ஒழுங்குபடுத்துவதற்கு ‘அண்டா செல்’ எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது, 29 அக்டோபர் 2021.

296 மக்கள் குடிமை உரிமைகள் சங்கம், டாக்டர் ஜி.என். சாய்பாபாவின் அகால சாவு கல்வி மற்றும் மனிதவுரிமைகள் சமூகத்திற்கு ஒரு பேரிழப்பு, 14 அக்டோபர் 2024.

297 பன்னாட்டுமத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம், கோகரகொண்டா நாக சாய்பாபா, [n.d].

298 இந்தியன் எக்ஸ்பிரஸ், ‘நக்சல் தொடர்புகள்’ குற்றச்சாட்டில் தில்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜி. என். சாய்பாபா கைது | இந்தியச் செய்திகள் – தி இந்தியன் எக்ஸ்பிரஸ், 10 மே 2014.

299 பன்னாட்டுமத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம், கோகரகொண்டா நாக சாய்பாபா, [n.d].

300 ஃபிரன்ட்லைன், தனது 10 ஆண்டு சிறைவாசத்தின் போது அனுபவித்த சித்திரவதைகளையும் அநீதிகளையும் ஜி.என். சாய்பாபா வெளிப்படுத்துகிறார், 9 மார்ச் 2024.

301 மனிதவுரிமைகள் சாசன நீதிமன்றம் (OHCHR), சித்திரவதை மீதான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் தனிமைச் சிறைவாசத்தைத் தடை செய்ய அழைப்பு விடுக்கிறார், 18 அக்டோபர் 2011.

302 ஃபிரன்ட்லைன், 10 ஆண்டு சிறைவாசத்தின் போது அனுபவித்த சித்திரவதை மற்றும் அநீதியை ஜி.என். சாய்பாபா வெளிப்படுத்துகிறார், 9 மார்ச் 2024; சீக்கிய சியாஸ்ட் நியூஸ், மனிதவுரிமைகள் பாதுகாவலர் எச்சரிக்கை: காவலில் ஜி.என். சாய்பாபாவுக்குப் போதுமான மருத்துவ சிகிச்சை மறுக்கப்பட்டது, 26 ஏப்ரல் 2018.

303 ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் (OHCHR), கோகரகொண்டா நாக சாய்பாபா (இந்தியா) தொடர்பான கருத்து எண். 21/2021, 17 ஜூன் 2021

304 சுப்ரீம் கோர்ட் அப்சர்வர், சிறைவாசத்தில் ஒரு தசாப்தம்: பேராசிரியர் ஜி.என். சாய்பாபாவுக்கு நீதி எப்படித் தவறியது, 14 மார்ச் 2024, மேலும் காண்க AI, இந்தியா: மனிதவுரிமைப் பாதுகாவலர் ஜி.என். சாய்பாபாவின் மறுவிடுதலை, தொடர் அடக்குமுறைக்கு எதிரான நீதியின் வெற்றி, 5 மார்ச் 2024.

2022ஆம் ஆண்டில், அதே வழக்கில் சிறைவைக்கப்பட்டிருந்த பாண்டு நரோட்டே, சிறையில் கடுமையான மருத்துவ அலட்சியம் காரணமாக 35 வயதில் இறந்தார் என்று மக்கள் சிவில் உரிமைகளுக்கான ஒன்றியம் தெரிவித்துள்ளது. அவரது சாவு குறித்து எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. [305]

**இந்தியா-வங்காளதேசம் எல்லை (BSF வன்முறை)**

இந்தியாவின் எல்லைப் பாதுகாப்புப் படையினரால் (BSF) நிகழ்த்தப்படும் சட்டவிரோதக் கொலைகள் மற்றும் சித்திரவதைகள் உள்ளிட்ட வன்முறைகளுக்கு, வங்காளதேசத்துடனான இந்தியாவின் எல்லை நீண்ட காலமாக ஒரு பதட்டமான இடமாக இருந்து வருகிறது.[306] இந்தியாவில் மத்திய ஆயுதக் காவல் படையின் கீழ் இயங்கும் ஒரு துணை ராணுவப் படையான BSF,[307] இந்தியா-வங்காளதேச எல்லைப் பகுதி மற்றும் பிற பன்னாட்டுஎல்லைப் பகுதிகளில் செயல்படுகிறது. இந்தப் பகுதி, முசுலிம்கள், தலித்துகள் மற்றும் ஆதிவாசிகள் உள்ளிட்ட பல்வேறு சிறுபான்மை சமூகங்களின் தாயகமாக உள்ளது – முந்தைய பிரிவுகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, இந்தியா முழுவதும் அமைப்பு ரீதியான பாகுபாட்டை எதிர்கொள்ளும் குழுக்கள் இவை.[308] எல்லை தொடர்பான இறப்புகளை "சுன்னமாகக்" குறைப்பதாக இந்தியாவுக்கும் வங்காளதேசத்துக்கும் இடையே 2022-ல் ஒரு கூட்டு உறுதிமொழி இருந்தபோதிலும்,[309] கடுமையான கவலைகள் நீடிக்கின்றன. 2013 மற்றும் 2023- க்கு இடையில் BSF ஆண்டுதோறும் சுமார் 30 வங்காளதேச மக்களைக் கொன்றதாக மனிதவுரிமை அமைப்புகள் மதிப்பிடுகின்றன.[310] அதே காலகட்டத்தில், BSF 500 வங்காளதேச பொதுமக்களைக் கடத்தியதாகக் கூறப்படுகிறது, அவர்களில் 126 பேர் இன்னும் காணவில்லை.[311] வங்கதேசத்தை ஒட்டிய மாநிலமான மேற்கு வங்கத்தில் 2013க்கும் 2020க்கும் இடையில் காவலில் 328 சித்திரவதை மற்றும் இறப்பு நிகழ்ச்சிகளை MASUM என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆவணமாக்கியுள்ளது.[312]

BSF, எல்லைகளில் தனியாட்களைச் சுடுவதில் ஈடுபடுவது மட்டுமல்லாமல், எல்லையைக் கடக்க முயற்சிப்பதாகஐயுறப்படுகிறவர்களுக்குஎதிராகபெல்லட்துப்பாக்கிகளையும்பயன்படுத்துகிறது.[313] இது பன்னாட்டுத் தரநிலைகளை மீறுவதாகும்.[314] BSFஇன் சித்திரவதைகளில் "துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள், வெட்டுக் காயங்கள், தனிநபர்களின் கைகளையும் கால்களையும் கட்டி தண்ணீரில் மூழ்கடிப்பதற்கு முன் அவர்களைக் கட்டுப்படுத்துதல், இடுக்கியைப் பயன்படுத்தி நகங்களைப் பிடுங்குதல், துப்பாக்கிச் சனியனால் குத்துதல், காதுகளைச் சிதைத்தல், உடல் வகையிலான தாக்குதல், சிகரெட்டுகளால் முழு உடலையும் அல்லது குறிப்பிட்ட உடல் பாகங்களையும் சுடுதல்"

305 மக்கள் குடிமை உரிமைகள் சங்கம், டாக்டர் ஜி.என். சாய்பாபாவின் அகால சாவு கல்வி மற்றும் மனிதவுரிமைகள் சமூகத்திற்கு ஒரு பேரிழப்பு, 14 அக்டோபர் 2024.

306 தி டிப்ளமேட், வங்கதேசம் மற்றும் இந்தியாவிற்கு இடையேயான அபாயகரமான எல்லை, 23 பிப்ரவரி 2024; மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: எல்லைப் பாதுகாப்புப் படையினரின் கொலைகள் குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், 9 பிப்ரவரி 2021.

307 இந்திய உள்துறை அமைச்சகம், மத்திய ஆயுதக் காவல் படைகள். மேலும் காண்க OMCT, இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் சட்டத்திற்குப் புறம்பான கொலை: லிட்டன் மியா வழக்கில் நீதிக்கான அவசர அழைப்பு, 05 ஏப்ரல் 2024.

308 ஓஎம்சிடி, இந்தியா-வங்காளதேச எல்லையில் சட்டத்திற்குப் புறம்பான கொலை: லிட்டன் மியா வழக்கில் நீதிக்கான அவசர அழைப்பு, 5 ஏப்ரல் 2024.

309 டாக்கா ட்ரிப்யூன், பிரதமர் ஹசீனாவின் இந்திய அரசுமுறைப் பயணத்தின்போது வெளியிடப்பட்ட இந்தியா-பங்களாதேஷ் கூட்டறிக்கை, 8 செப்டெம்பர் 2022.

310 தி டிப்ளமேட், வங்காள தேசத்துக்கும் இந்தியாவிற்கும் இடையே ஆபத்தான எல்லை, 23 பிப்ரவரி 2024.

311 தி டிப்ளமேட், வங்கதேசம் மற்றும் இந்தியாவிற்கு இடையேயான அபாயகரமான எல்லை, 23 பிப்ரவரி 2024.

312 MASUM, இந்தியாவின் 4வது காலமுறை அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் குழுவின் 141வது அமர்வின் பரிசீலனைக்காக, 3 ஜூன் 2024 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை.

313 தி டிப்ளமேட், பங்களாதேஷ் மற்றும் இந்தியாவிற்கு இடையேயான அபாயகரமான எல்லை, 23 பிப்ரவரி 2024. மேலும் பார்க்கவும், மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: எல்லைப் பாதுகாப்புப் படையினரின் கொலைகள் குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், 09 பிப்ரவரி 2021.

314 ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் (OHCHR), சட்ட அமலாக்கத்தில் உயிரிழப்பை ஏற்படுத்தாத ஆயுதங்கள் குறித்த வழிகாட்டுதல், 2020.

போன்ற செயல்கள் அடங்கும். இன்னும் கடுமையான செயல்களில் எரித்தல், உறுப்புகளைச் சிதைத்தல், பிறப்புறுப்புகளைச் சிதைத்தல், கண்களைக் குத்துதல், முள் கம்பியில் உடல்களைத் தொங்க விடுதல் மற்றும் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் ஆகியவை அடங்கும்.[315]

## வழக்கு ஆய்வு: BSFஆல் காவலில் சித்திரவதை

### செராஜுல் ஹக்

நவம்பர் 2017 இல், எல்லைப் பாதுகாப்புப் படையினரால் செராஜுல் ஹக் காவலில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டது குறித்து தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்திற்கு (NHRC) ஒரு முறைப்பாடு வந்தது. செராஜுல், பங்களாதேஷுடனான எல்லை வேலிக்கு அருகிலுள்ள ஒரு தொலைதூர இடத்திற்கு காவலில் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு அடித்துக் கொல்லப்பட்டதாக அவரது மனைவி கூறினார். காவல்துறை அவரது புகாரின் மீது நடவடிக்கை எடுக்க மறுத்ததால், மசூம் (MASUM) என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்திடம் மேல்முறையீடு செய்தது. இதற்குப் பதிலளித்த எல்லைப் பாதுகாப்புப் படை, குற்றவியல் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருப்பதாகவும், ஆய்தப் படைகள் மீது தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றும் வாதிட்டு, இழப்பீடு கோரிக்கையை நிராகரித்தது. சித்திரவதை நடந்துள்ளது என்ற தனது கண்டுபிடிப்பை தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் மீண்டும் வலியுறுத்தியது, ஆய்தப் படைகளின் செயல்பாடுகளை நிர்வகிக்கும் சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தொடரலில் இருந்து விலக்குரிமையை எல்லைப் பாதுகாப்புப் படை பயன்படுத்தியதற்காக விமர்சித்தது, மேலும் செராஜுலின் வாரிசுக்கு ரூ. 200,000 இழப்பீடாக வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. இந்தக் கோரிக்கைக்கு எந்தப் பதிலும் வரவில்லை, மேலும் தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் இந்த வழக்கை முடித்து வைத்தது.[316]

## வழக்கு ஆய்வு: இந்திய-வங்காளதேச எல்லையில் நீதித்துறைசாராக் கொலை

### பசீர் அலி

MASUM என்ற அரசுசாரா அமைப்பு மனிதவுரிமைக் குழுவிடம் 2024ஆம் ஆண்டு சமர்ப்பித்த அறிக்கைகளில், எல்லைப் பாதுகாப்புப் படையினரால் (BSF) எல்லையில் நிகழ்த்தப்பட்ட 19 சட்டப் புறம்பானகொலைச் சம்பவங்களை ஆவணப்படுத்தியுள்ளது. அத்தகைய ஒரு சம்பவம், 2019-ல் கல்ஜானி ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது BSF வீரர்களால் கொல்லப்பட்ட பசீர் அலியினுடையது. MASUM-ன் கூற்றுப்படி, அவர் மாடு கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்டிருக்கலாம். ஆற்றில் இருந்த போது, அவர் BSF படகுகளால் சூழப்பட்டு, வேண்டுமென்றே படகுகளால் மோதப்பட்டு, படுகாயமடைந்த நிலையில் விடப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் BSF அதிகாரிகள் அவரை ஆற்றங்கரைக்கு இழுத்துச் சென்று மிக அருகில் இருந்து சுட்டதில் அவர் உயிரிழந்தார்.[317]

315 வங்காளதேசத்தில் உள்ள நார்த் சவுத் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் டாக்டர் சலே ஷஹ்ரியார் எழுதிய ஆய்வுக் கட்டுரை ஒன்றின்படி, தி டிப்ளமேட், 'வங்காளதேசத்திற்கும் இந்தியாவிற்கும் இடையிலான கொடிய எல்லை', 23 பிப்ரவரி 2024-ஐப் பார்க்கவும்.

316 NHRC, வழக்கு/கோப்பு எண் 24/25/6/2018, நடவடிக்கை எண் 11 நாள்: 2020 பிப்ரவரி 20.

317 MASUM, இந்தியாவின் 4வது காலமுறை அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் குழுவின் 141வது அமர்வின் பரிசீலனைக்காக, 3 ஜூன் 2024 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை.

கால்நடை கடத்தல் என்ற ஐயப்பாட்டின் பேரில் ஆட்கள் சுடப்படுவது இந்திய-வங்காளதேச எல்லையில் மிகப் பரவலாக நிகழும் வன்முறை ஆகும். அங்கு இராணுவமயமாக்கலும் வறுமையும் உள்ளூர் சமூகங்களை பிழைப்புக்காக கடத்தலில் ஈடுபடத் தூண்டியுள்ளது.[318]

இந்திய-வாங்காள தேச எல்லையில் BSF நடத்திய வன்முறைச் சம்பவங்களில், 16 வயதான வங்காளதேசச் சிறுவன் ஷிமோன் டாய் ஏப்ரல் 19, 2020 அன்று வயிற்றில் சுடப்பட்டதும் அடங்கும். ஒரு BSF அதிகாரியின் உத்தரவின் பேரில் ஷிமோனும் அவரது தந்தையும் தங்கள் நிலத்தை விட்டு வெளியேற மறுத்ததால் இந்தச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.[319]

ஏப்ரல் 5, 2024 அன்று சித்திரவதைக்கு எதிரான உலக அமைப்பு குறிப்பிட்டபடி, “பல ஆண்டுகளாக BSF, ஒரு துணை ராணுவப் படையாக செயல்பட்டு, இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் பயங்கரவாத ஆட்சியை நடத்தி வருகிறது, எல்லை சமூகங்களை சித்திரவதை, சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மற்றும் துன்புறுத்தல்களுக்கு தண்டனையின்றி உட்படுத்துகிறது”.[320]

**சம்மு-காசுமீரம் (AFSPA துணைகொண்டு வன்முறை)**

சம்மு-காஷ்மீரம், பாகிஸ்தானை ஒட்டியுள்ள இந்தியாவின் ஒன்றியப் புலம் ஆகும். இது நீண்ட காலமாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஆட்சிப்புலப் பூசல்கள் மற்றும் ஆய்த மோதல்களின் மையமாக இருந்து வருகிறது.[321] 1947 முதல், இந்திய அரசியலமைப்பின் கீழ் இப்பகுதிக்குச் சிறப்புத் தகுநிலை வழங்கப்பட்டது, இது அதன் உள் விவகாரங்களை நிர்வகிப்பதில் குறிப்பிடத்தக்க அளவு தன்னாட்சிக்கு இடமளித்தது.[322] இருப்பினும், 2019இல், பாஜக தலைமையிலான இந்திய அரசாங்கம் இந்தச் சிறப்புத் தகுநிலையை நீக்கம் செய்து, இப்பகுதியை நேரடி நடுவண் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது - இந்த நடவடிக்கை 2023இல் இந்திய உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது.[323] இந்த முடிவைத் தொடர்ந்து, இந்த வட்டாரத்தில் குடியியல் சமூகத்தின் மீதும், மனிதவுரிமைக் காப்பாளர்கள் மீதும் இந்திய அரசின் அடக்குமுறை தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக ஊபா (UAPA) போன்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாக இது நடக்கிறது.[324] இந்தக் காலக்கட்டத்தில் சம்மு-காசுமீர மாநில மனிதவுரிமைகள் ஆணையமும் கலைக்கப்பட்டது, அது மூடப்பட்ட நேரத்தில் சற்றொப்ப 8,000 வழக்குகள் நிலுவையில் இருந்தன.[325]

இந்தியாவின் ஆய்தப் படைகள் தனியதிகாரச் சட்டம் (AFSPA) – இந்த வட்டாரத்தின் சிறப்புத் தகுநிலை நீக்கப்பட்ட பிறகும் கூட - அங்கு செயலில் உள்ளது. இது பாதுகாப்புப் படைகளுக்கு விரிந்து பரந்த அதிகாரங்களை வழங்கி, மீறவொண்ணா மனிதவுரிமைகளின் மீறல்களுக்கு வழிவகுத்துள்ளது.[326] இப்பகுதியில் மனிதவுரிமை மீறல்களுக்கு பங்களிக்கும் பிற சட்டங்களில் பொதுப் பாதுகாப்புச் சட்டமும் அடங்கும், இதன் கீழ் சிறார்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக்கூறப்படுகிறது.[327] இந்த அறிக்கையின் பின்வரும் பிரிவில் AFSPA-வின் கட்டமைப்பு பற்றி மேலும்

318 OMCT, இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் சட்டத்திற்குப் புறம்பான கொலை: லிட்டன் மியா வழக்கில் நீதிக்கான அவசர அழைப்பு, 5 ஏப்ரல் 2024, மேலும் காண்க OMCT, மேற்கு வங்கத்தில் சட்டத்திற்குப் புறம்பான கொலைகளுக்கு தண்டனையின்மை, 1 ஆகஸ்டு 2019.

319 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: எல்லைப் பாதுகாப்புப் படையினரின் கொலைகள் எனக் கூறப்படுபவை குறித்த விசாரணை, 9 பிப்ரவரி 2021.

320 ஓஎம்சிடி, இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் சட்டத்திற்குப் புறம்பான கொலை: லிட்டன் மியா வழக்கில் நீதிக்கான அவசர அழைப்பு, 5 ஏப்ரல் 2024.

321 உலகளாவிய மோதல் கண்காணிப்பு, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மோதல், 29 ஏப்ரல் 2024.

322 பிபிசி, சட்டப்பிரிவு 370: காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டதை இந்திய உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது, 11 திசம்பர் 2023.

323 பிபிசி, சட்டப்பிரிவு 370: காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டதை இந்திய உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது, 11 திசம்பர் 2023.

324 AI, நாங்கள் சட்டத்தால் தண்டிக்கப்படுகிறோம், 2 செப்டெம்பர் 2022, பக். 21; பன்னாட்டுமனிதவுரிமைகள் கூட்டமைப்பு, இந்தியா: காஷ்மீர் மனிதவுரிமைப் பாதுகாவலர் குர்ரம் பர்வேஸின் மூன்று ஆண்டுகால தன்னிச்சையான தடுப்புக்காவல், 21 நவம்பர் 2024.

325 AI, நாங்கள் சட்டத்தால் தண்டிக்கப்படுகிறோம், 2 செப்டெம்பர் 2022, பக். 25.

326 AI, இந்திய ஆய்தப் படைகள் (தனி அதிகாரங்கள்) சட்டம், 1958 குறித்த விளக்க அறிக்கை, 8 மே 2005.

327 பன்னாட்டு நீதிபதிகள் ஆணையம், சம்மு-காசுமீரத்தில் முறையற்ற தடுப்புக் காவல்களை நிறுத்துங்கள், 15 அக்டோபர் 2016.

விரிவாகக் கூறப்பட்டாலும், இந்தச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கப்பட்ட பரந்த அதிகாரங்கள், பரவலான சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், தன்னிச்சையான கைதுகள் மற்றும் முழுமையான தண்டனையின்றி மேற்கொள்ளப்படும் சித்திரவதைகளுக்கு வழிவகுத்துள்ளன.[328] 2018 முதல் 2023 வரை பொதுமக்களின் இறப்புகள் 200% க்கும் அதிகமாக அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.[329] சம்மு காசுமீரத்தில் பணிபுரியும் மனிதவுரிமை அமைப்புகள், 1990க்கும் 2019க்கும் இடையில்இப்பகுதியில்தடுப்புக்காவலில்432சித்திரவதைவழக்குகளைஆவணப்படுத்தியுள்ளன.[330] இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில்,70% பேர் பொதுமக்கள், இவர்களில் 11% பேர் சித்திரவதையின் விளைவாக இறந்தனர்.[331]

இப்பகுதியில் பாதுகாப்புப் படையினரால் செய்யப்படும் சித்திரவதைகளில் நீர்மிகுப்புக் கடுவதை (வாட்டர்-போர்டிங்),மின்சாரம்பாய்ச்சுதல்,பாலியல்சித்திரவதை,எரித்தல்மற்றும்குச்சிகள்,கேபிள்கள், தோல் வார்களால் அடித்தல் ஆகியவை அடங்கும்.[332] சம்மு-காசுமீரத்தில் சித்திரவதைக்கு நிகரான மற்றொரு வன்முறை வடிவம், கூட்டத்தைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினர் ஷாட்கன்களைப் பயன்படுத்தி உலோகக் குண்டுகளைச் சுடுவதாகும், இது பெரும்பாலும் கடுமையான காயங்களுக்கு வழிவகுத்துள்ளது.[333] சம்மு-காசுமீரத்தில் உள்ள நிலைமை குறித்த ஐ.நா. மனிதவுரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்தின் 2019 அறிக்கை, 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கும் 2018 ஆம் ஆண்டின் இறுதிக்கும் இடையில் 1,253 பேர் உலோகக் குண்டுகளால் பார்வையிழந்துள்ளனர் என்பதை எடுத்துக்காட்டியது.[334] 2016ஆம் ஆண்டில், பாதுகாப்புப் படையினர் குண்டுகளைப் பயன்படுத்தியதன் விளைவாக 10,000க்கும் மேற்பட்ட காயங்கள் மற்றும் 80 இறப்புகளைத் தொடர்ந்து, சம்மு காசுமீரத்து உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம் குண்டுகளின் பயன்பாட்டைத் தடை செய்யக் கோரி ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது.[335] இருப்பினும், உயர்நீதிமன்றம் பெல்லட் துப்பாக்கிகளைத் தடை செய்ய வேண்டாம் என்று முடிவு செய்தது.[336]

பெல்லட் துப்பாக்கிகள் உயிர்கொல்லாதவை என்று இந்திய அரசாங்கம் கூறி வந்தாலும், சித்திரவதையாகும் படியான பாதுகாப்புப் படையினரின் முறைகேடுகளை ஆய்வு செய்வதில் தனித்திறன் பெற்ற அமைப்பான ஒமேகா அறக்கட்டளை, கடுமையான காயம் அல்லதுசாவுக்கான கூடுதல் ஆபத்தைக் கருத்தில் கொண்டு, அத்தகைய ஆய்தங்கள் உயிர்கொல்லும் ஆற்றலின் ஒரு வடிவமாகக் கருதப்பட வேண்டும் என்றும் அவற்றின் பயன்பாடு தடை செய்யப்பட வேண்டும் என்றும் முடிவு செய்துள்ளது.[337] இந்த நிலைப்பாடு பொருந்தக் கூடிய பன்னாட்டுத் தரநிலைகளால் ஆதரிக்கப்படுகிறது.[338] இன்று வரை, இப்பகுதியில் சித்திரவதை, கொலைகள், ஏனைய பிற மீறல்களைக் கையாள்வதற்கு எந்தவொரு பயனுள்ள நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

328 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா, 2020ஆம் ஆண்டின் நிகழ்வுகள், [நாள் குறிக்கவில்லை].

329 தி நியூயார்க் டைம்ஸ், இந்தியா மீதான சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்த காஷ்மீரிகள் கோரிக்கை, 6 ஜூலை 2019.

330 சம்மு-காசுமீர் குடிமைச் சமூகக் கூட்டமைப்பு (ஜேகேசிசிஎஸ்), சித்திரவதை, 20 மே 2019.

331 சம்மு-காசுமீர் குடிமைச் சமூகக் கூட்டமைப்பு (ஜேகேசிசிஎஸ்), சித்திரவதை, 20 மே 2019.

332 சம்மு-காசுமீர் குடிமைச் சமூகக் கூட்டமைப்பு (JKCCS), சித்திரவதை, 20 மே 2019.; தி வாஷிங்டன் போஸ்ட், இராணுவ வீரர்கள் வந்த இரவு: காஷ்மீரில் அத்துமீறல் குற்றச்சாட்டுகள் வெளிவருகின்றன, 30 செப்டெம்பர் 2019.

333 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: காஷ்மீரில் பெல்லட் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதை நிறுத்துங்கள், 4 செப்டெம்பர் 2020.

334 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையரின் அலுவலகம் (OHCHR), இந்திய நிர்வாக காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் நிர்வாக காஷ்மீரில் மே 2018 முதல் ஏப்ரல் 2019 வரையிலான மனிதவுரிமைகள் நிலைமை குறித்த புதுப்பிப்பு, 8 ஜூலை 2019.

335 தி வயர், மனிதவுரிமை மீறலாக இருப்பதுடன், பெல்லட் துப்பாக்கிகளின் தொடர்ச்சியான பயன்பாடு, மாநிலத்தின் பொது சுகாதார அமைப்பு மற்றும் மருத்துவ நிபுணர்கள் மீது அளவற்ற அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது, 29 மார்ச் 2017; எல்எஸ்இ வலைப்பதிவு, காஷ்மீரில் பெல்லட் துப்பாக்கிகளின் சட்டவிரோதப் பயன்பாடு மற்றும் மனிதவுரிமை மீறல்கள்: மாறுபட்ட கண்ணோட்டங்களும் சவால்களும், 16 ஜூன் 2022.

336 தி வயர், மனிதவுரிமை மீறலாக இருப்பதுடன், பெல்லட் துப்பாக்கிகளின் தொடர்ச்சியான பயன்பாடு, மாநிலங்களின் பொது சுகாதார அமைப்பு மற்றும் மருத்துவ நிபுணர்கள் மீது அளவற்ற அழுத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது, 29 மார்ச் 2017.

337 ஒமேகா ஆராய்ச்சி அறக்கட்டளை, அமைதியான போராட்டங்கள் உள்ளிட்ட கூட்டங்களின் சூழலில், உயிரிழப்பை ஏற்படுத்தாத ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் மனிதவுரிமைகளில் ஏற்படும் தாக்கம் குறித்த ஒமேகா ஆராய்ச்சி அறக்கட்டளையின் சமர்ப்பிப்பு, அக்டோபர் 2019.

338 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையரின் அலுவலகம் (OHCHR), சட்டச் செயலாக்கத்தில் உயிரிழப்பை ஏற்படுத்தாத ஆயுதங்கள் குறித்த வழிகாட்டுதல், 2020.

## வழக்கு ஆய்வு: சம்மு-காசுமீரம்

### ரிஸ்வான் பண்டிட் சித்திரவதையும் சாவும்

29 வயதான பள்ளி ஆசிரியரான ரிஸ்வான் பண்டிட், 2019 மார்ச்சு மாதம் அவந்திபோரா கிராமத்தில் உள்ள அவரது வீட்டில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். ஊடக அறிக்கைகளின்படி, ரிஸ்வானின் சகோதரர், கைது செய்யப்பட்ட நேரத்தில், அவர் விரைவில் விடுவிக்கப்படுவார் என்று காவல்துறை அவரது குடும்பத்தினருக்கு உறுதியளித்ததாகக் கூறினார்.[339] ரிஸ்வான் ஒரு பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டதாக காவல்துறை கூறிய போது, அவரது சகோதரர் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்து, ரிஸ்வானுக்கு அத்தகைய குற்றங்களில் எந்தத் தொடர்பும் இல்லை என்று வலியுறுத்தினார்.[340] ரிஸ்வான் கைது செய்யப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு காவலில் இறந்தார். தீக்காயங்கள் மற்றும் சித்திரவதையின் பிற அறிகுறிகள் உள்ளிட்ட பலத்த காயங்களால் ஏற்பட்ட குருதியிழப்பே அவரது சாவுக்குக் காரணம் என்று சடலக் கூறாய்வு முடிவு செய்தது.[341] இந்த நிகழ்ச்சி குறித்து விசாரணை நடத்துவதாகக் காவல்துறை உறுதியளித்தது, ஆனால் இன்று வரை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டதாகவோ அல்லது அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டதாகவோ செய்தி இல்லை.

## வழக்கு ஆய்வு: சம்மு-காசுமீரம்

### காசுமீரப் பொதுமக்கள் சித்திரவதையும் சாவும்

2024 ஆகஸ்டு மாதம் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் இந்தியப் படையினர்நால்வர் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, சம்மு- காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் எட்டு காஷ்மீரி பொதுமக்களை ராணுவம் கைது செய்தது. கைது செய்யப்பட்டவர்களில் 22 வயதான முகமது ஷௌகத், 45 வயதான சபீர் ஹுசைன் மற்றும் 32 வயதான ஷபீர் அகமது ஆகியோர் அடங்குவர். இவர்களின் உடல்களில் இருந்த காயங்கள், இவர்கள் சித்திரவதையின்விளைவாககாவலில்இறந்திருக்கலாம்என்பதைஉறுதிப்படுத்துகின்றன.[342] மீதமுள்ள ஐந்து கைதிகளும் காவலில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக விடுவிக்கப்பட்ட பிறகு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டியிருந்தது. காயமடைந்தவர்களில் ஒருவரின் மகளின் கூற்றுப்படி, கைதிகளுக்கு மின்சாரம் பாய்ச்சப்பட்டு, அவர்களின் அந்தரங்க உறுப்புகளில் மிளகாய்த் தூள் செலுத்தப்பட்டது. சமூக ஊடகங்களில் பரப்பப்பட்ட ஒருகாணொளியில், தரையில் கிடந்த பொதுமக்களின் அந்தரங்க உறுப்புகளில் ராணுவ வீரர்கள் மிளகாய்த்தூளைத் தூவுவது காட்டப்பட்டது.[343] அதைத் தொடர்ந்து, இந்திய அரசாங்கம் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு வேலையும் பண இழப்பீடும் வழங்கியது, இது உறவினர்களுக்கு இழைக்கப்பட்ட அவமானமாகக் கருதப்பட்டது, அவர்கள் இந்தக் கொலைகளுக்கு நீதி கோரி வருகின்றனர்.[344]

339 அல்ஜசீரா, காவல்துறைக் காவலில் ஆசிரியர் உயிரிழந்ததை அடுத்து காசுமீரத்தில் மோதல்கள், 19 மார்ச்சு 2019.

340 அல்ஜசீரா, காவல்துறைக் காவலில் ஆசிரியர் உயிரிழந்ததை அடுத்து காசுமீரத்தில் மோதல்கள், 29 மார்ச்சு 2019.

341 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையரின் அலுவலகம் (OHCHR), இந்திய நிர்வாகக் காசுமீரம் மற்றும் பாகிஸ்தான் நிர்வாகக் காசுமீரத்தில் 2018 மே முதல் 2019 ஏப்ரல் வரையிலான மனிதவுரிமைகள் நிலைமை குறித்த புதுப்பிப்பு, 2019 ஜூலை 8, பக். 28; ஃபர்ஸ்ட் போஸ்ட், ரிஸ்வான் பண்டிட் காவல் சாவு: சம்மு-காசுமீரக் காவல்துறையிடம் அரசு நியமித்த விசாரணை அதிகாரி அறிக்கை கோரினார்; 'கடுமையான சித்திரவதை' என குடும்பத்தினர் குற்றச்சாட்டு, 22 மார்ச் 2019.

342 அல்ஜசீரா, காவலில் இருந்த பொதுமக்களை இந்திய ராணுவம் கொன்றதாகக் குற்றச்சாட்டு; காஷ்மீரில் சீற்றம் | ராணுவச் செய்திகள் | அல் ஜசீரா, 24 திசம்பர் 2023.

343 அல்ஜசீரா, காவலில் இருந்த பொதுமக்களை இந்திய ராணுவம் கொன்றதாகக் குற்றச்சாட்டு; காஷ்மீரில் சீற்றம் | ராணுவச் செய்திகள் | அல் ஜசீரா, 24 திசம்பர் 2023.

344 அல்ஜசீரா, காவலில் இருந்த பொதுமக்களை இந்திய ராணுவம் கொன்றதாகக் குற்றச்சாட்டு; காஷ்மீரில் சீற்றம் | ராணுவச் செய்திகள் | அல் ஜசீரா, 24 திசம்பர் 2023.

**மணிப்பூரில் அரச வன்முறை**

இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் பகுதி, குறிப்பாக மணிப்பூர், பல்வேறு இன மற்றும் மதக் குழுக்களுக்கு இடையே பத்தாண்டுக் கணக்கிலான சமூகப் பதற்றத்துக்கும் அரச வன்முறைக்கும் பேர்போனதாகும்.[345] மணிப்பூர் பலதரப்பட்ட இனக் குழுக்களின் தாயகமாக உள்ளது, இதில் மெய்த்திகளும் – முதன்மையாக இந்துக்கள் – குக்கிகள் மற்றும் நாகர்களும் – முதன்மையாகக் கிறித்தவர்கள் – பெரும்படியான இனக் குழுக்களாக உள்ளனர்.[346] மேலே ‘இந்திய-வங்காளதேச எல்லை (BSF வன்முறை)’ என்ற பிரிவில் விளக்கப்பட்டுள்ள சூழலைப் போலவே, இந்தியப் பாதுகாப்புப் படைகள் AFSPAஇன் கீழ் செயல்படும் போது பரந்த அளவிலான மனிதவுரிமை மீறல்களைத் தண்டித்தலில்லாக் குற்றவிலக்குடன் செய்துள்ளன.[347] மனிதவுரிமை மீறல்களுக்குத் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு பத்தாண்டுக் கணக்காக நிலவி வந்தது, மீறல்கள் மீதான புலனாய்வு குறைவாகவே இருந்தது, தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC), குறிப்பாக மணிப்பூரில், அவ்வப்போது கைதிகளைச் சந்திக்க விடாமல் தளையிடப்பட்டது.[348]

2012ஆம் ஆண்டில், சட்டத்திற்குப் புறம்பான கொலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சங்கம், மணிப்பூரில் 2000 முதல் 2012 வரை இராணுவம், துணை இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படைகளால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் 1,528 சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் தொடர்பான வழக்கை இந்திய உச்ச நீதிமன்றத்தில் கொண்டு வந்தது.[349] 2017 ஜூலையில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில், உச்ச நீதிமன்றம், குறைந்தது 85 சட்டப் புறம்பான கொலை வழக்குகளை விசாரிக்க நடுவண் புலனாய்வுக் கழகத்தின் இயக்குநருக்கு ஆணையிட்டது. மேலும் மணிப்பூர் காவல்துறை ஆட்களே சில வழக்குகளில் ஈடுபட்டதாகக் கூறப்படுவதால் அவர்களால் பக்கச் சார்பில்லாத நடுநிலையான புலனாய்வுகள் நடத்த முடியாது என்றும் கூறியது.[350] நடுவண் புலனாய்வுக் கழகம் நீதித்துறைசாராக் கொலைகள் தொடர்பான வழக்குகளில் புலனாய்வுகள் தொடங்கியிருந்தாலும், 2018ஆம் ஆண்டில் 356 பாதுகாப்பு மற்றும் இராணுவ அதிகாரிகள் விசாரணைகளை எதிர்த்துத் தாக்கல் செய்த விண்ணப்பம் உள்ளிட்ட காரணங்களால், முன்னேற்றம் தாமதமாகியுள்ளது.[351] இதற்கிடையில், பாதிப்புற்றவர்களின் குடும்பங்கள் துன்புறுத்தலுக்கும் பழிவாங்கலுக்கும் முகங்கொடுக்க வேண்டியதாயிற்று.[352] 2019ஆம் ஆண்டில், நடுவண் புலனாய்வுக் கழகத்துக்கு அரசாங்கத்திடமிருந்து “வழக்குத் தொடுக்கும் அனுமதி” இன்னும் வந்து சேரவில்லை என்று தெரிந்தது. இந்தியச் சட்டப்படி அரசு அதிகாரிகள் மீது வழக்குத் தொடுக்க இந்த அனுமதி சட்டப்படியான முன்தேவை ஆகும் என்று தெரிவிக்கப்பட்டது (அறிக்கையின் பின்வரும் பகுதியைப் பார்க்கவும்).[353]

2023 மே மாதம் மெய்த்திகள், குக்கிகள் உள்ளிட்ட பல்வேறு இனக்குழுக்களுக்கு இடையிலான வன்முறையால் வீடுகளும் கடைகளும் வழிபாட்டுக் கூடங்களும் எரிக்கப்படவும் அழிக்கப்படவும் செய்தன. மேலும் 2025 பிப்ரவரிக்குள் 60,000க்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்தனர்.[354] 2024

345 பிபிசி, மணிப்பூர் வன்முறை: என்ன நடக்கிறது? ஏன் நடக்கிறது? 20 ஜூலை 2023
346 AI, இந்தியா: பிரேன் சிங் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து மணிப்பூரில் அதிகாரியங்கள் மனிதவுரிமைகளை நிலைநாட்டி வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும், 11 பிப்ரவரி 2025.
347 OMCT, மணிப்பூரில் நீதித்துறைசாராக் கொலைகள் தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க உச்ச நீதிமன்ற வழக்கை கண்டிப்பாகக் மதித்து நடக்க வேண்டும், 26 செப்டெம்பர் 2018.
348 அமெரிக்க அயலுறவுத் துறை, இந்தியாவில் மனிதவுரிமைகள் குறித்த 2016 அறிக்கை, 2016, பக். 4; தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், செல்வி ஐரோம் ஷர்மிளாவைச் சந்திப்பதற்குத் தற்போக்கான கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்கக் கோரி மணிப்பூர் அரசுக்கு தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் விடுத்த அறிவிப்பு, 30 அக்டோபர் 2013.
349 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: மணிப்பூர் படுகொலைகள் குறித்து விசாரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு: வெளிப்படையான விசாரணையை உறுதி செய்யவும், ஆய்தப்படை தனி அதிகாரச் சட்டத்தை ரத்து செய்யவும், 15 ஜூலை 2017.
350 பன்னாட்டுச் சட்டவாளர் ஆணையம், இந்தியா: உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி மணிப்பூர் கொலைகளை அதிகாரிகள் முழுமையாகப் புலனாய்வு செய்ய வேண்டும், 30 ஜூலை 2017.
351 OMCT, மணிப்பூரில் நீதித்துறைசாராக் கொலைகள் தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க உச்ச நீதிமன்ற வழக்கைக் கண்டிப்பாக மதித்து நடக்க வேண்டும், 26 செப்டெம்பர் 2018.
352 OMCT, மணிப்பூரில் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க உச்ச நீதிமன்ற வழக்கை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும், 26 செப்டெம்பர் 2018.
353 OMCT, இந்தியா: மணிப்பூரில் உச்ச நீதிமன்றம் ஆணையிட்ட புலனாய்வுகளில் புதிய தாமதங்களும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகளும், 31 ஜனவரி 2019.
354 AI, இந்தியா: பிரேன் சிங் பதவி விலகியதைத் தொடர்ந்து மணிப்பூரில் அதிகாரிகள் மனிதவுரிமைகளை நிலைநாட்டி வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும், 11 பிப்ரவரி 2025.

நவம்பர் நிலவரப்படி, 258க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர், அவர்களில் ஏறக்குறைய மூன்றில் இரு பங்கினர் குக்கிகள் ஆவர்.[355]

2023ஆம் ஆண்டில், கூட்டுப் பாலியல் வன்கொடுமையால் பாதிப்புற்றவர்கள், தங்களுக்கு எதிரான கும்பல் வன்முறையைக் காவல்துறையினர் நேரில் பார்த்தும் தலையிடத் தவறி விட்டதாகக் குற்றஞ்சாட்டியதாய் அறிக்கைகள் வெளிவந்தன.[356] பாதிப்புற்றவர்கள் காவல் நிலையத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முயன்ற போதும் காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.[357] முறைப்பாடுகளைப் பதிவு செய்து விசாரிக்கத் தவறிய காவல்துறையின் செயல் குறித்து விளக்கமளிக்குமாறு இந்திய உச்ச நீதிமன்றம் மாநில அரசிடம் கோரியுள்ளது. வன்முறை தொடங்கியதிலிருந்து பதிவு செய்யப்பட்ட பாலியல் வன்முறை உள்ளிட்ட 6,000க்கு மேற்பட்ட வன்முறை வழக்குகளுக்கு விடையிறுக்கு முகத்தான் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த பதிவுகளை வழங்குமாறு மணிப்பூர் காவல்துறைக்கு அது ஆணையிட்டது.[358]

இந்த வட்டாரத்தில் நடந்த வன்முறைக்குப் பதிலளிக்கும் விதமாக, 2023ஆம் ஆண்டில் ஐ.நா. வல்லுநர்கள், குறிப்பாக “அனைத்து வயதுடைய நூற்றுக்கணக்கான பெண்களையும் சிறுமிகளையும், முக்கியமாக குக்கி இனச் சிறுபான்மையினரைக் குறிவைத்து நடத்தப்படும் பாலின அடிப்படையிலான வன்முறை” குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினர்.[359] இன, மதச் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை மற்றும் அடக்குமுறைச் செயல்களை நியாயப்படுத்த பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்தும் அவர்கள் கவலைகள் எழுப்பியுள்ளனர்.[360]

355 பிபிசி, மணிப்பூர் வன்முறை: என்ன நடக்கிறது மற்றும் ஏன் – பிபிசி நியூஸ், 20 ஜூலை 2023. மேலும் பார்க்க: தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், மணிப்பூரில் மேலும் 90 மத்திய ஆயுதக் காவல் படையினர் பணியமர்த்தப்படவுள்ளனர்; இன வன்முறையால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்பு 258: மாநிலப் பாதுகாப்பு ஆலோசகர், 22 நவம்பர் 22. மேலும் பார்க்க: மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் இன வன்முறை, 14 செப்டெம்பர் 2024.

356 தி கார்டியன், மணிப்பூரில் பெண்கள் மீது பாலியல் வன்தாக்கு நிகழ்ந்த காணொளி வெளியான பின் மோதி வெளிப்படையாகப் பேசுகிறார், 20 ஜூலை 2023.

357 பிபிசி, நிர்வாணத் தாக்குதல் காணொளியில் சிக்கிய மணிப்பூர் பெண்கள் ‘கைவிட மாட்டார்கள்’, 10 நவம்பர் 2023.

358 பிபிசி, மணிப்பூர்: வைரலான தாக்குதல் வீடியோ தொடர்பான பெண்களின் மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் விசாரித்தது – பிபிசி நியூஸ், 31 ஜூலை 2023.

359 மனிதவுரிமைகள் உயராணையர் அலுவலகம் (OHCHR), ஐ.நா. வல்லுநர்கள்: மணிப்பூர், 4 செப்டெம்பர் 2023.

360 மனிதவுரிமைகள் உயராணையர் அலுவலகம் (OHCHR), ஐ.நா. வல்லுநர்கள்: மணிப்பூர், 4 செப்டெம்பர் 2023.

# சித்திரவதையைச் சட்டமுறைப்படுத்தல்: தேசியச் சட்டவழிச் சட்டகம்




© Reuters/P Ravikumar

**2020இல் இந்தியாவின் புதிய குடியுரிமைச் சட்டத்திற்கு எதிரான ஒரு போராட்டத்தில், தடுப்புக்குப் பின்னால் கலவரத் தடுப்பு அணியத்தில் காவல்துறையினர். இந்தியாவில் அமைதியான கூட்டங்களைக் கட்டுப்படுத்துவதில் மிகையளவான வலுப்பயன்பாடு ஆவணமாக்கப்பட்டுள்ளது; அங்கு அதிகாரியங்கள் போராட்டக்காரர்களை வன்முறையாகக் கலைத்து அச்சுறுத்தினர்.**

சித்திரவதையையும் பிறவகை மோசமான நடத்துமுறையையும் தடுப்பதற்கு, சித்திரவதைக்கு எதிரான தரநிலைகளை உள்நாட்டுச் சட்டத்தில் திறம்பட இணைப்பதும், அவற்றை நடைமுறையில் செயலாக்குவதும் அவசியமாகும். ஒரு வலுவான சட்டவழிச் சட்டகம் முறைகேடுகளைத் தடுப்பது மட்டுமல்லாமல், பாதிப்புற்றவர்களுக்குப் பொறுப்புக்கூறலும் இழப்பீடும் வழங்குவதற்கோர் அடித்தளமும் அமைத்துக் கொடுக்கிறது. இருப்பினும், இந்தியா இன்னும் ஐ.நா. சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையை (UNCAT) ஒப்புறுதி செய்யவில்லை; சித்திரவதைக்கு எதிரான தனிச் சட்டமும் இல்லை; இப்போதுள்ள சட்டங்களில் இந்தியா சித்திரவதையைக் குற்றமாக்கத் தவறி

விட்டது; மேலும் சுதந்திரம் பறிக்கப்பட்ட தனியாட்களுக்கான அடிப்படைப் பாதுகாப்புகளை நிலைநிறுத்தவும் தவறிவிட்டது. மேலும், பன்னாட்டுத் தரநிலைகளுக்கு இணங்க, போராட்டங்களைக் கட்டுப்படுத்துவது உட்பட, சட்டச் செயலாக்கத் துறையினரால் பயன்படுத்தப்படும் ஆற்றலைப் போதுமான அளவு ஒழுங்குபடுத்தும் சட்டங்களோ வழிகாட்டுநெறிகளோ இல்லை. இறுதியாக, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள், கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்கும் சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கும் அடிக்கடி ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் சட்ட இடைவெளிகள் சித்திரவதைப் பழக்கம் தொடரும் உருவாக்குகின்றன. அரசு அதிகாரிகளால் சித்திரவதை பரவலாகப் பயன்படுத்தப்படுவதற்கு வழிவகுக்கும் படியாக இந்தியாவின் சட்டவழிச் சட்டகத்தில் உள்ள சில முக்கியக் குறைபாடுகளை இந்தப் பிரிவு ஆராய்கிறது.

## சித்திரவதைக்கு எதிரான ஐநா ஒப்பந்தத்தை (UNCAT) ஒப்புறுதி செய்யவும் சித்திரவதையைக் குற்றமாக்கவும் தவறியமை

சித்திரவதைக்கு எதிரான ஐநா ஒப்பந்தத்தில் (UNCAT) இந்தியா 1997இல் ஒப்பமிட்டதிலிருந்து பன்னாட்டு அமைப்புகள் மற்றும் நாடுகளின் தொடர்ச்சியான அழைப்புகள் இருந்த போதிலும், இந்தியா இன்னமும் இந்த ஒப்பந்தத்தை ஒப்புறுதி செய்யவில்லை.[361] 2024 ஜூலையில் அவ்வாறு இந்தியா தொடர்ந்து செய்யத் தவறுவது குறித்து மனிதவுரிமைகள் ஆணையம் வருத்தம் தெரிவித்தது,[362] மேலும் 2022 நவம்பரில் இந்தியாவின் நான்காவது உலகளாவிய காலவட்ட மீளாய்வின் போது, 31 நாடுகள் UNCATஐ ஒப்புறுதி செய்யப் பரிந்துரைத்தன.[363] ஆயினும், இந்த ஒப்பந்தத்தை ஒப்புறுதி செய்யாத 21 நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

சித்திரவதைக்கு எதிரான ஐநா ஒப்பந்தத்தை (UNCAT) ஒப்புறுதி செய்யா விட்டாலும் சித்திரவதை மீதான அறுதித் தடைக்கு இந்தியாவும் கட்டுப்பட்டதே. இந்தத் தடை வழக்கமான பன்னாட்டுச் சட்டத்தில் ஓர் இறுதியான நெறியாகும், அதாவது ஒப்பந்த ஒப்புறுதி கருதாமல் பொறுப்புக்கூறல் வழிமுறைகளின் போதாமையைக் கருத்தில் கொண்டு, இது நாடுகளைக் கட்டுப்படுத்தும்.[364] இந்தத் தடை மீறவொண்ணாதது; போர், போர் ஆபத்து, உள்நாட்டு அரசியலில் நிலையற்ற தன்மை அல்லது வேறு எந்தப் பொது நெருக்கடிநிலையும் உட்பட எந்த விதிவிலக்கான நிலைமையிலும் நியாயப்படுத்த முடியாதது.[365]

UNCATஐத் தவிர, சித்திரவதைத் தடை என்பது, இந்தியாவால் ஒப்புறுதி செய்யப்பட்டுள்ள பன்னாட்டுக் குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை (ICCPR) உள்ளிட்ட பல பன்னாட்டு மனிதவுரிமை

361 மனிதவுரிமைகள் குழு, உலகளாவிய காலமுறை மதிப்பாய்வு மீதான பணிக்குழுவின் அறிக்கை, 17 ஜூலை 2017, பத்திகள் 33, 161.5-29, மற்றும் 161.74

362 மனிதவுரிமைகள் குழு, முடிவுரை 2024, 25 ஜூலை 2024.

363 மனிதவுரிமைகள் பேரவை, இந்தியாவின் உலகளாவிய காலவட்ட மீளாய்வு [UPR], நான்காவது சுழற்சி: பரிந்துரைகளின் வரிசை [நாள் குறிக்கவில்லை]; தி லீஃப்லெட், சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. ஒப்பந்தத்தை ஒப்புறுதி செய்ய இந்தியா தொடர்ந்து மறுத்து வருவது அடிப்படையற்றது, 21 நவம்பர் 2022. மேலும் காண்க: ஐநா மனிதவுரிமைகள் உயராணையர் அலுவலகம்(OHCHR), இந்தியாவின் உலகளாவிய காலவட்ட மீளாய்வு, நான்காவது சுழற்சியின் விளைவு கருதிய பார்வைகள், 17 ஜூலை 2023, இதில் 2017 UPRஇல் UNCATஐ இந்தியா ஒப்புறுதி செய்யும் படி 30 அரசுகள் பரிந்துரைத்தன. பார்க்கவும்: HRW, இந்தியா: முகன்மையான ஐநா உரிமைப் பரிந்துரைகள் கண்டுகொள்ளப்படவில்லை, 21 செப்டெம்பர் 2017.

364 இதற்கும் மேலே, சித்திரவதை மீதான சிறப்பு அறிக்கையாளர் (SRT) யுவான் இ. மெண்டெஸ் 2014ஆம் ஆண்டில் 'கொடிய, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான நடத்துமுறை' என்பதன் கட்டாயத் தகுநிலையை ஏற்றுக்கொண்டார் (காண்க: ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை (UNHRC), சித்திரவதை மற்றும் பிற கொடிய, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனை மீதான சிறப்பு அறிக்கையாளர், யுவான் இ. மெண்டெஸ் – கானாவுக்கான தூதுக்குழுவின் அறிக்கை (கானாவுக்கான தூதுக்குழுவின் சிறப்பு அறிக்கையாளர் (SRT) அறிக்கை) 5 மார்ச் 2014, ஐ.நா. ஆவணம். A/HRC/25/60/Add.1, பத்தி. 40). இந்தத் தகுநிலை, அமெரிக்க நாடுகளுக்கு இடையேயான மனிதவுரிமைகள் நீதிமன்றத்தாலும் (காண்க: லோரி பெரென்சன்-மெஜியா -எதிர்- பெரு, வழக்கு எண் 119, 25 நவம்பர் 2004, பத்தி 100), நீதிமன்றத்தின் சட்ட நீதியியல் மீதான விளக்கவுரையிலும் (காண்க: சித்திரவதைத் தடுப்புக்கான சங்கம் (APT), நீதி மற்றும் பன்னாட்டுச் சட்டத்திற்கான மையத்தாலும் (CEJIL) அறிந்தேற்கபப்ட்டுள்ளது. பார்க்கவும்: (சித்திரவதையைத் தடுப்பதற்கான சங்கம் (APT) பன்னாட்டுச் சட்டத்தில் சித்திரவதை: சட்டநீதியியலுக்கு ஒரு வழிகாட்டி, 2008, பக். 113).

365 UNCAT, உறுப்பு 2.2; CAT, பொதுக் கருத்து எண் 2, 24 ஜனவரி 2008, ஐ.நா. ஆவணம் CAT/C/GC/2, பத்தி 3; RIG, பத்திகள் 9 மற்றும் 11. மேலும் காண்க HRCttee, பொதுக் கருத்து எண் 20: உறுப்பு 7 (சித்திரவதை அல்லது பிற கொடிய, மனிதத் தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்குத் தடை) (பொதுக் கருத்து எண் 20), 10 மார்ச்சு 1992, பத்தி 3.

ஒப்பந்தங்களிலும் சித்திரவதைக்குத் தடை என்பது வெளிப்படையாக அறிந்தேற்கப்பட்டுள்ளது. இருப்பினும், ICCPRஐ ஒப்புறுதி செய்த போது இந்தியா முக்கிய மாறுபாடுகளைச் சேர்த்தது. இது மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான தனியொருவரின் முறைப்பாடுகள், விசாரணைகள் அல்லது நாடுகளுக்கிடையேயான தகவல்தொடர்புகளை உடன்படிக்கையின் மேற்பார்வைக் குழுவான மனிதவுரிமைகள் குழு பரிசீலிக்க விடாமல் தடுப்பதாக இருந்தது.[366] இந்த மாறுபாடுகள் பாதிப்புற்றவர்களும் உயிர் பிழைத்தவர்களும் நீதி பெறுவதற்கான வாய்ப்புகளுக்குக் கணிசமாக வரம்பிடுகின்றன. UNCATஇல் ஒப்பமிட்ட போதும் இந்தியா இதேபோன்ற மாறுபாடுகளை விதித்திருந்தது,[367] இது எதிர்கால ஒப்புறுதியின் தாக்கத்தை வரம்புக்குட்படுத்தும் என்று வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.[368]

சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. ஒப்பந்தத்தை (UNCAT) ஒப்புறுதி செய்வதற்கான உலகளாவிய காலவட்ட மீளாய்வு (UPR) பரிந்துரைகளைச் செயல்படுத்த ஒப்புக்கொண்ட போதிலும், இந்திய அரசாங்கம் அவ்வாறு செய்யவில்லை, மேலும் தனது தாமதத்தை நியாயப்படுத்த மீண்டும் மீண்டும் முயற்சி செய்து வருகிறது. ஆகஸ்டு 2022இல், இந்தியா பின்வருமாறு கூறியது:

> இந்திய சட்ட ஆணையம், ஒப்புதல் செயல்முறையை மேற்கொள்வதற்கு முன்னர் உள்நாட்டுச் சட்டத்தில் தேவைப்படும் மாற்றங்களை ஆராய்ந்து வருகிறது. இருப்பினும், இந்திய அரசியலமைப்பு, இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் உள்ளிட்டவற்றின் கீழ் உள்ள விதிகள் போன்ற தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பு, எந்தவொரு சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனைக்கு எதிராகப் போதுமான பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கிறது.[369]

இந்த நியாயப்படுத்தல்கள் ஆதாரமற்றவையாகத் தோன்றுகின்றன. இந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள மீறல்கள் நிரூபிப்பது போல, தற்போதுள்ள கட்டமைப்புகளும் அவற்றை அமல்படுத்தாததும் சித்திரவதையைத் தடுப்பதிலும் அதற்குப் பதிலளிப்பதிலும் போதுமானதாக இல்லை அல்லது தகுதியற்றவை என நிரூபிக்கப்பட்டுள்ளன. மாறாக, அரசாங்கத்தின் தயக்கம் அரசியல் விருப்பமின்மையுடன் தொடர்புடையதாகத் தெரிகிறது, இது பன்னாட்டுஆய்வுக்கு அதன் பரந்த எதிர்ப்பிலிருந்து உருவாகியிருக்கலாம். இது ICCPR மீதான அதன் தயக்கங்களில் மட்டுமல்ல, சுதந்திரமான ஆய்வுகளை அனுமதிக்க அதன் நீண்டகால மறுப்பிலும் தெளிவாகத் தெரிகிறது. உதாரணமாக, சித்திரவதை மீதான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர், 1999-ல் முதன்முதலில் ஒரு நாட்டுப் பயணத்திற்கு கோரிக்கை விடுத்தார், அதன் பின்னர் குறைந்தது எட்டு தொடர் கோரிக்கைகளை அனுப்பியுள்ளார் - ஆனாலும் இந்திய அரசாங்கத்திடமிருந்து பதில் இன்னும் நிலுவையில் உள்ளது.[370] மே 2025 நிலவரப்படி, ஐ.நா. மனிதவுரிமைகள் நிபுணர்களால் அனுப்பப்பட்ட மொத்தம் 18 வருகைக் கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன, அவற்றுக்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.[371]

சித்திரவதையைக் குற்றமாக்கும் உள்நாட்டுச் சட்டம் இயற்றுவதில் ஏற்பட்ட தோல்விக்கு அரசியல் விருப்பமின்மையும் ஒரு முக்கிய காரணமாகத் தெரிகிறது. 2010ஆம் ஆண்டில் சித்திரவதைத் தடுப்புச் சட்டமுன்வடிவின் மூலம் மிக முக்கியமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்தச்

366 ஐ.நா., ஒப்பந்த அமைப்புத் தரவுத்தளம்: இந்தியாவின் ஏற்பு நிலை, 5 திசம்பர் 2024 அன்று அணுகப்பட்டது.

367 இந்திய சட்ட ஆணையம், UNCAT செயலாக்கம், அக்டோபர் 2017, பக். 4.

368 நித்யா ராமகிருஷ்ணன், காவலில்: தெற்காசியாவில் சட்டம், தண்டனையின்மை மற்றும் கைதிகள் மீதான துஷ்பிரயோகம் (சேஜ் சட்டம்), 10 ஏப்ரல் 2019, அத்தியாயம் 2.

369 ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் உலகளாவிய காலமுறை ஆய்வுக்கான செயற்குழு, இந்தியா; மனிதவுரிமைகள் பேரவைத் தீர்மானங்கள் 5/1 மற்றும் 16/21 ஆகியவற்றின்படி சமர்ப்பிக்கப்பட்ட தேசிய அறிக்கை, நாற்பத்தி ஒன்றாவது அமர்வு, 17 ஆகஸ்டு 2022, A/HRC/WG.6/IND/1, பத்தி 54.

370 ஐநா மனிதவுரிமைகள் உயராணையர் அலுவலகம்(OHCHR), மனிதவுரிமைகள் பேரவையின் சிறப்பு நடைமுறைகள் தொடர்பான 1998 முதல் நாட்டு வருகைகள் குறித்த பார்வை, [நாள்குறிக்கவில்லை], இந்தியாவைப் பார்க்கவும், 6 திசம்பர் 2024 நிலவரப்படி புதுப்பிக்கப்பட்டது.

371 ஐநா மனிதவுரிமைகள் உயராணையர் அலுவலகம்(OHCHR), மனிதவுரிமைகள் பேரவையின் சிறப்பு நடைமுறைகள் தொடர்பான நாட்டுப் பயணங்கள்,, [நாள்குறிக்கவில்லை].

சட்டமுன்வடிவு 2010 ஏப்ரல் 26 அன்று இந்திய நாடாளுமன்றத்தின் கீழவையான மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் நாடாளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவைக்கு அனுப்பப்பட்டது. அங்கு பெரும்பாலான மாநிலங்கள்/ஒன்றியப் புலங்கள் இந்தச் சட்ட முன்வடிவை ஒரு தேர்வுக் குழுவிற்கு அனுப்ப ஆதரவு தெரிவித்தன.[372] பின்னர் அது மாநிலங்களவையின் தேர்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது, அது பல திருத்தங்களை முன்மொழிந்தது.[373] இருப்பினும், மக்களவையின் பதவிக்காலம் முடிவடைந்து அது கலைக்கப்பட்டதால், இந்தச் சட்ட முன்வடிவு இறுதியில் காலாவதியானது.[374]

2017ஆம் ஆண்டில், சித்திரவதைத் தடுப்புச் சட்டம் என்றும் அழைக்கப்படும் ஒரு தனியாள் சட்டமுன்வடிவு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போது மற்றொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.[375] இருப்பினும், அது அரசாங்க ஆதரவைப் பெறத் தவறியதால் சட்டமாக்கப்படவில்லை.[376]

சித்திரவதைக்கு எதிரான சட்டம் இயற்றுவதில் மீண்டும் மீண்டும் தோல்வியுற்றமை இந்தியாவின் இப்போதைய சட்டங்கள் ஏற்கெனவே போதுமான பாதுகாப்புகளை வழங்குகின்றன என்ற கூற்றுக்களால் நியாயப்படுத்தப்படுகிறது. இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் அரசியலமைப்புப் பாதுகாப்புகளில் உள்ள விதிகளை அரசாங்கம் சுட்டிக்காட்டி, ஒரு தனி சட்டம் தேவையில்லை என்பதற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளது.[377]

2023ஆம் ஆண்டில், இந்தியக் குற்றவியல் நீதி அமைப்பில் மாற்றங்களைக் குறிக்கும் வகையில், காலனித்துவ காலச் சட்டங்களுக்குப் பதிலாக மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் இந்தியாவில் இயற்றப்பட்டன. 1860ஆம் ஆண்டின் இந்தியத் தண்டனைச் சட்டத்திற்குப் பதிலாக பாரதிய நியாய சன்கிதா (பி.என்.எஸ்) இயற்றப்பட்டது; 1973ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்குப் பதிலாக பி.என்.எஸ்.எஸ் இயற்றப்பட்டது; மற்றும் 1872-ஆம் ஆண்டின் இந்தியச் சாட்சியச் சட்டத்திற்குப் பதிலாக பாரதிய சக்ஷ்யாதீனியம் (பி.எஸ்.ஏ) இயற்றப்பட்டது.

372 மாநிலங்களவை தெரிவுக் குழு, சித்திரவதைத் தடுப்பு மசோதா 2010 மீதான குழு அறிக்கை, திசம்பர் 2010, பக். iv.

373 தேர்வுக் குழு, ஐ.நா. சித்திரவதைத் தடுப்பு ஒப்பந்தத்தின் (UNCAT) தரநிலைகளைப் பூர்த்தி செய்யத் தவறிய பல விதிகளை அடையாளம் கண்டது. உதாரணமாக, இந்த மசோதா, தண்டனை, கட்டாயப்படுத்துதல், அச்சுறுத்தல் அல்லது பாகுபாடு போன்ற பிற நோக்கங்களைப் புறக்கணித்து, சித்திரவதையின் நோக்கத்தை 'ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறுவது' என்று மட்டுமே குறுகிய முறையில் வரையறுத்தது. மேலும், குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர்வதற்கு முன்பு தகுந்த அதிகாரியிடமிருந்து (மாநில அல்லது மத்திய அரசு) 'முன் அனுமதி' பெற வேண்டும் என்று கோருவது மற்றும் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான காலக்கெடுவை வெறும் ஆறு மாதங்களாகக் கட்டுப்படுத்துவது போன்ற நடைமுறைத் தடைகளையும் இது பொறுப்புக்கூறலுக்கு விதித்தது. தேர்வுக் குழு திருத்தங்களைப் பரிந்துரைத்த போதிலும், முக்கியமான இடைவெளிகளும் குறைபாடுகளும் இன்னும் சரிசெய்யப்படாமல் இருப்பது குறித்து தேசிய நிபுணர்களும் நடைமுறை வல்லுநர்களும் கவலை தெரிவித்தனர். காண்க: நித்யா ராமகிருஷ்ணன், காவலில்: தெற்காசியாவில் சட்டம், தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு, சிறைக்கைதியின் உரிமை மீறல் (In Custody: Law, Impunity and Prisoner Abuse in South Asia), 2013, பக். 62.

374 தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், ஆண்டறிக்கை 2019-20, 2019, பக். 40-41.

375 இந்தச் சட்டமுன்வடிவானது தண்டனை, அச்சுறுத்தல் அல்லது கட்டாயப்படுத்தல் ஆகியவற்றை சித்திரவதையின் நோக்கங்களாக அறிந்தேற்கும் வகையில் சித்திரவதையின் வரையறையை விரிவாக்கிய போதிலும், பாகுபாடு சார்ந்த சித்திரவதையை அறிந்தேற்கத் தவறியதுடன், வழக்குத் தொடர முன்அனுமதி தேவை என்பது, வழக்குகளை முறைப்பாடு செய்ய ஆறு மாத காலக்கெடு போன்ற பிற சிக்கல்களையும் கவனத்தில் கொள்ளவில்லை. காண்க: இந்தியச் சட்ட ஆணையம், UNCAT செயலாக்கம், அக்டோபர் 2017.

376 சித்திரவதையைக் குற்றமாக்குவதற்கு எடுத்த ஏனைய முக்கியத்துவங்குறைந்த முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. 2018இல் சித்திரவதைத் தடுப்புச் சட்ட முன்வடிவை மீண்டும் அறிமுகம் செய்தது, 2020இல் குற்றவியல் சட்டத்தைத் திருத்துவதற்கான முன்மொழிவுகள், 2021இல் (அரசு ஊழியர்களால் செய்யப்படும்) சித்திரவதை மற்றும் அட்டூழியங்களைத் தடுக்கும் மசோதா ஆகியவை அடங்கும்; இவற்றின் முன்னேற்றம் குறித்து எந்தப் புதுப்பிப்புகளும் இல்லை. காலனித்துவ காலத்திலிருந்து நடைமுறையில் இருந்த குற்றவியல் சட்டம் மற்றும் நடைமுறைக்கான பழைய சட்டக் கட்டமைப்பின் வடிவமும் மற்றொரு தவறவிடப்பட்ட வாய்ப்பாகும். காண்க: தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், ஆண்டறிக்கை2019-20, [நாள்குறிக்கவில்லை], [4.9-4.14]-ல்; சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம், இந்திய தண்டனைச் சட்டத்தில் சித்திரவதைக் குற்றங்களைச் சேர்ப்பதன் இன்றியமையாமை, 18 ஆகஸ்டு 2020; போலிஸ் திட்டம், வழக்குகளில் நீதித்துறை மற்றும் நிர்வாகப் பொறுப்புக்கூறல். இந்தியாவில் காவலில் நிகழும் சாவுகள் (2015-2016), 2022; இந்திய தேசிய சட்டப் பள்ளி பல்கலைக்கழகம், பாரதிய நியாய சன்ஹிதா: காலனித்துவ கருத்துக்களை காலனித்துவ நீக்கம் செய்தல் அல்லது வலுப்படுத்துதல், 25 ஜனவரி 2024. சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனையைத் தடை செய்வது குறித்த ஒரு பிரிவைச் சேர்ப்பதற்காக அரசியலமைப்பின் 21வது சரத்தைத் திருத்துவதற்கான பரிந்துரைகளை அரசியலமைப்பின் செயல்பாட்டை மறுஆய்வு செய்வதற்கான தேசிய ஆணையம் வழங்கிய முந்தைய தோல்வியுற்ற முயற்சி ஒன்று இருந்தது, ஆனால் அது ஒருபோதும் செயல்படுத்தப்படவில்லை. காண்க: சட்ட விவகாரங்கள் துறை, அரசியலமைப்பின் செயல்பாட்டை மறுஆய்வு செய்வதற்கான தேசிய ஆணையத்தின் அறிக்கை, தொகுதி I, அத்தியாயம் 3: அடிப்படை உரிமைகள், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அடிப்படைக் கடமைகள், பத்தி 3.9.

377 ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் உலகளாவிய காலமுறை ஆய்வுக்கான செயற்குழு, இந்தியா; மனிதவுரிமைகள் பேரவைத் தீர்மானங்கள் 5/1 மற்றும் 16/21 ஆகியவற்றின்படி சமர்ப்பிக்கப்பட்ட தேசிய அறிக்கை, நாற்பத்தி ஒன்றாவது அமர்வு, 17 ஆகஸ்டு 2022, A/HRC/WG.6/IND/1, பத்தி 54.

இருப்பினும், இந்த சீர்திருத்தங்கள் சித்திரவதையை ஒரு தனி குற்றமாக அறிமுகப்படுத்தத் தவறிவிட்டன. BSA, சாட்சியச் சட்டத்தைப் போலவே இருப்பதாக விமர்சிக்கப்பட்டது, மேலும் BNS, அரசு ஊழியர்களின் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறலை உறுதி செய்யத் தவறியது உள்ளிட்ட பிற கடுமையான குறைபாடுகளுக்காகக் குற்றாய்வு செய்யப் பெற்றது.[378] காட்டாக, "அரசத்துரோகம்" என்ற காலனித்துவக் குற்றம் நீக்கப்பட்டாலும், BNSஇல் உள்ள அதற்கான பிரிவு, "இந்தியாவின் இறைமை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தை விளைவிக்கும் செயல்" என்ற வேறு பெயரில் ஒரு புதிய, பரந்த தேசத்துரோகக் குற்றத்தை உருவாக்கியது.[379] இது, "இயல்பாகவே குற்றமற்ற செயல்களாக இருக்கக்கூடிய" செயல்களுக்காக மாற்றுக்கருத்து உடையவர்களைக் குற்றவாளியாக்குவதற்கு வழிவகுத்தது.[380] அடுத்த பிரிவில் விளக்கப்பட்டுள்ளபடி, BNSS தொடர்பாகவும் கவலைகள் எழுப்பப்பட்டன.[381]

சித்திரவதை செயல்கள் வாழ்வு மற்றும் சுதந்திரத்திற்கான அரசியலமைப்பு உரிமையை (உறுப்பு 21) மீறுகின்றன என்பதை இந்திய உச்ச நீதிமன்றம் அங்கீகரித்திருந்தாலும்,[382] அதன் உள்நாட்டுச் சட்டத்தில் சித்திரவதைக்கு ஒரு குறிப்பிட்ட குற்றவியல் குற்றம் இல்லை. சித்திரவதைக்குச் சமமான சில செயல்களுக்கு BNSஇல் உள்ள மற்ற சாதாரண குற்றங்களின் கீழ் வழக்குத் தொடரலாம், அவை:

- வாக்குமூலம் பெறுவதற்காகவோ அல்லது சொத்தை மீட்டெடுக்கக் கட்டாயப்படுத்துவதற்காகவோ தானாக முன்வந்து காயம் அல்லது கடுமையான காயத்தை ஏற்படுத்துதல்;[383]
- வாக்குமூலம் பெறுவதற்காக சட்டவிரோதமாக காவலில் வைத்தல்;[384] மற்றும்
- பெண்களுக்கு எதிரான "கொடுமை" (ஒரு பெண்ணின் கணவர் அல்லது அவரது
- கணவரின் உறவினரால் நிகழ்த்தப்பட்டால் மட்டுமே).[385]

பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) திருத்தச் சட்டம் (2015) பிரிவு 3இன் கீழ் மற்றச் செயல்களுக்காகவும் வழக்குத் தொடரலாம், இது ஒரு பட்டியல் சாதி அல்லது பட்டியல் பழங்குடியின உறுப்பினருக்கு எதிராகப் பல செயல்கள் செய்யப்பட்டால் தண்டனை வழங்குகிறது.[386]

இருப்பினும், இந்தியாவின் சட்டக் கட்டமைப்பில் சித்திரவதைக்கென ஒரு குறிப்பிட்ட குற்றவியல் பிரிவு இல்லாததால், சித்திரவதைச் செயல்கள் முறையாக வகைப்படுத்தப்பட்டு, உரிய தீவிரத்துடன் கையாளப்படுவது தடுக்கப்படுகிறது. குற்றமாக்கப்படாததால், இந்த அறிக்கையில் முன்னரே கோடிட்டுக்காட்டப்பட்டபடி, சித்திரவதை வழக்குகள் குறித்த அதிகாரப்பூர்வ பதிவுகள் எதுவும் இல்லை. மேலும், "காயம்" மற்றும் "கடுமையான காயம்" ஆகியவற்றின் வரையறைகள் நீதிமன்றங்களால் பல்வேறு விளக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டு, சீரற்ற முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தெளிவான குற்றமாக்கல் இல்லாததால், குற்றவாளிகள் குறைந்த அளவிலான பொறுப்புக்கூறலையே எதிர்கொள்கின்றனர், மேலும் பன்னாட்டுசட்டத்தின்படி தேவைப்படும் சித்திரவதைக்கான உரிய இழப்பீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுக்கப்படுகின்றன.

378 புதிய சட்டக் கட்டமைப்பின் குறைபாடுகள் குறித்த விரிவான விளக்கத்திற்கு, PUCL, நடைமுறையில் செயல்படும் காவல் ஆட்சியை சட்டப்பூர்வமான காவல் அரசாக மாற்றுதல்: மூன்று புதிய குற்றவியல் சட்டங்களின் விமர்சனம், 11 July 2024; மற்றும் HRW, உலக அறிக்கை 2025: இந்தியா[நாள் குறிக்கவில்லை] ஆகியவற்றையும் பார்க்கவும்.

379 பாரதிய நியாய சன்கிதா (பிஎன்எஸ்), 2023, பிரிவு 152, முன்னர் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 124ஏ. மேலும் காண்க காமன் காஸ், மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள், ஜூலை-செப்டெம்பர் 2024. மேலும் காண்க, AI, இந்தியா: அடக்குமுறை புதிய குற்றவியல் சட்டங்களை அதிகாரிகள் உடனடியாக ரத்து செய்ய வேண்டும், 1 ஜூலை 2024.

380 அம்னெஸ்டி இன்டர்நேஷனல், இந்தியா: 'தேவையற்ற' விசாரணையை அதிகாரிகள் உடனடியாக முடித்துக்கொண்டு பேராசிரியர் அலி கானை விடுவிக்க வேண்டும். மஹ்மூதாபாத், 19 மே 2025; காமன் காஸ், மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள், ஜூலை-செப்டெம்பர் 2024, பக். 4.

381 காமன் காஸ், மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள், ஜூலை-செப்டெம்பர் 2024.

382 இந்தியச் சட்ட ஆணையம், UNCAT-இன் செயலாக்கம், அக்டோபர் 2017, பக். 37. மேலும், டி.கே. பாசு எதிர் மேற்கு வங்க அரசு 1997 1 SCC 416 என்ற உச்ச நீதிமன்ற வழக்கையும் பார்க்கவும்.

383 பாரதிய நியாய சன்கிதா (BNS), 2023, s 120, முன்பு இந்திய தண்டனைச் சட்டம், s 330-331.

384 பாரதிய நியாய சன்கிதா (BNS), 2023, s 126-127, முன்பு இந்திய தண்டனைச் சட்டம், s 348,s 503.

385 சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம், இந்திய தண்டனைச் சட்டத்தில் சித்திரவதைக் குற்றங்களைச் சேர்ப்பதன் இன்றியமையாமை, 18 ஆகஸ்டு 2020, பாரதிய நியாய சம்ஹிதா (பிஎன்எஸ்), 2023, பிரிவு 80, முன்னர் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 498A.

386 சி.எச்.ஆர்.ஐ, பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் விதிகள், 1995, 2015-இல் திருத்தப்பட்டபடி: ஒரு வழிகாட்டி, 2018. மேலும் காண்க, சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கம், இந்திய தண்டனைச் சட்டத்தில் சித்திரவதைக் குற்றங்களைச் சேர்ப்பதன் இன்றியமையாமை, 18 ஆகஸ்டு 2020.

இந்த அறிக்கையில் ஆராயப்பட்ட சூழலில், அரசியல் எதிர்ப்பு ஒரு பங்கைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது, ஒரு வலுவான சித்திரவதைக்கு எதிரான சட்டம் சட்ட செயலாக்கம் மற்றும் பாதுகாப்புப் படைகளை அதிக ஆய்விற்கும் பொறுப்புக்கூறலுக்கும் உட்படுத்தக் கூடும் என்ற கவலைகள் உள்ளன.[387] இதன் விளைவாக, சித்திரவதையின் பரவலான பயன்பாட்டிற்கான ஆதாரங்கள் பெருகி வந்த போதிலும், சித்திரவதையைக் குற்றமாக்குவதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதை அரசாங்கம் தொடர்ந்து தவிர்த்து வருகிறது.

## சட்டக் காப்புக் கூறுகளைச் செயலாக்கத் தவறுதல்

பன்னாட்டுச் சட்டமும் தரங்களும் சுதந்திரம் பறிக்கப்பட்ட தனியாட்களுக்குக் காப்புக் கூறுகளுக்கு வழிவகை செய்கின்றன, அவை நீதி நிர்வாகத்திற்கும் சித்திரவதைத் தடுப்பிற்கும் முக்கியம். UNCATஉம் தொடர்புடைய வண்ணனையும் தடுப்புக்காவலின் தொடக்க மணிகளிலும் நாட்களிலும் சட்ட மற்றும் நடைமுறைக் காப்புக்கூறுகளைக் கடைப்பிடிப்பது சித்திரவதையின் இடரைக் குறைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதைக் காட்டுகின்றன.[388]

இந்தியச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்ட BNSS உட்பட, சுதந்திரம் பறிக்கப்பட்டவர்களுக்கு ஏராளமான காப்புக்கூறுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் சட்ட ஆலோசகரை அணுகுவதற்கான உரிமை, காவல் நிலையங்களில் கைதுகளைப் பதிவு செய்தல், கைதுக்கான காரணங்களைத் தெரிந்து கொள்ளும் உரிமை, அத்தகைய கைது மற்றும் தடுப்புக்காவல் இடம் குறித்து ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது மூன்றாம் ஆளுக்குத் தெரிவிக்கப்படும் உரிமை, கைது செய்யப்பட்டவுடன் தற்சார்பான மருத்துவப் பரிசோதனைக்கான உரிமை, கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் ஒரு நீதிபதி முன் நிறுத்தப்படும் உரிமை ஆகியவை அடங்கும்.[389]

இந்திய உச்ச நீதிமன்றம், காவல் வைக்கப்பட்டுள்ள ஆட்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்தியுள்ளது. கடந்த பல பத்தாண்டுகளாக காவலில் நிகழும் சாவுங்கள் மற்றும் சித்திரவதைகளை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட பல மனுக்களுக்குப் பதிலளிக்கும் விதமாக,[390] உச்ச நீதிமன்றம் அனைத்து காவல் நிலையங்களிலும் சிசிடிவி கேமராக்களை நிறுவுவதற்கான உத்தரவு உட்பட பல வழிகாட்டுதல்களை வெளியிட்டது.[391] நவம்பர் 2024 நிலவரப்படி, இந்தியாவில் உள்ள பல காவல் நிலையங்களில் சிசிடிவி கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன என்று செய்தி அறிக்கைகள் குறிப்பிடுகின்றன என்றாலும்,[392] இந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளபடி, காவலில் சித்திரவதை மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் பரவலாக நடப்பது, இந்த நடவடிக்கையின் முழுமையான செயலாக்கம் மற்றும் தாக்கம் குறித்து கேள்விகளை எழுப்புகிறது.

கூடுதலாக, BNSS காவல்துறை அதிகாரத்தை விரிவுபடுத்துவதற்கும், காவல் காவலில் உள்ள வரம்புகளை பலவீனப்படுத்துவதற்கும், மற்றும் பிணை விதிகளை கடுமையாக்குவதற்கும் பரவலாக விமர்சிக்கப்பட்டுள்ளது, இதனால் குடிமை உரிமைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது

387 துண்டுப் பிரசுரம், தவறை நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டிய கட்டாயம் இல்லாததே பாதுகாப்புச் சட்டங்களின் நீடித்த ஈர்ப்பின் மையமாகும், 10 நவம்பர் 2022.

388 UNCAT, உறுப்பு 11, CAT, சிறைக் கைதிகள் நடத்தப்படுவதற்கான தரநிலைக் குறைந்தபட்ச விதிகளைத் திருத்துவது பற்றி சித்திரவதைக்கு எதிரான குழுவின் பார்வைகள், 2014 மார்ச்சு 28, CAT/c/51/4.

389 இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 22; பாரதிய நாகரிக் சுரட்சா சன்கிதா (BNSS), 2023, பிரிவுகள் 38, 47, 48, 53, 57 மற்றும் 58. முன்னர் இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973, பிரிவுகள் 41D, 50-50A, 54.

390 உச்ச நீதிமன்றப் பார்வையாளர், காவலில் நிகழும் வன்முறையைக் கண்காணித்தல், 14 ஜூலை 2020; மேலும் காண்க டி.கே. பாசு எதிர் மேற்கு வங்க அரசு 1997 1 SCC 416, நீதிமன்ற நண்பர் சார்பாக வழிகாட்டுதல்களுக்கான மனு, டாக்டர் அபிஷேக் மனு சிங்வி, 2020, பக். 7.

391 உச்ச நீதிமன்றப் பார்வையாளர், காவலில் நிகழும் வன்முறையைக் கண்காணித்தல், 14 ஜூலை 2020.

392 டைம்ஸ் ஆஃப் இந்தியா, சிசிடிவி: பொறுப்புணர்வை மேம்படுத்த 28 காவல் நிலையங்களில் விரிவான சிசிடிவி கண்காணிப்பை அரசு தொடங்குகிறது, 1 நவம்பர் 2024, மேலும் காண்க இந்தியா நீதி அறிக்கை, தரவுகள் மூலம் நீதியை முன்னெடுத்துச் செல்லுதல், [நாள்குறிக்கவில்லை

மற்றும் காவல்துறையின் வரம்பு மீறல்களுக்கு எதிரான பாதுகாப்புகளை அரிக்கிறது.[393] எடுத்துக்காட்டாக, BNSS இனி காவல் காவலை 15 நாட்களுக்குக் கட்டுப்படுத்தாது மற்றும் முந்தைய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முதல் 15 நாட்களுக்குள் மட்டுமே அங்கீகரிக்கப்படுவதற்குப் பதிலாக, தடுப்புக்காவலின் முதல் 40 அல்லது 60 நாட்களுக்குள் எந்த நேரத்திலும் அங்கீகரிக்க அனுமதிக்கிறது.[394] காவல் காவலில் இந்த மாற்றம் "சித்திரவதை மற்றும் பிற கொடுமைகளுக்கு ஒரு வளமான இனப்பெருக்க நிலத்தை வழங்குகிறது."[395]

தேசியச் சட்டத்தின் கீழ் சில காப்புக்கூறுகள் இருந்த போதிலும், இந்தியாவில் உள்ள பல சட்ட வல்லுநர்களுடனும் ஆராய்ச்சியாளர்களுடன் ரெட்ரெஸ் (REDRESS) நடத்திய ஆலோசனைகள், புதிய குற்றவியல் சட்டங்கள் உட்பட சட்டவழிச் சட்டகத்துக்கும் களத்தில் உள்ள நடைமுறைக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி இருப்பதைக் காட்டுகின்றன. உதாரணமாக, ஒரு நீதிபதி ஆரம்பக் கைது செயல்முறையை ஆய்வு செய்து, தனிநபரை மேலும் காவலில் வைப்பது நியாயமானதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்றாலும், நடைமுறையில், இந்த பாதுகாப்பு, தங்களுக்கு முன் உள்ள வழக்கையும், காவலில் உள்ள ஆவணங்களையும் போதுமான அளவு ஆராயத் தவறும், அதிக பணிச்சுமை கொண்ட நீதித்துறையால் சாராம்சத்தில் நீர்த்துப் போயுள்ளது.[396]

நடைமுறையில் இத்தகைய பாதுகாப்புகள் செயல்படுத்தப்படாததை ஐ.நா. அமைப்புகளும் வல்லுநர்களும் குறிப்பிட்டுள்ளனர். 2024 ஆம் ஆண்டில், காவல்துறை அதிகாரிகள் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளாமலோ அல்லது கைது வாரண்டுகளை வழங்காமலோ தனிநபர்கள் தன்னிச்சையாகக் கைது செய்யப்படுவது அல்லது தடுத்து வைக்கப்படுவது குறித்த அறிக்கைகள் மீது மனிதவுரிமைகள் ஆணையம் கவலை தெரிவித்தது.[397] குற்றவியல் குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட தனிநபர்களுக்கு, குறிப்பாக காவல் நிலையங்களில், சட்ட உதவிக்கான வரையறுக்கப்பட்ட அணுகலையும் அது எடுத்துக்காட்டியது.[398] மேலும், நீண்டகால விசாரணைக்கு முந்தைய தடுப்புக்காவல், குறிப்பிடத்தக்க நீதித்துறை தாமதங்கள் மற்றும் வழக்கு நிலுவைகள், அத்துடன் தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சேவைகள், குடும்பத் தொடர்பு, சட்ட ஆலோசனை மற்றும் - வெளிநாட்டு குடிமக்களுக்கு – இராஜதந்திர அல்லது துணைத் தூதரக உதவி ஆகியவற்றிற்கான போதிய அணுகல் இல்லாமை ஆகியவை கூடுதல் கவலைகளில் அடங்கும்.[399] 2024 ஆம் ஆண்டில், கைதுகள், விசாரணைகள் மற்றும் தடுப்புக்காவல் தொடர்பான அதன் விதிகள் மற்றும் நடைமுறைகளை மறுபரிசீலனை செய்யுமாறு ஐ.நா. வல்லுநர்கள் இந்தியாவை வலியுறுத்தினர்.[400]

சித்திரவதைக்கு எதிரான மற்றொரு முக்கியமான காப்புக்கூறாக, பன்னாட்டுச் சட்டம் சித்திரவதை செய்தும் கொடுமைப்படுத்தியும் பெறப்பட்ட ஆதாரங்களை சட்ட நடவடிக்கைகளில் அனுமதிப்பதைத் தடை செய்கிறது. இந்த விலக்கு விதி சித்திரவதையின் பயன்பாட்டை ஊக்கமிழக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் அதன் அடிக்கடி நிகழும் நோக்கங்களில் ஒன்றான வாக்குமூலங்களைப் பெறுவதையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.[401] இந்தியாவின் BSA (முன்னர் சாட்சியச் சட்டம்) ஒரு நீதிபதியின் முன்னிலையில் இல்லாமல் ஒரு காவல்துறை அதிகாரியிடம் அல்லது காவல் காவலில் செய்யப்பட்ட வாக்குமூலங்கள்,[402] அத்துடன் தூண்டுதல் அல்லது அச்சுறுத்தல் மூலம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் குற்றவியல் நடவடிக்கைகளில்

393 காமன் காஸ், மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள், ஜூலை-செப்டெம்பர் 2024; அல்ஜசீரா, காலனித்துவ காலச் சட்டங்களுக்குப் பதிலாக புதிய குற்றவியல் சட்டத் தொகுப்புகளை இந்தியா கொண்டுவருவதால் கவலைகள், 1 ஜூலை 2024.
394 பாரதிய நாகரிக் சுரட்சா சன்கிதா (BNSS), 2023, s 187, முந்தைய இந்தியாவின் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973, s 167.
395 AI, இந்தியா: அடக்குமுறை புதிய குற்றவியல் சட்டங்களை அதிகாரிகள் உடனடியாக ரத்து செய்ய வேண்டும், 1 ஜூலை 2024.
396 டெக்கன் ஹெரால்டு, 'சாத்தான்குளத்தில் நீதிபதி என்ன செய்தார்?', 29 ஜூலை 2020.
397 மனிதவுரிமைகள் குழு, முடிவுரை 2024, 25 ஜூலை 2024, பத்தி 35.
398 மனிதவுரிமைகள் குழு, முடிவுரை 2024, 25 ஜூலை 2024, பத்தி 35.
399 மனிதவுரிமைகள் குழு, முடிவுரை 2024, 25 ஜூலை 2024, பத்தி 39.
400 மனிதவுரிமைகள் உயராணையர் அலுவலகம் (OHCHR), ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்கள், சுதந்திர நிபுணர்கள் மற்றும் பணிக்குழுக்களின் அறிக்கை, 7 மார்ச் 2024.
401 ரெட்ரெஸ் & நியாயமான விசாரணை, சித்திரவதையால் களங்கப்பட்ட பரிகாரமும் நியாயமான விசாரணைகளும்: சித்திரவதை ஆதாரங்களின் பயன்பாட்டை ஆராய்தல், மே 2018.
402 பாரதிய சாக்ஷ்யஆதினியம் (BSA), 2023, s 23, முந்தைய இந்தியாவின் சாட்சியச் சட்டம், 1872, s 25-26

ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று கூறுகிறது.[403]

இருப்பினும், இது நடைமுறையில் சீராகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை.[404] மேலும், BSA-வின் பிற பிரிவுகள் இந்த ஏற்றுக்கொள்ளும் கட்டுப்பாடுகளைத் தவிர்க்க அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.[405] காட்டாக, BSA-வின் பிரிவு 23 காவல்துறை அதிகாரிகளிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களை ஏற்றுக்கொள்ள முடியாதவை ஆக்கினாலும், அத்தகைய வாக்குமூலத்தின் விளைவாக மீட்கப்பட்ட பொருட்களை அனுமதிக்கிறது.[406] இது வாக்குமூலங்களைப் பெறுவதற்காக சித்திரவதையைப் பயன்படுத்துவதை ஊக்குவித்ததாகக் கூறப்படுகிறது,[407] இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளவை உட்பட பல உண்மையில், தில்லியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் கொலைத் தண்டனை மீதான மையம் 2017ஆம் ஆண்டு நடத்திய ஆய்வில், இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதிகளிடம் கொலைத் தண்டனை மற்றும் பரந்த அளவில் இந்தியக் குற்றவியல் நீதி அமைப்பு குறித்து நேர்காணல் செய்யப்பட்டது. அந்த ஆய்வின்படி, “இந்தியக் குற்றவியல் நீதியமைப்பில் சித்திரவதை இருந்து வருவது பற்றிப் பேசிய 39 முன்னாள் நீதிபதிகளில் 38 பேர் அது மலிந்து கிடபப்தாக நம்புகின்றனர்.”[408]

## ஆய்தப் படைகளின் தலையீடுகளை ஆளும் சட்டம்

இந்த அறிக்கையின் ‘குறிப்பிட்ட பிராந்தியங்களில் சித்திரவதை’ பிரிவில் விளக்கப்பட்டுள்ளபடி, ஆய்தப் படைகளுக்கு வழங்கப்பட்ட சிறப்பு அதிகார ஆட்சிகளின் கீழ் நிர்வகிக்கப்படும் பகுதிகளில் வசிக்கும் தனிநபர்கள் சித்திரவதைக்கு ஆளாகும் அபாயம் அதிகம் உள்ளது.[409] மாநில அல்லது மத்திய அரசுகளால் “கலவரமான” என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் கைது செய்யவும், தேடவும், மற்றும் கொடிய சக்தியைப் பயன்படுத்தவும் ஆய்தப் படைகளுக்கு AFSPA விரிவான மற்றும் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்குகிறது.[410] கூடுதலாக, ஆய்தப் படைகள் (சம்மு- மற்றும் காஷ்மீர்) தனி அதிகாரச் சட்டம் போன்ற பிரதிபலித்து வலுப்படுத்துகின்றன.[411]

‘கலவரப் பகுதிகள்’ என வகைப்படுத்துதல் என்பது, மிகவும் பரந்த மற்றும் தெளிவற்ற அளவுகோல்களைப் பயன்படுத்தி, அரசாங்கத்தின் விருப்புரிமையின் அடிப்படையில் அமைந்துள்ளது.[412] காட்டாக, சம்மு-காசுமீரத்தில், “இந்தியாவின் இறைமையைக் கேள்விக்குட்படுத்துவதைத் தடுப்பது” அல்லது “இந்தியக் கொடியை அவமதிப்பது” போன்ற தெளிவற்ற காரணங்களுக்காக ஆய்தப் படைகளுக்குப் பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.[413] இந்தத் துல்லியமற்ற மொழி பரந்த அளவிலான நடவடிக்கைகளை உள்ளடக்கியிருக்கலாம், இது அரசமைப்புச் சட்ட உரிமைகளின் பரவலான மீறல்களுக்கு வழிவகுத்துள்ளது. ‘குறித்த வட்டாரங்களில் சித்திரவதை’ என்ற பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளபடி, ஆய்தப் படைகள் பரவலான கொலைகளையும் சித்திரவதைகளையும் தண்டித்தலில்லாக் குற்றவிலக்குடன் மேற்கொள்ள

403 பாரதிய சாக்ஷ்யஆதினியம் (BSA), 2023, s 23, முந்தைய இந்தியாவின் சாட்சியச் சட்டம், 1872, s 24

404 தேசியச் சட்டப் பல்கலைக்கழகம், தில்லி – சாவு தண்டனை மையம், தீர்ப்பு தொடர்பான விடயங்கள், அக்டோபர் 2017, பக்கங்கள் 26-34-ஐக் காண்க.

405 இது 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் கீழ் பொருந்தக்கூடியதாக இருந்தது மற்றும் BSA இன் கீழும் தொடர்ந்து பொருந்தக்கூடியதாக உள்ளது.

406 பாரதிய சாக்ஷ்ய ஆதினியம் (BSA), 2023, s 23, முந்தைய இந்தியாவின் சாட்சியச் சட்டம், 1872, s 27.

407 பிரிவு 14, காவல்துறை சித்திரவதை மற்றும் இந்தியாவின் உண்மை இயந்திரங்கள், 10 ஆகஸ்டு 2020; சினன்ன், இந்திய காவல்துறை நீதிக்கான குறுக்குவழியாக வன்முறையைப் பயன்படுத்துகிறது. ஏழைகளே வடுக்களைச் சுமக்கிறார்கள், 3 திசம்பர் 2020. இந்திய உச்ச நீதிமன்றம், குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு, ஆஷிஷ் ஜெயின் எதிர் மகரந்த் சிங் 2019 (3) SCC 770, 14 ஜனவரி 2019, பத்திகள். 21-22-ஐக் காண்க, தற்போதைய வழக்கில் உள்ளது போல, ஒரு ஒப்புதல் வாக்குமூலம் “விசாரணை அதிகாரியின் முறையற்ற அழுத்தம் மற்றும் நிர்ப்பந்தத்தின் கீழ் பெறப்பட்டால், மீட்புக்கு வழிவகுக்கும் அத்தகைய வாக்குமூலத்தின் சாட்சிய மதிப்பு செல்லாததாகிவிடும்” என்று குறிப்பிடுகிறது

408 தேசிய சட்டப் பல்கலைக்கழகம், தில்லி – சாவு தண்டனை மையம், தீர்ப்பு தொடர்பான விடயங்கள், அக்டோபர் 2017, பக். 26.

409 AI, ஆய்தப் படைகள் தனி அதிகாரச் சட்டம்: இந்தியாவில் மனிதவுரிமைகள் மற்றும் தேசியப் பாதுகாப்பு குறித்த ஒரு புதுப்பிக்கப்பட்ட விவாதம், 24 ஜூன் 2014.

410 பொதுக் கொள்கைக்கான பொதுத் தள இதழ், ஆய்தப் படைகள் தனி அதிகாரச் சட்டம் (AFSPA): கொலை செய்வதற்கான சட்டப்பூர்வ தண்டனையின்மை, 2022

411 ஆய்தப் படைகள் (சம்மு-காசுமீரம்) தனி அதிகாரச் சட்டம், 1990.

412 ஆய்தப் படைகள் (சம்மு-காசுமீரம்) தனி அதிகாரச் சட்டம், 1990.

413 ஆய்தப் படைகள் (சம்மு-காசுமீரம்) தனி அதிகாரச் சட்டம், 1990.

ஆய்தப்படை தனி அதிகாரச் சட்டம் வழிவகுத்துள்ளது.[414]

ஆய்தப் படைகள் தனி அதிகாரச் சட்டத்தின் கீழ், எந்தவொரு ஆணையிடப்பட்ட அதிகாரி, வாரண்ட் அதிகாரி, ஆணையிடப்படாத அதிகாரி அல்லது அதற்கு இணையான பதவியில் இருப்பவருக்கும், குழுவாகக் கூடுவதற்கான தடைகளை மீறும் நபர்களுக்கு எதிராக நேரடித் துப்பாக்கிச் சூட்டைப் பயன்படுத்த அதிகாரம் உள்ளது.[415] கட்டிடங்களை இடிக்கவும், பிடியாணையின்றி கைது செய்யவும், பிடியாணையின்றி சொத்துக்களைச் சோதனையிடவும் இந்தச் சட்டம் இந்த அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குகிறது. ஆய்தப் படைகள் (சம்மு- மற்றும் காஷ்மீர்) தனி அதிகாரச் சட்டம், சந்தேக நபர்களை ஏற்றிச் செல்வதாக சந்தேகிக்கப்படும் வாகனங்கள் அல்லது கப்பல்களைச் சோதனையிடவும் பறிமுதல் செய்யவும் அனுமதிக்கிறது.[416]

பல பத்தாண்டுகளாக, தேசிய[417] மற்றும் பன்னாட்டுமனிதவுரிமை அமைப்புகள்[418], தேசிய சட்டமன்றக் குழுக்கள், வட்டார அரசியல்வாதிகள்,[419] சட்ட வழக்குகள் மற்றும் தேசிய ஊடகங்கள்[420] இந்த அதிகாரங்களின் தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை அம்பலப்படுத்தவும், ஆய்தப்படை தனி அதிகாரச் சட்டத்தை (AFSPA) நீக்கம் செய்ய வாதிடவும் முயன்று வருகின்றன.[421] ஐ.நா. மனிதவுரிமை அமைப்புகளும் ஆய்தப்படை தனி அதிகாரச் சட்டத்தை (AFSPA) திருத்தவோ அல்லது நீக்கம் செய்யவோ பரிந்துரைத்துள்ளன.[422] தொடக்கத்தில் அது விதிக்கப்பட்ட வடகிழக்கு மாநிலங்களின் சில பகுதிகள் உட்பட, சில மாநிலங்களில் பல ஆய்தப்படை தனி அதிகாரச் சட்டக் கட்டமைப்புகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நீக்கப்பட்டிருந்தாலும், இந்தக் கோரிக்கைகள் அரசாங்கத்தால் இன்னும் முழுமையாகப் பரிசீலிக்கப்படவில்லை.[423] காட்டாக, 2024 அக்டோபரில், 1990 முதல் செயலில் உள்ள ஆய்தப்படை தனி அதிகாரச் சட்டத்தை (AFSPA) அசாமின் சில பகுதிகளில் மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்க அரசாங்கம் முடிவு செய்தது.[424] நவம்பர் 2024 இல், தொடர்ச்சியான சமூகங்களுக்கிடையேயான வன்முறைக்கு பதிலளிக்கும் விதமாக, மணிப்பூரின் சில பகுதிகளில் ஆய்தப்படை தனி அதிகாரச் சட்டத்தின் (AFSPA) பயன்பாட்டை மத்திய அரசு புதுப்பித்தது.[425]

இந்தச் சூழலில், ஆய்தப் படைகளால் செய்யப்படும் மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் மிகவும் குறைவாகவே உள்ளது. 1993ஆம்ஆண்டின் மனிதவுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 19இன் கீழ், ஆய்தப் படைகளின் உரிமை மீறல்ளைப் புலனாய்வு செய்ய தேசிய மனிதவுரிமை ஆணையத்திற்கு (NHRC) வரையறுக்கப்பட்ட அதிகாரங்களே உள்ளன, இதனால் இந்த மீறல்கள் தண்டித்தலில்லாக் குற்றவிலக்குடன் நடப்பதற்கான வாய்ப்புகள் மேலும் கூடுதலாகின்றன.[426] காட்டாக, 2016ஆம் ஆண்டில், காசுமீரத்தில் ஒரு கிராமத்தில் நள்ளிரவில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் போது, 32 வயதான விரிவுரையாளர் ஷபீர் அகமது மங்கூ இந்திய இராணுவத்தால்

---

414 சம்மு-காசுமீர் குடிமைச் சமூகக் கூட்டமைப்பு (ஜேகேசிசிஎஸ்), சித்திரவதை, 20 மே 2019
415 ஆய்தப் படைகள் (சம்மு-காசுமீரம்) தனி அதிகாரச் சட்டம், 1990, பிரிவு 4.
416 ஆய்தப் படைகள் (சம்மு-காசுமீரம்) தனி அதிகாரச் சட்டம், 1990, பிரிவு 4.
417 இ-பாவோ, AFSPA-ஐ ரத்து செய்வதற்கான மாநாடு, 1 நவம்பர் 2015 அன்று தில்லியில் நடைபெற்றது. மேலும் காண்க, டைம்ஸ் ஆஃப் இந்தியா, மனிதவுரிமைகள் தினமான திசம்பர் 10, 2024 அன்று AFSPA-க்கு எதிரான மணிப்பூர் போராட்டம்.
418 பன்னாட்டுச்சட்ட வல்லுநர்கள் ஆணையம், இந்தியா: ஆய்தப் படைகள் தனி அதிகாரச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும், 05 நவம்பர் 2015. மேலும் காண்க மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: ஆய்தப் படைகள் தனி அதிகாரச் சட்டத்திற்குப் பதிலாக சிறந்த, உரிமைகளை மதிக்கும் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும், 24 ஆகஸ்டு 2014.
419 டைம்ஸ் ஆஃப் இந்தியா, ஆய்தப்படை சிறப்பு நிதிப் பாதுகாப்புச் சட்டத்தை (AFSPA) ரத்து செய்யக் கோரி அசாம் அரசியல் கட்சிகள் இணைந்துள்ளன, 6 திசம்பர் 2021.
420 தி இந்து, முழுமையான ரத்து குறித்து: AFSPA பற்றி, 4 ஏப்ரல் 2022, மேலும் காண்க நியூஸ்கிளிக், விளக்கம்: சம்மு-காசுமீரில் AFSPA ரத்து குறித்த முடிவில்லாத வாக்குறுதிகள், 6 ஏப்ரல் 2024.
421 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், கொலை செய்து தப்பித்தல்: ஆய்தப் படைகள் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் 50 ஆண்டுகள், ஆகஸ்டு 2008.
422 UNHRC, UPR 2022, பாரா. 151.50, மேலும் மனிதவுரிமைக் குழு, முடிவான அவதானிப்புகள் 2024, பாரா. 28
423 ஃபர்ஸ்ட் போஸ்ட், மாநிலத்தில் இருந்து ஆய்தப்படை தனி அதிகாரச் சட்டத்தை (AFSPA) ரத்து செய்த மத்திய அரசின் நடவடிக்கையை மேகாலயா வரவேற்கிறது, தீவிரவாதம் 'பெரும்பான்மையாக' கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்கிறது, 24 ஏப்ரல் 2018.
424 டைம்ஸ் ஆஃப் இந்தியா, 'வங்காளதேசத்தில் ஏற்பட்ட சமீபத்திய கலவரங்களைக்' காரணம் காட்டி, அசாம் நான்கு மாவட்டங்களில் ஆய்தப் பாதுகாப்புப் படைச் சட்டத்தை (AFSPA) நீட்டித்தது, 9 அக்டோபர் 2024.
425 இந்தியன் எக்ஸ்பிரஸ், மணிப்பூரில் நிலைமை தொடர்ந்து 'நிலையற்றதாக' இருப்பதாக உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ள நிலையில், 6 காவல் நிலையப் பகுதிகளில் AFSPA மீண்டும் களமிறங்கியுள்ளது, 15 நவம்பர் 2024.
426 தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், மனிதவுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993, பிரிவு 19, பக்கம் 14-ஐக் காண்க.

அடித்துக் கொல்லப்பட்டதாகவும், இதில் மேலும் 50 பேர் பலத்த காயமடைந்ததாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.[427] இதில் சம்பந்தப்பட்ட 23 இராணுவ வீரர்கள் மீது வழக்குத் தொடர ஒரு காவல்துறை விசாரணை பரிந்துரைத்ததாகக் கூறப்படுகிறது. இருப்பினும், அத்தகைய வழக்குகளுக்கு அரசாங்கத்தின் முன் அனுமதி தேவை, அது இன்றுவரை வழங்கப்படவில்லை என்பது எங்களுக்குத் தெரிந்தவரை.[428]

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

இந்தியாவின் முக்கிய கூட்டாட்சி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் UAPA ஆகும், இது முதலில் 1967 இல் இயற்றப்பட்டது, பின்னர் 2004, 2008, 2013 மற்றும் 2019 இல் திருத்தப்பட்டது.[429] UAPAஇன் 2004 திருத்தத்திற்கு முன்பு, பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகள் முதன்மையாக இரண்டு சட்டங்களால் நிர்வகிக்கப்பட்டன: பயங்கரவாத மற்றும் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் (TADA) 1987 மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (POTA) 2002.[430] பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது கடுமையான மனிதவுரிமைமீறல்களுக்கு இடமளித்தமைக்காக இந்த இரு சட்டங்களும் குற்றாய்வு செய்யப்பட்டன. அவை இறுதியில் நீக்கம் செய்யப்பட்டாலும், அவற்றின் பல சிக்கலான விதிகள் UAPA திருத்தங்கள் மூலம் மீண்டும் நுழைக்கப்பட்டுள்ளன.[431]

UAPA தெளிவற்ற மற்றும் மிகவும் பரந்த விதிகளைக் கொண்டுள்ளது, அவை தளர்வாக வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் தன்னிச்சையான கைதுகள் மற்றும் நீண்டகால தடுப்புக்காவலை அனுமதிப்பதன் மூலம், காவலில் சித்திரவதை உட்பட மனிதவுரிமை மீறல்களை செயல்படுத்துகின்றன.[432] "சட்டவிரோதமானது" என வகைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகவோ அல்லது "சட்டப் புறம்பானசங்கத்திற்காகவோ" தனிநபர்கள் தடுத்து வைக்கப்படலாம். சட்டப் புறம்பானநடவடிக்கைகளில் பிரிவினைக்கு ஆதரவைத் தெரிவிப்பது, இந்தியாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைக் கேள்விக்குட்படுத்தும் அல்லது சீர்குலைக்கும் அல்லது சீர்குலைக்கும் நோக்கம் கொண்டதாகக் கருதப்படும் நடத்தையில் ஈடுபடுவது, அல்லது "இந்தியாவுக்கு எதிராக அதிருப்தியை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தும் நோக்கம் கொண்டது" ஆகியவை அடங்கும்.[433] இந்த வழிவகைகள் துஷ்பிரயோகத்திற்கு வழிவகுக்கின்றன மற்றும் இந்த அறிக்கையில் முன்னர் விவாதிக்கப்பட்டபடி, பாதுகாக்கப்பட்ட பேச்சு மற்றும் கருத்து வேறுபாடுகளை குற்றமயமாக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலில் UAPA அரசின் இறைமை மற்றும் பாதுகாப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் "சட்டப் புறம்பான நடவடிக்கைகளுடன்" தொடர்புடைய குழுக்கள் அல்லது அமைப்புகளையோ, அல்லது "பயங்கரவாத அமைப்புகள்" என்று முத்திரை குத்தப்பட்டவர்களையோ குற்றமாக்கியது, மேலும் தனியாட்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்ட தொடர்பின் அடிப்படையில் வழக்குத் தொடரப்பட்டது.[434] இருப்பினும், சர்ச்சைக்குரிய 2019 திருத்தம், அமைப்புகளை மட்டுமல்ல, தனியாட்களையும் அரசாங்கம் "பயங்கரவாதிகள்" என்று குறிப்பிட அனுமதிப்பதன் மூலம் சட்டத்தின் வரம்பை விரிவுபடுத்தியது, இது தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவலுக்கு எதிரான பாதுகாப்புகளை மேலும் சிதைத்தது.[435]

427 என்டிடிவி, ராணுவக் காவலில் ஒருவர் உயிரிழந்ததாகக் கூறப்படுவதை அடுத்து காஷ்மீரில் போராட்டங்கள், 19 ஆகஸ்டு 2016.

428 தி இந்தியன் எக்ஸ்பிரஸ், விரிவுரையாளர் சாவு தொடர்பாக 23 ராணுவ வீரர்கள் மீது வழக்குத் தொடர ஜம்மு-காஷ்மீர் காவல்துறை அனுமதி கோரியுள்ளது, 10 மார்ச் 2018.

429 உச்ச நீதிமன்றப் பார்வையாளர், சுருக்கமான வரலாறு: யுஏபிஏ-க்கு எதிரான சவால்கள், 11 மே 2020.

430 உச்ச நீதிமன்றப் பார்வையாளர், யுஏபிஏ திருத்தத்தின் அரசியலமைப்புச் செல்லுபடித் தன்மை, கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது, 28 ஜனவரி 2025.

431 PUCL, UAPA: கருத்து வேறுபாட்டைக் குற்றமாக்குதல் மற்றும் அரசு பயங்கரவாதம், 28 செப்டெம்பர் 2022; மேலும் காண்க போலிஸ் திட்டம், இந்தியாவில் ஒரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் திகில்: சட்டப் புறம்பானநடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் ஒரு சிறு கதை, 9 பிப்ரவரி 2023.

432 இந்திய அரசு, சட்டப் புறம்பானநடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967, பிரிவுகள் 43 (A), 43 (D).

433 இந்திய அரசு, சட்டப் புறம்பானநடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967, பிரிவு 2(o)(iii).

434 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: ஐ.நா. மனிதவுரிமைகள் ஆய்வில் கடுமையான கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன, 18 நவம்பர் 2022.

435 இந்திய அரசு, சட்டப் புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967.

UAPA நீண்டகால விசாரணைக்கு முந்தைய தடுப்புக்காவலையும் அனுமதிக்கிறது. UAPAஇன் கீழ் கைது செய்யப்பட்ட ஆட்கள் சாதாரணக் குற்றவியல் சட்டத்தின் கீழ் உள்ளவர்களை விட வேறுபட்ட காவலில் வைக்கும் விதிகளுக்கு உட்பட்டவர்கள். UAPA விசாரணைக்கு முந்தைய விசாரணைகளின் போது நீதித்துறைக் காவலில் உள்ள கால வரம்புகளை நீட்டிக்கிறது, இது சில சந்தர்ப்பங்களில் 180 நாட்கள் வரை நீட்டிக்கப்படலாம், BNSSஇன் கீழ் உள்ள 90 நாள் வரம்புடன் ஒப்பிடும் போது.[436]

UAPA மிகவும் கடுமையான பிணை நிபந்தனைகளையும் விதிக்கிறது, இது சந்தேக நபர்கள் விடுதலையாவதற்கான வாய்ப்பை திறம்பட மறுக்கிறது. நீதிபதிகளின் அதிகாரம் கடுமையாகக் குறைக்கப்பட்டுள்ளது, மேலும் UAPAஇன் கீழ் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு உயர் நீதிமன்றத்தால் அடிக்கடி பிணை மறுக்கப்படுகிறது.[437] ஒரு சீக்கிய ஆர்வலரின் தடுப்புக்காவல் தொடர்பான குர்விந்தர் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் வழக்கில், உச்ச நீதிமன்றம் UAPAஇன் கீழ் “சிறைவாசம் விதி, பிணை விதிவிலக்கு” என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியது,[438] இது பன்னாட்டுத் தரநிலைகளுக்கு முரணான ஒரு கொள்கையாகும்.[439] 2017 மே மாதம் இந்தியச் சட்ட ஆணையம், அரசியல் நோக்கங்களுக்காக UAPA பிணைத் தேவைகளைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக எச்சரித்தது, “[பிணை மறுப்பு என்பது அரசின் நடவடிக்கைகளைச் சட்டம்முறை ஆக்குவதற்கு ஒரு சாத்தியமான கையாளுதல் கருவியாகப் பயன்படுத்தப்படக்கூடாது]” என்று எச்சரித்தது,[440] மேலும் “[தேவையற்ற விசாரணைக்கு முந்தைய தடுப்புக்காவலைக்] குறைக்குமாறு அழைப்பு விடுத்தது.[441] கூடுதலாக, சித்திரவதை உட்பட மனிதவுரிமை மீறல்களுக்கு அதிகாரிகளைப் பொறுப்பேற்க வைக்கும் முயற்சிகளை UAPA தடுக்கிறது.[442]

அதன் விரிவான அதிகாரங்கள் மற்றும் சாதாரண குற்றவியல் சட்டத்திலிருந்து நடைமுறை விலகல்கள் காரணமாக, UAPA போலியான குற்றவியல் வழக்குகளுக்கு அடிப்படையாக அமையும் ஒரு முக்கிய சட்டக் கருவியாக மாறியுள்ளது, இதில், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குறிப்பிட்டது போல, “இந்த செயல்முறையே ஒரு தண்டனையாகும்”.[443] மேலே உள்ள ‘மாற்றுக்கருத்துடையவர்களுக்கு எதிரான சித்திரவதை’ பிரிவில் விளக்கப்பட்டுள்ளபடி, கடந்த பத்தாண்டுகளில் மனிதவுரிமைப் பாதுகாவலர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் UAPA-இன் கீழ் குற்றவியல் வழக்குகளுக்கும் நீண்டகால விசாரணைக்கு முந்தைய தடுப்புக்காவலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.[444]

2021ஆம் ஆண்டில், ஐ.நா. நிபுணர்கள், மனிதவுரிமைப் பாதுகாவலர்களைக் குறிவைப்பதற்கும், சிவில் சமூகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் UAPA-ஐப் பயன்படுத்துவது குறித்து கவலைகளை

436 இந்திய அரசு, சட்டப் புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967, பிரிவு 43D

437 குற்றச்சாட்டு ‘மேலோட்டமாக’ உண்மை என்று நம்புவதற்கு ‘நியாயமான காரணங்கள்’ இருந்தால் பிணை வழங்கப்படாது, நடைமுறையில் பிணை கோருபவர்களுக்கு இதை முறியடிப்பது மிகவும் கடினமாக உள்ளது. முதல் தகவல் அறிக்கையில் புலனாய்வு அமைப்பால் திரட்டப்பட்ட சாட்சியமே, தடுத்து வைக்கப்பட்டுள்ளவரால் மற்ற சாட்சியங்களால் முரண்பட்டு, முறியடிக்கப்பட்டு அல்லது தவறென நிரூபிக்கப்படும் வரை மேலோங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் இதற்கு விளக்கம் அளித்துள்ளது (பார்க்க: யூனியன் ஆஃப் இந்தியா எதிர் பரக்கத்துல்லா 2024 INSC 452, பத்தி 9; மற்றும் நேஷனல் இன்வெஸ்டிகேஷன் ஏஜென்சி எதிர் ஜஹூர் அஹ்மத் ஷா வதாலி 2019 (5) SCC 1). கவலைக்குரிய வகையில், இது நிரூபணச் சுமையை பிரதிவாதியின் மீது மாற்றுகிறது.

438 PUCL, “பிணையல்ல, சிறை”: உச்ச நீதிமன்றம் காலத்தைப் பின்னோக்கிச் செலுத்துகிறதா?, 20 பிப்ரவரி 2024

439 ஐசிசிபிஆர், 16 திசம்பர் 1966, பிரிவு 9(3).

440 இந்திய சட்ட ஆணையம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-இல் செய்யப்பட்ட திருத்தங்கள் – பிணை தொடர்பான விதிகள், மே 2017

441 இந்திய சட்ட ஆணையம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-இல் செய்யப்பட்ட திருத்தங்கள் – பிணை தொடர்பான விதிகள், மே 2017, பத்தி 12.2.

442 இந்திய அரசின் சட்டப் புறம்பானநடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967-இன் பிரிவு 49, ‘பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும்’ நோக்கத்தில் ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளும் இராணுவ வீரர்கள் மீது வழக்குத் தொடர்வதைத் தடை செய்கிறது; இதில் வழக்குத் தொடர அனுமதிக்கும் வாய்ப்பு அரசுக்கு வழங்கப்படவில்லை.

443 லா சக்ரா, உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி மதன் பி லோகூர்: “நமது குற்றவியல் நீதி அமைப்பில், செயல்முறையே தண்டனையாகும்,” 10 ஜூலை 2024; மேலும், திட்டம் 39A, இந்தியாவில் குற்றம், தண்டனை மற்றும் நீதி: குற்றவியல் சட்டத்தின் பாதைகள், 2018-ஐயும் பார்க்கவும்

444 UAPA மற்றும் பரந்த அளவில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்த மேலும் ஆழமான விவாதத்திற்கு, PUCL, UAPA: மாற்றுக் கருத்தைக் குற்றாமாக்குவதும் அரசப் பயங்கரமும் (Criminalising Dissent and State Terror), 28 செப்டெம்பர் 2022 பார்க்கவும்.

வெளிப்படுத்தினர்.[445] 2022 இல் இந்தியாவின் நான்காவது UPR இல், பல நாடுகள் “பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவது மனிதவுரிமைப் பாதுகாவலர்களின் தடுப்புக்காவலுக்கு வழிவகுத்துள்ளது” என்று கவலை தெரிவித்தனர்.[446] ICCPRஇன் கீழ் உள்ள தனது கடமைகளுக்கு இணங்க UAPAஐ மறுஆய்வு செய்யுமாறு மனிதவுரிமைகள் ஆணையக் குழுவும் இந்தியாவைக் கேட்டுக்கொண்டுள்ளது.[447]

2021ஆம் ஆண்டு மனிதவுரிமைக் காப்பாளர் அருள்தந்தை ஸ்டான் சுவாமி காவல் சாவைத் தொடர்ந்து 2022 ஆம் ஆண்டு 13 மனிதவுரிமை அமைப்புகள் ஊபா (UAPA) சட்டத்தை நீக்கம் செய்ய அறைகூவி அழைத்தன. இது குறித்து இந்த அறிக்கையின் ‘மாற்றுக் கருத்துடையோருக்கு எதிரான சித்திரவதை’ எனும் பிரிவில் பேசினோம்.[448] தேசியத் தேர்தல் முடிந்த பிறகும் இதே போல் அழைப்புகள் விடுக்கப்பட்டன.[449] 2025 பிப்ரவரியில், UAPA மற்றும் அதன் திருத்தங்களுக்கு எதிரான அரசமைப்புச் சட்ட வினாக்களை விரைந்து பரிசீலிக்குமாறு நாடு முழுவதும் உள்ள உயர் நீதிமன்றங்களுக்கு உச்ச நீதிமன்றம் ஆனையிட்டது.[450] இருப்பினும், சீர்திருத்தத்திற்குத் தொடர்ந்து அழைப்பு விடுத்த போதிலும், UAPA மாற்றமின்றி அப்படியே நடைமுறையில் இருந்து வருகிறது.

UAPAஉடன், இந்தியாவில் உள்ள பிற சட்டங்களும் சித்திரவதை மற்றும் பிற மனிதவுரிமை மீறல்களை எளிதாக்குகின்றன. மராத்திய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் கட்டுப்பாட்டுச் சட்டம், ஆரம்பத்தில் 1999இல் மராத்திய மாநிலத்தில் இயற்றப்பட்டு, பின்னர் தேசியத் தலைநகர்ப் புலமான தில்லிக்கும் நீட்டிக்கப்பட்டது,[451] அது காவல்துறை அதிகாரிகளிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கிறது, ஆறு மாதங்களுக்கு முன்பிணையைத் தடை செய்கிறது - இந்த விதிகள் காவலில் முறைகேட்டை எளிதாக்குகின்றன.[452] இதேபோல், தேசியப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் பொதுப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவை விசாரணையின்றி நீண்டகாலத் தடுப்புக் காவலுக்கு அதிகாரம் அளிக்கின்றன, மாற்றுக் கருத்தை ஊமையாக்கவும் அவை பயன்படுத்தப்பட்டதாகக் தெரிகிறது.[453] 2002ஆம் ஆண்டின் பணப் பரிமாற்றத் தடுப்புச் சட்டமும் குடியியல் சமூக அமைப்புகளுக்கு எதிரான கருவியாய்ப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது, “[வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டத்தின்] கீழ் குற்றச்சாட்டுகளைச் சேர்ப்பதன் மூலமும், அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதன் மூலமும், கடுமையான பிணை நிபந்தனைகளால் அவர்களைச் சுமையாக்குவதன் மூலமும் மனிதவுரிமைப் பாதுகாவலர்கள், ஆர்வலர்கள் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்புகளைத் தாக்க, அச்சுறுத்த மற்றும் துன்புறுத்த”.[454]

445 மனிதவுரிமைகள் உயராணையர் அலுவலகம் (OHCHR), காசுமீர மனிதவுரிமைப் பாதுகாவலர் குர்ரம் பர்வேஸைக் குறிவைப்பதை நிறுத்தி, அவரை உடனடியாக விடுவிக்குமாறு இந்திய அதிகாரிகளை மனிதவுரிமைகள் நீதிமன்றம் மற்றும் ஐ.நா. நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர், 22 திசம்பர் 2021. மேலும் காண்க: டாய்ச் வெல்லே, இந்தியா: பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை ஐ.நா. சாடுகிறது, 6 திசம்பர் 2021.

446 ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை, யுபிஆர் 2022, அமெரிக்காவின் பதில், பக்கம் 7

447 மனிதவுரிமைக் குழு, முடிவுரை 2024, 25 ஜூலை 2024.

448 அம்னெஸ்டி இன்டர்நேஷனல், இந்தியா: காவலில் சாவுமடைந்த தந்தை ஸ்டான் சுவாமிக்கு நீதி கோரி ஓராண்டுக்குப் பிறகும் கோரிக்கை, 5 ஜூலை 2022.

449 ஃபிரன்ட்லைன், தவறான பயன்பாடு மற்றும் உரிமை மீறல்கள் காரணமாக UAPA சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் கோரிக்கை, 20 மே 2024.

450 ரகியா இம்ரான், யுஏபிஏ திருத்தங்களை உயர் நீதிமன்றங்கள் ஆய்வு செய்ய உச்ச நீதிமன்றம் அனுமதி, 6 பிப்ரவரி 2025; உச்ச நீதிமன்றப் பார்வையாளர், யுஏபிஏ திருத்தத்தின் அரசியலமைப்புச் சட்டத்தன்மை, 28 ஜனவரி 2025.

451 மகாராஷ்டிரா ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கட்டுப்பாட்டுச் சட்டம், 1999 [தில்லி நீட்டிப்பு] சட்டம் 30/1999, 24 ஏப்ரல் 1999.

452 மனிதவுரிமைகளுக்கான வழக்கறிஞர்கள், உலகளாவிய காலமுறை மதிப்பாய்வு மீதான செயற்குழுவின் 27வது அமர்வுக்கான இந்தியா குறித்த கூட்டுப் பங்குதாரர் அறிக்கை, செப்டெம்பர் 2016, பத்தி 37.

453 மனிதவுரிமைகள் பேரவை, பொது ஆலோசனைத் தகுதியில் உள்ள ஒரு அரசு சாரா அமைப்பான உலக முசுலிம் காங்கிரஸால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துப்பூர்வ அறிக்கை, 28 பிப்ரவரி 2024, ஐ.நா. ஆவணம் A/HRC/55/NGO/208, பக். 2.

454 AI, இந்தியா: பயங்கரவாத எதிர்ப்பு விதிமுறைகளைத் தவறாகப் பயன்படுத்துவதை நிறுத்துங்கள், 3 நவம்பர் 2023.

# சித்திரவதைக்குத் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு



© iStock/anil_shakya19

**சித்திரவதைக் குற்றத்துக்குத் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு வழங்கும் பண்பாடு இந்திய இராணுவத்திலும் காவல் படைகளிலும் ஆழமாக வேர்விட்டிருப்பதை இந்திய உச்ச நீதிமன்றம் அறிந்தேற்றுள்ளது.**

இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளபடி, சித்திரவதைக்கும் பிற கடுமையான மனிதவுரிமை மீறல்களுக்கும் தண்டித்தலில்லாக் குற்றவிலக்குப் பண்பாடு இந்திய இராணுவத்திலும் காவல் படைகளிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது. இந்திய உச்ச நீதிமன்றமும், ஐ.நா. ஒப்பந்த அமைப்புகளும் சிறப்பு நடைமுறைகளும் குடியியல் சமூகமும் இதை அறிந்தேற்கின்றன.[455] இந்தப் பண்பாடு விடாமல் தொடர்வதற்கு ஒரு காரணம் என்னவென்றால், அரசு அதிகாரியங்கள்

455 முன்ஷி சிங் கௌதம் (இறந்தவர்) மற்றும் பலர் –எதிர்- மத்தியப் பிரதேச அரசு. 2005 (9) SCC 631; மனிதவுரிமைகள் உயராணையர் அலுவலகம் (OHCHR), நீதித்துறைசாராமல் அவசரமாகவோ தற்போக்காகவோ தரப்படும் கொலைத் தண்டனைகள் மீதான சிறப்பு அறிக்கையாளர் கிறிஸ்டோஃப் ஹெய்ன்ஸின் அறிக்கை, 26 ஏப்ரல் 2013; மனிதவுரிமைகள் குழு, முடிவுரைப் பார்வைகள் 2024; காமன் காஸ், இந்தியாவில் காவல்பணியின் தகுநிலை குறித்த அறிக்கை 2025, 26 மார்ச் 2025; OMCT மற்றும் MASUM, இந்தியா: ஜஹானூர் ஹக் கொலை: மேற்கில் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு நிலவுகிறது..., 2 மே 2025. மேலும் காண்க: மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், “சகோதரத்துவத்தால் கட்டுண்டோம்” காவல்துறைக் காவலில் நடக்கும் கொலைகளை முடிவுக்குக் கொண்டுவருவதில் இந்தியாவின் தோல்வி, 19 திசம்பர் 2016.

சித்திரவதையும் மோசமான நடத்துமுறையுமான செயல்களுக்குரிய பொறுப்புக் கூறலுக்கு முகங்கொடுத்தல் அரிதாகவே உள்ளது. தண்டித்தலில்லாக் குற்றவிலக்கிற்கு உரமூட்டும் வகையில் உருப்படியான புலனாய்வுகள் இல்லாமையும், முறைகேடுகளை அறிக்கையிடுவோருக்கு எதிராகப் பழிவாங்கும் நடவடிக்கைகளும், அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சட்டவழித் தண்டித்தலில்லாக் குற்றவிலக்குகளும் அமைந்துள்ளன.

## உருப்படியான புலனாய்வுகள் போதாமை

பன்னாட்டுச்சட்டத்தின்கீழ்,அரசுகள்ஒருமுறைப்பாட்டின்பேரிலோதங்கள்சொந்தமுன்முயற்சியாலோ தங்கள் மேலுரிமையின் மீழ் சித்திரவதைச் செயல் நடந்திருப்பதாக நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமிடத்துப் புலனாய்வுகள் செய்யக் கடமைப்பட்டுள்ளன.[456] இந்தக் கடப்பாடு இருவகைப்பட்டது: தகுந்த அதிகாரியங்களிடம் முறைப்பாடு அளிப்பதற்கான உரிமை, அந்த முறைப்பாடு உடனடியாகவும் நடுநிலையாகவும் புலனாய்வு செய்யப்பெறுவதற்கான உரிமை ஆகிய இரண்டும் இதில் சேரும். குடியியல், அரசியல் உரிமைகள் மீதான பன்னாட்டு உடன்படிக்கையின் [ICCPR] கீழ் புலனாய்வு செய்ய வேண்டிய கடமை இருந்த போதிலும், அரசு அதிகாரிகளுக்கு எதிராக தனியாட்கள் முறைப்பாடு அளிக்கப் பல பொறிமுறைகள் – கொள்கையளவில் – இருந்த போதிலும், நடைமுறையில், இந்திய அதிகாரியங்கள் சித்திரவதை மற்றும் பிற கடுமையான மனிதவுரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளைத் தக்கவாறு புலனாய்வு செய்வதில்லை.[457]

### முதல் தகவல் அறிக்கைகள் தொடர்பான தோல்விகள்

தங்கள் மேலுரிமைக்குட்பட்ட குற்றச் செயல்கள் குறித்த குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்யும் பொறுப்பில் உள்ள காவல்துறை,[458] ஒரு முறைப்பாடு அளிக்கப்படும் போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும். பழைய குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்குப் பதிலாக, BNSS ஆனது “சுழியம் (ஜீரோ) FIR” மற்றும் “மின்-FIR” நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, முதல் தகவல் அறிக்கைகளைத் தாக்கல் செய்வதை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நடைமுறைகள், பாதிக்கப்பட்டவர்கள் எந்தவொரு மேலுரிமையும் கருதாமல் எந்தவொரு காவல் நிலையத்திலும், அல்லது மின்னஞ்சல்கள், இணையதளங்கள் அல்லது செல்பேசிச் செயலிகள் வழியாக மின்னணு முறையிலும் அத்தகைய அறிக்கைகளைத் தாக்கல் செய்ய இடமளிக்கின்றன - நேரில் உறுதிப்படுத்தல் இப்போதும் தேவைப்படுகிறது என்றாலும்.[459]

இருப்பினும், காவல்துறை அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கைகளைப் பதிவு செய்வதை தொடர்ந்து எதிர்க்கின்றனர், தாமதப்படுத்துகின்றனர் அல்லது முற்றிலும் தவறிவிடுகின்றனர், அவை இல்லாமல் விசாரணைகள் தொடர்வதில்லை.[460] காட்டாக, 2024 இல் மனிதவுரிமைகள் ஆணையம் குறிப்பிட்டபடி, “1979 முதல் 2012 வரை மணிப்பூரில் ஆவணப்படுத்தப்பட்ட 1,528 சட்டப் புறம்பான கொலைகளில், 39 முதல் தகவல் அறிக்கைகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டன” என்று அறிக்கைகள் சுட்டிக்காட்டின.[461] குடியியல் சமூக அமைப்புகளால் ஆவணமாக்கப்பட்டு, இந்த அறிக்கையின் முந்தைய பிரிவுகளில் இடம் பெற்றுள்ள வழக்கு ஆய்வுகளில் விளக்கப்பட்டுள்ளபடி, இது நாடு முழுவதும் நீண்ட காலமாக நிலவி வரும் போக்காகும்.[462] உண்மையில், காவல்துறை முறைப்பாடுகள் ஆணையத்திடம் கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகள் குறித்த CHRI-யின் ஆராய்ச்சி, காவல்துறை

456 UNCAT, உறுப்புகள் 12,13.
457 குடியியல், அரசியல் உரிமைகள் மீதான பன்னாட்டு உடன்படிக்கை, 1966 திசம்பர் 16, பிரிவு 2(1). மேலதிக விளக்கத்திற்குப் பொதுவான கருத்து எண் 31 (2004) ஐப் பார்க்கவும்.
458 பாரதிய நாகரிக் சுரட்சா சன்கிதா (BNSS), 2023, அத்தியாயம் XIII.
459 காமன் காஸ், மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள், ஜூலை-செப்டெம்பர் 2024, பக். 5-6.
460 மனிதவுரிமைகள் குழு, முடிவுரை 2024, 2024 ஜூலை 25, பத்திகள் 15 மற்றும் 29.
461 மனிதவுரிமைகள் குழு, முடிவுரை 2024, 2024 ஜூலை 25, பத்தி 29.
462 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், சகோதரத்துவத்தால் பிணைக்கப்பட்டது: காவல் துறை காவலில் நிகழும் கொலைகளை முடிவுக்குக் கொண்டுவருவதில் இந்தியாவின் தோல்வி, 19 திசம்பர் 2016.

பணியாளர்களுக்கு எதிரான முறைப்பாடுகளில் கணிசமான விகிதம் முதல் தகவல் அறிக்கைகளைப் பதிவு செய்யத் தவறியது பற்றியே உள்ளது என்பதையும், அசாமில் முறைப்பாடுகளின் இரண்டாவது பெரிய வகையாக இந்தப் பிரச்சினை உள்ளது என்பதையும் வெளிப்படுத்தியது.[463]

## வழக்கு ஆய்வு: சித்திரவதை வழக்குப் பதிவு செய்ய மறுத்தல்

### தினகிருஷ்ண தாக்கூர்

இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, பாண்ட்ரோவின் பட்டியல் சாதி சமூகத்தைச் சேர்ந்தகலைஞரும் சமூக ஆர்வலருமான தினகிருஷ்ண தாக்கூர். பிப்ரவரி 2024-ல், 35-40 பேர் கொண்ட குழுவினரால் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டார். பின்னர், காவல்துறையினரால் மேலும் தாக்கப்பட்டதோடு, சாதி அடிப்படையிலான வசவுகளாலும் அவமானப்படுத்தப்பட்டார். இதன் விளைவாக, அவரது இரு காதுகளிலும் நீண்டகால பாதிப்பு உட்பட பலத்த காயங்கள் ஏற்பட்டன. தினகிருஷ்ணா இந்த சித்திரவதையை பக்குல்தலா காவல் நிலையத்தில் புகாரளிக்க முயன்றபோது, அதிகார வரம்பு கொண்ட ஜாய்நகர் காவல் நிலையத்தில் தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறி, காவல் துறை அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்ய மறுத்துவிட்டனர்.[464] பின்னர், தினகிருஷ்ணா தனது குடும்ப உறுப்பினர் ஒருவரை ஜாய்நகரில் முறைப்பாடு அளிக்க அனுப்பியபோது, அங்குள்ள உதவி ஆய்வாளர் ஒருவர் மறுத்து, அக்குடும்பத்தினரின் வாகனத்தை சேதப்படுத்தி, அவர்களை வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுத்தார். இறுதியில் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது, ஆனால் அதில் தினகிருஷ்ணாவின் சாதி நிலை உட்பட முக்கிய விவரங்கள் விடுபட்டிருந்தன.[465]

இத்தகைய அறிக்கைகளைப் பதிவு செய்ய காவல்துறை அதிகாரியங்கள் இவ்வாறு எதிர்ப்புக் காட்டுவதற்கு அல்லது தவறுவதற்குக் காரணம் அவர்கள் தங்கள் பணியாளர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்துக் கொண்டுள்ள கண்ணோட்டமே என்று ஓரளவு விளக்கந்தரலாம். காமன் காஸ் ஆவணமாக்கியபடி, நாடு முழுவதும் உள்ள காவல்துறை அதிகாரிகளுடனான நேர்காணல்களில், “மூன்றில் ஒரு பங்கு காவல்துறைப் பணியாளர்கள், காவல்துறைக்கு எதிரான முறைப்பாடுகள் பொய்யானவை, அற்பமானவை என்று உறுதியாக நம்புகிறார்கள், அதே நேரத்தில் மற்றொரு 42 சதவீதம் பேர் இந்தக் கூற்றை ஓரளவு ஒப்புக்கொள்கிறார்கள்” என்று தெரியவந்துள்ளது.[466] கூடுதலாக, நேர்காணல் செய்யப்பட்ட காவல்துறை அதிகாரிகளில் 29% பேர், “காவல்துறைக்கு எதிராகப் பதிவு செய்யப்படும் பெரும்பாலான முறைப்பாடுகள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள், அதே நேரத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் சற்று அதிகமானவர்கள்(36%) இதை ஓரளவு ஒப்புக்கொள்வதாகக் கூறினர்”.[467]

463 சி.எச்.ஆர்.ஐ, இந்தியக் காவல் முறைப்பாடு அதிகார அமைப்புகள், 2023, பக். 5.

464 1993ஆம் ஆண்டிலேயே உச்ச நீதிமன்றம், காவல்துறையினர் இருப்பிடத்தைப் பொருட்படுத்தாமல் தகவலைப் பதிவு செய்ய வேண்டும் என்றும், பின்னர் அதிகார வரம்புச் சிக்கல்களை சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்குத் தகவலை அனுப்பி வைப்பதன் மூலம் கையாள வேண்டும் என்றும் கட்டளையிட்டிருந்தபோதிலும், முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யாததற்கு போலியான மேலுரிமைச் சிக்கல்கள் ஒரு காரணமாகப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆந்திரப் பிரதேச அரசு எதிர் புனாட்டி ராமுலு மற்றும் பிறர் 1994 SCC (SUPP) 1 590, பத்தி 4 என்ற வழக்கைக் காண்க.

465 MASUM, மாத அறிக்கை, 2024 மார்ச்சு.

466 காமன் காஸ், இந்தியாவில் காவல் பணியின் தகுநிலை குறித்த அறிக்கை 2025, காவல்துறை சித்திரவதை மற்றும் பொறுப்புக் கூறல் (இல்லாமை), 2025, பக். 127.

467 காமன் காஸ், இந்தியாவில் காவல் பணியின் தகுநிலை குறித்த அறிக்கை 2025, காவல்துறை சித்திரவதை மற்றும் பொறுப்புக் கூறல் (இல்லாமை), 2025, பக். 127.

## பாகுபாடு பாராத நடுநிலையும், உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தலும், செயல்திறமும் இல்லாமை

முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டாலும், தேவையற்ற தாமதங்கள் இன்றி புலனாய்வுகளை முடிப்பதற்கான சட்ட விதிகள் இருந்த போதிலும்,[468] விசாரணைகள் பெரும்பாலும் தாமதப்படுத்தப்படுகின்றன அல்லது போதுமானதாக நடத்தப்படுவதில்லை. உண்மையில், அரசு வன்முறை தொடர்பான போதுமான விசாரணைகள் இல்லாத பிரச்சினை, கடந்த பத்தாண்டுகளில் உச்ச நீதிமன்றத்தையும் தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தையும் (NHRC) பல வழிகாட்டுதல்களை வெளியிடத்தூண்டியுள்ளது,இதில்காவலில்நிகழும்சாவுங்கள்மற்றும்நீதிமன்றத்திற்குஅப்பாற்பட்ட கொலைகள் தொடர்பான வழக்குகளும் அடங்கும்.[469] உச்ச நீதிமன்றம் நினைவுபடுத்தியபடி, "காவல் நிலைய எல்லைக்குள் நிகழும் அட்டூழியங்கள், குற்றவாளிகள் யார் என்பதை நிரூபிக்க எந்தவொரு நேரடி அல்லது நேரில் கண்ட சான்றுகள் இல்லாமலேயே பெரும்பாலும் விடப்படுகின்றன".[470] இது சித்திரவதை மற்றும் காவலில் நிகழும் சாவுங்கள் குறித்த போதுமான ஆவணப்படுத்தலின் அவசியத்தையும், திறமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைகளின் முக்கியத்துவத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

உள்ளூர்க் காவல்துறையினர் குற்றவாளிகளாகவும் ஆரம்பகட்ட விசாரணையாளர்களாகவும் இரட்டைப் பங்கு வகிப்பது குறித்து ஏராளமான கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன.[471] இந்தத் தற்சார்பின்மை, பன்னாட்டுச் சட்டத்தின் கொள்கைகளை மீறுவது மட்டுமல்லாமல், நடைமுறையில் புலனாய்வுகளையும் கணிசமான அளவுக்கு வலுக்குன்றச் செய்கிறது.[472] உதாரணமாக,காவலில் நிகழும் சாவு வழக்குகளில் பிரேதப் பரிசோதனைகளில் காவல்துறை தலையிடுவதை அரசுசாரா நிறுவனங்கள் ஆவணமாக்கியுள்ளன; இல்லையெனில், இது அரசின் அத்துமீறல் குறித்த முக்கிய ஆதாரங்களை வழங்கியிருக்கும். சில சமயங்களில், காவல்துறையினர் பிரேதப் பரிசோதனைகளை நடத்தி, பாதிக்கப்பட்டவரின் உடலை அவரது குடும்பத்தினர் பார்க்கும் வாய்ப்பு வழங்கப்படுவதற்கு முன்பே உடனடியாகத் தகனம் செய்தனர்.[473] கூடுதலாக, "பொய் மோதல்" வழக்குகள் என்று அழைக்கப்படும் வழக்குகளில் அறிக்கைகளைத் தவறாகப் பதிவு செய்ய மறுத்தால், மருத்துவப் பணியாளர்கள் குறைந்த தொழில் வாய்ப்புகளை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.[474]

பொறுப்புக்கூறலுக்கு அரியதோர் எடுத்துக்காட்டாக, 2024 ஆம் ஆண்டில், மகேந்திர ரத்தோடின் காவல் சாவுத்திற்கு காவல்துறை அதிகாரிகள் பொறுப்பு என்று ஒரு இந்திய நீதிமன்றம் கண்டறிந்தது, மேலும் விசாரணையின் போது ஏற்பட்ட சிக்கல்களையும் சுட்டிக்காட்டியது. நீதிமன்றத்தின்படி, 2016 இல் பெங்களூருவில் காவல் காவலில் மகேந்திரா இறந்ததைத் தொடர்ந்து, சித்திரவதைக்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகளை அதிகாரிகள் மீட்கவோ அல்லது கைப்பற்றவோ இல்லை, சிசிடிவி காட்சிகளை சேகரிக்கத் தவறினர், மேலும் வழக்கு நாட்குறிப்பு மற்றும் கைது பதிவுகளைத் திரித்தனர். ஆயினும்கூட, பாதிக்கப்பட்டவர் அடைந்த காயங்களை ஆவணப்படுத்திய மருத்துவ அறிக்கை உட்பட பிற ஆதாரங்களை ஓரளவு நம்பி, பொறுப்பான காவல்துறை அதிகாரிகளை நீதிமன்றம் பொறுப்பேற்கச் செய்தது.[475]

468 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS), 2023, s 193.

469 டி.கே. பாசு எதிர் மேற்கு வங்க அரசு 1997 1 SCC 416; மக்கள் சிவில் உரிமைக் கழகம் எதிர் இந்திய யூனியன் (UOI) மற்றும் பிறர் 1997 (3) SCC 433; மக்கள் சிவில் உரிமைக் கழகம் எதிர் மகாராஷ்டிர அரசு 2014 (10) SCC 635. சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மீதான தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தின் வழிகாட்டுதல்களுக்கு, மனிதவுரிமைகளுக்கான இளைஞர்கள் அமைப்பின் ஆவணப்படுத்தல், சட்டத்தையும் வாழ்க்கையையும் அணைத்தல், அக்டோபர் 2021-ஐப் பார்க்கவும்.

470 இந்திய உச்ச நீதிமன்றம், மத்தியப் பிரதேச மாநிலம் எதிர் ஷ்யாம்சுந்தர் திரிவேதி மற்றும் ஆணை 1995 (4) SCC 262, 9 மே 1995.

471 ஜஸ் கார்பஸ் சட்ட இதழ், இந்தியாவில் சுதந்திரமான விசாரணையின் தேவை: காவல்துறை வன்முறையும் சட்டமும், 27 பிப்ரவரி 2017. மேலும் காண்க வெர்டிக் டும், மாநில காவல்துறை தங்கள் சக காவலர்களையே பாதுகாக்கிறது: காவல் சாவு குறித்து சிபிஐ விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு, 16 மே 2025.

472 UNCAT, பிரிவு 12.

473 மக்கள் கண்காணிப்பகம், அறிக்கை – விக்னேஷ் காவல் சாவு_0.pdf, 22 ஏப்ரல் 2022, பக். 30; முன்னெச்சரிக்கை தகனம் தொடர்பான மற்றொரு வழக்கிற்கு, சித்திரவதைக்கு எதிரான தேசிய இயக்கத்தின் ஆண்டறிக்கை, 2020 மார்ச் 18, பக். 177ஐப் பார்க்கவும். மேலும், சாலினி –எதிர்- மாவட்ட ஆட்சியர் WP(MD).23672/2024 வழக்கையும் பார்க்கவும்.

474 டாக்டர் பிரம்மா தியோ எதிர் திரு விஜய் சம்பலா மற்றும் பிறர், தொடர் மேல்முறையீட்டு நீதிமன்றம் (சி) 1043/2022, முதலமைச்சர் மனு எண். 26408/2023, பத்தி 4.

475 கர்நாடக அரசு எதிர் எஜாஜ் கான் மற்றும் பிறர் வழக்கு எண். 1723/2019. மேலும், டிஸ்கோர்ஸ் ஆஃப் டெவலப்மென்ட், நீதி வழங்கப்பட்டது: காவல் சாவுத்திற்காக சிறையில் அடைக்கப்பட்ட காவல்துறை அதிகாரிகள், 27 நவம்பர் 2024 ஆகியவற்றையும் பார்க்கவும்.

கூடுதலாக, ஒவ்வொரு நிகழ்விலும் இது உண்மையாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் சித்திரவதை அல்லது பிற கடுமையான மீறல்கள் மீதான விசாரணைகள், ஒரு வழக்கறிஞர் அல்லது ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படாவிட்டால், பெரும்பாலும் முன்னேறத் தவறுகின்றன என்பதை

ஆவணமாக்கப்பட்ட எடுத்துக்காட்டுகள் காட்டுகின்றன.[476] பல சந்தர்ப்பங்களில்,காவல்துறையை நடவடிக்கை எடுக்கக் கட்டாயப்படுத்த சட்டப் பெயராளர்கள் அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவன உறுப்பினர்கள் நீதிமன்ற ஆணைகளைப் பெற வேண்டியிருந்தது.[477] இருப்பினும், கணிசமான எண்ணிக்கையிலான வழக்குகளில் அத்தகைய தலையீடு சாத்தியமில்லை, ஏனெனில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனம் அல்லது சட்ட உதவி வழக்கறிஞர்களை அணுகுவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கலாம்.[478] இது, பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் விசாரணைகளின் தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் அழுத்தம் வகிக்கும் முக்கியப் பங்கை எடுத்துக்காட்டுகிறது, ஆனால் விசாரணைகள் உடனடியாகவும் திறமையாகவும் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

இந்தச் சிக்கல்களில் சிலவற்றிற்கு பதிலளிக்கும் விதமாக, இந்தியச் சட்ட ஆணையம் காவலில் காயம் அல்லது சாவு தொடர்பான வழக்குகளில் தலைகீழ் மெய்ப்பித்தல் சுமையை அறிமுகப்படுத்தப் பரிந்துரைத்தது.[479] இந்த அணுகுமுறை, தீங்கு அதிகாரிகளால் ஏற்பட்டது என்று நீதிமன்றங்கள் கருதுவதற்கு இடமளிக்கும், மேலும் தனியொருவர் சித்திரவதைக்கோ கொடுமைக்கோ ஆளாக்கப்படவில்லை என்று மெய்ப்பிக்கும் சுமையை அதிகாரிகள் மீது மாற்றும். இந்தப் பரிந்துரை மினசோட்டா நெறிமுறையுடன் ஒத்துப்போகிறது, இது «காவலில் உள்ளவர்கள் மீது அரசு செலுத்தும் கட்டுப்பாட்டின் காரணமாக, இதுபோன்ற வழக்குகளில் அரசின் பொறுப்புக்கான பொதுவான அனுமானம் உள்ளது» என்று உறுதிப்படுத்துகிறது.[480] இருப்பினும், சட்ட ஆணையத்தின் பரிந்துரை இன்னும் போதுமான அளவு செயல்படுத்தப்படவில்லை.[481]

சித்திரவதை வழக்குகளை திறம்பட விசாரிக்க உள்ளூர் காவல்துறை அடிக்கடி தவறுவதால், இந்திய நீதிமன்றங்கள் சில சமயங்களில், காவல்துறை வன்முறை குற்றச்சாட்டுகளை விசாரிக்க மத்திய புலனாய்வுப் பணியகத்திற்கு உத்தரவிட்டுள்ளன.[482] இருப்பினும், மத்திய புலனாய்வுப் பணியகத்தின் சுதந்திரம் குறித்தும் கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன, குறிப்பாக தற்போதைய அரசாங்கம் அரசியல் உள்நோக்கம் கொண்ட விசாரணைகள் மூலம் மனிதவுரிமை பாதுகாவலர்களை துன்புறுத்தவும் அச்சுறுத்தவும் இந்த அமைப்பைப் பயன்படுத்தியுள்ளது என்ற குற்றச்சாட்டுகளின் பின்னணியில் இது எழுந்துள்ளது.[483] போதுமானதாக இல்லாத உள்ளூர் காவல்துறை விசாரணைகளை ஈடுசெய்ய

476 MASUM, ஆண்டறிக்கை 2023, பக். 25.

477 உதாரணமாக, சித்திரவதைக்கு ஆளானதாகக் கூறப்படும் ஒருவருக்கு முறையான பிரேதப் பரிசோதனை கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் 16 அக்டோபர் 2020 அன்று தாக்கல் செய்யப்பட்ட மக்கள் கண்காணிப்பகம் ரிட் மனுவைப் பார்க்கவும். சிசிடிவி-யை நீதிமன்றம் முன்கூட்டியே தக்கவைத்துக் கொள்ளக் கோரி அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவையும் பார்க்கவும், மக்கள் கண்காணிப்பகம் , சந்த் (பத்திரகர்) மற்றும் மற்றொரு பிரதிவாதி எதிர் உ.பி. மாநிலம் மற்றும் 2 மற்றவர்கள், குற்றவியல் இதர ரிட் மனு எண் – 16809/2024, பத்தி 1. விசாரணை முடிந்ததும், சில சமயங்களில், குற்றவியல் வழக்குகளைத் தொடங்கும் ஆவளமான இறுதிக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றங்கள் உத்தரவிட வேண்டும்.

478 தி வயர், சாதிப் பாகுபாடு மற்றும் பாலின இடைவெளிகள்: சட்ட அமைப்பின் முக்கியத் தோல்விகளை எடுத்துரைக்கும் 2025 இந்திய நீதி அறிக்கை, 16 ஏப்ரல் 2025.

479 இந்திய சட்ட ஆணையம், UNCAT செயலாக்கம், 27 அக்டோபர் 2017, பாரா. 7.5

480 ஐநா மனிதவுரிமை உயராணையர் அலுவலகம் (UN OHCHR), மினசோட்டா நெறிமுறை, 2016.

481 நித்யா ராமகிருஷ்ணன், காவலில்: தெற்காசியாவில் சட்டம், தண்டனையின்மை மற்றும் கைதிகள் மீதான வன்முறை, மே 2013, பக். 32.

482 இந்தியா டுடே, தூத்துக்குடி காவல் சாவுங்கள்: தந்தை-மகன் இருவரும் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு, தங்கள் சொந்த இரத்தத்தையே சுத்தம் செய்ய வைக்கப்பட்டனர் என்கிறது தடயவியல் அறிக்கை, 27 அக்டோபர் 2020. மேலும் காண்க, பார் அண்ட் பெஞ்ச், ஹல்தி விழாவில் அழைத்துச் செல்லப்பட்ட நபர், காவல் நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார்: சிபிஐ விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு, 20 மே 2025.

483 மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இந்தியா: அமைதியான எதிர்ப்புகளை ஒடுக்க சட்டங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன: செயற்பாட்டாளர்கள் மீதான சோதனைகள், இணையவழி விமர்சனங்கள் முடக்கப்படுதல், 08 பிப்ரவரி 2024.

மத்திய புலனாய்வுப் பணியகத்தை நம்பியிருப்பது ஒரு நிலையான தீர்வு அல்ல என்றும் உச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ளது.[484]

பிற அமைப்புகள் புலனாய்வு செய்யவும் வாய்ப்புண்டு.காட்டாக, அரசு ஊழியர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்து விசாரிக்க நீதிபதிகளுக்கு அதிகாரம் உள்ளது.[485] உச்ச நீதிமன்றம், நடுவண் அரசும் மாநில அரசுகளும் கடுமையான குற்றங்களை விசாரிக்கச் சிறப்புப் புலனாய்வு அணிகளை அமைக்க ஆனையிடலாம் - குறிப்பாக வழக்கமான விசாரணைகளின் நடுநிலைமை, போதுமான தன்மை அல்லது செயல்திறன் குறித்து கவலைகள் இருக்கும் போது இப்படிச் செய்யலாம்.[486] இந்த அணிகள் வாடிக்கையாகக் கையாண்டுள்ள வழக்குகள் ஊழல், வகுப்புவாத வன்முறை, அல்லது ஏனைய தேசிய அல்லது பொது நலன் சார்ந்த பென்னம்பெரிய பொருட்பாடுகள் பற்றியவை.[487] காட்டாக, “1984 ஆம் ஆண்டின் சீக்கிய எதிர்ப்பு கலவரங்கள், 2002 குசராத் கலவரங்கள், கோவிட்-19 காலத்தில் போலித் தடுப்பூசிகள் ஆகியவற்றை விசாரிக்கவும், வரி ஏய்ப்பைக் கண்காணிக்க ஒரு மேற்பார்வைக் குழுவாகவும்” சிறப்புப் புலனாய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.[488]

கூடுதலாக, காவல்துறை அல்லது நீதித்துறைக் காவலில் இறப்பு, காணாமல் போதல் அல்லது பாலியல் வன்கொடுமை வழக்குகளில், காவல்துறையால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு புலனாய்வையும் கருதாமல், ஒரு நீதிநடுவரின் விசாரணை கட்டாயமாகும்.[489489] ஆயினும், நடைமுறையில், அத்தகைய விசாரணைகள் எப்போதும் நடைபெறுவதில்லை. அணமையில் அறிவிக்கப்பட்டபடி, NCRBஇடமிருந்து கிடைக்கும் தரவுகள் 2018க்கும் 2022க்கும் இடையில் பின்வருவனவற்றை வெளிப்படுத்துகின்றன:

> காவல்துறைக் காவலில் நிகழ்ந்த சாவு வழக்குகளில் பாதிக்கும் குறைவானவற்றில் மட்டுமே நீதித்துறை விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டது (...). 2022 ஆம் ஆண்டு நிலவரப்படி, காவல் துறை காவலில் நிகழ்ந்த சாவு வழக்குகளில் நீதித்துறை விசாரணை நடத்த வேண்டும் என்ற சட்டப்பூர்வ ஆணை, கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு வழக்குகளில் பின்பற்றப்படவில்லை. மேலும், காவல் துறை காவலில் நிகழ்ந்த சாவு வழக்குகளில் இருபது சதவீதத்திற்கும் அதிகமானவற்றில், நீதித்துறை அல்லது மாஜிஸ்திரேட் விசாரணைகள், அதாவது எந்த விதமான விசாரணையும் நடத்தப்படவில்லை.[490]

BNSSஇன் கீழ், நீதித்துறை நடுவர்களுக்கு இதுபோன்ற விசாரணைகளை வழிநடத்தும் அதிகாரியம் இனி இல்லை என்றும், இந்தப் பொறுப்பை நிர்வாக நடுவர்கள், உட்கோட்ட நடுவர்கள் மற்றும் மாவட்ட நடுவர்களிடம் விட்டு விடுவதாகவும் வல்லுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த மாற்றம் தற்சார்பான மேற்பார்வையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக விமர்சிக்கப்பட்டுள்ளது, ஏனெனில் நிர்வாக நடுவர்கள் மாநில நிர்வாகத்தின் ஒரு பகுதியாக உள்ளனர்; காவல்துறை முறைகேட்டைப் புலனாய்வு செய்யத் தேவையான நடுநிலைத் தன்மை அவர்களுக்கு இல்லாமற்போகலாம்.[491]

484 இந்திய உச்ச நீதிமன்றம், மேற்கு வங்க அரசு எதிர் ரெபேக்கா காதுன் மொல்லா (குற்றவியல்) எண்.15481/2024, பத்தி 5. மேலும் காண்க: தீர்ப்பு, ஆர்.ஜி. கர் போராட்டங்கள் | கொல்கத்தாவில் பெண் காவலில் சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு, கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் சிபிஐ உத்தரவைத் திருத்தியது, 25 நவம்பர் 2024.

485 பாரதிய நாகரிக் சுரட்சா சன்கிதா (BNSS), 2023, s 175(4).

486 உச்ச நீதிமன்றப் பார்வையாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT), [நாள்குறிக்கவில்லை].

487 நீதித்துறைத் தகவல், சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT): அதன் செயல்பாடுகள் மற்றும் கடமைகள், பொறுப்புகள், 14 ஜனவரி 2025.

488 உச்ச நீதிமன்றப் பார்வையாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT), [நாள்குறிக்கவில்லை].

489 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS), 2023, s 196(2); லைவ் லா, கஸ்டடி சாவுங்கள்: விசாரணைக்கான நடைமுறை என்ன? ஜூன் 28 2020.

490 காமன் காஸ், இந்தியாவில் காவல் பணியின் தகுநிலை குறித்த அறிக்கை 2025, காவல்துறை சித்திரவதை மற்றும் பொறுப்புக் கூறல் (இல்லாமை), 2025, பக். 166.

491 திட்டம் 39A, விளக்கவுரையுடன் கூடிய ஒப்பீடு, 2023, பக். 64-65. டி.கே. பாசு தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் நோக்கில், 2020-ல் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவும், நிர்வாக நீதிபதிகளால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் நடுநிலைமை மற்றும் நேர்மை குறித்து இதேபோல் கடுமையான சந்தேகங்களை வெளிப்படுத்தியது. காண்க: டி.கே. பாசு எதிர் மேற்கு வங்க அரசு, 1997 1 SCC 416.

## நலிந்த நிலையில் வெளியமை முறைப்பாட்டு அமைப்புகள்

இந்தியாவில், மனிதவுரிமை மீறல்களைக் கையாள்வது உள்ளிட்ட பல வெளிப்புற அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன, குறிப்பாக அரசு அதிகாரிகளால் செய்யப்படும் முறைகேடுகள் தொடர்பானவை. இவற்றில், காவல்துறை முறைப்பாட்டு ஆணையங்கள், தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC), மாநில மனிதவுரிமைகள் ஆணையங்கள் (SHRC) ஆகியவை சட்ட அமலாக்க முகமைகளின் முறைகேடுகளை விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ளன. இருப்பினும், பொறுப்புக்கூறலை உறுதி செய்வதிலும் தனியாட்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் இந்த நிறுவனங்களின் செயல்திறன் மீண்டும் மீண்டும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. காவல்துறைச் சீர்திருத்தங்கள் குறித்த 2006ஆம் ஆண்டின் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் காவல்துறை முறைப்பாடுகள் ஆணையங்களை உருவாக்க உத்தரவிட்டது. காவல் சாவுகள், கடுமையான காயங்கள் மற்றும் காவல்துறைக் காவலில் வன்புணர்வு உள்ளிட்ட காவல்துறைப் பணியாளர்களின் «கடுமையான முறைகேடுகள்» குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க மாநில மற்றும் மாவட்ட அளவில் காவல்துறை முறைப்பாடுகள் ஆணையங்களை நிறுவ நீதிமன்றம் பரிந்துரைத்தது.[492] காவல்துறை முறைகேடுகளைப் புகாரளிப்பதற்கும், அதற்கான நிவாரணத்தைப் பெறுவதற்கும் தனிநபர்களுக்கு ஒரு சுதந்திரமான வழிமுறையை வழங்குவதே இந்த அமைப்புகளின் முதன்மை நோக்கமாக இருந்தது.

இருப்பினும், CHRIஇன் 2023 அறிக்கை, காவல்துறை முறைப்பாடு அதிகாரியங்கள் நிறுவப்பட்டுக் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்குப் பிறகும், அவை காவல்துறையின் பொறுப்புக்கூறலில் மிகக் குறைந்த தாக்கமே ஏற்படுத்தியுள்ளன என்பதை வெளிப்படுத்துகிறது. இந்தியாவின் பாதிக்கும் குறைவான மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் புலங்களில் மட்டுமே செயல்படும் காவல்துறை முறைப்பாட்டு அதிகாரியங்கள் உள்ளன என்றும், அவற்றின் செயல்பாடுகளில் பணிபுரியும் காவல்துறை மற்றும் அரசு அதிகாரிகளின் ஈடுபாட்டால் இந்த அமைப்புகளின் தற்சார்பு அடிக்கடி குறைக்கப்படுகிறது என்றும் அந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.[493] 2021ஆம் ஆண்டு நிலவரப்படி, «மாநிலக் காவல்துறை முறைப்பாட்டு அதிகாரியங்களுக்கு (PCAs) தற்சார்பான உறுப்பினர்களை நியமிக்க 8 மாநிலங்கள் மட்டுமே பாகுபாடற்ற தேர்வுச் செயல்முறைகளைக் கொண்டுள்ளன, மேலும் மாவட்ட PCAsக்கு 5 மாநிலங்கள் மட்டுமே அவ்வாறு கொண்டுள்ளன».[494] கவலைக்குரிய வகையில், செப்டெம்பர் 2023 நிலவரப்படி, செயல்படும் 11 காவல்துறை முறைப்பாட்டு அதிகாரியங்களில், குறைந்தது ஒன்பது அமைப்புகள் பணியிலிருக்கும் அரசு அல்லது காவல்துறை அதிகாரிகளைக் கொண்டுள்ளன, மேலும் ஒன்று மட்டுமே அரசியல் சார்புகளற்ற தற்சார்பான குடியியல் சமூகப் பெயராண்மை கொண்டுள்ளது.[495] விசாரணைகளுக்கு ஆதரவளிக்க இரண்டு மாநில காவல்துறை முறைப்பாடு அதிகார அமைப்புகள் மட்டுமே தனியொரு புலனாய்வுத் துறையை நிறுவியுள்ளன என்ற உண்மையால் இந்தத் தற்சார்பினமை மேலும் மோசமடைகிறது. இதன் விளைவாக, இதுபோன்ற பெரும்பாலான அமைப்புகள் «தங்கள் சொந்த பணியாளர்களுக்கு எதிரான தவறான நடத்தை முறைப்பாடுகளை விசாரிக்க மாநில காவல்துறையையே சார்ந்துள்ளன».[496]

492 சி.எச்.ஆர்.ஐ, காவல்துறைச் சீர்திருத்தங்கள் மீதான உச்ச நீதிமன்ற வழிகாட்டு நெறிகளுக்கு அரசாங்கத்தின் இணக்கம், மதிப்பீடு, செப்டெம்பர் 2021. மேலும் பிரகாஷ் சிங் மற்றும் பலர் –எதிர்- இந்திய ஒன்றியம் மற்றும் பலர் WP (C) 310 (1996) வழக்கையும் பார்க்கவும். இந்த வழிகாட்டு நெறி 2006இல் முதன்முதலில் இயற்றப்பட்டு, 2015இல் புதுப்பிக்கப்பட்ட முன்மாதிரிக் காவல்துறைச் சட்டத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டது. மாநில அளவிலான காவல்துறை முறைப்பாட்டு அதிகாரியங்கள் (PCAs), காவல் கண்காணிப்பாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளில் உள்ள அதிகாரிகள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்குப் பொறுப்பானவை; அதே சமயம் மாவட்ட அளவிலான PCAs காவல் கண்காணிப்பாளர் மற்றும் அதற்குக் கீழுள்ள பதவிகளில் உள்ள அதிகாரிகள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்பானவை.

493 சி.எச்.ஆர்.ஐ, இந்தியாவில் காவல் துறை புகார் ஆணையங்கள் (Police Complaints Authorities), 2023 1996 ஆம் ஆண்டின் Prakash Singh மற்றும் பிறர் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர் (W.P. (C) எண் 310/1996) வழக்கில் இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய உத்தரவின்படி இந்த ஆணையங்கள் அமைக.

494 சி.எச்.ஆர்.ஐ, காவல்துறை சீர்திருத்தங்கள் மீதான உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களுக்கு அரசின் இணக்கம், மதிப்பீடு, செப்டெம்பர் 2021.

495 சி.எச்.ஆர்.ஐ, இந்தியாவில் உள்ள காவல்துறை முறைப்பாடுகள் அதிகார அமைப்பு, 2023.

496 சி.எச்.ஆர்.ஐ, இந்தியக் காவல் முறைப்பாடு அதிகார அமைப்புகள், 2023, பக். 5-6.

கூடுதலாக, காவல்துறை முறைப்பாடு அதிகாரிகளால் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரம்பு குறிப்பிடத்தக்க வகையில் குறுகியதாக உள்ளது, இதன் விளைவாக கணிசமான எண்ணிக்கையிலான குற்றச்சாட்டுகள் கவனிக்கப்படாமல் போகின்றன. உதாரணமாக, தில்லியில் ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட போதிலும், 17 முறைப்பாடுகளுக்கு மட்டுமே காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டன.[497]

பொருத்தப்பாடு கொண்ட மற்றோர் அமைப்பு தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC) ஆகும், இது நாட்டில் மனிதவுரிமைகளைப் பாதுகாக்கும் முக்கிய ஆணையின் கீழ்நிறுவப்பட்டது. மனிதவுரிமைகளை மேம்படுத்துதல், தடுப்புக்காவல் மையங்களைப் பார்வையிட்டு நிலைமைகளை மதிப்பிடுதல் மற்றும் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல், ஒரு பொது ஊழியரால் செய்யப்படும் மனிதவுரிமை மீறல்கள் அல்லது அத்தகைய மீறலைத் தடுப்பதில் ஏற்படும் அலட்சியம் ஆகியவற்றை விசாரித்தல் ஆகியவை இதன் கடமைகளாகும்.[498] முறைப்பாடுகளைப் பரிசீலித்து ஆய்வு செய்த பின்னர், அத்தகைய துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அதிகாரிகள் மீது வழக்குத் தொடரவும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இழப்பீடு வழங்கவும் NHRC பரிந்துரைக்கலாம்.[499]

நடைமுறையில், தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC) அதன் செயல்திறனின்மைக்காக கணிசமான விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. 2014 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில், காவலில் நிகழ்ந்த சாவுங்கள் குறித்து 20,000-க்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை NHRC பெற்றது. ஆயினும்,அது 995 வழக்குகளில் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப் பரிந்துரைத்தது, வெறும் 28 நிகழ்வுகளில் மட்டுமே ஒழுங்கு நடவடிக்கையைப் பரிந்துரைத்தது, மேலும் பொறுப்பான காவல்துறை அதிகாரிகள் மீது எந்தவொரு வழக்குத் தொடரவும் பரிந்துரைக்கவில்லை.[500] இந்தத் தெளிவான முரண்பாடு, பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதில் NHRC-யின் அர்ப்பணிப்பு மற்றும் திறன் குறித்து கடுமையான கேள்விகளை எழுப்புகிறது. குறிப்பாக, இழப்பீடு வழங்குவது உள்ளிட்ட அதன் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கான அதிகாரம் NHRC-க்கு இல்லை. இது மனிதவுரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதில் அதன் தாக்கத்தை மேலும் கட்டுப்படுத்துகிறது.[501] ஆய்தப் படைகளின் மீறல்களைக் கையாள்வதற்கான அதிகாரம் NHRC-க்கு கிட்டத்தட்ட முழுமையாக இல்லாததால் இந்தப் பிரச்சினை மேலும் தீவிரமடைகிறது.

இந்த அறிக்கையில் முன்னர் குறிப்பிட்டபடி, ஆய்தப் படைகளின் முறைகேடுகள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக, தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC) ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை குறித்து அரசாங்கத்திடம் இருந்து ஒரு அறிக்கையை மட்டுமே கோர முடியும் மற்றும் அந்த அறிக்கையின் அடிப்படையில் பரிந்துரைகளை வழங்க முடியும், ஆனால் அது தனது சொந்த விசாரணையை நடத்த அங்கீகரிக்கப்படவில்லை.[502] இந்த வரம்பு குறிப்பாக சம்மு- மற்றும் காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் சத்திஸ்கர் போன்ற அதிகரித்த இராணுவ நடவடிக்கைகளின் கீழ் உள்ள மாநிலங்களையும், குறிப்பிட்ட நடவடிக்கைகளை நடத்துவதற்காக ஆய்தப் படைகள் அடிக்கடி பயன்படுத்தப்படும் பகுதிகளையும் பாதிக்கிறது.

தேசிய மனிதவுரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டணி, 2016 முதல் மூன்று முறை தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தை (NHRC) விமர்சித்து, அதன் அங்கீகாரத்தை ஒத்திவைத்துள்ளது. சமீபத்தில், மார்ச் 2025 இல், NHRC-ஐ «A» (பாரிஸ் கோட்பாடுகளுடன் முழுமையாக இணங்குதல்)

497 சி.எச்.ஆர்.ஐ, இந்தியக் காவல் முறைப்பாடு அதிகார அமைப்புகள், 2023, பக். 5.
498 மனிதவுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993, 2006-இல் திருத்தப்பட்டது, பிரிவு 12.
499 மனிதவுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993, பிரிவு 18.
500 பின்வரும் ஆதாரங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளபடி, காவலில் சாவு தொடர்பான முறைப்பாடுகளில் தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC) இழப்பீடு வழங்கப் பரிந்துரைத்த மொத்தப் முறைப்பாடுகளின் எண்ணிக்கையை இந்தப் புள்ளிவிவரங்கள் எடுத்துக்கொள்கின்றன: ஆண்டறிக்கை2021-22; ஆண்டறிக்கை2019-20; ஆண்டறிக்கை2018-19; ஆண்டறிக்கை2017-2018; ஆண்டறிக்கை2016-2017; ஆண்டறிக்கை2015-2016; ஆண்டறிக்கை2014-2015; ஆண்டறிக்கை2013-2014.
501 மனிதவுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993, 8 ஜனவரி 1994, பிரிவு 18.
502 மனிதவுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993, 8 ஜனவரி 1994, பிரிவு 19,

பிரிவிலிருந்து «B» (பகுதியளவு இணங்குதல்) பிரிவிற்குத் தரம் குறைக்குமாறு அது பரிந்துரைத்தது. அறிக்கைகளின்படி, தேசிய மனிதவுரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டணி, «விசாரணைகளில் காவல்துறை அதிகாரிகளின் ஈடுபாடு, ஆணையத்தின் அமைப்பில் பன்மைத்துவமின்மை, வெளிப்படையற்ற தேர்வு மற்றும் நியமன செயல்முறைகள், அமைப்புரீதியான மனிதவுரிமை மீறல்களுக்குப் போதுமான பதிலளிக்காமை, மற்றும் சிவில் சமூகத்துடன் மோசமான ஒத்துழைப்பு» ஆகியவை குறித்துக் கவலை தெரிவித்துள்ளது.[503] இது குறிப்பாக விசாரணைகளில் பாரபட்சமின்மை இல்லாததை விமர்சித்தது, இது «பாதிக்கப்பட்டவர்கள் மனிதவுரிமை நீதியை அணுகும் திறனைப்» பாதிக்கிறது.[504]

இறுதியாக, மாநில அளவில், மனிதவுரிமைகளை மேம்படுத்துவதற்கும் மீறல்களைக் கையாள்வதற்கும் இதேபோன்ற ஆணையின் கீழ் மாநில மனிதவுரிமைகள் ஆணையங்கள் (SHRCs) நிறுவப்பட்டன. இருப்பினும், இந்த அமைப்புகள் தொடர்பாகவும் இதேபோன்ற பிரச்சினைகள் எழுப்பப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் போதுமான பணியாளர்களைக் கொண்டிருக்கவில்லை என்றும்,[505] மனிதவுரிமை மீறல்களுக்குப் பொறுப்பேற்பதில் மெதுவாகவும் பயனற்றதாகவும் பங்களிக்கின்றன என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.[506] நீடித்த விசாரணைகளுக்கு ஒரு தெளிவான உதாரணமாக, 2021 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் காவலில் கற்பழிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு இழப்பீடு வழங்க மாநில மனிதவுரிமைகள் ஆணையம் பத்து ஆண்டுகள் எடுத்துக்கொண்ட ஒரு வழக்கை மக்கள் கண்காணிப்பகம் ஆவணப்படுத்தியது. அமைப்பு ரீதியான சிக்கல்களைக் கண்டறிந்து, அந்த அரசு சாரா அமைப்பு மாநில மனிதவுரிமைகள் ஆணையங்களில் சீர்திருத்தம் செய்ய அழைப்பு விடுத்தது.[507]

## முறைப்பாட்டாளர்களுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகள்

ஐ.சி.சி.பி.ஆர். உள்ளிட்ட பன்னாட்டுச் சட்டத்தின் கீழ், சித்திரவதை அல்லது பிற மனிதவுரிமை மீறல்களை முறைப்பாடு செய்யும் ஆட்கள் அவர்களின் முறைப்பாடு அல்லது அவர்கள் வழங்கும் எந்தவொரு ஆதாரத்தின் விளைவாகவும் ஏற்படும் எந்தவொரு துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தலில் இருந்தும் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டிய கடமை இந்தியாவிற்கு உள்ளது.[508] பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் பாதுகாப்பாகப் முறைப்பாடுகளைப் பதிவு செய்யவும், பொறுப்புக்கூறல் செயல்முறைகளில் பங்கேற்கவும் இந்த பழிவாங்குதலுக்கு எதிரான பாதுகாப்பு அவசியம். இத்தகைய பாதுகாப்புகள் இல்லாமல், பழிவாங்கும் இடரானது தண்டித்தலில்லாக் குற்றவிலக்கைக் கவனித்துக் கொள்ளும் முயற்சிகளைக் கடுமையாகப் பாதிக்கும்.

கொள்கையளவில், காவல்துறை முறைப்பாடு அதிகாரியங்களில் (அத்தகைய அமைப்புகள் நிறுவப்பட்டு செயல்படும் இடங்களில்) காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராகப் பதிவு செய்யப்படும் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள், இந்தியாவில் அதிகமான பாதிக்கப்பட்டவர்கள் வன்முறை அல்லது முறைகேட்டைப் முறைப்பாடு செய்யத் தயங்குவதில்லை என்பதைக் குறிக்கலாம்.[509] இருப்பினும், இந்த வழிமுறைகள் நாடு முழுவதும் அவற்றின் செயல்பாடு மற்றும் செயல்திறனில்

503 தி நியூஸ் மினிட், விளக்கம்: இந்தியாவின் தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் ஏன் 'A' தரத்திலிருந்து 'B' தரத்திற்குத் தரமிறக்கத்தை எதிர்கொள்கிறது, 28 ஏப்ரல் 2025; GANHRI, 20 நவம்பர் 2024 நிலவரப்படியான அங்கீகார நிலை, பக். 7; தி வயர், ஐ.நா.வுடன் தொடர்புடைய அமைப்பு அரசின் தலையீட்டைச் சுட்டிக்காட்டியதால், இந்தியாவின் தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் 'வரலாற்றுச் சிறப்புமிக்க' தரமிறக்கத்தை எதிர்கொள்கிறது, 28 ஏப்ரல் 2025

504 தி நியூஸ் மினிட், விளக்கம்: இந்தியாவின் தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் (NHRC) ஏன் 'A' தரத்திலிருந்து 'B' தரத்திற்குத் தரமிறக்கத்தை எதிர்கொள்கிறது, 28 ஏப்ரல் 2025. GANHRI, தேசிய மனிதவள மேம்பாட்டு ஆணையம் (GANHRI), 20 நவம்பர் 2024 நிலவரப்படியான அங்கீகார நிலை, 20 நவம்பர் 2024, பக். 7.

505 தேசிய மனிதவுரிமைகள் ஆணையம், மாநில மனிதவுரிமைகள் ஆணையங்கள், 17 திசம்பர் 2024.

506 தி வயர், இந்தியாவின் மாநில மனிதவுரிமைகள் ஆணையங்களில் கிட்டத்தட்ட 2-ல் 1 பதவி காலியாக உள்ளது: அறிக்கை, 4 ஏப்ரல் 2023.

507 பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கப் பரிந்துரைத்த தமிழக மாநில மனிதவுரிமைகள் ஆணையத்தின் உத்தரவை, மக்கள் கண்காணிப்புக் குழுவின் உரிமை மன்றம் வரவேற்கிறது, 24 திசம்பர் 2021.

508 ஐசிசிபிஆர், பிரிவு 2(3).

509 காமன்வெல்த் மனிதவுரிமைகள் முன்முயற்சி, இந்தியாவில் காவல்துறை முறைப்பாடுகள் அதிகார அமைப்புகள், 2023, பக். 5.

குறைவாகவே உள்ளன, எனவே சித்திரவதை அல்லது பிற கடுமையான மனிதவுரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட அனைவரின் அல்லது பெரும்பாலானோரின் அனுபவங்களைப் பிரதிபலிக்காமல் இருக்கலாம். உண்மையில், முறைப்பாட்டாளர்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல் நிகழ்வுகள், முறைப்பாட்டாளர்களுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகள் தனிப்பட்ட நிகழ்வுகள் அல்ல என்பதைக் காட்டுகின்றன.[510] 2021ஆம் ஆண்டில் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்களை மேம்படுத்துவதற்கான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் குறிப்பிட்டது போல:

> இந்தியாவில், சட்ட நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் நோக்கில் காவல்துறையினர் பாதிக்கப்பட்டவர்களை துன்புறுத்தி அச்சுறுத்தியதாக கூறப்படுகிறது, மேலும் சில சிறுபான்மையினருக்கு எதிரான கட்டமைப்பு சார்ந்த தப்பெண்ணங்களுக்கு ஆளாகக் கூடிய மற்றும் அதிகப்படியான அதிகாரத்துவத்தால் பாதிக்கப்படும் நீதி அமைப்பு, மணிப்பூரிலும் சம்மு காசுமீரத்திலும் நடந்த நிகழ்வுகளின் ஐயுறவுக்குரிய குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை அல்லது அதற்கேற்ப அவர்களை தண்டிக்கவில்லை.[511]

எடுத்துக்காட்டாக, 2024 சனவரியில், மேற்கு வங்கத்தில் BSFஆல் மபியா கதுனுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதை வழக்கை MASUM என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆவணமாக்கிற்று. ஒரு மசூதிக்குச் செல்லும் வழியில், மபியா தனது இளம் மகளின் கண்முன்னே BSF வீரர்களால் தாக்கப்பட்டார் மற்றும் வாய்மொழியாகத் திட்டப்பட்டார். காவல்துறை அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோதிலும், முறைப்பாடு அளிக்க வேண்டாம் என்று அவரை எச்சரித்தனர், மேலும் அவர் முறைப்பாடு அளித்தால் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டைப் புனைந்துவிடுவோம் என்றும் மிரட்டினர்.[512] மற்றொரு பதிவான வழக்கில், 30 வயது இளைஞரின் சித்திரவதை மற்றும் கொலையில் ஈடுபட்ட அதிகாரிகளை இடைநீக்கம் செய்யக் கோரும் ஒரு நிகழ்வின் அமைப்பாளரை காவல்துறை சித்திரவதை செய்தது. இந்த நபர் சாதி அடிப்படையிலான அவதூறுகளுக்கும், தடியால் தாக்கப்பட்டதற்கும் உள்ளாக்கப்பட்டார். இந்தத் தாக்குதலின் விளைவாக அவரது தாடை உடைந்ததாகக் கூறப்படுகிறது. அவர் மீது முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டது, ஆனால் சிவில் சமூக அமைப்புகளின் தலையீட்டிற்குப் பிறகு நீதிமன்றத்தால் அது நீக்கம் செய்யப்பட்டது.[513]

மற்றொரு வழக்கில், 2020ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் ஆறுமுகநேரி காவல் நிலையத்தில் ஆறு காவல்துறை அதிகாரிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டதாக ஹபீப் முகமது முறைப்பாடு அளித்தார். அவர் மருத்துவ சிகிச்சைக்காகக் கோரி, தனது காயங்களுக்கான காரணத்தை விளக்கியபோது, காவல்துறை அதிகாரிகள் மருத்துவமனைக்கு வந்து, வேறு எங்கும் மேலதிக சிகிச்சை பெறக்கூடாது என்று அவரை மிரட்டினர், மேலும் சித்திரவதையைப் பற்றி முறைப்பாடு அளித்தால் பொய்யான குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்படும் என்றும் எச்சரித்தனர்.[514]

510 MASUM, மாத அறிக்கை செப்டெம்பர் 2024, [நாள்குறிக்கவில்லை], பக். 3; MASUM, மாத அறிக்கை ஜூன் 2024, [நாள்குறிக்கவில்லை], பக். 3-4; மக்கள் கண்காணிப்பகம் , தூத்துக்குடியில் ஆட்டோ ஓட்டுநர் ஹபீப் மீதான கொடூரமான சித்திரவதை, 24 பிப்ரவரி 2024; OMCT, இந்தியா: சித்திரவதைக்கு உள்ளானவரின் குடும்பம் பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் தண்டிக்கப்பட்டு, மௌனமாக்கப்பட்டது, 15 நவம்பர் 2023; HRW, பாலியல் பலாத்காரப் புகாரைத் திரும்பப் பெற ஒரு இளம் பெண்ணை காவல்துறை எவ்வாறு வற்புறுத்தியது, 8 நவம்பர் 2017.

511 மனிதவுரிமைகள் பேரவை, உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்களை மேம்படுத்துதல் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர், ஃபேபியன் சால்வியோலி அவர்களின் அறிக்கை, 9 ஜூலை 2021, பத்தி 46.

512 MORE, மே 2024 மாத அறிக்கை, [நாள்குறிக்கவில்லை], பக். 5.

513 மக்கள் கண்காணிப்பகம் , காவல் சாவுத்தில் தலையிட்டதற்காக ஜேஏஏசிடி செயற்பாட்டாளர் கைது – கும்பகோணம் காவல் நிலையம் | மக்கள் கண்காணிப்பகம், 25 பிப்ரவரி 2024; மேலும் காண்க மக்கள் கண்காணிப்பகம் , குற்றவியல் மூல மனுவின் குறிப்பாணை. குற்றவியல் நடைமுறைச் சட்டம், 2022-இன் பிரிவு 482-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டது, பக். 9.

514 மக்கள் கண்காணிப்பகம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், 2020, பிரிவு 482இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மூல விண்ணப்பம்.

# வழக்கு ஆய்வு: சித்திரவதை முறைப்பாட்டுக்காகக் காவல்துறை பழிவாங்கல்

## யூனுஸ் ஷா

2022 ஜூன் மாதம், 67 வயதான யூனுஸ் ஷா, தன் உறவினர் மீது காவல்துறையினர் நிகழ்த்திய கடுங்கொடிய அடி, மின்சார அதிர்ச்சி, பாலியல் வன்முறை ஆகியவை தொடர்பாக அலாபூர் காவல் நிலையத்தில் ஒரு வழக்குப் பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை பதிவான பின், ஐந்து காவல்துறை அதிகாரிகள் இதில் ஈடுபட்டதாகக் கூறி இடைநீக்கம் செய்யப்பட்டனர்; ஆனால் சில நாட்களிலேயே அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டனர். அதே அதிகாரிகள் பின்னர் யூனுஸையும் அவரது குடும்பத்தினரையும் மிரட்டி, முறைப்பாட்டை வாபஸ் பெற அழுத்தம் கொடுத்தனர்.

2022 திசம்பர் மாதம், 10-15 காவல்துறை அதிகாரிகள் கொண்ட ஒரு குழு யூனுஸின் வீட்டிற்குச் சென்று, சித்திரவதை முறைப்பாட்டை வாபஸ் பெறுமாறு கோரினர். குடும்பத்தினர் மறுத்தபோது, யூனுஸும் அவரது மூன்று உறவினர்களும் கைது செய்யப்பட்டு அலாபூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். அவர்கள் தடிகளால் அடிக்கப்பட்டு, குத்தப்பட்டனர்; ஒரு குடும்ப உறுப்பினரின் காதுகளிலும் தலையிலும் மின்சார அதிர்ச்சி தரப்பட்டு, பின்னர் உடல்நிலை மோசமடைந்ததால் புடான் மாவட்ட மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இந்தச் சித்திரவதையின் விளைவாக யூனுஸின் விரல் எலும்பு முறிந்தது; இன்னொரு குடும்ப உறுப்பினரின் கால் எலும்பும் முறிந்தது. அடிக்கும் போது, முறைப்பாட்டைக் கைவிடும்படி காவல்துறையினர் மீண்டும் மீண்டும் கோரினர்.

அதைத் தொடர்ந்து யூனுஸ் மீது, கலவரம் செய்தல், அரசு ஊழியரை அவரது கடமையிலிருந்து தடுக்கும் நோக்கில் காயம் ஏற்படுத்துதல், பிறரின் உயிருக்கோ அல்லது தனிப்பட்ட பாதுகாப்பிற்கோ ஆபத்தை விளைவித்தல், கொலை முயற்சி மற்றும் குற்றச் சதி உள்ளிட்ட இந்தியச் சட்டத்தின் பல பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. அவரது தடுப்புக்காவல் பலமுறை நீட்டிக்கப்பட்டு, ஜனவரி -2024ல் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். யூனுஸ் மீதான குற்றச்சாட்டுகள் இன்னும் செயல்பாட்டில் உள்ளன.

21 பிப்ரவரி 2024 அன்று, யூனுஸ் சார்பாக ஒரு சமர்ப்பிப்பைப் பெற்ற பிறகு, WGAD அவரது வழக்கு தொடர்பாக இந்திய அரசாங்கத்திற்கு ஒரு தகவலை அனுப்பியது. இந்திய அரசாங்கம் பதிலளிக்கவில்லை. இதன் விளைவாக, யூனுஸின் தடுப்புக்காவல் தன்னிச்சையானது என்று கண்டறிந்து WGAD தனது கருத்தை வழங்கியது.[515]

வன்முறையைப் பயன்படுத்துவதற்காகத் தங்கள் மூத்த சக ஊழியர்களுக்கு எதிராகப் முறைப்பாடுகள் பதிவு செய்வது குறித்துக் காவல்துறை அதிகாரிகள் கூட கவலைகள் வெளிப்படுத்தியுள்ளனர். நாடு முழுவதும் உள்ள காவல்துறை அதிகாரிகளை அளாவிய அண்மைக்காலப் பட்டறிவுசார் ஆராய்ச்சியின்படி, சட்டக் காப்புக்கூறுகள் இடம்பெறுமானால் இதுபோன்ற முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் தாங்கள் மிகவும் வசதியாக உணர்வோம் என்று 44% பேர் உறுதியாக ஒப்புக்கொண்டாலும், 36% பேர் «மிதமான உடன்பாடு தெரிவித்தனர்», மேலும் 8% பேர் «சட்டப் பாதுகாப்பு இருந்தாலும், வன்முறையைப் பயன்படுத்துவதற்காக மூத்தவர்களுக்கு எதிராகப் முறைப்பாடு அளிப்பதில் தாங்கள் ஒருபோதும் வசதியாக உணர மாட்டோம்» என்று

515 யூனுஸ் ஷா (இந்தியா) தொடர்பான ஐ.நா. தன்னிச்சையான தடுப்புக்காவல் மீதான பணிக்குழுவின் கருத்து எண் 45/2024, 10 அக்டோபர் 2024, A/HRC/WGAD/2024/45.

கூறினர்.[516] இந்தச் சூழலில், காவல்துறை அல்லது பிற அதிகாரிகளால் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் ஆட்கள் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு அஞ்சுவதால் முன்வரத் தயங்குவதில் வியப்பில்லை.

இந்த அறிக்கையின் முந்தைய பிரிவுகளில் ஆவணமாக்கப்பட்டுள்ளபடி, குடியியல் சமூக அமைப்புகளுக்கும், வழக்கறிஞர்களுக்கும் மனிதவுரிமைப் பாதுகாவலர்களுக்கும் எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகள், பொறுப்புக்கூறல் முயற்சிகளுக்குத் தடையாக அமைகின்றன. மீறல்களை ஆவணமாக்குவதிலும், சட்ட உதவி வழங்குவதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் துணை நிற்பதிலும், புலனாய்வுகளை வலியுறுத்தி முன்னெடுக்கச் செய்வதிலும் இந்தத் தரப்பினர் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். மாற்றுக்கருத்துகளுக்கு எதிரான பகைமை, கட்டமைப்பியல் பாகுபாடு, அரச வன்முறை, பாதிப்புற்றவர்களை அலைகக்ழித்தல் போன்ற சூழல்களில், குடியியல் சமூகத்தின் மீதான கட்டுப்பாடுகளும், மனிதவுரிமைகளைப் பாதுகாப்பவர்கள் மீதான அடக்குமுறைகளும், பாதிப்புற்றவர்களின் ஆதரவைப் பெறுவதற்கும், மீறல்களைப் பாதுகாப்பாக முறைப்பாடு செய்வதற்கும், அல்லது நீதியை நாடுவதற்கும் உள்ள திறனை நேரடியாகக் குலைக்கின்றன. பாதிப்புற்றவர்களுக்கு உதவுகிறவர்களின் பணியைக் குலைப்பது, இறுதியில் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கும், அதன் விளைவாக அரச வன்முறை வாடிக்கையாக்கப்படுவதுமான சுழற்சிக்கு உதவுகிறது.

பழிவாங்குதல்களைக் கையாள்வதற்கு முறையான முறைப்பாடு அளிக்கும் வழிமுறைகள் மட்டும் போதுமானவை அல்ல – இதற்கு அச்சுறுத்தலையும் பழிவாங்கலையும் தடுக்கும் உறுதியான, எளிதில் அணுகக் கூடிய காப்புக்கூறுகள் தேவைப்படுகின்றன. பாதிப்புற்றவர்களும் சாட்சிகளும் குடியியல் சமூக அமைப்புகளும் அச்சமின்றி முறைகேடுகளை அறிக்கையிட முடியும் என்பதை உறுதி செய்வது உருப்படியான எந்தவொரு பொறுப்புக்கூறல் கட்டமைப்பிற்கும் மையக் கூறாகக் கருதப்பட வேண்டும். இதன் அடிப்படையில், எடுத்துக்காட்டாக, காவல்துறை முறைப்பாட்டு அதிகாரியங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வெறும் ஆலோசனை வழங்குவதோடு நின்றுவிடாமல், "முறைப்பாடு அளிப்பதால் அச்சுறுத்தல் அல்லது துன்புறுத்தலை எதிர்கொள்ளக் கூடிய சாட்சிகளையும், பாதிப்புற்றவர்களையும், அவர்தம் குடும்பத்தினரையும் பாதுகாக்க" ஆணையிடும் அதிகாரங்களும் வழங்கப்பெற வேண்டும் என்று CHRI பரிந்துரைத்துள்ளது.[517] இத்தகைய சீர்திருத்தங்கள் முக்கியமானவை, மேலும் அவை மேற்பார்வை அமைப்புகளின் சுதந்திரத்தை வலுப்படுத்துதல், ஆழமாக வேரூன்றிய அதிகார ஏற்றத்தாழ்வுகளைக் கையாளுதல் மற்றும் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளான நிறுவனங்களின் விருப்பத்திற்கே பாதுகாப்பு விடப்படாமல் இருப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பரந்த, அமைப்பு ரீதியான மாற்றங்களின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். சித்திரவதை மற்றும் மனிதவுரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அல்லது ஆதரிக்கும் குடிமைச் சமூக அமைப்புகள், அல்லது பரந்த அளவில் பொறுப்புக்கூறலை மேம்படுத்தப் பணியாற்றும் அமைப்புகள், சுதந்திரமாகவும் தலையீடு இன்றியும் செயல்பட முடிவதை உறுதி செய்வதும் சம முக்கியத்துவம் வாய்ந்தது.

## பொறுப்புக்கூறலுக்குப் பிற தடைகள்

காவல்துறை அதிகாரிகள், ஆய்தப் படைகளின் உறுப்பினர்கள், நிர்வாக நடுவர்கள், பிறவகைப் பொது ஊழியர்கள் மீது வழக்குத் தொடர நிர்வாக அனுமதி (‹முன் அனுமதி› என அழைக்கப்படுகிறது) தேவைப்படுவதால், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதற்கும் குற்றவியல் வழக்குத் தொடர்வதற்கும் வழிவகுக்கும் படியான சித்திரவதை வழக்குகள் பெரும்பாலும் தடைபடுகின்றன.[518] அரசாங்கம் அத்தகைய அனுமதிகளை அரிதாகவே வழங்குவதால், சித்திரவதைச் செயல்களுக்குப்

516 காமன் காஸ், இந்தியாவில் காவல்துறையின் நிலை குறித்த அறிக்கை 2025, காவல்துறை சித்திரவதை மற்றும் (பொறுப்பேற்பின்மை), பக்.129.

517 பொதுநலவாய (காமன்வெல்த்) மனிதவுரிமைகள் முன்முயற்சி, இந்தியாவில் காவல்துறை முறைப்பாட்டு அதிகாரியங்கள, 2023, பக். 146.

518 பாரதிய நாகரிக் சுரட்சா சன்கிதா (BNSS), 2023, பிரிவுகள் 151, 218.

பொறுப்பானவர்களைப் பொறுப்பேற்கச் செய்வதற்கு இந்தத் தேவை ஒரு பெரிய தடையாக அமைகிறது.[519] கூடுதலாக, இத்தகைய விதிகள் பாதிப்புற்றவர்கள் குறைநீக்கம் பெறும் உரிமையையும், சித்திரவதைச் செயல்களைப் புலனாய்வு செய்து, பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடுத்து அவர்களைத் தண்டிக்கும் அரசின் கடமையையும் மீறுகின்றன.[520]

நடுவண் அல்லது மாநில அரசின் அனுமதியின்றிக் காவல்துறை அதிகாரிகள் உட்பட ஓர் அரசு ஊழியருக்கு எதிராக ஒரு நீதிமன்றம் "வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள", அதாவது, நடவடிக்கைகளைத் தொடங்க BNSS அனுமதிக்காது.[521] இந்த விதிமுறை சித்திரவதை தொடர்பான பெரும்பாலான குற்றங்களை உள்ளடக்கியது, ஆனால் ஊழல்[522] மற்றும் பாலியல் வன்முறைக்[523] குற்றங்களுக்கு விதிவிலக்கு அளிக்கிறது. பழைய குற்றவியல் நடைமுறைச் சட்டம், ஒரு அதிகாரியின் மீது வழக்குத் தொடர அனுமதி கோரும் கோரிக்கைகளை மீளாய்வு செய்வதற்கான அரசாங்கத்தின் விருப்பத்திற்குக் காலவரம்பு விதிக்கவில்லை. இருப்பினும், 2024 ஜூலை மாதம் நடைமுறைக்கு வந்த BNSSஇன் கீழ், அனுமதி கோரும் கோரிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் அரசாங்கம் ஒரு முடிவை எடுக்கத் தவறினால், அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.[524] இந்தப் புதிய வழிவகையின் செயலாக்கம், சித்திரவதைச் செயல்களுக்காகக் காவல்துறை அதிகாரிகள் மீது வழக்குத் தொடுப்பதில் அதன் தாக்கம் ஆகியவை இன்னும் மதிப்பாய்வு செய்யப்படவில்லை.

அனுமதி வழங்கப்படும் நேர்வுகளில், விசாரிக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட குற்றங்கள், நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் நீதிபதி, நடவடிக்கைகளின் விதம் மற்றும் விசாரணை நடைபெறும் நீதிமன்றம் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் அதிகாரங்களும் அரசாங்கத்திற்கு உண்டு.[525] "சட்டப்புறம்பாகக் கூடும்" கூட்டங்களைக் கலைப்பதில் வலுப்பயன்பாட்டுக்காக ஆய்தப் படைகள் மற்றும் காவல்துறையினர் மீது வழக்குத் தொடர அரசாங்க அனுமதி தேவை என்றும் BNSS விதிக்கிறது.[526]

BNSSஇன் கீழ் ஆய்தப் படைகளுக்கு மிக விரிவான மொழியுடன் பரந்த விலக்குரிமைகள் வழங்கப்பட்டுள்ளன, இது «ஒன்றியத்தின் ஆய்தப் படைகளின் எந்த ஓர் உறுப்பினரும் தன் அதிகாரமுறைக் கடமைகளை நிறைவேற்றுவதில் அவர் செய்த அல்லது செய்ய எண்ணியுள்ள எதற்கும் நடுவணரசின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே கைது செய்யப்படுவார்» என்று கூறுகிறது.[527] மேலும், BNSS வழிவகை என்னவென்றால், «ஆய்தப் படைகளின் எந்த உறுப்பினரும் அவர் கீழ்ப்படிந்து நடந்தாக வேண்டிய எந்த ஆணைக்கும் கீழ்ப்படிந்து என்ன செய்தாலும் அவர் அதனால் ஒரு குற்றம் புரிந்ததாகக் கருத முடியாது."[528]

ஆய்தப் படைகள் தனி அதிகாரங்கள் சட்டத்தின் (AFSPA) வழிவகை என்னவென்றால், «இந்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட அல்லது அப்படிச் செய்யப்பட்டதாகக் கூறிக் கொள்ளும் எதையும்» பற்றிய அனைத்து வழக்குகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கும் நடுவண் அரசின் அனுமதி தேவை.[529] நடைமுறையில், ஆய்தப்

519 காமன் காஸ், இந்தியாவில் காவல் பணியின் தகுநிலை குறித்த அறிக்கை 2025, காவல்துறை சித்திரவதை மற்றும் பொறுப்புக்கூறல் (இல்லாமை), பக். 148. மேலும் காண்க: மனிதவுரிமைகள் பேரவை, உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்களை மேம்படுத்துவதற்கான சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை, ஃபேபியன் சால்வியோலி, 9 ஜூலை 2021, A/HRC/48/60, பத்தி 32.

520 UNCAT, உறுப்புகள் 4, 7, 12, 13, 14.

521 பாரதிய நாகரிக் சுரட்சா சன்கிதா (BNSS), 2023, பிரிவு 218.

522 BNSS பிரிவு 218இன் கீழ், ஊழல் எதிர்ப்புக் குற்றங்களுக்கான அனுமதித் தேவையிலிருந்து ஒரு விதிவிலக்கு உள்ளது; இதற்கான செயல்வழி 2013ஆம் ஆண்டின் லோக்பால் மற்றும் லோகாயுதாக்கள் சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

523 BNSS பிரிவு 218இன்படி, 2023ஆம் ஆண்டு பாரதிய நியாய சன்கிதாவின் பல பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள கற்பழிப்பு உள்ளிட்ட பாலியல் வன்முறைக் குற்றங்களுக்கு அரசாங்க அனுமதி தேவையில்லை. இந்தப் பிரிவுகள் 64, 65, 66, 68, 69, 70, 71, 74, 75, 76, 77, 78, 79, 143, 199 அல்லது 200 ஆகும்.

524 BNSS, பிரிவு 218 (1) (ஆ).

525 BNSS, பிரிவு 218 (5).

526 BNSS, பிரிவு 151.

527 BNSS, பிரிவு 42 (1).

528 BNSS, பிரிவு 151.

529 ஆய்தப் படைகள் (தனி அதிகாரங்கள்) சட்டம், 1958, பிரிவு 6.

படைகளில் உறுப்பினராய் இருப்பவர் மீது வழக்குத் தொடர அநேகமாய் ஒருபோதும் அனுமதி வழங்கப்படுவதில்லை.[530] பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களில் பரந்த அளவிலான விலக்குகள் காணப்படுகின்றன. காட்டாக, «பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும்» நோக்கத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளும் படையினர் அல்லது ஒட்டுப் படையினர் இராணுவ அல்லது துணை இராணுவப் பணியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிரான வழக்கு மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு UAPA தடை விதிக்கிகிறது.[531]

காவல்துறை அல்லது பாதுகாப்பு அதிகாரிகள் மீது வழக்குத் தொடர அரசாங்க அனுமதிகள் வழங்கப்பட்டனவா அல்லது மறுக்கப்பட்டனவா என்பதைக் குறிக்கும் தரவுகள் எதுவும் கிடைக்கவில்லை. இருப்பினும், எப்படியோ இந்தியக் குடியியல் சமூகமும் ஊடகத் தளங்களும் பொருத்தப்பாடுள்ள தரவுகளை வெளியிட்டுள்ளன. காட்டாக, இந்திய அரசுசாரா அமைப்பான MASUM, 2015 முதல், மேற்கு வங்கத்தில் மாநிலப் பாதுகாப்புப் படைகளால் நிகழ்த்தப்பட்ட சித்திரவதை மற்றும் சட்டப் புறம்பான கொலைகள் தொடர்பான 49 வழக்குகளில் வழக்குத் தொடர மத்திய அரசு அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.[532] 2001க்கும் 2016க்கும் இடையில் சம்மு-காசுமீரத்தில் பாதுகாப்புப் படைகளால் நிகழ்த்தப்பட்ட சித்திரவதை, சட்டப் புறம்பான கொலைகள், பாலியல் வன்கொடுமை மற்றும் பிற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான 50 வழக்குகளில் 49 வழக்குகளில் வழக்குத் தொடர நடுவணரசு அனுமதி மறுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.[533]

சனநாயக உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம், 2021 திசம்பரில் நாகாலாந்தில் இராணுவத்தினரால் 14 பொதுமக்கள் கொல்லப்பட்ட ஒரு வழக்கை ஆவணமாக்கியது.[534] கொலைகள் மீதான விசாரணை 2022 மார்ச்சில் முடிவடைந்து, ஏப்ரல் மாதம் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்ட போதிலும், குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகள் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்கப்படவில்லை. இதன் விளைவாக, உச்ச நீதிமன்றம் 2024 செப்டெம்பரில் இந்தவழக்கை முடித்து வைத்தது.[535]

சில நேரம், நீதிமன்றங்கள் இந்த விதிகளின் தாக்கத்துக்கு வரம்பிட்டுள்ளன. 2023 மார்ச்சில், பம்பாய் உயர் நீதிமன்றம் காவல் சித்திரவதை வழக்குகளில் முன் அனுமதி தேவையில்லை என்று தீர்ப்பளித்தது;[536] 2024 திசம்பரில் கேரள உயர் நீதிமன்றமும் அவ்வாறே தீர்ப்பளித்தது.[537] 2024 ஜூலையில், சென்னை உயர் நீதிமன்றம், அனுமதி தேவை என்பது ஆய்வாளர் பதவிக்குக் கீழுள்ள காவல்துறை அதிகாரிகளுக்குப் பொருந்தாது என்று தீர்ப்பளித்தது.[538] இருப்பினும், இந்த நடவடிக்கைகள் சிதறலாகவும் முன்பின்முரணாகவும் அமைந்து விட்டன; எப்படியென்றால், அண்மையில் அலகாபாத்தில் உள்ள உயர் நீதிமன்றம் காவல் சாவு என்று சொல்லப்படும் வழக்குகளில் முன் அனுமதி தேவை என்று சொல்லி விட்டது.[539] தேசிய அளவில் 2024 திசம்பரில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு என்னவென்றால், ஒரு செயலைக் கடமையாற்றும் போக்கில் செய்ததாக

530 இந்தியன் எக்ஸ்பிரஸ், ஆய்தப் படை வீரர்கள் மீது வழக்குத் தொடரத் தடை: என்ன விதிகள் பொருந்தும்? 2024 ஜூலை 21. நாகாலாந்து வீரர்கள் மீதான வழக்கு விசாரணை குறித்த மேலதிக பன்னாட்டுஅரசு சாரா அமைப்புகளின் செய்திகளைக் காண்க: HRW, இந்தியாவின் 2023 நிகழ்வுகள், 2023 ஜூலை 24. வரலாற்றுச் சான்றாக, AI, மறுக்கப்பட்டது: சம்மு-காசுமீரத்தில் பாதுகாப்புப் படை வீரர்களால் நிகழ்த்தப்படும் மனிதவுரிமை மீறல்களுக்குப் பொறுப்பேற்பதில் உள்ள தோல்விகள், காண்க: 30 ஜூன் 15

531 சட்டப் புறம்பானநடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் (UAPA), 1967, பிரிவு 49.

532 MASUM மற்றும் OMCT, இந்தியாவின் 4வது காலமுறை அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் குழுவின் 141வது அமர்வின் பரிசீலனைக்காகச் சமர்ப்பித்த அறிக்கை, 3 ஜூன் 2024, பக். 8-9.

533 தி வயர்: பாதுகாப்பு அமைச்சகம் சொல்வது: பாதுகாப்புப் பணியாளர்கள் மீது வழக்குத் தொடரக் கோரித் தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறித்து இராணுவத்திடம் 'கோப்புகள் இல்லை', 30 ஏப்ரல் 2018

534 தி வயர், தனித்துரிய சிறப்புச் செய்தி: நாகாலாந்து படுகொலைகளைத் தடுத்திருக்கக் கூடிய தகவல்களை இராணுவ அதிகாரி 'வேண்டுமென்றே மறைத்தார்' என்கிறது சிறப்புப் புலனாய்வுக் குழு, 7 ஜூலை 2022.

535 டைம்ஸ் ஆஃப் இந்தியா, பிசுபிசுத்துப் போன நாகா நடவடிக்கை: 30 இராணுவ வீரர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை உச்ச நீதிமன்றம் முடித்து வைத்தது, 18 செப்டெம்பர் 2024.

536 லைவ்லா, காவலில் சித்திரவதை செய்வது அதிகாரமுறைக் கடமை அன்று: காவல்துறை அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகளைக் காயமுண்டாக்குதல் என்பதிலிருந்து கொலைக்கு உயர்த்த அமர்வு நீதிமன்றத்திற்கு பம்பாய் உயர் நீதிமன்றம் ஆணை, 28 மார்சு 2023.

537 லைவ்லா, 'சித்திரவதை' காவல்துறையின் அதிகாரமுறைக் கடமையின் ஒரு பகுதியன்று, இதுபோன்ற செயல்களுக்காக வழக்குத் தொடர அனுமதி தேவையில்லை: கேரள உயர் நீதிமன்றம், 2 திசம்பர் 2024.

538 டைம்ஸ் ஆஃப் இந்தியா, ஆய்வாளர் பதவிக்குக் கீழுள்ள காவலர்கள் மீது வழக்குத் தொடர அரசின் அனுமதி தேவையில்லை: உயர் நீதிமன்றம், 26 ஜூலை 2024.

539 திருமதி கல்லி-எதிர்-உ.பி. அரசு மற்றும் இருவர், பிரிவு 482இன் கீழ் விண்ணப்பம் எண் – 17579/2024, 30 செப்டெம்பர் 2024.

நிறுவ முடியும் நிலை இருக்கும் வரை, அந்தச் செயல் அத்துமீறலாகவே இருந்தாலும் முன் அனுமதி தேவைப்படும்.[540] அரசு அதிகாரிகள் கடமையில் இருக்கும் போது சித்திரவதைக் குற்றம் புரிந்த எல்லா வழக்குகளும் இதிலடங்கும்.

இந்தக் கட்டமைப்புத் தடைகளின் விளைவாக, சித்திரவதை அல்லது அது தொடர்பான மூன்று குற்றச் செயல்களுக்கு நடைமுறையளவில் குற்றத் தீர்ப்புகள் இல்லாமற்போனதில் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு தெளிவாக வெளிப்படுகிறது. தேசியக் குற்றப்பதிவுருக் கழகம் தரும் அதிகாரமுறைப் புள்ளிவிவரங்கள் காட்டியது என்னவென்றால், பதிவுருக்கள் தொடங்கிய 2017க்கும் 2022க்கும் இடையே தேசிய அளவில் முதல் தகவல் அறிக்கைகளின் ஊடாக 25 சித்திரவதை வழக்குகள் பதிவாயின. இவற்றில் 14 வழக்குகள் தொடுக்கப்பட்டு முடிவில் மூன்று குற்றத்தீர்ப்புகளும் ஒரு விடுதலையும் கிடைத்தன.[541] இந்த வழக்குகளில் பெரும்பாலானவையும் அதே போல் மூன்று குற்றத் தீர்ப்புகளும் 2017இல் பதியப்பெற்றன. அதாவது, 2018க்கும் 2022க்கும் இடையில் காவல்துறைப் பணியாளர்களுக்கு எதிராக எட்டு சித்திரவதை வழக்குகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டன; அதே காலப்பகுதியில் குற்றத்தீர்ப்புகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.[542]

இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளபடி, குடியியல் சமூக அறிக்கைகள் மற்றும் தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தின் (NHRC) புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில், காவலில் நிகழும் சாவுகள், சித்திரவதை உள்ளிட்ட பதிவுசெய்யப்பட்ட மனிதவுரிமை மீறல்களை தேசியக் குற்றப் பதிவுருக் கழகத்தின் (NCRB) தரவுகள் மிகக் கடுமையாகக் குறைத்து மதிப்பிடுகின்றன. மேலும், சித்திரவதைக்கென ஒரு குறிப்பிட்ட குற்றவியல் பிரிவு இல்லாததால், அனைத்துச் சித்திரவதை வழக்குகளின் அதிகாரமுறைப் புள்ளிவிவரங்களும் கிடைக்கவில்லை. ஆயினும், தேசியக் குற்றப் பதிவுருக் கழகத்தால் தொகுக்கப்பட்ட தகவல்களைப் பார்க்கும் போது கூட, இந்த மிகச் சிறிய மாதிரியளவு வெறும் 12% குற்றத்தீர்ப்பு விகிதத்தையே காட்டுகிறது.

காவல் சாவுகள் அல்லது காவல்துறை மோதல்கள் போன்ற சித்திரவதை தொடர்பான சம்பவங்களுக்காகப் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளைப் பயன்படுத்தி இந்த அமைப்புமுறையில் தண்டித்தலில்லாக் குற்றவிலக்கு ஆட்சி செய்வதைக் கண்டறியலாம். 2014க்கும் 2022க்கும் இடையே காவலில் 328 சாவு வழக்குகள் நிகழ்ந்ததாக NCRB அறிக்கையிட்டது. ஆனால் அறிக்கையிடப்பட்ட குற்றத் தீர்ப்புகள் 0% மட்டுமே. 89% வழக்கு நடவடிக்கைகள் தள்ளுபடி செய்யப்பட்டன அல்லது வழக்குத் தொடர அனுமதி பெறவில்லை.[543] இறுதியாக, 2017க்கும் 2022க்கும் இடையில் 35 காவல்துறை மோதல் கொலை நிகழ்வுகள் 15 வழக்குகளுக்கு வழிகோலின. ஆனால் குற்றத்தீர்ப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்று NCRB அறிக்கையிட்டது.[544]

540 ஓம் பிரகாஷ் யாதவ்-எதிர்- நிரஞ்சன் குமார் உபாத்யாய் 2024 INSC 979, பத்தி 66. வழக்குச் சட்டத்தின் முழுமையான விளக்கத்திற்குப் பார்க்கவும்: உச்ச நீதிமன்றம்: ஓம் பிரகாஷ் யாதவ்-எதிர்-நிரஞ்சன் குமார் உபாத்யாய், குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள் 5267-5268/2024: மேலும் 65(ii) பத்தியில் அது தன் மைய ஏரணத்தையும் எடுத்துரைக்கிறது: அரசுப் பணியாளர் தன் அதிகாரமுறைக் கடமையை ஆற்றும் போது அந்தக் கடமைக்கு மேல் மிகையாகச் செயல்பட்டால், அந்த மிகையே அதனளவில் குற்ற நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 197இன் கீழ் கிடைக்கும் பாதுகாப்பை அவருக்கு இல்லாமல் செய்யப் போதுமானதொரு காரணம் ஆகாது.

541 தேசிய குற்றப் பதிவுருக் கழகம் (NCRB): 2017, 2018, 2019, 2020, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் மனிதவுரிமை மீறல்களுக்காக மாநிலக் காவல்துறை ஆட்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (2022-24 ஆண்டுகளில் மனிதவுரிமை மீறல்களுக்காகக் காவல்துறை ஆட்களுக்கு வழங்கப்பட்ட குற்றத் தீர்ப்புகள் குறித்தப் பொதுத் தரவுகள் NCRBஇடம் இல்லை என்பதைக் கவனிக்கவும்). NCRBஇல் சித்திரவதை வழக்குகளுக்கென ஓர் உட்பிரிவு உள்ளது, ஆனால் இந்தியச் சட்டவழிச் சட்டகத்தில் சித்திரவதை ஒரு குற்றவியல் குற்றமாக இல்லாததால், சித்திரவதை வழக்குகளைப் பதிவு செய்ய NCRB பின்பற்றும் தரநிலையும் இலக்கண வரையறையும் குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

542 காமன் காஸ், இந்தியாவில் காவல்துறையின் நிலை குறித்த அறிக்கை 2025, காவல்துறை சித்திரவதை மற்றும் பொறுப்புக்கூறல் (இன்மை), பக்கம் 172.

543 NCRB கூற்றுப்படி இந்த எண்ணிக்கை 'இந்தியாவில் குற்றம்' (Crime in India) அமைப்பின் 2014, 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021, மற்றும் 2022ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளில் இடம்பெறும் 'காவல் சாவுகளுக்கான காரணங்கள்' (Reasons of Custodial Deaths) என்ற அட்டவணையிலிருந்து பெறப்பட்டதாகும். (குறிப்பு: 2025 மே நிலவரப்படி, 2023 அல்லது 2024க்கு இந்தியாவில் குற்றம் அமைப்பின் ஆண்டறிக்கைகள் ஏதும் பொதுவெளியில் கிடைக்கவில்லை.)

544 NCRB: 2017, 2018, 2019, 2020, 2021, மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் மனிதவுரிமை மீறலுக்காக மாநில காவல்துறை ஆட்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (குறிப்பு: 2022-24ஆம் ஆண்டுகளில் மனிதவுரிமை மீறல்களுக்காகக் காவல்துறை ஆட்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்துத் தரவுகள் ஏதும் NCRBஇடம் பொதுவெளியில் கிடைக்கவில்லை.).

REDRESS

Ending torture, seeking justice for survivors

**redress.org**

**REDRESS**
Unit G01, 65 Glasshill Street
SE1 0QR, London, UK
+44 (0)20 7793 1777
info@redress.org

company/REDRESS

redresstrust

Subscribe